# இலங்கை துறைமுக அதிகாரசபை







## ஆண்டறிக்கை 2011

## எமது கண்ணோட்டம்

ஆசிய பிராந்தியத்தில் கடல்சார் சேவையின் முதல்தர நிலையம் என பெற்றிருக்கும் நிலைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

## எமது குறிக்கோள்

உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வசதிகளையும், தரமுயர்ந்த சேவைகளையும் வழங்குவதன் மூலம் எமது இலாபகரமான அனுகூலங்களையும் வாடிக்கையாளர் தரப்பினர்களையும் அதிகரித்துக் கொள்ளுதல்.

| | |
|---|---|
| எமது இலக்குகளும் நிறுவனத்தினூடான நோக்கங்களும் | 3 |
| முக்கிய விடயங்கள் (இயக்கம்) | 5 |
| முக்கிய விடயங்கள் (நிதி) | 8 |
| எங்கள் அமைச்சர்கள் | 9 |
| தலைவரின் மீளாய்வு | 10 |
| பணிப்பாளர் சபை | 13 |
| முகாமைக் குழுவும் கணக்காய்வுக் குழுவும் | 19 |
| வர்த்தக அபிவிருத்தி | 21 |
| நிர்வாக தொழிற்பாடு | 22 |
| இயக்க மீளாய்வு | 26 |
| நிதி மீளாய்வு | 78 |
| நிறுவன ரீதியாகவுள்ள சமூகப் பொறுப்புக்கள் | 82 |
| மனித மூலதனம் | 83 |
| ஒன்றிணைந்த நிர்வாக அறிக்கை | 86 |
| துறைமுக புள்ளி விபரங்கள் | 91 |
| முக்கிய நிகழ்வுகள் | 95 |
| நிதி அறிக்கைகள் | 99 |
| பணிப்பாளர் சபையின் அறிக்கை | 100 |
| நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் பொறுப்பு | 102 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 103 |
| சட்டபூர்வ இணக்கப்பாட்டு அறிக்கை | 104 |
| முக்கிய விடயங்கள் (நிதி மற்றும் இயக்கம்) | 105 |
| ஐந்தொகை | 109 |
| வருமான அறிக்கை | 110 |
| ஒப்புரவு மாற்றங்கள் தொடர்பான கூற்று | 111 |
| காசுப் பாய்ச்சல் அறிக்கை | 112 |
| பொது கணக்கியற் கொள்கைகள் | 113 |
| நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 121 |
| தசாப்தகால சாராம்சம் | 146 |
| ஒரே பார்வையில் முக்கிய பேறுபேறுகள் | 148 |
| நிதி விடயங்களுக்கான கலைச் சொற்கள் | 149 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 151 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 164 |
| அமைப்பு விதி தொடர்பான தகவல்கள் | 183 |

## இலக்குகள்

* இலங்கை கடல்சார் கேந்திர தளமாக மாற்றப்படுதல்.

* கொள்கலன் கையாள்தல் மற்றும் தெற்காசிய வலயத்தின் சேவை வழங்கலுக்கான சர்வதேச பாரிய நிலையிலான கேந்திரத் துறைமுகமாக கொழும்புத் துறைமுகத்தின் அமைவிடம் உறுதிப்படுத்தப்படுதல்.

* வணிகத் துறைமுக சேவைகள் வழங்கப்படுவதுடன் மிகவும் விரும்பப்படும் பயணிகள் கப்பல் போக்குவரத்து நிலையமாக காலித் துறைமுகம் திட்டமிடப்படுதல்.

* கடல்சார் தொழிற் துறைக்கான பூரண சேவைகள் வழங்கப்படும் அதேவேளை ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம், சர்வதேச சுதந்திர வலய/ துறைமுகம் மற்றும் சேவைகள் வழங்கும் கேந்திர நிலையமாக விரிவாக்கம் செய்யப்பட்டு அபிவிருத்தி செய்தல்.

* ஓய்வு நேரங்களைக் களிப்பதற்கான உயர் நிலையிலான வசதிகள் மற்றும் கைத்தொழில்கள் மேம்படுத்தப்படுவதற்கான விரிவாக்கப்பட்ட வசதிகளுடன் திருகோணமலைத் துறைமுகம் பசுமை துறைமுகமாக மேம்படுத்தப்படுதல்.

* வலய அபிவிருத்தியின் நுழைவாயில்களாக ஒலுவில், பருத்தித்துறை மற்றும் காங்கேசன்துறை ஆகிய பிராந்திய துறைமுகங்கள் அபிவிருத்திசெய்யப்படுதல்.

## நிறுவனத்தினூடான நோக்கங்கள்

* இலங்கையின் வர்த்தக துறைமுகங்களில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணங்களினாலான இயக்க வசதிகளை அபிவிருத்தி செய்தலும், இடைவிடாது முன்னெடுத்துச் செல்லப்படுதலும்.

* உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனுடன் துறைமுக சேவைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

* ஆகுசெலவு பயனளிக்கக் கூடிய வினைத்திறனுடன் மற்றும் நம்பிக்கை மிகு சேவைகள் வழங்குவதன் மூலம் போட்டித்தன்மையூடாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களுக்கு மிகவும் சிறந்த நற்பயன்களை பெற்றுக்கொடுத்தல்.

* கப்பல்கள், கப்பல் சரக்கு துறைமுக பாவனையாளர்கள் மற்றும் துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் .

* துறைமுக வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அனைவருக்கும் உற்சாகமூட்டும் சிறந்த சூழலை உருவாக்குதல்.

* அரசாங்கத்தின் நடைமுறை மற்றும் மூலதன செலவினங்களுக்கு பொது திறைசேரியின் ஒன்றிணைந்த நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல்.

* கப்பல்களை தாமதப்படுத்தாது மாற்றியேற்றல் மற்றும் தரையிறக்கல் நடவடிக்கைகளை விரைவில் மேற்கொண்டு, உயர் வினைத்திறன் பேணல்.

* அதிகளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு கடல்சார் நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைச் சேவைகளை அதிகரித்தல்.

* துறைமுக பாவனையாளர்களுக்கு உயர் சேவைகளை வழங்கி வர்த்தக துறைமுகங்களில் இலாபகரமான இயக்கச் செயற்பாட்டு முறையை முன்னெடுத்துச் செல்லுதல் இதனூடாக நம்பிக்கை மிகு வினைத்திறனுடன் கூடிய இயக்குனர் என்ற நற்பெயரை பாதுகாத்துக் கொள்தல்.

* மொத்த விற்பனை மற்றும் சுங்கப் பிணை நடவடிக்கைகள் உட்பட மீள் கப்பல் ஏற்றும் சந்தர்ப்பங்களை மேலும் அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு கொள்கலன் கையாளுதல் தொடர்பிலான போட்டித்தன்மையுடன் கூடிய உயர் சேவைகளை வழங்குதல்.

* இலங்கையின் பிரதேச அபிவிருத்திப் பங்களிப்பின் உந்து சக்தியாக தேவைப்படும் துறைமுக வசதிகளை கடலை அண்மித்த பிரதேசங்களில் ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையின் பிராந்திய அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

* மனித வலு தேவைகளை மதிப்பிடுதல் மற்றும் ஆளணி மீளாய்வு உட்பட இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிர்வாக மற்றும் அமைப்பு ரீதியான விடயங்களை உயர் நிலைக்கு கொண்டு வருதல், சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் பணிபுரியும் ஊழியர்கள் தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொடுக்கும் பங்களிப்பை கவனத்திற் கொண்டு சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலைகளில் ஈடுபடுவதற்கு ஊழியர்களை ஊக்குவித்தல் இதனால் எழும் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்படுவதற்கு மஹபொல பயிற்சி நிலையம் மேலதிக பயிற்சிகளையும், மீள் பயிற்சியளித்தலையும் மேற்கொள்ளல்.

* நீரில் மேற்கொள்ளப்படும் சேவைகள், எண்ணெய் பாய்ச்சும் நடவடிக்கைகள், நன்னீர் வழங்குதல் மற்றும் கொள்கலன் புதுப்பித்தல் போன்ற துறைமுக செயற்பாடுகளுடன் தொடர்புடைய பணிகளை வழங்குவதன் ஊடாக பன்முகப்படுத்துதல்.

* வினைத்திறன் மிகு வரி, மிகவும் சிறந்த நிறுவக முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் உறுதியான மூலோபாய ஆகுசெலவு கட்டுப்பாடு போன்றவற்றுடனான முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட நிதி சீர்திருத்த செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துதல்.

### வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை (சகல துறைமுகங்களிலும்)

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 3,910 | 4,124 | 5.5 |
| திருகோணமலை துறைமுகம் | 109 | 126 | 15.6 |
| காலி துறைமுகம் | 48 | 73 | 52.1 |
| காங்கேசன்துறை,மயிலிட்டி, பருத்தித்துறை, காரைநகர் | 8 | 26 | 225.0 |
| மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் | 0 | 9 | - |
| **மொத்தம்** | **4,075** | **4,358** | **6.9** |

### கப்பற் சரக்கு கையாளல் (கொழும்பு துறைமுகம்)

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (மெ.தொ.மி) | 61.3 | 65.1 | 6.2 |

### கொள்கலன் கையாளல் (இ.சம அலகுகள்) கொழும்பு துறைமுகம்

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம்(%) |
|---|---|---|---|
| **இலங்கை துறைமுக அதிகாரசபை** | | | |
| இறக்குமதி | 278,893 | 323,712 | 16.1 |
| ஏற்றுமதி | 284,456 | 323,770 | 13.8 |
| மாற்றியேற்றல் | 1,533,845 | 1,583,195 | 3.2 |
| மீள் அடுக்குதல் | 69,979 | 68,769 | -1.7 |
| **மொத்தம்** | **2,167,173** | **2,299,446** | **6.1** |
| **சவுத் ஏஷியா கேட்வே டெர்மினல்ஸ் (SAGT)** | | | |
| இறக்குமதி | 182,755 | 200,078 | 9.5 |
| ஏற்றுமதி | 186,140 | 199,326 | 7.1 |
| மாற்றியேற்றல் | 1,561,744 | 1,540,633 | -1.4 |
| மீள் அடுக்குதல் | 39,629 | 23,404 | -40.9 |
| **மொத்தம்** | **1,970,268** | **1,963,441** | **-0.3** |
| **கொழும்புத் துறைமுகம்** | | | |
| இறக்குமதி | 461,648 | 523,790 | 13.5 |
| ஏற்றுமதி | 470,596 | 523,096 | 11.2 |
| மாற்றியேற்றல் | 3,095,589 | 3,123,828 | 0.9 |
| மீள் அடுக்குதல் | 109,608 | 92,173 | -15.9 |
| **மொத்தம்** | **4,137,441** | **4,262,887** | **3.0** |

### கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்ட கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்) (இயக்கம்)

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 14,106 | 15,317 | 8.6 |
| பிரித்த மொத்தம் | 605 | 692 | 14.4 |
| உலர் மொத்தம் | 2,551 | 2,618 | 2.6 |
| திரவ மொத்தம் | 4,130 | 4,499 | 8.9 |
| **மொத்தம்** | **21,392** | **23,126** | **8.1** |

கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றப்பட்ட கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 12,328 | 12,795 | 3.8 |
| பிரித்த மொத்தம் | 22 | 30 | 36.4 |
| உலர் மொத்தம் | 4 | 2 | -50.0 |
| திரவ மொத்தம் | 28 | 66 | 132.1 |
| **மொத்தம்** | **12,382** | **12,893** | **4.1** |

கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 26,434 | 28,112 | 6.3 |
| பிரித்த மொத்தம் | 627 | 722 | 15.2 |
| உலர் மொத்தம் | 2,555 | 2,620 | 2.5 |
| திரவ மொத்தம் | 4,158 | 4,565 | 9.8 |
| **மொத்தம்** | **33,774** | **36,019** | **6.6** |

திருகோணமலை துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 1,960 | 2,337 | 19.2 |
| ஏற்றப்பட்டது | 194 | 237 | 22.2 |
| **மொத்தம்** | **2,154** | **2,574** | **19.5** |

காலி துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 317 | 464 | 46.1 |
| ஏற்றப்பட்டது | 1 | 0 | -100.0 |
| **மொத்தம்** | **318** | **464** | **45.9** |

காங்கேசன்துறை, மயிலிட்டி , பருத்தித்துறை மற்றும் காரைநகர் துறைமுகங்களில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 11 | 28 | 154.5 |
| ஏற்றப்பட்டது | 0 | 0 | 0.0 |
| **மொத்தம்** | **11** | **28** | **154.5** |

மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | - | 5 | - |
| ஏற்றப்பட்டது | - | 10 | - |
| **மொத்தம்** | **-** | **15** | **-** |

**மொத்த ஊழியர் தொகை**

| விபரம் | 2010 | 2011 |
|---|---|---|
| கொழும்புத் துறைமுகம் | 11,726 | 10,083 |
| திருகோணமலைத் துறைமுகம் | 598 | 466 |
| காலி துறைமுகம் | 500 | 433 |
| **மொத்தம்** | **12,824** | **10,982** |

சகல துறைமுகங்களும் – (ரூபா மில்லியன்)

| விபரம் | 2010 | 2011 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **வருமானம் மற்றும் செலவினம்** | | | |
| மொத்த வருமானம் | 28,279.3 | 31,250.5 | 10.5 |
| மொத்த செலவினம் | (23,892.4) | (22,958.6) | 3.9 |
| **இயக்க வருமானம்** | **4,386.9** | **8,291.8** | **89.0** |
| | | | |
| வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி | (1,225.2) | (1,371.8) | (12.0) |
| அந்நிய செலாவணி இலாபம் / (நட்டம்) | (4,409.8) | (3,543.2) | 19.7 |
| சுய விருப்பின் பேரில் ஓய்வு பெறும் திட்டத்தின் செலவினம் | - | (2,594.6) | (100.0) |
| | | | |
| **இலாபம் – வரிக்குமுன், அந்நிய செலாவணி இலாபம்/ (நட்டத்தின்) பின்** | **(1,248.1)** | **782.2** | **162.7** |
| | | | |
| **வரிகள்** | | | |
| வருமான வரி | (156.9) | (24.0) | 84.7 |
| கருதும் பங்கிலாப வரி | - | (175.6) | (100.0) |
| வேறுபடும் வரி | 342.9 | - | 100.0 |
| சமூக பொறுப்புக்கள் மீதான வரி | (2.4) | - | 100.0 |
| | | | |
| **தேறிய இலாபம் / (நட்டம்) வரிக்கான ஏற்பாடுகளுக்குப் பின்** | **(1,064.5)** | **582.6** | **154.7** |
| | | | |
| **ஐந்தொகை** | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 185,834.0 | 208,962.5 | 12.4 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 17,784.2 | 13,563.3 | (23.7) |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 13,328.6 | 14,720.7 | (10.4) |
| ஒப்புரவு மற்றும் ஏனைய மூலதனம் | 7,591.4 | 7,591.4 | (0.0) |
| ஒதுக்கீடுகளும் ஏற்பாடுகளும் | 78,795.1 | 79,325.7 | (0.7) |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 103,903.1 | 120,888.0 | (16.3) |
| | | | |
| **விகிதாசாரம்** | | | |
| வருமானத்திற்கான இயக்க இலாபம் | 15.5 | 26.5 | |
| வருடாந்த வருமான வளர்ச்சி | 21.2 | 10.5 | |
| மூலதன முதலீடுகளின் வருமானம் | 2.3 | 4.0 | |

அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்
இலங்கை ஜனாதிபதி
மற்றும்
துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்

கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன
துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

கௌரவ நிர்மல கொத்தலாவல
துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

2011 ஆம் ஆண்டு தொடர்பான எனது கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்காக இச்செய்தி வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.மேலும் உற்பத்தித் திறன், சொத்துக்களின் வளர்ச்சி, அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், மனிதவள அபிவிருத்தி, நிலவும் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு, வீண் விரயம் குறைக்கப்படல் மற்றும் நிதிசார் முகாமைத்துவம் ஆகிய விடயங்கள் தொடர்பில் 2011 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபை இன்னுமொரு முக்கிய வருடத்தில் தடம் பதிப்பதனை அவதானித்தேன். உண்மையிலேயே துறைமுக உட்கட்டமைப்பு அபிவிருத்தி, கொள்கலன் கையாளல் உபகரணப் பாவனையின் விரிவாக்கம், வாடிக்கையாளர்களுக்கான சேவைகளின் தரமுயர்தல் போன்றவை வெற்றிகரமாக அடையக் கூடியதாக இருந்தன. கொழும்புத் துறைமுக அபிவிருத்தித் திட்டம், மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம், ஒலுவில் மற்றும் காங்கேசன்துறை போன்ற துறைமுகங்கள் தொடர்பில் பிரதானமாக எமது கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் எமது சகல வாடிக்கையாளர்களும் திருப்திப்படக் கூடிய வகையில் சகல துறைமுகங்களின் உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறன் மேம்படுத்தலிலான சேவைத் தரமுயர்த்தல்களின் முக்கிய பல செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. எதிர்வரும் ஆண்டுகளிலும் கப்பற் சரக்குகள் மற்றும் கொள்கலன் பரிமாணம் இவ்வாறு அதிகரிக்கப்படுவதற்கும் துறைமுக சேவைகள் வழங்கப் பெற்று கூடிய வருமானம் ஈட்டப்படுவதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்ந்தும் முனைப்பாக செயற்படுதல் தொடர்பில் நான் பூரண நன்நோக்கிலான கருத்தைக் கொண்டுள்ளேன்.

## செயலாற்றுகை

2008 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டமானது, எம்மால் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டதோடு இத்திட்டத்தின் ஊடாக ஈட்டப்பெற்ற சிறந்த பெறுபேறுகளினால் எமது பங்காளர்கள் பயன் பெற்று வருகின்றனர். சென்ற பல ஆண்டுகளினுள் வலயத்திலேற்பட்ட கடல்சார் போக்குவரத்துகளின் மாற்றங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளினாலும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பல சவால்களை எதிர் நோக்க வேண்டியேற்பட்டது. மேற்குலக நாடுகளிலேற்பட்ட அளவுக்கு உலக பொருளாதார பிரச்சினையின் பலன்கள் எம்மால் உணர முடியாவிட்டாலும் அதன் சில தாக்கங்கள் எமது நாட்டையும் பாதித்ததோடு மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டம் ஊடாக அமுல்படுத்தப்பட்ட சில நடவடிக்கைகளினால் இந்நிலைமையின் மீது ஏற்படவிருந்த பாதிப்பான பெறுபேறுகள் தடுக்கப்பட முடிந்தமை மிகவும் மகிழ்ச்சிகரமான விடயம் என்பதனை அறியத் தர விரும்புகின்றேன். மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டமானது வெற்றிகரமாக செயற்படுத்தப்படுதலில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர் படையினதும் வாடிக்கையாளர்களினதும் புரிந்துணர்வு மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு 2012 இருந்து 2017 வரையிலான ஐந்து வருடத் திட்டமானது நல்லாட்சிக்கான இரண்டாவது நடவடிக்கையாக எனது தலைமைத்துவத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட முடிந்தமையினையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது நிர்வாகத் திறமை மற்றும் கையாளல் ஆற்றலின் ஊடாக அவர்களினது நம்பிக்கையினை நாம் பெற்றுள்ளமை தொடர்பில் எமது வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். 2011 ஆம் ஆண்டினுள் ஜய கொள்கலன் முனையம் நோக்கி கவரப்பட்டுள்ள ஐந்து (05) பிரதான கப்பல் சேவைகள் மற்றும் ஒரு ஊட்டச் சேவை போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கைச்சாத்திடப்பட்ட ஐந்து (05) முனைய ஒப்பந்தங்கள் ஊடாக இது புலனாகின்றது.

இதற்குப் புறம்பாக நவீன 06 கன்ட்றி பாரமுயர்த்திகள், 30 ரான்ஸ்பர் பாரமுயர்த்திகள், 50 முனைய டிரக்டர்கள், 30 முனைய டிரேலர்கள் சேர்க்கப்படுதலின் ஊடாக கொள்கலன் உபகரணக் குழாம் மேலும் வலுப்படுத்தப்பட்டது. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமைத்துவம் மற்றும் கையாளல் மேற்கொள்ளப்படும் கொள்கலன் முனையங்களினதும் கொள்கலன் களஞ்சிய நிலையங்களினதும் வினைத் திறன் மற்றும் சேவை உற்பத்தித் திறன் மேலும் வளர்ச்சியடைய இதனால் பாரிய பங்காற்றப்பட்டது.

உள்நாட்டு மற்றும் மீள் ஏற்றுமதி பரிமாணங்களுக்கமைய இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கையாளப்பட்ட கொள்கலன் முனையங்களினது கொள்கலன் கொள்ளளவுகளில் வளர்ச்சி காணப்படுகின்றது. 2010 ஆம் ஆண்டில் உள்நாட்டு கொள்கலன் பரிமாணம் 563,349 இருபது சம அலகுகளாக இருந்ததோடு 2011 ஆம் ஆண்டில் அது 647,482 இருபது சம அலகுகளாகும். இதுவானது 14.9% வளர்ச்சியாகும். அதேபோன்று 2010 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன் முனையங்களினால் கையாளப்பட்ட மீள் ஏற்றுமதி கொள்கலன் எண்ணிக்கை 1,533,845 இருபது சம அலகுகளாக இருந்ததோடு 2011 ஆம் ஆண்டில் அது 1,583,195 இருபது சம அலகுகளாகும். இது 3.2% வளர்ச்சியாகும். இதன்படி 2011 இல் கையாளப்பட்ட கொள்கலன்களினது எண்ணிக்கை மொத்த 2,299,446 இருபது சம அலகுகளாக இருந்ததுடன் இதுவானது 2010 ஆம் ஆண்டினுள் கையாளப்பட்ட 2,167,173 இருபது சம அலகுகளுடன் ஒப்பிடப்படுகையில் 6.1% வளர்ச்சி தென்படுகின்றது. இது இலங்கை துறைமுக அதிகாரசபையின் வரலாற்றிலேயே பதிவு செய்த ஆகக் கூடிய எண்ணிக்கையாகும். 2011 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தினால் கையாளப்பட்ட ஒட்டு மொத்த கொள்கலன் பரிமாணமான 4,262,887 இருபது சம அலகுகளில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சந்தைப் பங்கு 53.9% ஆக இருந்ததோடு, சவுத் ஏஷியா கேட்வே முனையத்தினால் (SAGT) கையாளப்பட்ட சந்தைப் பங்கு 46.1% ஆக இருந்தது.

## நிதி

நிதிசார் ஸ்திரத்தன்மை கவனத்திலெடுக்கப்படுகையில் இலங்கை துறைமுக அதிகாரசபை இலங்கையில் மிகவும் நிலையான அரச தொழில் முயற்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் செயற்றிறனிலும் இலாபகரத் தன்மையிலும் வளங்கள் முறையாக பயன்படுத்தலிலுடான துறைமுக சேவைகள் வழங்குவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். வாடிக்கையாளர்களின் வசதி மற்றும் உயர் சேவை பேணப்படுதல் முறைகள் மேம்படுத்தப்படுதலின் ஊடாக பயன்மிகுந்த வகையிலான நடைமுறைப்படுத்தலில் பெறப்பட்ட வலுவான நிதி முகாமைத்துவம் ஏற்படுத்தலின் மீது இந் நிலைமை மேலும் இலகுபடுத்தப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஈட்டப்பட்ட வருமானமான ரூபா 28 பில்லியனுடன் ஒப்பிடப்படுகையில் 2011 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் பெறப்பட்ட வருமானம் ரூபா 31 பில்லியனாகும். இது 10.41% வளர்ச்சியாகும்.

வளர்ந்து வரும் வர்த்தகத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும் வகையில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கொழும்பு தென் முனையம், ஹம்பாந்தோட்டை மற்றும் ஒலுவில் போன்ற நீண்டகால துறைமுக விரிவாக்கல் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

## அபிவிருத்தித் திட்டங்கள்

கடல் துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படுதலின் நவீன முறைகள் மிகவும் திறம்பட பயன்படுத்தி துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுவதன் முக்கியத்துவம் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்பத் தேவைப்பாடு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் உணரப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக நிர்மாண நடவடிக்கைளின் முதல் கட்டத்துக்கு இலங்கை துறைமுக அதிகாரசபை 800 அமெரிக்க டொலர் மில்லியன் ஆகு செலவில் பங்களிப்பு செய்துள்ளது. 2011 ஆம் ஆண்டினுள் பெற்றோலிய உற்பத்தியின் மொத்த கொள்ளளவான 80,000 மெட்ரிக் தொன்களை விடக் கூடிய 14 தாங்கிகளைக் கொண்ட எண்ணெய்த் தாங்கித் தொகுதி, முழுமையான கப்பல் எண்ணெய்த் தரையிறக்கல் வசதிகள் நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று அவ்வருடத்தினுள் கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் அலைதாங்கிகள் அமைக்கும் பணிகளில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் முதலாவது முனையம் நிர்மாணிக்கும் பணி, கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய (CICT) நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது வ/ப சீன மர்சன்ட் ஹோல்டிங்ஸ் சர்வதேச கம்பெனி, எயிட்கன் ஸ்பென்ஸ் கம்பெனி மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையினையும் உள்ளடக்கிய

நிறுவனமொன்றாகும். இதன் பங்குரிமைகள் முறையே 55%, 30% , 15% ஆகும். மேலும் மீளாய்வாண்டினுள் காலி, திருகோணமலை மற்றும் ஒலுவில் துறைமுக அபிவிருத்தித் திட்டங்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

**மனித வள அபிவிருத்தி**

குழுவாகச் செயற்படும் செயற்றிறனும் வினைத்திறனும் கொண்ட ஊழியர்களின் செயலாற்றப்படுகை உறுதிப்படுத்தப்படும் பொருட்டு எம்மால் மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டு செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்நோக்கங்களை அடையும் வகையில் தற்போது துறைமுகத்தில் பல இடங்களிலுமுள்ள நுகர்வோர் சேவை நிலையங்கள் ஒரு முகப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஊழியர் படையினை சீர் செய்யும் முதலாவது கட்டம் 2011 ஆம் ஆண்டினுள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது நற்பயன் கொண்ட செயற்பாட்டின் ஒரு அங்கமாகும்.

புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல், தொடர்பாடல் திறன் விருத்தி மற்றும் தத்தமது தொழில்களின் மேம்பாட்டிற்கான சிந்தனை மாற்றம் ஏற்படுத்தும் நோக்கில் ஊழியர்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பாரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

செயலாற்றுகை மட்டம் அடையப்பெறுதல், வைத்திய காப்புறுதித் திட்டம் போன்ற நலன்புரி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஊழியர்களுக்கிடையிலான அறிமுகம் இலகுபடுத்தப்படும் வகையில் சகல பகுதிகளிலும் ஊழியர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**முடிவு**

இறுதியாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் , கௌரவ பிரதியமைச்சர்களுக்கும், அமைச்சின் செயலாளர் மற்றும் ஆளணியினருக்கும் , இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கும் அதன் முகாமைத்துவத்திற்கும் அவர்களின் பெறுமதி வாய்ந்த வழிகாட்டல்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.மேலும் 2011 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையில் வேண்டப்படும் செயலாற்றுகை மட்டம் அடைந்து கொள்ளலில் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் விசேடமாக தொழில் சங்கங்களினால் வழங்கப்பெற்ற மகத்தான ஒத்துழைப்புகளுக்கும் ஒத்தாசைகளுக்கும் எனது நன்றி உரித்தாகும்



**கலாநிதி பிரியத் பீ விக்ரம**
**தலைவர்**

**கலாநிதி பிரியத் பீ விக்ரம**
**தலைவர்**

**பீஎச்டி (ஐ.இ), பட்டப் பின்படிப்பு (டிப்ளோமா) , பொறியியலாளர் பீ.எஸ்.சீ. (சிறப்பு) பட்டயம் பெற்ற பொறியியலாளர் , இலங்கை பொறியியலாளர் நிறுவன அங்கத்தவர்**

கலாநிதி பிரியத் பீ விக்ரம, 2008 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபையின தலைவராகக் கடமையாற்றுகின்றார். வேறு விடயங்களோடு இலங்கையின் கடல் துறைமுகங்களின் அபிவிருத்தி , நிர்வாகம், இயக்கம் மற்றும் துறைமுகம்சார் சேவைகள் வழங்கப்படுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை 1979 ஆம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர் என்ற வகையில் நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகள், துறைமுக முகாமைத்துவம் தொடர்பில் பொறுப்பாளராக உள்ளார். அதேபோன்று பிரதான கடல்சார் தேசியமாக இலங்கையின் தோற்றப்பாட்டினை மேலோங்கச் செய்வதற்காக இந்நிறுவனத்தின் சகல பிரிவுகளும் தன்னிறைவான தொழில் முயற்சிகளாக நடாத்திச் செல்லப்படுதல் அவரால் உறுதி செய்யப்படுகின்றது.

கலாநிதி விக்ரம, இலங்கை மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் விஞ்ஞானம் தொடர்பிலான சிறப்புப் பட்டம் பெற்றுள்ளார். அத்தோடு ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அமெரிக்கப் பல்கலைக்கழகத்தினால் இயக்க முகாமைத்துவம் தொடர்பிலான கலாநிதிப் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி விக்ரம 2001 ஆம் ஆண்டில் இயந்திரப் பொறியியலாளராக இலங்கை துறைமுக அதிகாரசபையில் இணைந்தார். 2004 ஆம் ஆண்டில் இவர் நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவிக்கு (தொழில்நுட்பம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) நியமிக்கப்பட்டார். அப்பதவியில் 1 1/2 வருட சேவைக் காலத்தின் பின்னர் 2005 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். 2008 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் கலாநிதி விக்ரம இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர் பதவியினைப் பொறுப்பேற்றார்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவராக இவர் இந்நாட்டின் இரண்டு பாரிய அளவிலாள துறைமுக அபிவிருத்தித் திட்டங்கள் நிர்மாணிக்கப்படுவதற்கு தலைமை தாங்கி செயற்படுகின்றார். பசுமைச் சூழல் துறைமுகமாக தென் பகுதியின் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கையாளல் நடவடிக்கைகள் 2010 நவம்பர் 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டமை இதில் முதலாவதாகும்.. இரண்டாவது கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டமாகும். மேலும் 2.4 மில்லியன் இருபது சம அலகுகள் கொள்கலன் வரை கொள்ளளவு அதிகரிக்கப்படும் பொருட்டு துறைமுகத் திட்டத்தின் முதலாம் கட்டம் 2014 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பூர்த்தி செய்யப்படும். கொள்கலன் முனையமாக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுவதற்காகப் பாவிக்கப்பட்ட கிழக்கு கொள்கலன் முனையத்தின் இட அளவினுள் 450 மீட்டர் நீளமானதும் 18 மீட்டர் ஆழமானதுமான நங்கூரத்தளமொன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்படும். இதன் பணிகள் 2013 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளன.

2002 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்டதும் முற்றாக 100% இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரியதும் வரையறுக்கப்பட்ட கம்பெனியுமான ஜய கொள்கலன் முனையத்தின் தலைவராகவும் இவர் கடமையாற்றுகின்றார்.

மேலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான சேவை வழங்குநரான வ/ப இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனைக் கம்பெனியின் தலைவரான இவர், அதற்கு மேலதிகமாக வ/ப தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்ற பல அரச நிறுவனங்களில் பணிப்பாளராகவும், வ/ப கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையக் கம்பெனியினது (CICT) பணிப்பாளராகவும் இவர் கடமையாற்றுகின்றார்.

இவர் சர்வதேச துறைமுகங்கள் மற்றும் கப்பல் தளங்கள் அமைப்பின் (IAPH) துறைமுக திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவருமாவார்.

பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான சகல துறைகளினதும் இவரது செயலாற்றுகை நிபுணத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2010 ஆம் ஆண்டில் ஹங்கொங் அன்ட் சங்ஹய் நிறுவனத்தினால் இவர் இலங்கையின் மிகவும் சிறந்த இளம் நபராகத் தெரிவு செய்யப்பட்டார். 2011 ஆம் ஆண்டில் சர்வதேச லயன் கழகத்தினால் கட்டுமானத் தொழிலின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் தொடர்பில் இவரினால் வகிக்கப்பட்ட பங்களிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் மத்திய கிழக்கு மற்றும் இந்திய உப கண்ட வலயத்தின் கடல்சார் வர்த்தகம் தொடர்பிலான இளம் நபராகவும் இவர் தெரிவு செய்யப்பட்டார்.

## திரு. இந்திக கருணாஜீவ
## உப தலைவர்

**சொலிசிட்டர் (ஐ.இ) சட்ட முதுமாணி (வேர்விக்)**
**சட்டத்தரணி**

திரு. கருணாஜீவ, 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். அதேபோன்று இவர் இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதியினது சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார்.

திரு கருணாஜீவ, கொழும்பு 07, றோயல் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினைப் பயின்றார். சட்டக் கல்லூரியில் தனது கல்வியினைப் பூர்த்தி செய்து 2000 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றின் சட்டத்தரணியாக இவர் தனது பணியினைத் தொடர்ந்தார்.

திரு. கருணாஜீவ சர்வதேச சட்டம் தொடர்பான முதுமாணிப் பட்டப் படிப்பினை ஐக்கிய இராச்சியத்தின் வேர்விக் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு 2003 ஆம் ஆண்டில் அதில் சிறப்புப் பட்டதாரியானார். இவர் விசேடமாக குற்றவியல் மற்றும் ஆக்கவுரிமைச் சொத்துக்கள் சட்டம் தொடர்பிலான வழக்குகளின் போது இலங்கை நீதிமன்றங்களில் சட்டத்தரணியாகக் கடமையாற்றியுள்ளார்.

இவர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் சொலிசிட்டருமாவார்.

2006 யூலை மாதத்திலிருந்து 2010 மே மாதம் வரை ஐக்கிய இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவராலயத்தின் அமைச்சர் ஆலோசகராகவும் இவர் நியமிக்கப்பட்டார்.

## கெப்டன் நிஹால் கெப்பெட்டிபொல
## முகாமைப் பணிப்பாளர்

**கடலக அதிபர், வர்த்தக நிர்வாக முதுமாணிப் பட்டம் (எம்பீ ஏ)**
**ஐக்கிய இராச்சியத்தின் கப்பல் துறைசார் நிறுவன அங்கத்தவர் (எம். என். ஐ)**
**சேவைகள் வழங்கல் மற்றும் போக்குவரத்து பற்றியதான பட்டய நிறுவன அங்கத்தவர் (எம் சீ ஐ எல் ரீ)**

இவர் கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவராவார். கெப்டன் நிஹால் கெப்பிட்டிபொல கடெட் அலுவலராக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் இணைந்து கொள்கலன் பொதுவான மற்றும் மொத்தச் சரக்குக் கப்பல்கள், எண்ணெய் மற்றும் வாயு தாங்கிகள் உட்பட பல்வேறு வகையான கப்பல்களில் பணியாற்றியுள்ளார்.

1985 ஆம் ஆண்டில் இவர் கடலக விஞ்ஞானம் மற்றும் கப்பலோட்டம் தொடர்பிலான தனது முதுமாணிப் பட்டத்தினை அவுஸ்திரேலியாவின் மெல்போன் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்டார். ஐக்கிய இராஜ்ஜியத்தின் செப்ஸ்டோவ் ஷிப்பிங் (Chepstow & Shipping) மொன்டிகாலொ, வீ சிப்ஸ் ஜேர்மனியின் அரென்கீல், கொரியாவின் பேன் ஓசன் போன்ற பல்வேறு கப்பல் சேவைகளிலும் சிலோன் ஷிப்பிங் கோபரேசன் இல் கெப்டனாகவும் பல வருடங்கள் கப்பல் போக்குவரத்தில் ஈடுபட்டதன் பின்னர் 1990 ஆம் ஆண்டில் இவர் மாலுமியாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் இணைந்து கொண்டார்.

கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி ஆகிய சகல துறைமுகங்களில் மாலுமியாக கடமையாற்றியதன் பின்னர் 1999 ஆம் ஆண்டில் சகல துறைமுகங்களினதும் ஹாபர் மாஸ்டராக இவர் பதவி உயர்வு பெற்றார்.

சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பல வேண்டுகோள்களின் மீது பல்வேறு கால கட்டங்களில் தனது ஹாபர் மாஸ்டர் பதவிக்கு மேலதிகமாக கடலக துறையுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு மற்றும் சேவை வழங்கல் செயற்பாட்டினுள் குறிப்பிடத்தக்க பணிகளையும் ஆற்றினார்.

பின்னர் 2005 ஆம் ஆண்டில் இவர் பணிப்பாளர் (துறைமுக இயக்கம்) பதவிக்கு உயர்த்தப்பட்டதன் பின்னர் 2006 ஆம் ஆண்டில் மேலதிக முகாமைப் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். தற்போது இவர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைப் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.

கெப்டன் கெப்பெட்டிபொல, வ/ப ஜய கொள்கலன் முனையத்தினதும் வ/ப கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய கம்பெனியினது (CICT) பணிப்பாளராக இருப்பதோடு ஐக்கிய இராஜ்ஜியத்தின் கடல் மைல் நிறுவனத்தின் (இலங்கைக் கிளை) முன்னாள் தலைவருமாவார். மேலும் சேவைகள் வழங்கல் மற்றும் பட்டய போக்குவரத்து நிறுவனத்தின் அங்கத்தவரொருவருமாவார்.

கெப்டன் கெப்பிட்டிபொல துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் டெக் அலுவலர்களின் பரிசோதகராகவும் கடமையாற்றுகின்றார்.

### டாக்டர் சஞ்சய சேதர செனரத்
### நிறைவேற்றுப் பணிப்பாளர்

திரு. சஞ்சய சேதர செனரத் மாத்தறை ராஹுல வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியினைப் பயின்றார். பாடசாலை பருவத்தினுள் சனாதிபதி சாரணராகவும், பாடசாலை நிற வெற்றியாளராகவும், தேசிய நிற வெற்றியாளராகவும் பாடசாலையின் பிரதான மாணவத் தலைவராகவும் பெற்ற பயிற்சியானது இவரின் வயது வந்த வாழ்க்கைக்கு மிகவும் துணை புரிந்தது. அதன் பின்னணியில் மாத்தறை ராஹுல வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவராக இவர் நியமிக்கப்படுவதற்கு அவகாசம் கிடைத்தது.

உயர்தரப் பரீட்சையின் பின்னர் சட்டக் கல்லூரியில் இணைந்தார். சட்டக் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கையில் ரஷ்யாவின் மொஸ்கவ் நகர பீபல்ஸ் பிரென்ஷிப் பல்கலைக்கழகத்தினால் புலமைப் பரிசில் கிடைக்கப்பெற்ற இவர் அங்கு வைத்தியப் பட்டத்தினையும் ரஷ்ய மொழி கற்பித்தல் தொடர்பான பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

வைத்தியப் பட்டம் பெற்றுக் கொண்டதன் பின்னர் இவர் மாத்தறை பெரிய ஆஸ்பத்திரியில் வைத்திய அலுவலராகக் கடமையாற்றினார்.

அதன் பின்னர் ரஷ்யாவின் மொஸ்கவ் நகர வர்த்தக முகாமைத்துவ கல்வி நிலையத்தில் வர்த்தக முகாமைத்துவம் மற்றும் நிதி நிர்வாகம் பற்றியதிலான பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுக் கொண்டார்.

**ஏனைய சாதனைகள்**

ரஷ்யாவின் மொஸ்கவ் நகர பீபல்ஸ் பிரென்ஷிப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச மாணவர் சங்க செயலாளராக நியமிக்கப்படுதல் மற்றும் மிகவும் பிரபல்யமான மாணவராக இருத்தல் (வெளிநாட்டு மாணவர் பிரிவு – 1995)

வர்த்தக முகாமைத்துவம் பற்றியதில் பரந்த சர்வதேச விளக்காற்றல் கொண்ட இவர் இலங்கையில் பல வெளிநாட்டு செலாவணி முதலீட்டு வர்த்தகங்களை நிறுவியுள்ளார்.

பல் கூட்டு வர்த்தகங்களை வெற்றிகரமாக நடாத்தி வருவதுடன் பிரதானமாக இலங்கையின் தென் பிரதேசத்தில் பல சமூக நலன்புரி திட்டங்களையும் மேற்கொண்டுள்ளார்.

இவர் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர்களில் ஒருவராகவும் பின்னர் அதிகாரசபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் காலித் துறைமுக கண்காணிப்பு பணிப்பாளராகவும், கொழும்பு துறைமுக ஒன்றிணைந்த காணி கூட்டு அபிவிருத்தித் திட்டத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இலங்கையின் பூகோளரீதியாக இருக்கும் அனுகூலமிகு அமைவினைப் பயன்படுத்தி இலங்கை துறைமுக அதிகாரசபையின் முன்னேற்றத்திற்காக உலகம் பூராகவுமுள்ள வர்த்தக சந்தர்ப்பங்களை இலங்கை நோக்கி வரவழைப்பதற்கான ஆய்வு ரீதியான பணிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

### திரு. அனுர ஜயவிக்ரம
### பணிப்பாளர்

**துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர்**

1982 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இவர், 1984 ஆம் ஆண்டில் இலங்கை நிருவாக சேவையில் இணைந்தார். 2006 ஆம் ஆண்டில் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன் இவர் வர்த்தக வாணிபத்துறை அமைச்சு , கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் கல்வி போன்ற அமைச்சுகளில் பல நிர்வாக பதவிகளையும் வகித்துள்ளார்.

இவர் தென் அவுஸ்திரேலியாவின் பிலின்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் கொள்கைகள் மற்றும் நிர்வாகம் தொடர்பிலான முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

நிர்வாகத்தில் தலைசிறந்த தேர்ச்சிகளோடு இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அலுவலராகப் பணி புரிந்து சிறந்த அனுபவம் பெற்றுள்ள இவர் தற்போது துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

திரு. அனுர ஜயவிக்ரம, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளினது அங்கத்தவரொருவராகவும் கடமையாற்றுகின்றார்.

### திரு. எஸ் ஆர் ஆட்டிகல
### பணிப்பாளர்

**பொது திறைசேரியின் பிரதிச் செயலாளர்**

திரு. ஆட்டிகல கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணிதப் பிரிவில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றுள்ளதோடு ஐக்கிய இராச்சியத்தின் வேர்விக் (Warwick) பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான கலைப் பட்டதாரியுமாவார்.

மத்திய வங்கியின் சிரேஷ்ட பொருளியல் நிபுணராக பல வருடங்கள் சேவையாற்றிய இவர் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் மற்றும் பதில் தலைவராகவும் ஷெல் காஸ் லங்கா கம்பெனியின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் தற்போது திறைசேரியின் பிரதிச் செயலாளராகக் கடமையாற்றுகின்றார்.

இவர் இலங்கை வங்கியின் பணிப்பாளர் பதவியிலும் இலங்கை காப்புறுதி மற்றும் நாணய ஆணைக்குழுவினதும் இலங்கை காப்புறுதிச் சபையினதும் அங்கத்தவராகவும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பட்டப் பின் படிப்பு நிலையத்தின் முகாமைத்துவ சபையிலும் பணியாற்றுகின்றார். அத்தோடு இவர் இலங்கை முதலீட்டுச் சபையினது கண்காணிப்பாளருமாவார்.

**திருமதி டப்ளியு சுதர்மா கருணாரத்ன**
**பணிப்பாளர்**

**முதுமாணி (அரச நிர்வாகம்) கால்டன் பல்கலைக்கழகம், கனடா.**
**பூகோளவியல் விசேட பட்டதாரி (முதலாம் வகுப்பு)**

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்**

இவர் 1984 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்து உதவிப் பணிப்பாளர், உதவிக் கட்டுப்பாட்டாளர், பிரதிப் பணிப்பாளர், பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் நாயகமாக பல அரச திணைக்களங்களிலும் அமைச்சுக்களிலும் பணியாற்றியுள்ளார். இவர் 2005 ஆண்டிலிருந்து முகாமைத்துவச் சேவை பணிப்பாளர் நாயகமாகவும் நிதித் திட்டமிடல் அமைச்சின் தேசிய வரவுசெலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றியுள்ளார். தற்போது இவர் சுங்க பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றுகின்றார். நிர்வாகம், அமைப்பு , மனிதவள அபிவிருத்தி, சம்பளங்கள் மற்றும் ஆளணித் தொகை போன்ற பல்வேறு மீளமைப்பு சீர்திருத்த துறைகள் தொடர்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்படும் உத்தியோகபூர்வ குழுக்களின் அங்கத்தவராகவும் செயற்பட்டுள்ளார். அமைச்சரவையினால் நியமிக்கப்படும் விலைகோரல் சபைகளின் அங்கத்தவராகவும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரி, சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை போன்ற நிறுவனங்களின் முகாமைத்துவ சபைகளின் பணிப்பாளராகவும் தனது சேவையினை வழங்கியுள்ளார். தற்போது இவர் இலங்கை துறைமுக அதிகாரசபை, முதலீட்டுச் சபை, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை , முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபை போன்ற நிறுவனங்களின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

இவர், முன்னோடி கட்டுப்பாட்டு அதிகாரசபை, ஆசிய அபிவிருத்தி வங்கி, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றியதான அமைப்பு, சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி,பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றியதான அமைப்பு OECD , அணிசேரா நாடுகள், பொருளாதார ஒத்துழைப்புக்கான ஜப்பான் சர்வதேச முகவராண்மை , (JICA) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிலையம் (SLIDA) போன்ற நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட தொழில்சார் விரிவுரைகள், பாடநெறிகளிலும் கலந்து கொண்டுள்ளார்..

**கலாநிதி (திருமதி) தமித டி சொய்ஸா**
**பணிப்பாளர்**

**மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்**

கலாநிதி (திருமதி) தமித டி சொய்ஸா, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பற்றியதான புள்ளி விபரவியல் (சிறப்பு) கலைப் பட்டதாரியாவார். அதே போன்று அவுஸ்திரேலியாவிலுள்ள கன்பெரா பல்கலைக்கழகத்தில் விவசாய அபிவிருத்திப் பொருளியல் தொடர்பிலான விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தினையும் அமெரிக்காவின் ஒஹியோ கொலம்பஸின் ஒஹியோ மாநில பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல் தொடர்பான முதுமாணிப் பட்டத்தினையும் விவசாயப் பொருளியலில் கலாநிதிப் பட்டத்தினையும் இவர் பெற்றுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆந் திகதியிலிருந்து இவர் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றதோடு 2010 நவம்பர் 25 ஆந் திகதி மீண்டும் அப்பதவியில் நியமிக்கப்பட்டார். அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றும் அதே சமயம் தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தேசிய நீரியல் வள அபிவிருத்தி நிறுவனம் (NARA) போன்ற சபைகளிலும் அங்கம் வகிக்கின்றார். இவர் ஜனாதிபதியின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ள பெற்றோலிய வள அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவருமாவார். அத்தோடு உரம் தொடர்பான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகளுக்கான குழுவின் தலைவராகவும் இவர் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை திட்டமிடல் சேவையைச் சேர்ந்த இவர் பல்கலைக்கழக படிப்பின் பின்னர் நிதி திட்டமிடல் அமைச்சின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் தமது ஆரம்ப தொழில்சார் பணியினை ஆரம்பித்து. திட்டமிடல் அலுவலர், உதவிப் பணிப்பாளர் , பிரதிப் பணிப்பாளர் மற்றும் மேலதிகப்

பணிப்பாளர் போன்ற பல பதவிகளிலும் கடமையாற்றியுள்ளார். 1999 ஆம் ஆண்டில் அத்திணைக்களத்தின் பணிப்பாளராக உயர்வு பெற்றார். இவர் 2005 ஆம் ஆண்டில் அவ்வமைச்சின் பொது வரிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்வு பெற்றார். இவரின் தற்போதைய பதவிக்கு முன்னர் நிதி திட்டமிடல் அமைச்சின் நிதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும் நிதி திட்டமிடல் அமைச்சில் சேவையிலீடுபட்டிருக்கையில் பெருந்தோட்ட பொறுப்பு நிதியத்தின் தலைவராகவும், நனோ தொழில்நுட்பம் பற்றியதான இலங்கை SLIN Tec நிறுவனத்தினதும் நனோ நடைமுறை தொழில்நுட்பம் சம்பந்தமான வ/ப தனியார் கம்பெனியினது (NANCO) பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகப் பணியாற்றியுள்ளார். தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, நெல் சந்தைப்படுத்தல் சபை, உயர் நிர்மாணப் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளின் அங்கத்தவராகவிருந்த இவர், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளின் அங்கத்தவராகவும் இருந்தார். மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கடமையேற்றுக் கொண்டதன் பின்னர் டி எப் சீ சீ வங்கியின் பணிப்பாளர் சபையிலிருந்து விலகியுள்ளார்.

**திரு. ஏஷன டி சில்வா**
**பணிப்பாளர்**

கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் சான்றிதழ் பெற்ற தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவனத்தின் (MCPM) அங்கத்தவரொருவராவார். அதேபோன்று ஐக்கிய இராச்சியத்தின் சான்றிதழ்பெற்ற தொழில் வல்லுனர்களின் சங்கத்தின் (AUKAPCUT) ஒன்றிணைந்த அங்கத்தவருமாவார். இவர் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பல சிரேஷ்ட பதவிகளையும் வகிக்கின்றார். தற்போது இவர் வ/ப எஸ்னா ஹோல்டிங்ஸ் (தனியார்) நிறுவனம், வ/ப ஸர்மன்ஸ் லொஜிஸ்டிக்ஸ் (தனியார்) கம்பெனி மற்றும் வ/ப ஸர்மன்ஸ் றான்ஸ்போட் (தனியார்) கம்பெனி போன்றவற்றின் தலைவராவார்.. அத்துடன வ/ப எஸ்னா (தனியார்) கம்பெனியின் பிரதித் தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளரான இவர், வ/ப எஸ்னா டெக்னொலொஜிஸ் (தனியார் கம்பெனியின் தலைவரும் ஆவார். வ/ப எஸ்னா விலாஸ் தனியார் கம்பெனி, வ/ப எஸ்னா பவர் (தனியார்) கம்பெனி, வ/ப எஸ்னா வர்த்தகங்கள் (தனியார்) கம்பெனி, வ/ப பான் ஏசியன் பாங்கின் கோபரேஸன் பீ எல் சீ (பீஏபீசீ) தனியார் கம்பெனி போன்றவற்றின் பணிப்பாளருமாவார். இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வ/ப மவுன்ட்படன் லான்ட் (தனியார்) கம்பெனிகளின் பணிப்பாளர் சபைகளில் அங்கத்தவரான இவர், வ/ப மெக் மராயின் (தனியார்) கம்பெனி, லங்கா சிபின் அன்ட் லொஜிஸ்டிக்ஸ், சிமாடெக் ஏஜன்சி லங்கா நிறுவனம், வ/ப ஸர்மன்ஸ் சன்ஸ் (தனியார்) கம்பெனி, வ/ப ஸர்மன் டி சில்வா (தனியார்) கம்பெனி மற்றும் வ/ப டிமென்ஸன் எக்ஸ் (தனியார்) போன்ற கம்பெனிகளின் பணிப்பாளருமாவார்.

இவர் இலங்கைக்கான கஸகஸ்தான் குடியரசின் தூதுவராலய அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை விவசாய வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் (எஸ் எல் ஏ பீ சீ ஓ) முன்னாள் தலைவரான இவர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் விசேட ஆலோசனைக் குழுவின் அங்கத்தவரொருவராகவும் கடமையாற்றியுள்ளார். இதற்கு மேலதிகமாக இவர் வெளிநாட்டு கம்பெனிகளுக்கான ஆலோசகராகவும் செயற்படுகின்றார்.

**திரு. கபில லியனகமகே**
**பணிப்பாளர் சபை செயலாளர்**

**சட்ட ஆலோசகர் - இலங்கை துறைமுக அதிகாரசபை**

## முகாமைக் குழு

கலாநிதி பிரியத் பீ விக்ரம
தலைவர்

திரு. இந்திக கருணாஜீவ
உப தலைவர்

கெப்டன் நிஹால் கெப்பெட்டிபொல
முகாமைப் பணிப்பாளர்

டாக்டர் சஞ்ஞய சேதர செனரத்
நிறைவேற்றுப் பணிப்பாளர்

திரு.நோமன் வீரரத்ன
மேலதிக முகாமைப் பணிப்பாளர்

திருமதி. ஷிராணி வன்னியாராச்சி
பணிப்பாளர் (நிதி)

திருஜே.கே.பீ. குருகுலசூரிய
பணிப்பாளர் (தென் துறைமுக அபிவிருத்தி)

திரு.ஜீ.ஏ. தலகல
பணிப்பாளர் (துறைமுக இயக்கம்)

திரு .ஏ.டி.ரீ. குணசேகர
பணிப்பாளர் (தொழில்நுட்பம்)

திரு.டீ.டப்ளியூ.அத்தபத்து
பணிப்பாளர் (சேவை வழங்கல்)

மேஜர் ஜெனரல் எஸ்.ஜீ. கருணாரத்ன
பணிப்பாளர் (பாதுகாப்பு)

திரு.எம்.பீ.எஸ்.எஸ்.பீரிஸ்
பிரதான பொறியியலாளர் (சிவில்)

திரு.கே.ஏ. அன்சார்
பிரதான பயிற்சி முகாமையாளர்

திருமதி.டி.ஜீ.ஐ.சீ.லொகுஹேவகே
பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு)

கெப்டன் ஆர்.ஏ. ஜயவிக்ரம
ஹாபர் மாஸ்டர்

திரு.எல். பிரேமசிறி டி. சில்வா
பிரதான உள்ளக கணக்காய்வாளர்

டாக்டர் (திருமதி) டி. ராஜகாந்தன்
பிரதான மருத்துவ அலுவலர்

திரு.எச்.டி.எச். சமரசிங்க
பிரதான பொறியியலாளர் (கடலகம்)

திரு.எல்.எச்.ஆர். சேபால
பிரதான மனிதவள முகாமையாளர்

திரு.பீ.டப்ளியூ. வடுகே
பிரதான பொறியியலாளர் (இயந்திர வேலைகள்)

திரு.டீ.யூ.டப்ளியூ .டி.சொய்ஸா
பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)

திரு. பீ.ஏ.ஏ.ஹேவாகீகன
பிரதான பொறியியலாளர் (தென் துறைமுக அபிவிருத்தி)

திரு. ஈ.ஏ.ரீ.எதிரிசூரிய
பிரதான பொறியியலாளர் (இயந்திர பொறி)

திரு.ஏ.ஏ.எஸ்.ஆர். அபேசிறிவர்தன
பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)

திரு.டப்ளியூ. என். அல்சன்
பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)

திரு.டி.ஏ.ஜே.ஐ. பேரேரா
பிரதான முகாமையாளர் (கொள்கலன் கையாளல்)

திரு. உபுல் ஜயதிஸ்ஸ
பிரதான முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி)

திரு. பீ. ரணதுங்க
பிரதான முகாமையாளர் (மரபுரீதியான கப்பற் சரக்குகள்)

திரு.ஆர்.எம்.ஏ.எஸ். ரத்னாயக்க
பிரதான முகாமையாளர் (நிர்வாகம்)

திரு. டப்ளியூ.எம்.டீ.பி. விஜேகோன்
பிரதான பொறியியலாளர் (மின்சாரம்)

திரு.எச்.ஏ.என்.எஸ்.பெர்னாந்து
பதில் பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)

திரு. எச்.எம்.யூ.பி .கலகொட
பதில் பிரதான முகாமையாளர் (தகவல் முறைமை)

## கணக்காய்வுக் குழு

திரு.எஸ்.ஆர். ஆட்டிகல
தலைவர்

திருமதி. டப்ளியூ சுதர்மா கருணாரத்ன
அங்கத்தவர்

திருமதி. ஷிராணி வன்னியாராச்சி
அங்கத்தவர்

திரு.ஜீ.ஏ. தலகல
அங்கத்தவர்

திரு .ஏ.டி.ரீ. குணசேகர
அங்கத்தவர்

திரு. எல். பிரேமசிறி டி சில்வா
செயலாளர்

2011 ஆம் ஆண்டின் நடவடிக்கைகள் மற்றும் அடையப்பெறுதல்கள் பின்வருமாறு.

2011 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய பிரதான கப்பல் சேவையும் ஊட்டச் சேவையும் கவரப்பட்டன.

**ஐந்து பிரதான கப்பல் சேவைகள்**

- எவர்கிறின் மற்றும் சிமாடெக் – CIX – 2 China ISC
- MSC – தென்னாபிரிக்க சேவை
- RCI / CIS – பிராந்திய கொள்கலன் லைன் (RCL) மற்றும் Happag LIoyd
- PIL – கிழக்கு ஆபிரிக்கா /தூர கிழக்கு சேவை – EA2 W/B
- PIL – கிழக்கு ஆபிரிக்கா /தூர கிழக்கு சேவை – EA2 E

**ஒரு ஊட்டச் சேவை**

- இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் (CSC) – Viz/Karikal

**ஐந்து கப்பல் சேவைகளுடனான முனைய சேவை ஒப்பந்தங்களுக்குட்படல்**

- CMAS – CGM
- Wan Hai லைன்
- எவர்கிறீன்
- ஏ.பீ.எல்
- ZIM/GSL லைன்

**இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்ட முனையங்களில் பதிவாகியுள்ள பெறுபேறுகள் பின்வருமாறு**

- உள்நாட்டு கொள்கலன் கையாளல் அளவு 14.9% த்தினால் அதிகரித்துள்ளது.
- மாற்றியேற்றல் கொள்கலன் கையாளல் அளவு 3.2% த்தினால் அதிகரித்துள்ளது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்ட முனையங்களினது கொள்ளளவு 6.1% த்தினால் அதிகரித்துள்ளது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் சந்தைப் பங்கு 53.9% வரை அதிகரித்துள்ளது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகூடிய கொள்ளளவான 2,299,446 இருபது சம அலகுகள்.

**கொழும்புத் துறைமுகத்தில் பதிவாகியுள்ள பெறுபேறுகள் பின்வருமாறு**

- உள்நாட்டு கொள்கலன் கையாளல் அளவு 12.3% த்தினால் அதிகரித்துள்ளது.
- மாற்றியேற்றல் கொள்கலன் கையாளல் அளவு 0.9% த்தினால் அதிகரித்துள்ளது.
- கொழும்புத் துறைமுகத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சி 3% ஆகும்.
- கொழும்புத் துறைமுக முனையங்களினால் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகூடிய கொள்ளளவு 4,262,887 இருபது சம அலகுகளாகும்.

இலங்கை துறைமுக அதிகாரசபை, 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் மீது 1979.08.01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் 1984 இன் இல. 07 மற்றும் 35 ஆம் சட்டங்களின் ஊடாக திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 6 (1) பிரிவில் அதன் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

- கப்பல் சுமை நடவடிக்கைகள், கப்பல்களில் ஏற்றல் இறக்கல் மற்றும் மீள் ஏற்றல் பணிகள், தரையிறக்கல், குதங்களிடுதல், வாப்பு நடவடிக்கைகள், கலங்களுக்குத் தேவையான நீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்கல்,பெற்றோலியம்,பெற்றோலிய எண்ணெய் உற்பத்திகள், உராய்வு நீக்கிகள், கலங்களுக்கும் கலங்களில் இருந்து வத்தைகளுக்கும் , களஞ்சியங்களுக்கும் இடையில் போக்குவரத்து செய்தல், கலங்களின் வழிகாட்டிப் பணிகள், நங்கூரமிடப்படுதல், நீர் மூழ்குதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல் பழுதுபார்த்தல் தொடர்பில் திறன்மிகு தொடர்ச்சியான சேவை மற்றும் அதற்கான துணை சேவைகளை வழங்கல்.

- திறன்மிகு நிலையான ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கல்.

- துறைமுக எல்லைகளினுள்ளும் துறைமுகங்களினது உட்புகு வழிகளிலும் கப்பலோட்டம் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம்.

- துறைமுக நிறுவுதல்களைப் பராமரித்தல் மற்றும் அவைகளின் பாவனை குறிப்பிட்ட துறைமுகங்களினுள் மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்

- ஏதாவது விசேட துறைமுகங்களினுள் சுங்க திணைக்களப் பணிகள் தவிர்ந்த ஏனைய சகல நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் முறைப்படுத்தலும்.

- விசேட துறைமுகங்களினுள்ளும் அதன் வெளியேயும் கப்பலோட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலங்களுக்கு வழிகாட்டலும் பாதுகாப்புக்குத் தேவையான வெளிச்சங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகள் இலங்கை கடற்கரையில் மற்றும் அதற்கப்பால் நிறுவுதலும் பராமரித்தலும்.

- துறைமுக அதிகாரசபை சட்டத்தின் மீது ஒப்படைக்கப்படும் வேறேதாவது அலுவல்களை நிறைவேற்றுதல்.

- சொத்துக்கள் மீள் முதலீடு செய்யப்படுவதற்கும், புதிய முதலீடுகள் ஏற்படுத்தப்படுவதற்கும் போதுமான பொது சேமிப்பு நிதியமொன்றை ஏற்படுத்தி பராமரித்து செல்லப்படுவதற்காகவும் அதிகாரசபையின் வருமானத்திற்கு கொடுக்கப்படுவதற்கான தகுந்த கட்டணம் செலுத்தப்படுவதற்கும் போதுமான வருமானத்துக்கு குறையாத வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்கும் வண்ணம் அதிகாரசபையின் பணிகளை நடாத்திச் செல்லல், மேற்கூறப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவை தொடர்பிலான, கட்டணங்கள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்கேற்றவாறு அறவிட்டுக்கொள்ளுதல்,

- சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக விசேட துறைமுகங்கள் மற்றும் ஒவ்வொரு துறைமுகமும் நிதி அடிப்படையில் தன்நிறைவான திட்டமொன்றை முகாமைத்துவம் செய்தல்.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5 (1) பிரிவின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 9 பணிப்பாளர்கள் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் உள்ளடங்கப்பட்டிருப்பர்.

தலைவர், பிரதான நிறைவேற்றுனராக இருப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருப்பார்.

## 2011 இல் சிரேஷ்ட முகாமைத்துவத்திலான மாற்றங்கள்

**திரு.நோமன் வீரரத்ன** மேலதிக முகாமைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்..

**திரு.டி.டப்லியூ.அத்தபத்து** பணிப்பாளராக (சேவை வழங்கல்) நியமிக்கப்பட்டுள்ளார்.

**மேஜர் ஜெனரல் எஸ்.ஜீ. கருணாரத்ன** பணிப்பாளராக (பாதுகாப்பு) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு.டி.உபாலி டப்ளியு டி சொய்ஸா** அவர்கள் பிரதான முகாமையாளராக (சேவை வழங்கல்) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு.டப்ளியூ.என். அல்சன்** பிரதான முகாமையாளராக (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்) நியமிக்கப்பட்.டுள்ளார்.

**திரு.பீ.ரணதுங்க** பிரதான முகாமையாளராக (மரபுரீதியான கப்பற்சரக்குகள்) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு.ஆர்.எம்.ஏ.எஸ். ரத்னாயக்க** பிரதான முகாமையாளராக (நிர்வாகம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு.கலகொட** பதில் பிரதான முகாமையாளராக (தகவல் முறைமை)

## 2011 இல் சிரேஷ்ட முகாமைத்துவத்திலான ஓய்வு பெறுதல்

பிரதான சட்ட அலுவலரான **செல்வி ஐ. பத்மபெரும** அவர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

## இலங்கை கப்பல் முகவர்களின் கூட்டங்கள்

கப்பல் முகவர்களினது சங்கத்தினால் (CASA) துறைமுகம் சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் தமது உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் , சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவக் குழுவுடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. துறைமுக பாவனையாளர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கும், புரிந்துணர்வு, சுமூக உறவு பேணப்படுவதற்கும், அதன் ஊடாக வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் அக்கலந்துரையாடல்கள் வழி வகுத்துள்ளன.

## ஒழுக்காற்று விதிமுறைகளுக்கெதிரான மேன்முறையீட்டுக் குழுக்கள்

தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு எதிராக ஊழியர்களினால் தலைவர்/ பணிப்பாளர் சபையிடம் 70 மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கமைவாக ஏற்படுத்தப்பட்ட 05 மேன் முறையீட்டுச் சபைகளின் கவனத்திற்கு அவை கொண்டு வரப்பட்டன.

இம்மேன்முறையீடுகளில் 05 அங்கீகரிக்கப்பட்டதோடு 54 மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டன. 11 மேன்முறையீடுகளின் பணிகள் முடிவு செய்யப்பட வேண்டியுள்ளன.

## வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் புலமைப் பரிசில் சந்தர்ப்பங்கள்

மீளாய்வுக்குட்படும் வருடத்தினுள் அதிகாரசபையின் சிரேஷ்ட மற்றும் நடுத்தர முகாமைத்துவப் பதவிகள் வகிக்கும் 71 அலுவலர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு பயிற்சிப் பாடநெறிகள் பின்பற்றப்படுவதற்கும், இலங்கைக்கு வெளியேயுள்ள சர்வதேச அமைப்புகளினால் நடாத்தப்பட்ட சம்மேளனங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் தொடர்பில் கலந்து கொள்ளப்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

இதற்குப் புறம்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் 18 ஊழியர்கள் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்துவதற்காக வெளிநாடு சென்றனர்.

## தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள்

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் போன்று துறைமுகத்துடன் தொடர்புபட்ட வெளித் தரப்பினர்களுக்கிடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்துவதற்கு தொடர்பாடல் பொதுசன உறவுகள் பகுதி ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவனத்தின் மொத்த தோற்றப்பாடு மேம்படுத்தும் வகையிலான புதிய மூலோபாயங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. உள்நாட்டு வெளிநாட்டு கண்காட்சிகளில் கலந்து கொண்டு இலத்திரனியல் மற்றும் பத்திரிகை ஊடகங்கள் மூலம் இப்பணிகளுக்கு தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ள பல கடமைகளுள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தோற்றப்பாட்டினை விருத்தி செய்வதற்காக வெளிநாட்டு ரீதியாகவும் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனும் முனைப்பாக பணியாற்றுதல் இப்பகுதியின் பொறுப்பாகும். துறைமுக திட்டங்களினூடாக நிறைவேற்றப்படவுள்ள அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக பாரிய பிரச்சாரம் செய்யப்படக் கூடிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையில் சிறந்த தொடர்பாடல் விருத்தி செய்யப்படும் பிரதான நோக்கம் வெற்றிகொள்ளப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கிடையில் “தீர்த்த” எனும் மாதாந்த பத்திரிகையின் இலவச வினியோகம் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. விளையாட்டுக்கள், நுன்கலைகள், தத்துவம் போன்ற சமூக ஆர்வம் கொண்ட விடயங்களினுள் துறைமுக ஊழியர்களின் விசேட திறன்கள் இனங்காணப்பட உதவுவதோடு செயற்றிறன் மற்றும் வினைத்திறன் மேற்கொண்டு மேம்படுத்தப்படுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் காலத்துக்கேற்ற நடைமுறைச் சட்டங்கள் மற்றும் விதிகள் தொடர்பில் துறைமுக ஊழியர்கள் அறிவுறுத்தப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பாவனைக்காக பதிப்பு மற்றும் இலத்திரனியல் ஆகிய இரண்டு தரவுகளிலான ஆவண காப்பகமொன்று, தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் நடாத்திச் செல்லப்படுகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான உள்நாட்டு பத்திரிகைகளிலும் அநேகமான சஞ்சிகைகளின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியாகிய சகல விடயங்கள் கணனிமயப்படுத்தப்பட்டும் மூலப் பிரதிகளாகவும் இப்பகுதியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதோடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு ஒளிப்பதிவு நிகழ்ச்சிகளுக்குத் தேவைப்படும் அதேபோன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடந்த மற்றும் நிகழ்கால சகல ஒளிப்பதிவு நிகழ்ச்சிகள் எதிர்கால பாவனைகளுக்காக நவீன இலத்திரனியல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு கலைக்கூடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபை சார்பிலான சகல ஆவண ரீதியான அறிக்கைகளின் மென் மற்றும் வன் பிரதிகள் (கணனிமயப்படுத்தப்பட்ட) நூல் நிலையமொன்றும் இப்பிரிவில் உள்ளது.

மொனராகல – புத்தள இல் நடைபெற்ற “தேசத்துக்கு மகுடம்”, வியட்நாம் , பங்களாதேசம் போன்று இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற பல தேசிய கண்காட்சிகளில் கொழும்புத் துறைமுகமானது தெற்காசியாவின் முக்கிய கேந்திர நிலையமாகவும் இலங்கை கடல்சார் நிலையமாகவும் விருத்தி செய்யப்படுவதற்கு விளக்கமளிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கிடைத்தது. டெக்னோ கண்காட்சியின் போது சிறந்த கூடத்திற்கான வெண்கல பதக்கம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குக் கிடைத்துள்ளது.

இப்பகுதியினால் சர்வதேச துறைமுகங்கள் மற்றும் கப்பற் தளங்கள் அமைப்பின் (IAPH) சம்மேளனம் போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பல விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு மிகவும் முக்கிய பணியாற்றப்பட்டது. பல்வேறு நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சந்தர்ப்பங்களின் போது பத்திரிகைகளில் மேலதிக பிரசுரங்கள் வெளியிடப்படுவதற்கு இப்பகுதியினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் தோற்றப்பாடு விருத்தி செய்யப்படுதலின் பல்வேறு ஊடக கலந்துரையாடல்களின் போது இலங்கை துறைமுக அதிகாரசபையினைப் நிரதிநிதிப்படுத்துவதற்கும் அது சம்பந்தப்பட்ட ஒளிப்பதிவுக் காட்சிகள், பதிப்புத் தரவுகள், பத்திரிகைகளுக்கான உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் வெளி ஊடகங்களுக்கு வழங்கும் அதிகாரம் தொடர்பில் மற்றும் பொதுசன உறவுகள் பகுதிக்கு மட்டுமே உண்டு.

தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி ஊடாக விசேட நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பு , கலாசார விழா ஏற்பாடு போன்ற நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து "இசுறு கெனென நெவ் தொட்ட" எனும் சித்திரங்கள், கட்டுரைகள், கவிதைகள், மேடை நாடக கைப் பிரதியாக்கம், புகைப்படங்கள், மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் வடிவம் தயாரித்தல், முத்திரை மற்றும் கவிதைப் போட்டிகள் இப்பகுதியினால் நெறிப்படுத்தப்பட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கல் இலங்கை ரூபவாஹினி வளவில் விமர்சையாக நடைபெற்றது.

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் விழாவின் போது நினைவு முத்திரை வடிவமைக்கும் பணியில் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி இலங்கை முத்திரைப் பணியகத்துடன் இணைந்து செயலாற்றியதோடு 2011 நவம்பர் 18 ஆந் திகதி அங்குரார்ப்பண விழா முதல் நாளுக்குரிய உறை வெளியிடுதலும் நடைபெற்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் பிரசார நடவடிக்கைகளுக்கு வசதிகள் வழங்கல் இப்பகுதிக்குரிய பணியாகும். மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் பற்றியதிலான சிறந்த விளக்கமளிக்கப்படுவதற்கும் இதுவானது இலங்கையின் எதிர்கால சமூக பொருளாதார அபிவிருத்தியில் தொடர்புபடும் முறைகள் பற்றயதில் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் எதிர்கால திட்டங்கள் பற்றியதான அறிக்கைப் படங்கள் மற்றும் நேர்முக கலந்துரையாடல்கள் ஒலிபரப்புச் செய்தல், பிரச்சாரம் செய்தல் பதிப்பு ஊடகத்தினால் வெளியிடப்படுவதற்கும் இலங்கையின் தேசிய மற்றும் வேறு அங்கீகார தொலைக்காட்சி வானொலி, பத்திரிகை நிறுவனங்கள் பலவற்றோடு இப்பகுதி தொடர்புபட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிலைப்பாடு மற்றும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கு பாதிப்பேற்படுத்தும் வெளியிடல்களுக்கு பதிலடி கொடுப்பதற்காக விசேட ஊடக அறிவிப்புகள் செய்யப்படுவதன் மூலம் மிகவும் சிறந்ததும் யதார்த்தமான ஆராய்தல் மேற்கொள்ளலின் தொடர்ச்சியான நடைமுறை இப்பகுதியினால் பின்பற்றப்பட்டது.

# இயக்க மீளாய்வு

## இயக்கம்

வரலாற்றில் முதல் தடவையாக கொழும்புத் துறைமுகத்தில் ஆகக் கூடிய கொள்கலன் கையாளல் 2011ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2011 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 4,262,887 இருபது சம அலகுகள் கொள்கலன் கையாளப்பட்டுள்ளதுடன் இதுவானது 3% வளர்ச்சியாகும்.

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் கொழும்புத் துறைமுகத்தினால் கையாளப்பட்ட மொத்த கொள்கலன்கள், வருகை தந்த கப்பல்கள், கையாளப்பட்ட மொத்த கப்பற்சரக்கு ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட கொள்கலன் முனையங்கள், 2010 ஆம் ஆண்டில் SAGT கம்பெனியினால் நிர்வகிக்கப்பட்ட சந்தைப் பங்குடன் ஒப்பிடப்படுகையில் 3% வளர்ச்சி காணப்படுகின்றது. உடல் அவயவங்களின் உயிரியல் ரீதியான வருகை பதிவு செய்யும் முறையானது படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டதனால் இயக்க ஆளணியினரினது வேலைக்கு சமூகமளித்தல் முறையாக நடைபெற்று அதனூடாக முனைய செயலாற்றுகைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டது.

நிலவும் வளங்கள் உச்ச முறையில் மேற்பார்வை செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொள்கலன் முனையங்களில் கையாளல் மேற்கொள்ளப்படுகையின் காலங்கள் குறைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 06 கன்ட்றி பாரந்தூக்கிகள் , இறப்பர் சில்லுகள் பொருத்தப்பட்ட 30 கன்ட்றி பாரந்தூக்கிகள், 50 முனைய டிரக்டர்களைக் கொண்ட புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டு முனையங்களின் உயர் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஜய கொள்கலன் முனையத்திற்குச் சமீபமாக இருந்த பழைய கட்டிடங்கள் உடைத்து அகற்றப்பட்டு முனையத்தில் 8000 தொகுதியின் இடவசதி சேர்க்கப்பட்டுள்ளதனால் உள்நாட்டு கொள்கலன் வைக்கப்படக் கூடிய இடவசதி அதிகரிக்கப் பெற்றுள்ளது.

நிதிசார் மற்றும் யுரோ நாணய வலயத்திலேற்பட்ட சிக்கல்கள் காரணமாக உலக மற்றும் அமெரிக்க பொருளாதாரங்களில் உருவான பின்னடைவுகளுக்கும், இயற்கை அனர்த்தம் மற்றும் விபத்துக்களின் பயனாக ஜப்பான் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்பான விளைவுகள் போன்று மத்திய கிழக்கு வலயத்தின் யுத்த சூழல் நிலைமைகளுக்கும் மத்தியில் கொழும்புத் துறைமுகத்தினால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள முன்னேற்றம் அடையப்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## சேவை வழங்கல்

துறைமுகத்திற்கு கொண்டு வரப்படும் பூரண கொள்கலன் ஏற்றல்கள் (FCL), குறை கொள்கலன் ஏற்றுதல்கள் (LCL), தொகை பிரிப்பு ,பொதிகளிலிடப்பட்டவை மற்றும் மோட்டார் வாகனங்கள் கொண்ட அனைத்து கப்பற் சரக்குகளை ஒப்படைப்பதும் வாடிக்கையாளர்களுக்குரிய ஏனைய கப்பற்சரக்குகள் பற்றியதிலான சேவைகள் வழங்குவதும் சேவை வழங்கல் பகுதியின் முக்கிய பணிகளாகும்.

24 மணித்தியாலங்கள் பூராகவும் சேவைகள் வழங்கப்படுதலின் மூலம் பாவனையாளர் சேவை நிலையத்தினால் 2011 ஆம் ஆண்டினுள் 278,956 இருபது சம அலகுகளைக் கொண்ட பூரண கொள்கலன் ஏற்றுதல்கள் நேரடியாக வினியோகிக்கப்பட்டுள்ளன. பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் அதிகரிக்கப்படுவதற்கும் ஆவணமாக்கலில் செலவிடப்படும் காலம் குறைக்கப்படுவதற்கும் ஆண்டினுள் நேவீஸ் (NAVIS) கப்பற் சரக்கு மொடியூல் அறிமுகப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

உள்நாட்டு , மீள் ஏற்றுமதி, பல்நாட்டு கப்பற் சரக்குகளின் (MCC) ஒன்று திரட்டல் கப்பற் சரக்குகளுக்கு துறைமுகத்தினுள்ள குதங்களில் இடமளிக்கப்படுவதற்காக குறை கொள்கலன் ஏற்றுதல்களின் (LCL) பெரும் பகுதி (7926 இ.ச. அலகுகள்) அடுக்கப்படுவதற்கு பேலியகொடை கொள்கலன் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. குறை கொள்கலன் ஏற்றுதல்கள் அடுக்கப்பட்டதன் ஊடாக ரூபா 185.3 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. அதேபோன்று பல்நாட்டு கப்பற்சரக்கு ஒன்று திரட்டப்பட்டதனால் ரூபா 94.2 மில்லியன் வருமானமும் இதற்கு மேலதிகமாக வெற்று

கொள்கலன் களஞ்சியப்படுத்தப்பட்டதன் வாடகையாக ரூபா 5.6 மில்லியன் வருமானமும் கிடைக்கப் பெற்றுள்ளது.

ஆண்டினுள் சரக்குகள் அகற்றும் நிறுவனங்களுக்கு 82 புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டும் 817 அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டதனாலும் மொத்தமாக 899 அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் ரூபா 11.8 மில்லியன் வருமானம் பெறப்பட்டுள்ளது. “ஏ” மற்றும் “பீ” வகையின் வாப்பு இலிகிதர்களுக்கான ஆள் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டதனாலும் ரூபா 5.3 மில்லியன் வருமானம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. ஆண்டினுள் வழங்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட “ஏ” மற்றும் “பீ” வகையிலான அனுமதிப் பத்திரங்களின் தொகை முறையே 1934 ,287 ஆகும்.

கொள்கலன் அடுக்கி வைக்கப்படும் நிலையத்தின் V ஆம் இலக்க (CFS -V ) குதம் புதுப்பிக்கப்பட்டதன் மூலம் உடன்பாட்டுக் குத்தகை மற்றும் துறைமுக கப்பற் சரக்கு வர்த்தகத்திற்கான குத வசதிகள் அதிகரிக்கப் பெற்று உடன்பாட்டுக் குத்தகை மற்றும் துறைமுக கப்பற் சரக்கு வர்த்தகத்திற்கான கிராக்கி ஏற்பட்டதனால் ரூபா 33.2 மில்லியன் மொத்த வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. இதுவானது 2010 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட ரூபா 303.1 மில்லியனுடன் ஒப்பிடப்படுகையில் 2011 ஆம் ஆண்டில் சேவை வழங்கல் பகுதியினால் வழங்கப்பட்ட சேவைகளின் ஊடாக ரூபா 335.6 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட கப்பற் சரக்குகள் அகற்றப்படுவதற்கான பகிரங்க விலைகோரல் மற்றும் ஏல விற்பனையினால் மொத்தமாக ரூபா 101 மில்லியன் வருமானம் கிடைக்கப்பெற்றதோடு வ/ப இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனைச் சேவைக் கம்பெனியினால் கழிவு இரும்புகள், பயன்படுத்தப்பட்ட எண்ணெய் மற்றும் பழைய டயர்கள் விற்கப்பட்டதனால் ரூபா 15 மில்லியன் மேலதிக வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்குப் புறம்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அகற்றப்பட்ட மேலதிக பொருட்கள் பகிரங்க விலைகோரலின் மூலம் விற்கப்பட்டதனால் ரூபா 7.9 மில்லியன் வருமானம் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது. மேலும் சில நபர்களிடம் ஒப்படைக்கப்பட்ட அகற்றிச் செல்லப்படாத பொருட்கள் அரசாங்க உடைமையாக்கப்பட்டதனால் ரூபா 845,000/= வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

2011 ஆம் ஆண்டினுள் கப்பல் சரக்குகள் பெற்றுக் கொள்பவர்களினால் துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிடம் 53 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதில் 21 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு 3 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. மீதி விண்ணப்பங்கள் தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

சேவை வழங்கல் பகுதியினால் ஆற்றப்படும் சேவையின் தரம் விருத்தி செய்யப்படும் நோக்கில் அதிகாரசபையினால் 2012 ஆம் ஆண்டினுள் வாடிக்கையாளர்களுக்கு திறனானதும் பயன்மிகுந்ததுமான சேவை உறுதிப்படுத்தும் பொருட்டு நேவீஸ் (NAVIS) கப்பல் சரக்குகள் வினியோகிக்கும் மொடியூல் தொகுதி அறிமுகப்படுத்தப்படும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக அதிகாரசபையின் பாவனையாளர்களுக்கு தரமானதும் நம்பிக்கையானதுமான சேவை வழங்கும் பகுதியின் இயக்க மற்றும் களஞ்சிய பணியாளர்களின் செயன்முறை மற்றும் கோட்பாடுரீதியான அறிவு விருத்தி செய்யப்படும் பொருட்டு மஹபொல பயிற்சி நிலையத்தில் பிரதான முகாமையாளரினால் (சேவை வழங்கல்) துறைமுக அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## கப்பலோட்டம்

### வழிகாட்டிச் சேவை

மீளாய்வாண்டினுள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த சகல வகையிலான கப்பல்களுக்கும் (24 மணித்தியாலங்கள் பூராகவும் கிழமையில் 07 நாட்களிலும்.) தொடர்ச்சியான வழிகாட்டிச் சேவைகள் வழங்கப்பட்டன.

| கப்பல்களின் வகை | கப்பல்களின் எண்ணிக்கை | வருகை தந்த நோக்கம் | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கொள்கலன் | 3,187 | எண்ணெய் பெறுதல் | 65 |
| மரபு முறையான | 68 | பழுதுபார்த்தல் | 30 |
| உலர் மொத்தம் | 202 | பயணிகள் | 72 |
| எண்ணெய் தாங்கி | 284 | ஏனைய சேவைகள் | 22 |
| றோல் ஒன் ஒப் றோல் | 149 | | |
| ஏனைய சரக்கு | 45 | | |
| | | மொத்தம் | 4,124 |

**பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவு**

பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவினால் மீளாய்வாண்டினுள் நங்கூரமிடுதல் மற்றும் கப்பலோட்டத்துக்கான தொடர்ச்சியானதும் திறனானதுமான இழுவைக் கல சேவைகள் வழங்கப்பட்டதன் ஊடாக சிறப்பான பணியாற்றப்பட்டது. அப்பணிகளுக்குப் பதிலாக பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- இழுவைக் கலங்களின் தட்டுக்கள் (DECK) புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் வேலைகள் நிறைவேற்றுதல்.
- கப்பல்கள் கட்டி வைக்கப் பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட பாரிய கயிறுகளினால் இழுவைக் கலங்களுக்கான கயிறுகளும் விரிப்புகளும் செய்தல், இழுவைக் கலங்களுக்கும் வேறு பிரிவுகளுக்கும் கென்வஸிலான திரைகள் தயாரிக்கும் நடவடிக்கைகள்.

கப்பல்களின் நகர்வுகளுக்காக நான்கிலிருந்து ஐந்து வரையிலான இழுவைக் கலங்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட்டதோடு அவசர சந்தர்ப்பங்களுக்காக ஒரு இழுவைக் கலம் எதிர்பார்ப்பு சேவையில் வைக்கப்பட்டது.

**இழுவைக் கலங்களின் உதவியுடான கப்பல்களின் மொத்த நகர்வுகள்**

நங்கூரமிடும் இழுவைக் கலங்களினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த நகர்வுகள் 12563 ஆகும். விபரங்கள் பின்வருமாறு

| கலங்களின் பெயர் | மொத்தம் |
|---|---|
| எம்ரீ ராஜா | 672 |
| எம்ரீ நந்தமித்ர | 1,517 |
| எம்ரீ சுரணிமல | 3,408 |
| எம்ரீ கோடடம்பர | 2,945 |
| எம்ரீ விஜயபாகு | 1,942 |
| எம்ரீ பரண – II | 1,966 |
| எம்ரீ வேலுசுமன | 113 |

மீளாய்வாண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தனது இழுவைக் கலங்களை பிரதான பழுதுபார்த்தல்களுக்கு அனுப்பும் பொருட்டு 60 தொன் எடையுடைய தடித்த கட்டு முகப்பு கொண்ட புத்தம் புதிய இரண்டு இழுவைக் கலங்கள் ஆறு மாத காலப் பகுதிக்கு வாடகைக்கமர்த்தப்பட்டன. 2011 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதம் இறுதி வரையில் இக்கலங்களினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த நகர்வுகள் 3460 ஆகும்.

**வேறு துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இழுவைக் கலங்கள்**

**திருகோணமலை**

- ✱ எம்ரீ மஹசென்
- ✱ எம்ரீ நீலமஹ
- ✱ எம்ரீ வசப (இலங்கை கடற்படையுடன்)
- ✱ எம்ரீ நந்திமித்ர (20BP)

**காலி**

- ✱ எம்ரீ தேரபுத்தாபய

**காங்கேசன்துறை**

- ✱ எம்ரீ கன்ஞதேவ
- ✱ எம்ரீ தீர

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்**

- ✱ அவசர சந்தர்ப்பங்களில் காலி துறைமுகத்திலிருந்து பெறப்பட்ட இழுவைக் கலங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

**பயிற்சி நடவடிக்கைகள்**

மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்படும் உயர் தீயணைப்புப் பாடநெறி, அடிப்படை தீயணைப்பு பாடநெறி, ஆரம்ப முதலுதவி, தனிநபர் பாதுகாப்பும் சமூகப் பொறுப்பும், தனிநபர் உயிர்காப்பு உத்திகள் பற்றியதிலான பாடநெறிகள் பின்பற்றப்படுவதற்கும் அதனூடாக தத்தமது அறிவை வளர்த்துக் கொள்வது தொடர்பிலும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

**ஈட்டப்பெற்ற வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| 2010 | உண்மையான | - | ரூபா. 308.822 மில்லியன் |
| 2011 | திருத்தப்பட்ட | - | ரூபா. 345.680 மில்லியன் |
| 2012 | திட்டமிடப்பட்ட | - | ரூபா 368.437 மில்லியன் |

**பிரதான பொறியியல் அலுவலர் பிரிவு**

**ஆளணியினர்**

2011 ஆம் ஆண்டினுள் சகல வகையிலான இழுவைக் கலங்கள். வெளிச்சவீட்டுக் கலங்கள், வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் இயக்கம், பழுதுபார்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு போதுமான ஆளணியினர் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பிரிவின் ஆளணியினரால் மேற்கொள்ளப்படும் சகல பொதுவான பராமரித்தல் பணிகளுக்கு மேலதிகமாக நாளாந்த ஓட்ட நகர்வுகளுக்கான இழுவைக் கலங்களின் வழிகாட்டல் மற்றும் இயக்க சேவைகள் வழங்கப்பட்டன.

முகாமைத்துவத்தின் பரிந்துரைக்கமைய கருவிகள் கொண்ட வேலைத்தளத்தோடு பிரதான பொறியியல் அலுவலர் பிரிவினால் அன்றாட பராமரிப்புகளும் கல ஓட்டத்துக்கான வழிகாட்டி மற்றும் இயக்கம் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

**துறைமுக தீயணைப்புப் பிரிவு (PFB)**

துறைமுக தீயணைப்பு பிரிவு 2011 ஆம் ஆண்டினுள் தீ மற்றும் வேறு அவசர சந்தர்ப்பங்களில் ஏற்படும் ஆபத்து நிலைமைகளைக் கட்டுப்படுத்தி அவசர நிலைமைகளைக் கவனிப்பதற்கு மேலதிகமாக, உள்ளக தீ காப்பு தரம் பேணப்படுவதிலும் அமுல்படுத்துவதிலும் ஈடுபட்டது.

இலங்கை துறைமுக தீயணைப்புப் பிரிவானது எண்ணெய்களினால் கடல் மாசடைதல் , ஆபத்தான கப்பற் சரக்குகளின் சிதறல் போன்ற அவசர நிலைமைகளில் பொறுப்பாக செயற்படும் குழுவாகும்.

துறைமுக தீயணைப்புப் பிரிவு பின்வரும் சந்தர்ப்பங்களும் உள்ளடங்கலாக 1800 அழைப்புகளுக்கான தனது உரிய ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

| | |
|---|---|
| தீயணைப்பு அழைப்புக்கள் | 15 |
| எதிர்பாராத கடற்படை ஒத்திகைகள் | 02 |
| அவசர அழைப்புக்கள் | 25 |
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 121 |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 23 |
| கப்பல்களில் வெப்ப வேலைகளுக்கான காத்திருத்தல் சேவை | 1,486 |
| ஆபத்தான கப்பற் சரக்குகள் கையாளல்களுக்கான காத்திருத்தல் சேவை | 03 |
| காத்திருக்கும் ஆபத்தான கப்பற் சரக்குகளின் காத்திருத்தல் கடமைகள் | 27 |
| பாலங்கள்/ குதங்கள் போன்றவை கழுவுதல். | 56 |
| தண்ணீரை வெளியேற்றுதல் | 33 |
| எண்ணெயினால் மாசடைவு கட்டுப்பாட்டுப் பணிகள் | 02 |
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான கண்காணிப்பு விஜயம் மேற்கொள்ளல் | 807 |
| முக்கியமான நபர்களின் வருகை | 01 |

**தீ காப்பு நடவடிக்கைகள்**

காலி , திருகோணமலை மற்றும் மாகம் ருஹுனுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் அடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல கட்டிடங்கள் / பாரம் தூக்கிகள் / மிதவைக் கலங்களின் தீ காப்பு பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

2011 ஆண்டினுள் 3773 தீயணைத்தல் உபகரணங்களின் பரீட்சிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

**பயிற்சி நடவடிக்கைகள்**

| | |
|---|---|
| ஆளணி பயிற்சிப் பட்டறைகள் | 26 |
| வெளிநபர்கள் பரீட்சயமாக்கப்படும் விஜயங்கள் | 04 |
| கொக்ஷன் பயிற்சிப் பாடநெறி | 04 |
| டெக் தரப்படுத்தல் பயிலுநர்களுக்கான தீயணைப்புப் பயிற்சி | 03 |
| தீயணைப்புப் படையின் ஆளணியினருக்கான மீள் தீயணைப்புப் பயிற்சி | 06 |

இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் ,கொழும்பு கப்பல் கட்டும் தளம் மற்றும் கொழும்பு வலு நிலையம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து தீயணைப்பு ஒத்திகைகள் நடாத்தப்பட்டன.

**வருமானம்**

2011 **ஆம் ஆண்டில் துறைமுக தீயணைப்புப் படையினால் ஈட்டப்பட்ட வருமானம்** .

| விபரம் | அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| தீயணைப்பு அழைப்புக்கள் | 2,550 | |
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 176,762 | |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 26,060 | |
| வெப்ப வேலைகளுக்கான காத்திருத்தல் சேவை | 28,938 | |
| ஆபத்தான கப்பல் சரக்குகளுக்கான காத்திருத்தல் சேவை | 8,300 | |
| பயிற்சிப் பாடநெறிகளுக்கான கட்டணங்கள் | 119 | |
| பரீட்சிப்பு விஜயங்களுக்கான கட்டணங்கள் | 8,700 | |

| | | |
|---|---|---|
| எண்ணெய்களினால் மாசடைவு கட்டுப்பாடு நடவடிக்கைகளின் கட்டணங்கள் | | 375,000 |
| **மொத்த வருமானம்** | **251,429** | **375,000** |

**மொத்த வருமானம் ரூபா.** 28,535,048/=.

**துறைமுக காப்பு பிரிவு**

சகல துறைமுகங்களிலும் மேற்கொள்ளப்படும் ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளப்படுகையிலான பாதுகாப்பு அணுகு முறைகள் சகல நேரங்களிலும் அவதானித்து உரிய முறையில் பேணுவது இப்பிரிவின் பணியாகும்.

துறைமுக தீயணைப்புப் படையின் உதவியோடு சில இரசாயன சிதறல்கள் மற்றும் தீ விபத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டன. ஆபத்தான சரக்குக் குதங்கள் மற்றும் கொள்கலன் அடங்கலாக குதங்களின் பரீட்சிப்புகள் பருவ காலங்களில் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

வெப்ப வேலைகளுக்கான அனுமதி வழங்கப்படுவதற்கு முன் சம்பந்தப்பட்ட தளங்களில் பரீட்சிப்புகள் நடாத்தப்பட்டு அனுமதி வழங்கப்படாத வெப்ப வேலைகள் தடுத்து நிறுத்தப்பட்டன.கடல் மாசடைதல் தொடர்பிலான பரீட்சிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. தனிநபர் மற்றும் கடல்சார் விபத்துகள் தொடர்பில் ஆராய்ந்து பகுப்பாய்வு செய்யப்பட்டன.

- ✱ 2011 ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தினால் 280,256,825 மெட்ரிக் தொன் ஆபத்தான கப்பற் சரக்குகள் கையாளப்பட்டன.
- ✱ ஆபத்தான கப்பற் சரக்கு 29,053 கொள்கலன்களின் மாற்றியேற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- ✱ இயக்கப் பகுதியின் ஊழியர்களுக்கு துறைமுகத்தினுள் ஆபத்தான கப்பல் சரக்குகள் கையாளல், களஞ்சியப்படுத்தல்,போக்குவரத்து செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு முறைகளிலான விரிவுரைகள் நடாத்தப்பட்டன.
- ✱ எளிதில் வெடிக்கக்கூடிய (GPIE) மெட்ரிக் தொன் 142,813 பொருட்களும், வெடிக்கக் கூடிய (GPIAE/IIE) மெட்ரிக் தொன் 9,652,693 பொருட்களும் கையாளப்பட்டன.
- ✱ ஜய கொள்கலன் முனைய ஊழியர்கள் மற்றும் கப்பலோட்டப் பகுதியின் நங்கூரமிடல் குழுவினரினதும் தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பில் உதவி துறைமுக காப்பு பரீட்சகர்களின் உதவியோடு தலைக் கவசம் (PPE) அணிவது விசேடமாக அவதானிக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்திற்கு 215 எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் வருகை தந்ததோடு இறக்கப்பட்ட கப்பற் சரக்குகள் பின்வருமாறு

| சரக்கு வகை | அளவு மெ.தொ |
|---|---|
| திரவ பெற்றோலிய வாயு | 183,038.118 |
| வாயு எண்ணெய்/ ஜெட் A1/ கெஸொலைன்/ கெரொசின் | 2,338,191.164 |
| மசகு எண்ணெய் | 1,256,861.943 |
| எரிபொருள் | 725,768.280 |
| பேஸ் ஒயில் | 22,628.199 |

**கரையோர வெளிச்ச வீட்டு சேவைப் பிரிவு**

சர்வதேச கப்பல் பாதைகளுக்கு வசதிகள் வழங்கும் தென் மற்றும் மேற்கு கரையோர வெளிச்ச வீடுகளினது பராமரித்தல்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

**கால்வாய்களில் அமைந்துள்ள வெளிச்ச மிதப்பிகள்**

வெளிச்ச மிதப்பிகளின் வழமையான பரீட்சிப்புகள் மற்றும் பராமரிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தோடு தொடர்புடைய கொழும்புத் துறைமுகத்தின் தென் மேற்கில் அமைந்துள்ள கால்வாயின் திசையானது நீருக்கடியிலான எண்ணெய்க் குழாய்கள்

தோண்டும் வேலைகளின் போது மாற்றமடைந்துள்ளது. கடல்சார் துறையின் CASA , SLAVO , LASO மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் நீரியல் ஆய்வுப் பகுதியினால் கிடைக்கப்பெறும் சுற்றுநிருபங்களுக்கேற்ப கடலகவியலாளர்கள் தகுந்தவாறு எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

**வருமானம் – 2010 / 2011 வெளிச்சவீட்டுக் கட்டணம்**

ரூபா மில்லியன்

| | 2009 | 2010 | 2011 மதிப்பிடப்பட்ட | 2011 திட்டமிடப்பட்ட |
|---|---|---|---|---|
| ஒன்று சேர்ந்த மொத்தம் | 299.39 | 534.93 | 511.761 | 545.573 |

**துறைமுக கலப் பிரிவு**

கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தரும் கப்பல்களுக்கான வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்கள் வழங்கல், கப்பல்களைக் கட்டி வைக்கும் பணியில் குழுக்களை ஈடுபடுத்துதல் துறைமுக கலப் பிரிவின் முக்கிய பணியாகும்.மேலும் பல்வேறு வேலைக் குழுக்களை தீவு மற்றும் தென் மேற்கு அலைதாங்கிகளுக்கு போக்குவரத்து செய்தல், துறைமுக நீர்ப் பகுதி சுத்தமாக வைத்திருத்தல், ஜிராப் மிதவை பாரமுயர்த்திகளினால் அதிக பாரம் தூக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் வழமையான பராமரித்தல்களும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்பட்ட பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளப்படுதலின் ஊடாக படகு ஆளணிகளின் ஆற்றல் மற்றும் அறிவு மேம்படுத்தப்படுவதற்காக ஊக்குவிக்கப்பட்டனர்.

**நீரியல் அளவைப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்பவாறு சகல துறைமுகங்களிலும் அளவையாளர்கள் நிலம் மற்றும் நீரில் அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

- உட்புகு கால்வாயின் ஆழமறிதல்
- கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் ஆழமறிதல்
- பிரதான பிரவேசக் கால்வாயின் ஆழமறிதல்
- உள்ளக துறைமுகத் தடாகம் மற்றும துறைமேடைகளின் ஆழமறிதல்
- கொழும்புத் துறைமுக வரைபடத்தின் திருத்த வேலைகள்
- கட்டுப்பாட்டு முனையின் அளவை நடவடிக்கைகள் (தொடர்ச்சியாக)
- புளுமெண்டல் அளவை நடவடிக்கைகள் (CPILD)
- துறைமுக உள்ளக பாதை விரிவாக்கல் திட்டத்தின் நில அளவையும் மட்டப்படுத்தலும்
- கொள்கலன் முனைய (ஜய கொள்கலன் முனையம் - 04) விரிவாக்கலின் அளவைகள்
- ஜய கொள்கலன் முனையம் 1- 4 யின் பீலிகளிலான ஓடு பாதைகள் மீள் பதித்தல் திட்டம்
- பேலியகொட விபர அளவைகள்

**காலித் துறைமுகம்**

- உள்ளக துறைமுகத்தினதும் உட்புகு கால்வாயினதும் நீரியல் அளவைகள்
- உல்லாச படகுத் திட்டத்திற்கான பாதை மட்டப்படுத்தப்படல்
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் ரூமஸ்ஸல பகுதியின் எல்லை வகுத்தல் நடவடிக்கைகள்
- காலித் திட்டம் முறைப்படுத்தல்
- பொறுப்பேற்கப்படும் காணிகளுக்கான நில அளவைகள்

**திருகோணமலைத் துறைமுகம்**

- கைப்பற்றப்பட்ட காணிகளின் நில அளவைகள்
- துறைமுக காணி தொடர்பிலான ஆய்வு நடவடிக்கைகள்

**மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்**

- ✱ மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் மீள் குடியேற்ற காணி உரித்தாளர்களுக்கான எல்லைகள் வகுத்தலின் நில அளவைகள்
- ✱ நில அளவைத் திணைக்களத்தின் மேற்பார்வையில் கட்டம் 11 இன் டாகட் வீதி , அறாபொக்க வீதி, சூரியவெவ வீதி, மகாவலி பகுதி மற்றும் தனியார் காணிகள் பொறுப்பேற்கப்படுவதற்கான நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ✱ நில அளவைத் திணைக்களத்தின் மேற்பார்வையில் ஆறு (06) நில அளவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (அண்ணளவாக 500 துண்டுகள்)
- ✱ அலைதாங்கிக்கும் கரையோர எல்லைக்குமிடையில் மேற்குத் திசையில் 1.5 கி. மீட்டர் கிழக்கு கரையோரம் வரையில் கரையின் சூழல் காரணிகளின் பகுப்பாய்வு அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. (மாதத்திற்கு இருமுறை)
- ✱ உத்தேச நிர்வாகக் கட்டிடத்தின் இடைக்கோடுகளின் மற்றும் செங்குத்தான கட்டுப்பாடு பரீட்சிக்கப்பட்டது.
- ✱ சூரியவெவ , மிகஹஜந்துர உத்தேச சர்வதேச விளையாட்டு மைதானத்தின் செங்குத்தான மற்றும் இடைக்கோடுகளின் கட்டுப்பாடு பரீட்சிக்கப்பட்டது.
- ✱ ஞாபகச் சின்னம் அமைப்பதற்கான அளவைகள் மேற்கொள்ளப்பட்டன.
- ✱ அரசாங்க கட்டிடத் தளத்தின் ஆய்வு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.
- ✱ முதலீட்டாளர்களுக்கான காணிகள் மற்றும் பாதை வலையமைப்பின் அளவை நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.
- ✱ தாங்கிகள் மற்றும் கட்டிடங்களுக்கான அமைவிடம் மற்றும் முன் தோற்ற வடிவ தரவுகள் பரீட்சிக்கப்பட்டன.
- ✱ பிரதான உட்புகு நங்கூர கால்வாயினது 12 மற்றும் மிதப்பிகளின் அமைவிடங்களின் நீரியல் அளவைகள் மேற்கொள்ளப்பட்டன.
- ✱ நிர்வாகத் தொகுதி மற்றும் அலைதாங்கியின் 1 ஆம் கட்ட நிர்மாணப் பகுதியின் எண்ணெய்த் தாங்கிகள் பற்றியதான கட்டுப்பாடு வலையமைப்பு மீள் வகுக்கப்பட்டன.

**கடல் மைல் பிரிவு**

கப்பல்களுக்கு பொருள் வழங்குவோர், லாஞ்ச் இயக்குபவர்கள், கடலக அளவையாளர்கள், சிறிய மற்றும் பாரிய பழுதுபார்த்தல் வேலைத்தளங்கள், எண்ணெய் மற்றும் எண்ணெய் தோய்ந்த நீர், குப்பைகள் அகற்றுவதற்கான வசதி மேற்கொள்பவர்களின் வருடாந்த பதிவும், அனுமதிப்பத்திரங்கள் வழங்கலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

2011 **ஆம் ஆண்டு ஈட்டப்பெற்ற வருமானம்**

| அனுமதிப்பத்திரத்தின் பெயர் | வழங்கப்பட்ட தொகை | வருமானம் ரூபா |
|---|---|---|
| கப்பல்களை பழுதுபார்க்கும் அனுமதிப்பத்திரம் | 119 | 3,068,703 |
| டொக்யார்ட் அனுமதிப்பத்திரம் | 73 | 1,151,085 |
| அளவை அனுமதிப்பத்திரம் | 39 | 695,130 |

| | | |
|---|---|---|
| கப்பல்களுக்கு பொருள் வழங்குநர்களுக்கான அனுமதிப்பத்திரம் | 76 | 2,529,817 |
| படகு அனுமதிப்பத்திரம் | 33 | 876,784 |
| **மொத்தம்** | | 8,321,519 |

## திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

**கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டம்** (CPEP)

சர்வதேச கடல்சார் தொழில்துறையில் அதிகரிக்கும் சேவைகளுக்கான கேள்வித் தேவைப்பாடுகள் வழங்கப்படுவதற்கு கொழும்புத் துறைமுகம் விரிவாக்கப்படுவது அவசியமானதென இலங்கை அரசாங்கத்தினால் அடையாளங் காணப்பட்டுள்ளது. கொழும்புத் துறைமுகம் தொடர்பில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் உத்தேச கொழும்பு தெற்கு துறைமுகப் பகுதி அபிவிருத்தி செய்யப்படுதல் மிகவும் முக்கியமானதென உணரப்பட்டுள்ளது. கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ள இம்முழுத் திட்டமானது பின்வரும் இரண்டு கட்டங்களைக் கொண்டதாக இருக்கும்.

1. அலைதாங்கி நிர்மாணம், புதிய துறைமுகத் தடாகம், கப்பலோட்டக் கால்வாய் தோண்டுதல் மற்றும் மசகு எண்ணெய்க் குழாய் வழி மீள் பதித்தல் உள்ளடங்கலான துறைமுக உட்கட்டமைப்புப் பணிகள்
2. முனையங்கள் மற்றும் ஏனைய தொடர்புபடும் சேவைகள்

**துறைமுக உட்கட்டமைப்புப் பணிகள்**

330 அமெரிக்க டொலர் மில்லியன் மதிப்பிடப்பட்ட நிர்மாண ஆகு செலவு கொண்ட துறைமுக உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. உட்கட்டமைப்பு பற்றியதான இத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கூட்டாக நிதி பங்களிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மொத்த ஆகுசெலவில் 81.7% க்கு சமனான 300 அ.டொ மில்லியன், ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் மீதி 18.3% க்கான நிதி பங்களிப்பு இலங்கை துறைமுக அதிகாரசபையினாலும் வழங்கப்படுகின்றது.

கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2008 ஏப்ரல் 11 ஆந் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதோடு 48 மாதங்களினுள் இதன் பணிகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.வ/ப ஹூன்டாய் பொறியியல் நிர்மாணக் கம்பெனி பிரதான ஒப்பந்தக்காரராக இருப்பதோடு இதன் ஆலோசகர் வ/ப ஸ்கொட் வில்சன் கம்பெனியாகும்.

**2011 டிசெம்பர் வரை கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் முன்னேற்றம்**

இத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள ஒட்டுமொத்த பௌதீகரீதியான மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 83% , 89% ஆகும்.

**அலைதாங்கிகள்**

**பிரதான அலைதாங்கி (நீளம் 5.14 கி.மீ)**

- ✱ பிரதான அலைதாங்கிகளிலும் ஒப்பந்தக்காரரின் வேலைத்தளத்திலும் மண் நிரப்புதல்
- ✱ 18.42 கன. மீட்டர் பகுதியின் 17.65 கன மீட்டர் மண் நிரப்பப்பட்டுள்ளது.

**பிரதான அலைதாங்கியின் நிர்மாணம் (கடல் நீர் வற்றல் மட்டம் + 3.5 மீட்டரிலிருந்து + 5 மீட்டர் வரை)**

- ✱ பாறாங்கல் பரப்புதல் - 5120 மீ
- ✱ இரண்டாம் நிலையிலான கவச பதித்தல் - 5090 மீ

* முதலாம் நிலையிலான கவச பதித்தல் (Core Locs) - சங்கிலி 4810 மீ
* கொன்கிறீட் கவச உற்பத்தி
* 31,655 அலகுகளில் 29,318 அலகுகள்

**அடித்தள படலம் பதித்தல் மற்றும் துணி நார்த்தளம் (Geo Textiles)**

* கடல் நீர் வற்றல் மட்டம் + 0 மீட்டர் வரை : 4860 மீட்டர்
* கடல் நீர் வற்றல் மட்டம் + 0 மீட்டர் மேல் வரை : 4790 மீட்டர்

**அலைதடுப்புச் சுவர் நிர்மாணம்**

* அலைதடுப்புச் சுவரின் முதலாவது உயர்த்துதல் 1520 மீட்டர் முன்னோக்கியதாக :4550 (83.7%)
* அலைதடுப்புச் சுவரின் இரண்டாவது உயர்த்துதல் 1520 மீட்டர் முன்னோக்கியதாக :4170 (73.2%)
* இறுதி உயர்த்துதல் 4000 (68.51%)

இரண்டாவது அலைதடுப்புச் சுவர் (1.094 கி .மீட்டர் நீளமானது) - அலைதடுப்புச் சுவரின் 100 மீட்டர் மற்றும் KEY 2 இன் நீளம் 80 மீட்டர் வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த முன்னேற்றம் 58% ஆகும்.

**தோண்டுதல் மற்றும் நிரப்புதல்**

தோண்டும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பிரவேசக் கால்வாயில் தோண்டப்பட்ட பொருள்கள் 9.67 க.மீ மில்லியன் அளவு அகற்றப்பட்டுள்ளது. முழுக் கால்வாயினதும் தோண்டுதல் நடவடிக்கைகள் முடிவடையப்பெறுவதற்கு பொதுவாக 450,000 கியு. மீட்டர் அகற்றப்படுதல் வேண்டும்.

**கருங்கற்கள் கொண்டு வருதல்**

களுத்துறை மாவட்டத்தின் வாத்துவையில் அமைக்கப்பட்டுள்ள சிறு துறைமேடையிலிருந்து இக்கருங்கற்கள் கடல் மார்க்கமாக சீரான காலநிலையின் போது சிறந்த முறையில் போக்குவரத்து செய்யப்பட்டு மொத்த தேவைப்பாடான 5.2 கியு.மீட்டர் மில்லியனில் 4.86 கியு.மீ. மில்லியன் அளவான கருங்கற்கள் தற்போது கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

**நீருக்கடியிலான மசகு எண்ணெய் குழாய் வழி**

நீருக்கடியிலான மசகு எண்ணெய் குழாய் வழி, துறைமுக பிரவேசக் கால்வாயின் ஆழமற்ற கடல் நீர் ஊடாக ஒரே முனையிலான மிதப்பிகள் வரை செல்கின்றது. புதிதாக குழாய் வழி பதித்தல் கடல் மட்டத்திலிருந்து - 20 மீட்டர் வரை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கைவிடப்பட்ட பழைய குழாய்களின் அகற்றுதல் 100% நிறைவடைந்துள்ளது. தரையுடன் தொடர்புபடும் குழாய் வழியின் பாதுகாப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**கட்டிடங்கள்**

கட்டுப்பாட்டு கோபுரக் கட்டிடம் – 26 மீட்டர் உயரம் வரை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

கப்பல் பணியாளர்களுக்கு வசதிகள் வழங்கும் கட்டிடம் - அடித்தள மாடியின் கொங்கிறீட் குறுக்குத் தூண்கள் மற்றும் கொங்கிறீட் தளங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**உள்ளக பாதைகள்**

சுமார் 4.0 கி.மீ நீளமான உள்ளக பாதைகளின் 6,4 மற்றும் 2 குறுகிய வழிகள் அபிவிருத்தி செய்தல் இதனுள் அடங்கும். (குறுகிய வழியின் அகலம் 3.7 மீட்டராகும்.) பாதைகள் மற்றும் பொது வசதிகள் சம்பந்தப்பட்ட பணிகளில் தற்போது 53% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட எதிர்பார்க்கப்படும் உத்தேச திகதி : 2012 ஏப்ரல் 10

**தென் கொள்கலன் முனையம் (SCT)**

| | | |
|---|---|---|
| நங்கூரத்தளங்கள் | : | 3 ஆகும். (மொத்த நீளம் 1200 மீட்டர்) |
| ஆழம் | : | 18 மீட்டர் |
| கொள்ளளவு | : | 2.4 மில்லியன் இருபது சம அலகுகள் |
| திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள ஆகு செலவு | : | 500 அமெரிக்க டொலர் மில்லியன் |
| ஒப்பந்தம் (BOT) கைச்சாத்திடல் | : | 2011 ஆகஸ்ட் 12 |
| நடைமுறைப்படுத்தப்படும் திகதி | : | 2011 டிசெம்பர் 01 |
| கையாளல் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் வருடம் | : | 2014 மே |

தென் கொள்கலன் முனையம் எனப்படும் (SCT) தென் கொழும்புத் துறைமுகத்தின் முதலாவது முனையம் , வ/ப சைனா மர்சன்ட் ஹோல்டிங்ஸ் சர்வதேச கம்பெனி, வ/ப எயிட்கன் ஸ்பென்ஸ் (பீ எல் சீ) மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பனவற்றின் பங்காளர்களைக் கொண்ட வ/ப கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய நிறுவனத்தினால் (CICT) நிர்மாணிக்கப்பட்டு கையாளப்படும். முனையத்தின் முதலாவது 600 மீட்டர் 2014 மே மாதத்தில் கையாளல்களுக்கு திறக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளதோடு முழு முனையமும் 2016 டிசெம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. நி.கை.ஒ சலுகைக் காலப்பகுதியான 35 ஆண்டுகளின் முடிவில் முனைய உட்கட்டமைப்பு வசதிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

**தற்போதைய முன்னேற்றம்**

* இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் CICT கம்பெனிக் கிடையிலான. BOT (நி.கை.ஒ) ஒப்பந்தம் 2011.08.12 ஆந் திகதி சீனாவில் கைச்சாத்தானது.
* தளத்தின் ஆய்வு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
* திட்டத்தின் ஆலோசகராக சீனாவின் வ/ப AECOM நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.
* தள குத்தகை ஒப்பந்தம், பங்குதாரர்களின் ஒப்பந்தம் மற்றும் உதவி வழங்குபவர்களின் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுதல் உள்ளடங்கலாக BOT (நி.கை.ஒ) ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளும் 2011 நவம்பர் 09 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டுள்ளன.
* இத்திட்டத்தின் பிரதான சிவில் நிர்மாண ஒப்பந்தக்காரராக வ/ப சைனா ஹாபர் பொறியியல் கம்பெனி நியமிக்கப்பட்டுள்ளது.
* அமிழும் ஆழம் தொடர்பான (Bathymetric ) ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
* 2011 டிசெம்பர் 16 ஆந் திகதி அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் நிர்மாண நடவடிக்கைகள் சுப வேளையில் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.
* தோண்டுதல் மற்றும் மண் நிரப்பும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கிழக்கு கொள்கலன் முனையம் (ECT)**

உலக நிதி நெருக்கடிகளிலும் கூட கொழும்புத் துறைமுகம் முன்னர் எதிர்பார்த்ததை விட வீச்சாக முன்னோக்கிச் சென்றுள்ளது. கொழும்புத் துறைமுக அபிவிருத்தியின் தென் கொள்கலன் முனையத்தின் இயக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் கொழும்புத் துறைமுகத்தில் கொள்ளளவு குறைவடைதலுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படுமென மூலோபாய மீளாய்வு

தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பாரிய கொள்கலன்களைக் கொண்ட கப்பல்கள் ஆழமான நீரில் நங்கூரமிடப்படுகையில் கொழும்புத் துறைமுகமானது சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். எனவே தென் கொள்கலன் முனையத்திற்கு மேலதிகமாக அவ்வாறான பாரிய கப்பல்களுக்கான நங்கூரத்தளமொன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அபிவிருத்தி செய்யப்படுவதன் அவசரத் தேவைப்பாடு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தற்போது கொழும்புத் துறைமுகத்திற்குள் வர முடியாதுள்ள கூடிய ஆழம் தேவைப்படும் பாரிய கப்பல்கள் வருகை தரக் கூடிய வசதிகள் போன்று வளர்ச்சி பேணப்படுவதற்கான ஊட்டச் சேவைகள் ஊடாக உலகில் மூலோபாய ரீதியாக முக்கிய பொருளாதார மைய நிலையமாக இலங்கை மாற்றப்படுவதும் இந்து சமுத்திரத்தில் கேந்திர நிலையமாக்குவதும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மிகவும் முக்கியமானதாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடன் பொறுப்புக்களுக்கான வருமான வழிகள் பேணப்படுதலுக்கு இதன் மூலம் வசதிகள் கிடைக்கப்பெறும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு அரசவுடமை துறைமுக கையாள்பவராக தேசத்தின் நலனுக்காக துறைமுக அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பினை நிறைவேற்றும் வகையில் விசாலமான கொள்கலன் போக்குவரத்துக் கப்பல்கள் மற்றும் அதற்கான மட்டுப்படுத்தப்பட்ட முனைய வசதிகள் வழங்கப்படும்வாறு 450 மீட்டர் நீளமான துறைமேடைச் சுவரொன்று கிழக்கு கொள்கலன் முனையத்தில் நிர்மாணிக்கப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் திட்டமிடப்பட்டு வருகின்றது. உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைத் தளப் பகுதி இப்பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு பயன்படுத்தப்படவுள்ளது.

கிழக்கு கொள்கலன் முனையத்தில் இம்மட்டுப்படுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகள் 2013 இன் முற்பகுதியில் பூர்த்தி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தேவைப்பாடு தொடர்பிலான எதிர்வு கூறல்களுக்கமைய கிழக்கு கொள்கலன் முனையம் 2020 இல் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

மேற்கு கொள்கலன் முனையம் (WCT) 2024 இல் பூர்த்தி செய்யப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் தேவைப்பாடு எதிர்வு கூறல் அடிப்படையாகக் கொண்டு இத்தீர்மானம் மதிப்பிடப்படுதல் வேண்டும்.

**திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தித் திட்டம்**

**அறிமுகம்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் திருகோணமலைத் துறைமுகம் மீள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கும் விரிவாக்கப்படுவதற்குமான திட்டம் துறைமுகம் அபிவிருத்தி செய்யும் அதன் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதார சேவைகள் வழங்கும் நிலையமாகவும் வளங்கள் பெற்றுக் கொடுக்கப்படும் இடமாகவும் உறுதிப்படுத்துவதன் ஊடாக இது இலங்கையின் வட கிழக்கு மாகாணத்துக்கான நகர விருத்தி மத்திய நிலையமாக மீள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இந்நிலையம் கொழும்பு நகரத்துக்கு இணையான கவரும் வாசலாக இருக்கும்.

“கைத்தொழில் வலயம்” என்னும் தொனிப் பொருளின் கீழ் துறைமுக நிலங்களின் அபிவிருத்தி நடைபெறும். கைத்தொழில் வலயத்துக்காக அடையாளங் காணப்பட்டுள்ள மொத்த நிலப் பிரதேசம் 3000 ஏக்கர்களாகும். இப்பிரதேசத்துடன் பாதைகள் மற்றும் புகையிரத வழிகள் தொடர்புபடுவதோடு துறைமுகம்சார் கைத்தொழில், ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள், கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள், கப்பல் நிர்மாணம், கப்பல் பழுதுபார்த்தல் செயற்பாடுகள் போன்று சுற்றுலாத்துறை மற்றும் விவசாயம் உட்பட பல்வேறு கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படக் கூடிய சாத்தியம் இங்கு காணப்படுகின்றது.

**தற்போதைய முன்னேற்றம்**

கைத்தொழில் வலயத்துக்கான பிரேரணைகள் கோருதல் இதுவரையில் தயாரிக்கப்பட்டு ஆற்றல்களைக் கொண்ட முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி இலங்கை துறைமுக அதிகாரசபையின் செலவினால் மேற்கொள்ளப்படவுள்ளதோடு 2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபா 60 மில்லியன் ஆகும்.

**உத்தேச கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம்**

**அறிமுகம்**

கொழும்புத் துறைமுகத்துக்கு அண்மித்ததாக உத்தேச துறைமுக நகரம் நிர்மாணிக்கப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை கவனத்தில் கொண்டுள்ளது. ஆடம்பர ஹோட்டல்கள் , வீட்டுத் தொகுதிகள், வர்த்தக கட்டிடத் தொகுதிகள், தனியார் துறையினருக்கான நவீன அலுவலக இட வசதிகள், உல்லாசப் படகுத் தளங்கள், மோட்டார் வாகன ஓட்டப் பந்தய பாதைகள் போன்ற சுதந்திரமாகவும் உல்லாசமாகவும் பொழுது போக்கக் கூடிய இடங்களை உத்தேச துறைமுக நகரத் திட்டம் கொண்டிருக்கும்.

**திட்டத்தின் சாராம்சம்**

**கட்டம்** I

- ✱ அலைதாங்கியின் நிர்மாணம்
- ✱ 200 ஹெக்டயார் நிரப்புதல்
- ✱ பாதை வலையமைப்பு, நீர் வழங்கல், வடிகான் தொகுதி, மின்சாரம், தொலைத் தொடர்பு மற்றும் தரவு தொடர்புபடுத்துதல்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கல்.
- ✱ திட்டத்தின் காலம் : 3 வருடங்கள்
- ✱ திட்டத்தின் ஆகுசெலவு : 700 அ.டொ. மில்லியன்

**கட்டம்** II

பல உயர் மாடிகளைக் கொண்ட நவீன அலுவலக இடவசதிகள், குடியிருப்புக் கட்டிடங்கள், ஹோட்டல்கள், கடைத்தொகுதிகள், உண்டிச்சாலைகள் மற்றும் உல்லாசப் படகுகளுக்கான வசதிகள், மோட்டார் வாகன ஓட்டப் பந்தய பாதைகள் போன்ற உல்லாச பொழுதுபோக்குகள் உள்ளடங்கலாக நிரப்பப்பட்ட நிலப் பகுதி அபிவிருத்தி செய்தல்

**தற்போதைய நடவடிக்கைகள்**

திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கான ஆரம்ப தொழில்நுட்ப சாத்தியவள ஆய்வு மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு நிரப்பப்படும் நிலத்துக்கான சிபாரிசு செய்யப்பட்ட திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது. மேலும் சுழல் தாக்க மதிப்பீட்டு (EIA) ஆய்வு மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு நிபந்தனைகளுக்குட்பட்டதாக இத்திட்டத்திற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

தனது சொந்த நிதி பயன்பாட்டில் இந்த நிரப்பப்பட்ட நிலப் பகுதியில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இத்திட்டம் தொடர்பில் முதலீட்டாளரொருவரினால் சுயவிருப்பிலான பிரேரணையொன்று முன் வைக்கப்பட்டுள்ளது. பிணைப்புகளின்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அமைச்சரவையினால் நியமிக்கப்படும் நிலையான மீளாய்வுக் குழுவினால் (SCARC) இப்பிரேரணை பரிசீலிக்கப்பட்டு அவர்களிடமிருந்து இது தொடர்பில் விபரமான பிரேரணை கோரப்படுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுவாக 500 ஏக்கர் நிலப் பகுதி உருவாக்கப்படுவதற்கு 30 கியு. மீட்டர் மில்லியன் மண் தேவைப்படுவதோடு இம்மண் ஆழமான கடலின் அடியிலிருந்து தோண்டி எடுக்கப்படுதல் வேண்டும். பூகோளவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் கடற் பகுதியொன்று

இப்பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மண் எடுக்கப்படுவதற்கான அனுமதி தொடர்பில் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக உத்தேச இடத்துக்கான தடை நீக்கல் அறிக்கை வழங்கப்படுவதற்காக தொல்பொருள் திணைக்களத்தினால் தொல்பொருள் தொடர்பான தாக்க மதிப்பீட்டு ஆய்வு நடாத்தப்பட்டு வருகின்றது.

## தென் துறைமுக அபிவிருத்தி

ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டம், கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதி உள்ளடங்கலான பல திட்டங்களின் நடவடிக்கைகள் இப்பகுதியினால் முன்னெடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன. 2011 ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் திருப்திகரமான முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது.

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத் திட்டத்தின் முதலாம் கட்ட நிர்மாண நடவடிக்கைகளின் பெரும்பாலான பகுதி இவ்வாண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சிறிய அளவிலான துறைமுக கையாளல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய துறைமுக வளவினுள் துறைமுகம்சார் வர்த்தகங்கள் நிறுவப்படுவதற்கு இவ்வாண்டினுள் தென் துறைமுக அபிவிருத்திப் பகுதியினால் அதற்கான பிரேரணை கோரல் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய 14 முதலீட்டாளர்களின் பெயர்கள் முன்தெரிவுப் பட்டியல்படுத்தப்பட்டு சீனி,பெற்றோலிய இரசாயனப் பொருட்கள், உரம், சீமெந்து அரைக்கும் மற்றும் பொதியிடும் தொழிற்சாலைகள் நிறுவப்படுவதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் முதலீட்டாளர்களின் வேண்டுகோள் அதிகரித்ததனால் மேலுமொரு பிரேரணை கோரல் மிக விரைவில் மேற்கொள்ளப்படுவதற்கு தென் துறைமுக அபிவிருத்திப் பகுதி தீர்மானித்துள்ளது

திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களுக்குத் தேவைப்படும் சகல காணிகளின் கைப்பற்றல்கள் முதலாவது கட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தற்போது கொள்வனவு செய்யப்பட்டு/ பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான இரண்டாம் கட்டம் மீதான காணிகளின் அளவீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அக்காணிகள் கொள்வனவு செய்யும்/ பொறுப்பேற்கும் பணிகள் தென் துறைமுக அபிவிருத்திப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 500 ஹெக்டயார் அளவு. கொண்ட இப்பிரதேசத்தில் 600 குடும்பங்களின் மீள் குடியேற்றும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதித் திட்டத்தின் கீழ் கப்பல்களுக்கான எரிபொருள், விமான எரிபொருள் மற்றும் திரவ பெற்றோலிய (LPG) வாயு களஞ்சியப்படுத்தல்/ கலப்பதற்கான 80,000 க. மீட்டர் கொள்ளளவு கொண்ட 14 தாங்கிகளின் நிர்மாணப் பணிகள் முடிவுறும் நிலையில் இருப்பதோடு மிக விரைவில் அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் நடவடிக்கைகள் முறையாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு எண்ணெய்த் தாங்கி மற்றும் முனையங்கள் அண்மித்த பகுதிகளில் சில உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாகம் றுஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான ஒப்பந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட நிர்மாணங்களின் ஆரம்ப தயார் செய்தல் வேலைகள் ஒப்பந்தக்காரரினால் சம்பந்தப்பட்ட தளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2000 மீட்டர் நீளமான துறைமேடைச் சுவர் நிர்மாணித்தல், செயற்கை தீவொன்று நிர்மாணித்தல் , வடிகான் தொகுதி அமைத்தல் , நீர்த் தடாகம் தோண்டுதல், உட்புகு கால்வாய் ஆழமாக்குதல்,கையாளல் உபகரணங்கள் பொருத்துதல் ஆகியன இரண்டாம் கட்டத்திற்குரிய பிரதான பணிகளாகும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக நிலத்தில் பதிக்கும் கற்கள் (ILB) உற்பத்தி செய்தல், ஏனைய பிரதான பணிகளுக்கு வசதிகள் வழங்கல் உள்ளடங்கலான பல்வேறு பணிகள் 2011 ஆம் ஆண்டினுள் தென் துறைமுக அபிவிருத்திப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டன.

## சிவில்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்புத் துறைமுகத்திலுள்ள கட்டிடங்கள் , குதங்கள், இறங்குதுறைகள், துறைமேடைகள் ,கொள்கலன் சரக்கு நிலையங்கள் , சறுக்கு வழிகள், வெளிச்ச வீடுகள், சுற்றுலா விடுதிகள் , பாதைகள், புகையிரத பாதைகள், கொள்கலன் முனையங்கள் மற்றும் சிவில் பொறியியல் அமைப்புகள் பயன்மிகுந்த நிலையில் பேணுதல் சிவில் பொறியியல் பகுதிக்குரிய பணிகளில் அடங்கும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் வீடுகள் பராமரிக்கப்படுவதற்கு மேலதிகமாக வீடுகளின் வர்ண மாற்றம் செய்தல் மற்றும் மை பூசுதல் போன்றவைகளும் தொடர்ச்சியான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

துறைமுகத் தடாகங்கள், பிரவேசக் கால்வாய்கள் மற்றும் திருப்பும் வட்டத்தின் தோண்டுதல் நடவடிக்கைகள் “ஹன்சகாவா” சேறுவாரிக் கலத்தினால் ஆண்டு பூராகவும் மேற்கொள்ளப்படுகின்றன. கரையோர நங்கூரத்தளங்களின் தோண்டுதல் நடவடிக்கைகள், “தியகொவுல்லா” கலத்தினால் மேற்கொள்ளப்பட்டன. பேரே வாவியின் தோண்டுதல் நடவடிக்கைகள் “பூவல்லா” சேறுவாரி கலத்தினால் மேற்கொள்ளப்பட்டன. மேலும் ஏனைய துறைமுகங்களின் தோண்டும் பணிகள் தேவைப்படும் போது மேற்கொள்ளப்பட்டன. கழிவுப் பொருட்கள் (குப்பைகள்) அகற்றப்படுதலின் ஊடாக துறைமுக வளவினுள் துப்புரவு பேணப்படுவதுடன் கடும் காற்றினால் ஒன்றுசேரும் நீர் மற்றும் வடிகான் தொகுதி பராமரித்தல் சிவில் பொறியியல் பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றது.

துறைமுக பகுதிகளுக்கு தடையின்றி நீர் வினியோகம் வழங்கப்படுதலிலும் சிவில் பொறியியல் பகுதி பொறுப்பாகவுள்ளது.

இக்காலப்பகுதியினுள் பின்வரும் பிரதான பணிகள் நிறைவேற்றப்பட்டன.

- ஹாபர் மாஸ்டர் கட்டிடம் புதுப்பித்தல்
- ஜய கொள்கலன் முனையத்தின் IV ம் பிரதேசம் நீடிக்கப்படுதல்
- பிரதான களஞ்சியக் கட்டிடம் புதுப்பித்தல்
- புளுமெண்டல் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதி புதுப்பித்தல்
- அமைச்சு கட்டிடம் புதுப்பித்தல்
- ஜப்பான் குதம் புதுப்பித்தல்
- பயணிகள் முனைய கட்டிடம் புதுப்பித்தல்
- ஒலுவில் சுற்றுலா விடுதி மற்றும் ஒலுவில் பயிற்சி நிலையம் புதுப்பித்தல்
- துறைமுக பாதை விரிவாக்கல் திட்டத்திற்காக கட்டிடங்களை உடைத்து அகற்றுதல்
- பண்டாரநாயக்க துறைமேடையின் இல . 03 ஆம் குதத்தின் புதுப்பித்தல்

இதற்கு மேலதிகமாக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவியின் கீழ் நீரியல் ஆய்வும் காங்கேசன்துறை துறைமுகத் தடாகம் மற்றும் பிரவேசக் கால்வாயில் அமிழிந்திருந்த 10 தொன் அளவு கொண்ட கப்பல் பகுதிகளின் அகற்றலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி ரீதியான ஆய்வுகள் நடாத்தப்படுவதற்காக இந்திய அரசாங்கத்தினால் மேலும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று காங்கேசன்துறை துறைமுகத்தின் அலுவலகக் கட்டிடம், இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதி பங்களிப்பினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## மின்சாரம் மற்றும் இலத்திரனியல்

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குட்படும் சகல துறைமுகங்களினதும் அனைத்து பொறியியல் திட்டங்கள், மின்சார வலு மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறைகளின் வசதிகள் திட்டமிடுதல், முகாமைத்துவம், நடைமுறைப்படுத்தல், வசதிகள் பேணல் தொடர்பில் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பகுதி பொறுப்பாகவுள்ளது.

பிரதான பொறியியலாளரொருவர் மற்றும் இரண்டு பிரதி பிரதான பொறியியலாளர்களின் வழிகாட்டல்களின் மீது சிறந்த தகைமைகளைக் கொண்ட தொழில்சார் மின்சாரவியல்

/தொடர்பாடல் பொறியியலாளர்களினால் நாட் பூராகவும் மின்சார வலு மற்றும் தொடர்பாடல் சம்பந்தப்பட்ட அனைத்து அத்தியாவசிய சேவைகளும் பேணப்பட்டு உலகில் சர்வதேச கடல்சார் மைய நிலைய துறைமுகங்களின் நிலைமைகளுக்கேற்ப அதன் சேவைகளின் 95% அடையப்பெறுதலுக்கான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**மின்சார வலு பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

* இலங்கை மின்சார சபையினால் பெறப்படும் மின்சார வினியோகம், நிறுவப்பட்டுள்ள மொத்த அளவு 18 மெகா வொட் ஆகும்.
* குறை விசை கொண்ட சகல வலு நிறுவுதல்கள் மற்றும் மின்சார உதிரிகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புகள்.
* சேறுவாரி , இழுவைக் கலங்களினதும் அனைத்து மிதக்கும் கலங்களினதும் மின்சார உபகரணங்களின் பராமரித்தல்கள்
* கரையோர நங்கூரத்தள முனைய பாரந்தூக்கிகளினது மின்சார உபகரணங்களின் பராமரித்தல்கள்.
* கப்பல்களின் தொகை பிரிப்பு சரக்குகள் கையாளும் பாரந்தூக்கிகளினது பராமரித்தல்கள்.
* மின்சார மோட்டார்கள் (AC& DC) மற்றும் கொள்கலன் பாரந்தூக்கிகளின் ஏனைய உபகரணங்களினது பழுதுபார்த்தல்கள்.
* 15.5 மெகா வொட் மொத்த கொள்ளளவினைக் கொண்ட எதிர்பார்ப்பு சேவையிலுள்ள மின்சார பிறப்பாக்கிகளின் பராமரிப்புகள்
* 11 கி.வொட் கொண்ட நிலத்திற்குக் கீழான மின்சாரக் கம்பி வலையமைப்பு நிறுவுதல், பராமரித்தல் மற்றும் சிக்கலான நிலைமைகளை நீக்குதல்
* குளிரூட்டல் தொகுதியின் திட்டமிடுதல், நிறுவுதல், பராமரித்தல்
* இறப்பர் சில்லுகள் பொருத்தப்பட்ட புதிய கன்ட்றி பாரந்தூக்கிகளுக்கான இடவசதிகள் வழங்கப்படுவதற்கு ஜய கொள்கலன் முனையத்தின் வெளிச்சக் கம்பங்களின் உயரம் அதிகரித்தல்.

**இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

* அதியுயர் வானொலி அலைவரிசை கொண்ட (VHF) வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்கள் (கடல்சார் அலைவரிசை)
* கொள்கலன் முனையத்தில் 2.4 கெகா வொட் வை பை (2.4 GHZ Wiff) தரவு தொடர்பாடல் வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்
* கொள்கலன் முனையத்தில் செய்மதி தொழில்நுட்பம் அடிப்படையாகக் கொண்ட கொள்கலன் வைக்கப்படும் இடம் காணும் தொகுதி (GPS) பராமரித்தல்.
* கொள்கலன் முனையத்தில் வானொலி அலைவரிசை அடையாளம் காணும் தொகுதி (RFID) பராமரித்தல்.
* ஒளி நார் (optical fibre) வலையமைப்பு மற்றும் தரவு வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்தின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்.
* 2000 தொலைபேசி வழிகளைக் கொண்ட துறைமுக தொலைபேசி PABX தொகுதியின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்
* ராடார், எதிரொலி மானி (Echo Sounder) ,செய்மதியூடான தொடர்பாடல் சாதனம், திசை காட்டும் இடம் காணும் முறைமை (DGPS) அடிப்படையிலான அளவீட்டுத் தொகுதி போன்றவை உள்ளடங்கலான கப்பலோட்டத் தொகுதிகளின் பராமரித்தல்.
* CCTV நடமாட்டம் தொகுதிகளின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்.

* அதியுயர் அலைவரிசை (VHF) கொண்ட டுப்லெக்ஸ் (Duplex) கண்காணிப்புத் கானொளிக்கு இடமளிக்கப்படுவதற்காக குரல் தொடர்பாடல் (Voice Communication) வசதிகள் அதிகரித்தல்.

## ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படும் நிர்மாணங்களின் வடிவமைப்பு மற்றும் சிவில் பொறியியல் திட்டங்களின் முகாமைத்துவம் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புப் பகுதியின் பிரதான பொறுப்பாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான வர்த்தகங்களுக்குரிய துறைமுகத்தின் நங்கூரத்தளங்கள், துறைமேடைகள், சிவில் நிர்மாணங்கள், கட்டிடங்கள் , பாதைகள் போன்றவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளின் நிர்மாண வடிவமைப்பு இதற்குரியனவாகும். அதேபோன்று சகல பிராந்திய துறைமுகங்களும் அடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து பகுதிகளினதும் பராமரிப்புகளுக்கும் அபிவிருத்திகளுக்காகவும் தேவைப்படும் சகல திட்டங்கள் மற்றும் வரைதல் நடவடிக்கைகள் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பகுதியினால் நிறைவேற்றப்பட்டன. திட்டங்களின் நிர்வாகம், மேற்பார்வை , நிர்மாண நடவடிக்கைகள், விலைமனு கோரல், ஒப்பந்தங்கள் போன்ற திட்டங்களினது முகாமைத்துவமும் இதனைச் சார்ந்ததாகும்.

இதற்கு மேலதிகமாக முன்வார்ப்பு முனையத்தைச் சேர்ந்த ஊழியர்களின் பயன்பாட்டின் நேரடி மனித ஊழியம் மீது பல சிறிய நிர்மாணத் திட்டங்கள் இப்பகுதியினால் பொறுப்பேற்கப்படுகின்றன. அத்தோடு விசேட திட்டமொன்றான ஒலுவில் துறைமுக அபிவிருத்தித் திட்டத்திலும் இப்பகுதி தொடர்புபட்டுள்ளது.

**2011 ஆம் ஆண்டினுள் இப்பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் பின்வருமாறு.**

### ஒலுவில் துறைமுகத் திட்டம்

முதலாம் கட்டத்தில் 16 ஹெக்டயார் மொத்த நீர்ப் பகுதியினைக் கொண்டதாக 550 மீட்டர் நீளமான வட அலைதாங்கிச் சுவர், 773 மீட்டர் நீளமான தென் அலைதாங்கி என கருங்கல் உபயோகித்து இரண்டு அலைதாங்கிகள் நிர்மாணித்தல் இத்திட்டத்தினுள்ளடங்கும். மீனவ நடவடிக்கைகளுக்காக 06 ஹெக்டயார் நீர்ப் பிரதேசம் பாவனைக்கெடுத்துக் கொள்ளப்படும். கட்டம் 1 இல் 5000 தொன் நிறையினைக் கொண்ட கப்பல்களுக்கான கையாளல் வசதிகள் வழங்கப்படும் பொருட்டு வணிகத் துறைமுகத்தின் தடாகப் பகுதி - 08 மீட்டர் வரை ஆழமாக்கப்படும்.

இத்திட்டத்துக்கான நிதி, டனிடா நிறுவனத்தினால் வழங்கப்படுவதுடன் மதிப்பிடப்பட்ட மொத்த செலவினம் 46.1 யுரோ மில்லியனாகும். இத்திட்டத்தின் மொத்த செலவினமான 46,095,369.49 யுரோ கொண்ட ஆகக் குறைந்த வெற்றிகர விலைமனுதாரரிடம் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டன. எதிர்பாராத கால நிலைமைகள் மற்றும் சில வடிவமைப்பு / தொழில்நுட்ப விடயங்கள் காரணமாக இத்திட்டமானது 2012 நடுப்பகுதியில் நிறைவு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தேவைப்படும் சகல ஆலோசனைச் சேவைகள், நிர்மாண மேற்பார்வை ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பகுதியினால் மேற்கொள்ளப்படும்.

### திட்டத்தின் முன்னேற்றம்

* 2008 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி நோடியா வங்கி மற்றும் இலங்கை நிதி திட்டமிடல் அமைச்சுக்கிடையிலான கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
* 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் எம்ரீஹோஜாட் நிறுவனத்துக்கிடையில் ஒப்பந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டுள்ளது.
* 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கான கட்டளை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளது.
* ஒப்பந்தப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதோடு இதுவரை அதன் 93% வேலைகள் (கட்டிடங்கள் மற்றும் பாதைகள் நிர்மாணம், காணி அபிவிருத்தி வேலைகள், அலைதாங்கி, துறைமேடை அமைத்தல், தோண்டும் பணிகள்) பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**ஒலுவில் கரையோர பாதுகாப்பு வேலைகள்**

ஒலுவில் பகுதியின் கடலரிப்பு தொடர்பில் சாத்தியமான தீர்வுகள் அடையாளங்காணப்படுவதற்காக லங்கா ஹயிட்ரொலிக் நிறுவனத்தின் ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபை ஆரம்ப ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

டனிடா நிதி பயன்படுத்தப்படும் அங்கீகாரத்துடன் பணிகள் ஒப்படைக்கப்பட்டு 2012 நடுப் பகுதியில் இது பூர்த்தி செய்யப்படவுள்ளது. ஒவ்வொன்றும் 100 மீட்டர் நீளமும் கடல் மட்டத்திலிருந்து – 4.0 மீட்டர் ஆழத்திலும் கரைக்கு அப்பால் 03 அலைதாங்கிகள் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு இதனால் 2.5 கி. மீட்டர் முன்னோக்கியதான கரையோரம் பாதுகாக்கப்படும்.

**காலித் துறைமுக அபிவிருத்தி**

- ரூபா 21 மில்லியன் மொத்த செலவு கொண்ட உல்லாசப் படகு பழுதுபார்க்கும் வேலைத்தளக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- உத்தேச உல்லாசப் படகுத் தளத்துக்கான விலைமனு ஆவணத் திட்டமிடுதல் மற்றும் தயார் செய்தல்கள், காணி கைப்பற்றல்கள் நடைபெற்று வருகின்றன.
- உல்லாசப் படகுகளுக்குத் தேவைப்படும் துணை வசதிகளுக்கான உத்தேச வசதிகள் வழங்கும் கட்டிடத்தின் திட்டமிடல் நடைபெற்று வருகின்றது.
- காலியில் ரூமஸ்ஸல சுற்றுலா விடுதியின் மீளமைத்தல் பணிகளுக்கான வடிவமைப்பு , விலை மனு கோரல் ஆவணம் தயார் செய்தல் மற்றும் ஒப்பந்தம் ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- காலித் துறைமுகத்தில் உத்தேச கேபியன் (GABION) நிர்மாணத்தின் வடிவமைப்பு, விலைமனு கோரல் ஆவணம் தயார் செய்தல் மற்றும் ஒப்பந்தம் ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஏனைய வேலைகள்**

- கொழும்புத் துறைமுகத்தின் உள்ளக பாதையின் வடிவமைப்பு மற்றும் விரிவாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- கொழும்புத் துறைமுகத்தின் ஹர்த்தால் பாலம் விரிவாக்கலுக்கான துணை அமைப்புகளின் நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மொத்த செலவினம் ரூபா 90 மில்லியனாகும்.
- ஐக்கிய கொள்கலன் முனையத்தின் அவசர புதுப்பித்தல் வேலைகளுக்கான விலைமனு கோரல் ஆவணம் தயார் செய்தல் மற்றும் ஒப்பந்தம் ஒப்படைக்கப்படுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மொத்த செலவினம் ரூபா 420 மில்லியனாகும்.
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் திருகோணமலைத் துறைமுகத்திற்குரிய காணிகளின் அளவிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கொழும்புத் துறைமுகத்தின் உத்தேச ஹர்த்தால் பாலம் விரிவாக்கலுக்கான சிறந்த அமைப்பு தொடர்பில் தகுந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து விலை கோரல் மேற்கொள்ளப்படுவதற்கான ஆவணத் தயாரிப்பு நடைபெற்று வருகின்றது.
- புகையிரத மற்றும் பண்டங்கள் பிரிவுக்கான உருக்கு அமைப்பிலான வடிவமைத்தல் நடைபெற்று வருகின்றது.
- துறைமுக உள்ளக பாதை விரிவாக்கல் காரணமாக தேவைப்படும் சகல மீள் ஸ்தாபிக்கப்படுதல்களுக்குரிய வடிவமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஐக்கிய கொள்கலன் முனையத்தின் அவசர புதுப்பித்தல்கள்** (URUCT)

**பின்னணி மற்றும் தேவைப்பாடு**

புதிய வட பாலத்தின் நிர்மாணம் SL – P 41 ஆம் இலக்க கடன் திட்டத்தின் கீழ் JBIC நிதியினால் 2003 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது தற்போது ஐக்கிய கொள்கலன் முனையம் (UCT) என அழைக்கப்படுகின்றது.

மேற்கு மற்றும் வட நங்கூரத்தளங்களில் பொதுவான கப்பற் சரக்குகளுக்கான இடவசதிகள் வழங்கப்படுவதற்காக 387 மீட்டர் நீளமாகவும் 127 மீட்டர் அகலமாகவும் ஐக்கிய கொள்கலன் முனையம் நிர்மாணிக்கப்பட்டது. இதன் நிர்மாண நடவடிக்கைகளின் பல ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கு துறைமேடைச் சுவரோரமாகவும் வட துறைமேடைச் சுவரில் 20 மீட்டர் அளவிலும் வெடிப்பேற்பட்டு கீழிறங்கியுள்ளதால் ஐக்கிய முனையத்தின் வட முனையின் பகுதியொன்று முழுமையான அமைப்பு ரீதியான மாற்றத்திற்குள்ளாகியுள்ளமை தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது.

ஐக்கிய கொள்கலன் முனையத்தின் அமைப்பானது தொடர்ச்சியாக அழிவடைந்ததன் காரணமகாக இல. 02 ஆம் முனைய நடவடிக்கைகள் தற்போது இந்நிலைமையின் கீழ் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதனால் ஆற்றப் பெற்ற கையாளல் பணிகளுக்கு பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது. வட துறைமேடைச் சுவர் தொடரந்தும் அழிவடைகையில் முனையத்தின் நிரப்பப்பட்ட பொருட்கள் கழுவிச் செல்லப்பட வாய்ப்புண்டு. இதனால் துறைமுகத் தடாக கையாளல்களுக்கு பாதிப்பேற்பட்டு இறுதியில் கொழும்புத் துறைமுகத்துக்கு பாரிய அழிவு ஏற்படக் கூடும்.

**இனங்காணப்பட்ட பழுதுபார்த்தல் பணிகள்**

முனையத்தில் முழுமையான கையாளல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக 127 மீட்டர் நீளமான துறைமேடைச் சுவர், வட துறைமேடைச் சுவர் (20 மீட்டர் பகுதி) போன்று ஐக்கிய கொள்கலன் முனையத்தின் மேற்கு முனையிலிருந்து குறைந்தது 50 மீட்டர் உரிய நிலைக்கு கொண்டு வரப்படுவதற்கான அவசர (127 மீட்டர் X 50 மீட்டர் புனர்நிர்மாணம் செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**உள்ளடக்கப்படும் பணிகள்**

- தோண்டுதல் மற்றும் மேற்கு துறைமேடைச் சுவரில் 127 மீட்டரும், இருக்கும் துரைமேடைச் சுவர் கவசமிட்டு வலுப்படுத்துவதற்கும் நங்கூர கவசமிட்டு தயாரிக்கப்படுவதற்கும், துறைமேடைச் சுவர் பாதுகாக்கப்படுவதற்காக கற்களை பரப்பி சுவர் அமைத்தல்.
- வட துறைமேடையின் வட முனைக்கு கவசமிடுதல். 20 மீட்டருக்கான நங்கூரக் கவசமிடல்
- இருக்கும் துறைமேடையோரமாகவுள்ள பாறாங்கற்கள் அகற்றப்பட்டு (Rock Mound) நார் துணியிலான படலமிட்டு (GEO – TEXTILE) மீள் நிர்மாணித்தல்
- முனைய மேடை உரிய நிலைக்கு கொண்டு வருதல் மற்றும் நிலம் மீள் தயார் செய்தல் (127 மீட்டர் X 50 மீட்டர்)

**நிதி கிடைக்கப் பெறும் முறை**

இதற்காக திட்டங்கள் சாராத நிதியுதவித் திட்டத்தின் கீழ் (Non – Project Grant & Counter Port Funds) ஜப்பான் அரசாங்கத்தினால் ரூபா 400 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**திட்டங்களின் முன்னேற்றம்**

ஒப்பந்தக்காரரான வ/ப Acess Engineering தனியார் கம்பெனியிடம் 2011 டிசெம்பர் மாத்த்தில் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**இலங்கை துறைமுக அதிகாரசபையின் உத்தேச பிரதான அலுவலகம் நிர்மாணித்தல்**

கொழும்பு 01 கனல் முனையப் பகுதியில் தனது பிரதான அலுவலகத்தினை அமைப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை கருதுகின்றது. கையாளல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபடாத சகல ஆளணிகளையும் ஒரே கூரையின் கீழ் ஒன்றுசேர்த்தல் இதன் நோக்கமாகும். இது தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆளணியினருக்குத் தேவையான மொத்த இடவசதி பரீட்சார்த்தமாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் உத்தேச பிரதான அலுவலகம் நிர்மாணிக்கப்படுவது தொடர்பில் திட்டம் தயாரித்தல், நிர்மாணம் மற்றும் நிதி தேவைப்பாடுகள் பற்றியதில் வ/ப சியாரா நிர்மாண கம்பெனியின் சுய விருப்பிலான திட்டப் பிரேரணையொன்று கிடைக்கப் பெற்றுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இப்பிரேரணை மதிப்பிடப்பட்டு அம்மதிப்பீட்டு அறிக்கை அமைச்சரவையினால் நியமிக்கப்படும் மீளாய்வுக் குழுவிற்கு (SCARC) அனுப்பி வைக்கப்படுவதற்காக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது அமைச்சரவையினால் நியமிக்கப்படும் மீளாய்வுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் வ/ப சியாரா கம்பெனியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2011 சனவரி 14 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது.

25 மாடிகளைக் கொண்ட கட்டிடத்துக்கான திட்டத்தின் ஆரம்ப தடைநீக்கல் அறிக்கை கொழும்பு மாநகரசபையிலிருந்து பெறப்பட்டுள்ளது. வ/ப சியாரா கம்பெனியினால் விபரமான திட்ட அறிக்கை அ.நி.மீ குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய அ.நி.மீ குழுவிற்கு (SCARC) உதவுவதற்காக வழங்கல் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக அரச நிதித் திணைக்களத்தினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று (TEC) நியமிக்கப்பட்டுள்ளது. தற்போது தொ.ம குழுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

**உத்தேச கட்டிடத்தின் விடயங்கள் பின்வருமாறு**

| | | |
|---|---|---|
| ✱ | மாடிகளின் எண்ணிக்கை - | 25 |
| ✱ | கட்டிடத்தின் மொத்த இடப் பகுதி - | 31,000 சதுர மீட்டர் |
| ✱ | மதிப்பிடப்பட்டுள்ள திட்டத்தின் ஆகுசெலவு - | 4.5 பில்லியன் |
| ✱ | ஆரம்பிக்கப்படுவதற்கு உத்தேசித்துள்ள திகதி - | 2012 சனவரி |
| ✱ | மதிப்பிடப்பட்டுள்ள நிர்மாண காலப்பகுதி - | 30 மாதங்கள் |

**வளவுகள் மற்றும் பூகோளரீதியான தகவல் பிரிவு**

கொழும்பு, காலி , திருகோணமலை மற்றும் ஒலுவில் போன்ற இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான சகல அசையாத சொத்துக்கள் / காணிகள் மற்றும் கட்டிடங்கள் வளவுப் பிரிவினால் நிர்வகிக்கப்படுவதோடு சொத்துக்களின் வரைபடம் எடுத்தல் மற்றும் கணனிமயப்படுத்தல் பூகோளரீதியான முறைமைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தீவினைச் சுற்றியுள்ள 8000 ஏக்கர் அளவிலான நிலப் பகுதி இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமாகவுள்ளது. இதில் 75 இடங்கள் வெளி நபர்களுக்கும் / நிறுவனங்களுக்கும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. இப்பிரிவினால் பின்பற்றப்பட்ட விசேட அறவீடு முறையின் கீழ் வளவுப் பிரிவினால் ரூபா 143.54 மில்லியன் நிகர வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.மேலும் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் ரூபா 9.899 மில்லியன் வாடகைப் பணமாக அறவிடப்பட்டுள்ளது.

மாதமொன்றுக்கு ரூபா 5000/= வாடகை பெறப்படும் அடிப்படையில் பயணிகள் முனையத்தின் இருபத்து ஆறு (26) விற்பனைக் கூடங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

பேரே ஏரியைச் சுற்றி சுற்றுலாத் துறை அபிவிருத்தி செய்யப்படுவது தொடர்பிலான அரசின் கொள்கைக்கேற்ப பேரே ஏரியில் “ த பன்டூன்” எனும் நீரில் மிதக்கும் உண்டிச்சாலையொன்று திறக்கப்படுவது தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சினமன் லேக்சைட்

ஹோட்டலிற்கிடையிலான ஒப்பந்தமொன்றுக்குட்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பல்வேறு தரங்களுக்குரிய ஆளணிகளின் நலன்புரி தொடர்பில் சுமார் 606 வீடுகளும், 354 கட்டில்களைக் கொண்ட தனிநபர் விடுதியும் வளவுப் பிரிவினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நகர சபை போன்றவற்றிற்கு அதிகாரசபையினால் செலுத்தப்படும் வரி மற்றும் குத்தகைக் கட்டணங்கள் தொடர்பான விடயங்கள் வளவுப் பிரிவினால் கையாளப்படுகின்றன.

பூகோளரீதியான தகவல் முறைமை அறிமுகப்படுத்தலின் ஊடாக வளவுகள் இலகுவில் அடையாளங் காணப்பட முடிந்ததோடு குத்தகைக் கட்டணங்கள் மற்றும் வரிகள் செலுத்தப்படுதலில் ஏற்படும் முரண்பாடுகள் குறைத்துக் கொள்ளக் கூடியதாகவும் இருந்தன. 2011 ஆண்டினுள் குத்தகைக் கட்டணங்கள் மற்றும் வரிகளாக ரூபா 29,166,761 /= செலுத்தப்பட்டுள்ளன.

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய சொத்துக்களின் அத்துமீறல்களைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் வளவுப் பிரிவினால் எடுக்கப்படுவதோடு இந்நிலைமைகள் கண்காணிக்கப்படுவதற்காக பூகோளரீதியான தகவல் முறைமைத் தொகுதியின் உதவியோடு பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

## இயந்திரப் பொறி

இலங்கை துறைமுக அதிகாரசபையில் கப்பற்சரக்குகள் கையாளும் உபகரணங்கள் தொடர்பில் தகுந்த பராமரிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதலின் ஊடாக கொள்கலன் மற்றும் மரபு ரீதியான கப்பற் சரக்குகையாளல் நடவடிக்கைகளுக்கு தடைகளின்றி உபகரணங்கள் பெற்றுக்கொடுத்தல் இயந்திரசாலைப் பொறியியல் பகுதியின் முக்கிய பொறுப்பாகும்.

உபகரணங்களிலேற்படும் சடுதியான தடங்கல்களின் போது திறம்பட பழுதுபார்த்தல் மற்றும் திட்டமிடப்பட்டவாறான பின்வரும் உபகரணங்களின் பராமரித்தல்கள் 2011 ஆண்டினுள் இப்பகுதியினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

* கப்பலிலிருந்த கரை அண்மித்த கொள்கலன் பாரம் தூக்கிகள் (STS) 23
* இறப்பர் சில்லுகள் பொருத்தப்பட்ட கண்ட்றி பாரம் தூக்கிகள் (RTG) 67
* பீலிகள் மீது நகரும் கண்ட்றி பாரமுயர்த்திகள் (RMG) 04
* கொள்கலன் கையாளலிலான உயர்த்தும் ட்றக் வண்டிகள் 19
* போக்லிப்ட் ட்றக் வண்டிகள் (2.5 தொன் – 15 தொன் வரை) 112
* பிறைம்மூவர் வண்டிகள் / முனைய டிரக்டர்கள் 144
* டிரேலர்ஸ் (போம் காட் (Bomb Cart) மற்றும் ஏனையவை) 193
* டிறோபார் டிரக்டர்கள் 04
* நடமாடும் பாரமுயர்த்திகள், வாப்பு மின்சாரம், மிதவை மற்றும் மேலால் நகரும் பாரந்தூக்கிகள் பாரமுயர்த்திகள் 67
* கப்பற் சரக்கு கையாளல்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்கும் தேவைக்காக எதிர்பார்ப்பில் வைக்கப்படும் மின் பிறப்பாக்கிகள் 07
* இடம் நகர்த்தும் புகையிரத என்ஜின்கள் 03
* மோட்டர் வண்டிகள் 591 (பேரூந்துகள்,லொறிகள்,வேன், டபிள் கெப், கார்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள்)

ஆண்டினுள் 2.3 மில்லியனுக்கு மேற்பட்ட மொத்த கொள்கலன் (இருபது சம அலகுகள்) இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கையாளப்பட முடிந்ததோடு, திட்டமிடலின் நேரடி பலனாக 90% மேற்பட்ட மட்டத்திலான உபகரணப் பராமரிப்பே இதற்கான முக்கிய காரணமாகும்.

இயந்திரசாலைப் பொறியியல் பகுதியினால் 2011 ஆம் ஆண்டினுள் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

**கண்ட்றி பாரந்தூக்கிகள் பராமரிப்புக் கூறு – ஜய கொள்கலன் முனையம் - கட்டம் 1 மற்றும் 11**

கரைக்கு அண்மித்த பாரந்தூக்கிகள், பீலிகளில் நகரும் கண்ட்றி பாரந்தூக்கிகள் மற்றும் றான்ஸ்பர் பாரந்தூக்கிகளினது பாரிய பழுதுபார்த்தல்கள் நிறைவேற்றப்பட்டன. வயர் கயிறு மீள் மாற்றல்கள் அடங்கலாக பீலிகளில் நகரும் றொலிகளின் பாதைகள் மற்றும் சில்லுகள் மீள் மாற்றல்களின் பாதுகாப்பு பராமரிப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன. விபத்துக்களில் சேதமானவற்றின் பழுதுபார்த்தல்கள், மை பூசுதல், செப்பனிடல் ஆகியவை பூர்த்தி செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக 02 இயந்திரங்களின் இயக்குநர் அறைகளின் மீள் மாற்றல்களும் சம்பந்தப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட்டன.

**கப்பற் சரக்கு கையாளல் சாலை – ஜய கொள்கலன் முனையம் - III மற்றும் IV**

டீசல் என்ஜின் பழுதுபார்த்தல் பிரிவின் உதவியோடு பிறைம்மூவர் மற்றும் டொப் லிப்ட் வண்டிகளின் 44 என்ஜின்கள் மற்றும் பரிமாற்ற சாதனங்களின் மீள் மாற்றல்கள் பூர்த்தி செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக பிறைம்மூவர் மற்றும் டொப் லிப்ட் வண்டிகளினது, 10 முன் ஏற்பாடு பராமரிப்புப் பழுதுபார்த்தல்களும் மேற்கொள்ளப்பட்டன. சம்பந்தப்பட்ட காலப்பகுதியினுள் 38 டிரேலர்களின் முன் ஏற்பாடு பராமரிப்புகளும், 17 பிறைமூவர் மற்றும் டிரேலர்களினது விபத்து சேத பழுதுபார்ப்புகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

**பாரந்தூக்கிகள் வேலைத்தளம்**

மஹபொல பயிற்சி நிலையத்திலுள்ள கப்பல் மாதிரி IHI JIP கோபுரம், உள்ளடங்கலான 7 இருந்து 90 தொன் வரையிலான நடமாடும் பாரந்தூக்கிகள் அடங்கிய சகல பாரந்தூக்கிகளினது 27 முழுமையான பழுதுபார்த்தல்களும், பிரதான பழுதுபார்த்தல்களும் நிறைவு செய்யப்பட்டன. முன் ஏற்பாடு பராமரிப்பு வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டன. அத்தோடு மேலால் நகரும் 20 பாரந்தூக்கிகளினது பழுதுபார்த்தல் பராமரிப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன.

**நிர்மாண இயந்திரங்கள் பராமரிப்புப் பிரிவு**

**லோடர்கள், இழுவை**. டிரெக்டர்கள் மற்றும் உழவு இயந்திரங்களினது 16 பிரதான பழுதுபார்த்தல்களும் முழுமையான பழுதுபார்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டதோடு இதற்கு மேலதிகமாக உழவு இயந்திரங்களினதும் இழுவை டிரெக்டர்களினதும் றோட் ரோலர்ஸ், வாயு அமுக்க இயந்திரம் மற்றும் ஏனைய உபகரணங்களினதும் 35 முன் ஏற்பாடு பராமரிப்பின் பிரதான முழுமையான பழுதுபார்த்தல்களும் செய்யப்பட்டன.

**டீசல் என்ஜின் பழுதுபார்த்தல் பிரிவு**

21 றான்ஸ்பர் பாரந்தூக்கிகளின் “ குமின்ஸ்” என்ஜின்களினது முழுமையான பழுதுபார்த்தல்கள் செய்யப்பட்டன. பராமரிப்பு அட்டவணையின் படி 05 பிறைம்மூவர்களினது என்ஜின்களும், 14 முனைய டிரெக்டர்களினது முழுமையான பழுதுபார்த்தல்களும் செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக ஆண்டினுள் 04 டொப் லிப்ட் என்ஜின்களும் 02 போக் லிப்ட் என்ஜின்களும் முழுமையான பழுதுபார்த்தல்களுக்குட்படுத்தப்பட்டன. டபிள் கெப்,பேரூந்து, லொறி ஆகியவற்றின் 05 என்ஜின்களினது முழுமையான பழுதுபார்த்தல்கள் பூர்த்தி செய்யப்படுதலின் ஊடாக மோட்டார் கராஜின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டன.

அத்தோடு பிறைம்மூவர் மற்றும் டொப் லிப்ட்களினது 25 பரிமாற்ற உபகரணங்களினது முழுமையான பழுதுபார்த்தல்களும் நிறைவு செய்யப்பட்டன.

**மோட்டார் கராஜ்**

மென்ரக மற்றும் கனரக வாகனங்களினது சகல பராமரிப்பு பழுதுபார்த்தல்களும் நிறைவேற்றப்பட்டன. இதற்கு மேலதிகமாக ஆண்டினுள் தகர வேலைகளும் மை பூசும் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

**கப்பற்சரக்கு கையாளல் இயந்திரங்களின் பழுதுபார்த்தல் பிரிவு**

டொப் லிப்ட் மற்றும் போக்லிப்ட் வண்டிகளினது முன் ஏற்பாடு பராமரித்தல்களும் 10 முழுமையான பழுதுபார்த்தல்களும் பூர்த்தி செய்யப்பட்டன.

குத்தகை அடிப்படையில் இரு இயக்குநர்களினால் இயக்க மற்றும் பராமரித்தல் மேற்கொள்ளப்படும் சமர்ஹில் பிரதேசத்தில் அமைந்துள்ள மொத்த எண்ணெய்க் களஞ்சிய நிலையம் இப்பகுதியின் மேற்பாரவையின் கீழ் ஆண்டினுள் திருபதிகரமாக இயங்கியது.

**இயந்திர வேலைகள்**

கடலகக் கலங்கள், துறைமுக இயந்திரங்களிலிருக்கும் சகல உருக்கு வடிவமைப்புகளினதும் இலங்கை துறைமுக அதிகாரசபையினது புதிய உருக்கு அமைப்புகளின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் தொடர்பில் இயந்திர வேலைகள் பொறியியல் பகுதி பொறுப்பாகவுள்ளது.

ஜய கொள்கலன் முனையத்தின் கரையோர பாரந்தூக்கிகளுக்கான றொலி பீலிகளுக்குப் பதிலாக புதிய பீலிகள் பொருத்துதல், கடலகக் கலங்கள், இழுவைக் கலங்கள் போன்றவற்றின் சகல உருக்கிலான அமைப்புக்கள் பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல், மொத்த கப்பற்சரக்கு கையாளப்படுதலின் அள்ளும் வாளிகளைப் பராமரித்தல் , பொதுவான கப்பற் சரக்கு குதங்களினது கதவுகள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் , ஜய கொள்கலன் முனைய கொள்கலன் பாரமுயர்த்திகளின் சகல உருக்கு அமைப்புகளினதும் பழுதுபார்த்தல்கள், இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய பகுதிகளுக்குத் தேவைப்படும் விசேடமாக நங்கூர சங்கிலிகள், புதிய கொக்கிகள் செய்யும் இயந்திர வேலைகளின் பரீட்சிப்பு போன்ற அத்தியாவசிய பணிகள் பேணப்பட்டு சகல கையாளல் நடவடிக்கைகளும் சிறந்த முறையில் மேற்கொள்ளப்படுவதற்கு இப்பகுதி முக்கிய பணியாற்றுகின்றது. மேலும் கொள்கலன் முனையம் மரபுரீதியான துறைமேடைகளின் கிராதிகள், புதிய உருக்குகளின்) பராமரித்தல், வ/ப ஜய கொள்கலன் கம்பெனிகளினால் கொழும்பு எண்ணெய்க் களஞ்சிய நிலையத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் திட்டமிடல், அட்டவணைப்படுத்துதல், செயற்படுத்துதல் இதற்குரிய பணிகளாகும்.

வழமையான பராமரிப்புகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை ஜய கொள்கலன் முனையத்தின் 12 கொள்கலன் டிரேலர்களினதும் , 20 பிறைம்மூவர்களின் முன் பகுதிகள், 02 தாழ்ந்த டிரேலர்கள் , 10 தடுப்புகள், போன்றவற்றின் பிரதான அமைப்புகளினது பழுதுபார்த்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டன. ஜய கொள்கலன் முனையத்தின் 3 மற்றும் 4 ஆம் விரிவாக்கல் திட்டத்தின் 200 கிராதிகள், பண்டாரநாயக்க துறைமேடையின் 165 கிராதிகள் உற்பத்தி செய்தல், ஜய கொள்கலன் முனையத்தின் 3 மற்றும் 4 இல் 28 வெளிச்சக் கம்பங்களின் உயரம் நீடித்தல், 01 நீர்த்தாங்கிக் கோபுரம் நிர்மாணித்தல் அடங்கலாக சேதமடைந்த றொலி பீலிகள் மற்றும் J 1 இருந்து J 14 அமைப்புப் பாகங்கள் மீள் மாற்றல், 03 காற்று அமுக்க இயந்திரங்கள், 12 குதங்களின் கதவுகள், 03 இரும்புப் பட்டறைகள் 01 CNC இயந்திரம், 01 கத்தரிக்கும் இயந்திரம் புதிதாக உற்பத்தி செய்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. M/V சிங்ஹபாகு மற்றும் 10,13 நங்கூரக் கலங்களின் சகல தண்டுப் பகுதியின் பிரதான பழுதுபார்ப்புகளும், திருகோணமலைத் துறைமுகத்தில் மொத்த சீமெந்து, நிலக்கரி கையாளலில் பயன்படுத்தப்படும் 4.5 கியுபிக் மீட்டர் கொண்ட வாளியினது பழுதுபார்த்தல், நிலப்பதிப்பு கவசம் உற்பத்தித் தொழிற்சாலையின் சகல பழுதுபார்த்தல்களும் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் புதிய குத நிர்மாணம் போன்றவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பு எண்ணெய்க் களஞ்சிய நிலையத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களின் மீது 5780 கியுபிக் மீட்டர் கொள்ளளவு கொண்ட புதிய பெற்றோலிய எண்ணெய் களஞ்சிய தாங்கி மற்றும் கப்பல் சார்ந்த கனரக எண்ணெய் களஞ்சியப்படுத்தலுக்கான 3 மெட்றிக் தொன் கொதிகலன்கள் நிறுவுதலும் இப்பகுதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஊடாக கொழும்பு எண்ணெய் களஞ்சிய நிலையத்தின் கப்பல் சார்ந்த எண்ணெய் வழங்கும் வர்த்தகத்தினால் வருமானம் அதிகரிக்கப்பட வாய்ப்புண்டாகும்.

## கடலகம்

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான சகல மிதவைக் கலங்களினது பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் கடலகப் பொறியியல் பகுதியின் பொறுப்பாகும். கடலகம், பாதுகாப்பு, இயக்கம் போன்ற பகுதிகளிலும் சிவில் பொறியியல் பராமரிப்பு பிரிவிலும் பயன்படுத்தப்படும் வெளியே பொருத்தும் என்ஜின்களினது பராமரிப்புகள் மேற்கொள்வதும் கடலகப் பகுதியின் மற்றுமொரு பொறுப்பாகும். அத்துடன் கடலகம், இயக்கம், பாதுகாப்பு பகுதிகளுக்கும் சிவில் பொறியியல் பராமரிப்பு பிரிவிற்கும் தேவைப்படும் மிதவைக் கலங்கள் வழங்கப்படுவதனை உறுதி செய்வதும் இதன் பணிகளில் அடங்கும்.

தொகை பிரிக்கும் கப்பற் சரக்குகளின் இயக்கப்பாடுகளுக்குத் தேவையான கையாளல் உபகரணங்களை வழங்குவதும் இதன் பொறுப்பாகும். கேஸ் அடுப்புக்கள் ,சோறு சமைக்கும் கொதி கலங்கள், அலுமினியப் பாத்திரங்கள் போன்ற இலங்கை துறைமுக அதிகாரசபையின் சமையலறைக்குரிய உபகரணங்கள் பராமரிப்பதும் கடலகப் பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதேபோன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் சறுக்கு வழிகளின் இயக்க மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதும் இப்பிரிவின் பணியாகும்.

கடலகப் பொறியியல் பகுதி இரு பிரிவுகளைக் கொண்டதாகும். வருடத்தினுள் இவ்விரண்டு பிரிவுகளினாலும் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகர செயற்பாடுகள் பின்வருமாறு.

**கடலகப் பிரிவு** - 01

**மீள் பொருத்தும் (REFIT) பொறியியல் பிரிவு**

நங்கூர நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் சகல நங்கூரக் கலங்கள், “மேக” தீயணைப்புக் கலம், “பிரதீப 11” வெளிச்ச வீட்டு சேவைக் கலம் “சேருவில 11” பயணிகள் கலம், இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேறுவாரிக் கலங்கள், வெளியில் பொருத்தப்படும் என்ஜின்களைக் கொண்ட சகல கலங்கள் தொடர்பான பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளின் ஒன்றிணைப்பு கடலகப் பிரிவு – 01 இன் கீழுள்ள மீள் பொருத்தும் பொறியியல் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். நங்கூர நடவடிக்கைகளுக்காக கொழும்பில் 05, திருகோணமலையில் 02, காலியில் 01, காங்கேசன்துறையில் 01 ஆக நங்கூரக் கலங்களின் இயக்க தேவைப்பாடுகள் இப்பிரிவினால் வழங்கப்பட்டன. இச்செயற்பாடுகளினோடு மிதவைக் கலங்களின் லொயிட் ஆவண வகையீடு தேவைப்பாடுகளுக்கான இயந்திர பழுதுபார்த்தல்களும் நிறைவேற்றப்பட்டன.

“ஹன்ஷகாவா” மற்றும் கிறேப்ஹோபர் என்னும “தியகொவுலா” ஆகிய இரு சேறுவாரிக் கலங்கள் இப்பிரிவினால் இயக்க நடவடிக்கைளுக்காக உகந்த நிலையில் பராமரிக்கப்பட்டன. பூவல்லா சேறுவாரிக் கலத்தின் சகல கட்டமைப்பு மற்றும் மை பூசுதல் உட்பட தண்டுப் பகுதியினதும் பழுது பார்த்தல்கள் செய்யப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாதுகாப்பு, கடலகம் மற்றும் சிவில் பொறியியல் பகுதிகளினால் பயன்படுத்தப்படும் வெளியே பொருத்தப்படும் என்ஜின்களைக் கொண்ட கலங்களின் வழமையாக செய்யப்படவேணடிய பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் இவ்வாண்டினுள் “கோடையிம்பர” மற்றும் “நந்திமித்ர கலங்கள் உலர் தடாகத்தில் ஏற்றுதல் உள்ளடங்கலாக அக்வாமாஸ்டர் உந்துகை தொகுதிகளின் பிரதான பழுதுபார்த்தல்கள் இப்பிரிவினால் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டன. மேலும் “ராஜா”, “வேலுசுமன” “தேரபுத்தாபய” , “தியகொவுலா” மற்றும் ஹன்ஸகாவா கலன்களினது தடாகத்திலான பழுதுபார்த்தல்களும் ஏனைய பிரதான புதுப்பித்தல்களும் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டன. “விஜயபாஹூ” இழுவைக் கலத்தின் பிரதான இரு என்ஜின்களும், இரு மின் பிறப்பாக்கிகளும் முற்றாக வேறாக்கப்பட்டு புதுப்பித்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு உந்துகை தொகுதியின் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளும் செய்யப்பட்டன.

“நீலமஹ” இழுவைக் கலத்தினது முழு என்ஜின், உந்துகை தொகுதி இயந்திர ரீதியான பழுதுபார்த்தல்கள் போன்று உயர் விசையுடன் துருப்படிவு அகற்றப்பட்டு முற்றாக மை பூசுதல்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆளணியினரால் உலர் தடாகம் பயன்படுத்தப்படாது ஆக்கவுரிமை சறுக்கு வழி பயன்பாட்டின் ஊடாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

2011 வருடம், மீள் பொருத்தும் பிரிவிற்கு சரித்திரபூர்வ ஆண்டாகும். இவ்வாண்டினுள் பிரதான பணிகள் மற்றும் தடாக பழுதுபார்த்தல் தொடர்பில் கூடிய வளர்ச்சி பெறப்பட்டுள்ளது. இதனூடாக இயக்க நடவடிக்கைகளில் நங்கூரக் கலங்கள் உயர் நிலையில் வழங்கப்பட்டு சிறப்பான பணியாற்றப்பட்டது.

**துறைமுக கலப் பிரிவு**

வழிகாட்டி லான்ச் கலங்கள் மற்றும் நங்கூரமிடல் கலங்கள் போன்றவற்றின் பழுதுபார்த்தல்கள், பராமரிப்புக்கள் தொடர்பில் பிரதானமாக இப்பிரிவு பொறுப்பாகவுள்ளதோடு கடலகப் பகுதியின் தேவைப்பாடுகள் இதன் ஊடாக பூர்த்தி செய்யப்படக்கூடியதாக இருந்தன.

ஆண்டினுள் "இல : 01" ,"ரேன்ஜர்" , "பலயா", "ருஹுணு" போன்ற நங்கூரக் கலங்கள் மற்றும் "எகோ 03 " ஆய்வுக்கலம், இல: "09" எனும் வழிகாட்டி கலம் சறுக்கு வழிக்கு கொண்டு செல்லப்பட்டு நீருக்கடியிலான அனைத்து பழுதுபார்த்தல்களும் செய்யப்பட்டன. இல : "10" வழிகாட்டி கலத்தின் இரண்டு என்ஜின்களினது இயந்திர ரீதியான சகல பாகங்களினது முழுமையான பழுதுபார்த்தல்களும் மேற்கொள்ளப்பட்டன. 11,12,13,14,15 எனும் வழிகாட்டி கலங்கள் போன்று 2,3 எனும் நங்கூரக் கலங்களினதும் எகோ 3 எனும் கலத்தினதும் லொயிட் வகையீடு ஆய்வுகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குப் புறம்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல வழிகாட்டி, நங்கூர கலங்கள் உட்பட ஏனைய கலங்களினதும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**கலப் பிரிவு** - 11

**கல நிர்மாணம்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலகக் கலங்களின் மரத்திலான மற்றும் பைபர் கிலாஸ் பகுதிகளிலான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளல் கல நிர்மாணப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். மேலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் லான்ச் கலங்கள் மற்றும் நீர்மூழ்கிப் படகுகளினது தடுப்புகளின் பழுதுபார்த்தல்கள், மரத்திலான வேலைகள், மரத்திலான அடிச்சட்டங்களினது பழுதுபார்த்தல்களும் பராமரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று சகல படகுகளின் மரத்திலான அடிச்சட்டங்களையுடைய பகுதிகளும் லான்ச் கலங்களினது பைபர் கிலாஸ் பகுதிகளும் புதுப்பிக்கப்படக் கூடியதாகவிருந்தன. கடலகப் பகுதியில் பயன்படுத்தப்படும் நங்கூரக் கலங்களின் மரத்திலான தடுப்புகளினதும், சகல மரத்தளபாடங்களினதும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிட்ட ஆண்டினுள் 600தொன் கொண்ட. இல – 01 இருந்து 03 ஆம் இலக்கம் வரையிலான சறுக்கு வழிகளில் 06 கையாளல்களும், 07 லான்ஞ் கலங்களின் பிரதான பழுதுபார்ப்புகளும் நிறைவேற்றப்பட்டன. இவ்வாண்டினுள் இப்பிரிவினால் 04 வழிகாட்டிக் கலங்கள், 04 நங்கூர கலங்கள், பல்வேறு சிறு கலங்கள், 06 நங்கூர இழுவைக் கலங்கள் மற்றும் 10 ஏனைய கலங்களின் பழுதுபார்த்தல்களும் பராமரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

**கப்பல் சரக்கு பழுதுபார்க்கும் முனையம்**

இயக்கப் பகுதியினால் பயன்படுத்தப்படும் இழுவைக் கலங்கள்,மோட்டார் லான்ச் கலங்கள், தண்ணீர் வத்தைகள்,டெக் வத்தைகளின் பராமரிப்புகள் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தொடர்பில் பொறுப்பாகவிருக்கும் இம்முனையத்தினால் இக்கலங்கள் கடுங்காற்று பயன்படுத்தப்பட்டு (Grit Blasting) துப்புரவு செய்து மை பூசும் வேலைகள் உள்ளடங்கலான பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இயக்கப் பகுதியின் மேற்குறிப்பிடப்பட்ட கலங்களின் கையாளல் தேவைப்பாடுகள் இம்முனையத்தினால் பூர்த்தி செய்யப்படக் கூடியதாகவிருந்தன.

ஆண்டினுள் இப்பிரிவினால் இயக்கம், கடலகம், பாதுகாப்பு பொறியியல் ஆகிய பகுதிகளுக்கும் காலி, திருகோணமலைத் துறைமுகங்களுக்கும், அதேபோன்று வெளி நிறுவனங்களுக்கும் பல்வேறு

அளவிலான 697 கம்பி மற்றும் மனிலா கயிறு சிலிங்கைகள், 220 திரைச் சீலைகள், பல்வேறு அளவிலான 44 கென்வஸ் சீலைகள், 35 மேற் சீலைகள் தயாரித்து வழங்கப்பட்டன.

கைவண்டி, குப்பை வண்டி,தள்ளு வண்டி போன்ற பல்வேறுபட்ட வண்டிகளினது பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கையிலும் 17 தள்ளு வண்டி, கை வண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளினால் வேண்டப்பட்ட 1500 க்கு மேற்பட்ட சமையலறை உபகரணங்கள், அலுமினிய உற்பத்திகள் பழுதுபார்த்தல்களுக்கு மேலதிகமாக பல்வேறு வகையான குழாய் உற்பத்தியும் பழுதுபார்ப்புகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

முழுமையான உருக்கு புதுப்பித்தல்கள், கப்பல் தண்டுப் பகுதி மோதும் தடுப்பு வேலைகள் போன்று “வெலிகொள்வா” டனக் இழுவைக் கலத்தினதும் WB 12 தண்ணீர் வத்தைகயினதும் பூரண பழுதுபார்த்தல்கள் நிறைவேற்றப்பட்டன. கொழும்புத் துறைமுகத்தில் 06 சறுக்கு வழிகளைப் பேணும் இப்பிரிவினால் ஆண்டினுள் கலங்கள் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டமையினால் (இலங்கை துறைமுக அதிகாரசபையின் 10 கலங்கள் மற்றும் தனியார் துறையினருக்குரிய 03 கலங்கள்) 13 சறுக்கு வழிக் கையளால்களே மேற்கொள்ளப்பட்டன.

இப்பிரிவு **பேரே முனையம்** பிரதானமாக இயக்கப் பகுதியினால் பயன்படுத்தப்படும் உருக்கிலான கப்பற்சரக்கு வத்தைகளின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்களுக்கு பொறுப்பாகவுள்ளது. உருக்கிலான லொறி உடற் பகுதிகளின் 03 சட்டங்கள் செய்யப்பட்டதோடு ஆண்டினுள் WB 07 தண்ணீர் வத்தையினது பிரதான புதுப்பித்தல் செய்து முடிக்கப்பட்டது.

கடலகப் பொறியியல் பகுதியானது தனது சேவையினை சகல பகுதிகளுக்கும் வழங்கியுள்ளது. தனியார் துறையினருக்கு சறுக்கு வழி சேவை பெற்றுக் கொடுக்கப்படுதலின் மூலமும் சறுக்கு வழிகள் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டதன் மூலமும் வயர் சிலிங்கைகள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டதனாலும் ஆண்டினுள் ரூபா 8,967,263.26 வருமானம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆளணியினதும் ஊழியர்களினதும் அர்ப்பணிப்பின் ஊடாக நிலவும் வளங்கள் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிதவைக் கலங்கள் சம்பந்தப்பட்ட சகல கையாளல் தேவைப்பாடுகளும் இப்பகுதியினால் பூர்த்தி செய்யப்படக் கூடியதாக இருந்தன.

## வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்

### பணிகள்

இலங்கையின் வர்த்தக துறைமுகங்களினது இயக்க மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபைக்குத் தேவைப்படும் எரிபொருள், இயந்திர சாதன உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் வேறு பொருட்கள் கொள்வனவு (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ) செய்தல் களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் இப்பகுதியின் பணிகளுள் அடங்கும்.

**மீளாய்வாண்டினுள் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள விலைகோரல்களின் எண்ணிக்கை**

| விபரம் | விலைகோரல் சபை கூட்டங்களின் எண்ணிக்கை | விலைகோரல் சபை அங்கீகாரங்களினது எண்ணிக்கை |
|---|---|---|
| அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விலைகோரல் சபை (அங்கீகார எல்லை – 100 மில்லியன் ரூபாவிற்கு மேல் | இல்லை | இல்லை |

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் சபை (திணைக்கள விலைகோரல் சபை இல - 01) (ரூபா 20 – 100 மில்லியன் வரை) | 12 | 07 |
| மத்திய விலைகோரல் சபை (திணைக்கள விலைகோரல் சபை இல – 02 ) ரூபா 250,000 இருந்து 20 மில்லியன் வரை) | 48 | 1,412 |
| "பி" விலைகோரல் சபை (திணைக்கள விலைகோரல் இல – 03) அங்கீகார எல்லை ரூபா 250,000 க்கு குறைந்தது) | 51 | 3,401 |

**2011 ஆம் ஆண்டின் உள்நாட்டு கொள்வனவுகளின் மொத்த செலவினம்**

மூலதனமற்ற பொருட்கள் ரூபா. 694,476,269/=
மூலதன பொருட்கள் ரூபா.. 79,868,330/=

**2011 ஆண்டின் வெளிநாட்டுக் கொள்வனவுகளின் மொத்த செலவினம் (ஆகுசெலவு மற்றும் கப்பற் கட்டணப் பெறுமதி ரூபா)**

மூலதனமற்ற பொருட்கள் ரூபா. 416,809,725/=
மூலதன பொருட்கள் ரூபா. 235,055,961/=

திறக்கப்பட்ட கடன் கடிதங்களின் எண்ணிக்கை 146
திறக்கப்பட்ட மின்னஞ்சல் நிதிப் பரிமாற்றக் கட்டளைகளின் எண்ணிக்கை 13

**2011 ஆம் ஆண்டினுள் வாப்புப் பிரிவினால் அகற்றிச் செல்லப்பட்ட பொருட்கள் பற்றியதான விபரங்கள்**

கடல் மார்க்க போக்குவரத்து - 89
விமான மூல போக்குவரத்து - 105
பொதித் தபால் - 09

**2011.12.31 ஆந் திகதி வரையிலான இருப்புப் பெறுமதி ரூபா 1,669,620,237**

**பிரதான களஞ்சியங்களும் மொத்த இருப்புக் கட்டுப்பாடும்**

| | |
|---|---|
| 2011 ஆம் ஆண்டினுள் பிரதான களஞ்சியசாலைகளுக்கு கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதி (மூலதன மற்றும் மூலதனமற்ற) | ரூபா. 1,854,217,263/= |
| பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதன மற்றும் மூலதனமற்ற) | ரூபா.. 2,409,676,069/= |

## தகவல் முறைமை

தகவல் முறைமைப் பகுதி இலங்கை துறைமுக அதிகாரசபையின் அபிவிருத்தி நோக்கங்களை சரியாக இனங்கண்டு அது தொடர்பில் முனைப்பாக செயற்பாடுகின்றது.மேலும் இம் முறைமைத் தொகுதி மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு வகையில் மிகவும் நவீன தகவல் தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று மிகவும் செயற்றிறனான அலுவலக மற்றும் புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு தொகுதியானது முன்னோக்கிச் செல்லப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தக் கூடிய வளங்களின் உபயோகத்தால் மிகவும் ஸ்திரமாக துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகள் வலயத்தின் ஏனைய துறைமுகங்களோடு போட்டியாக முன்னெடுத்துச் செல்லப்படக் கூடியதாக விருக்கும். தகவல் தொழில்நுட்பம் அடிப்படையாகக்

கொண்ட திட்டங்கள் கவனத்திற் கொள்கையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெற்றிக்கு தகவல் தொகுதி உந்து சக்தியாகும். தகவல் தொழில்நுட்பத் தொகுதியினால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்படும் திட்டங்களை நோக்கும் போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகையில் தகவல் தொகுதித் பகுதியினால் வழங்கப்படும் ஒத்துழைப்பு மிகவும் உறுதியாகத் தென்படுகின்றது.

**கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதி (CTMS) - ஜய கொள்கலன் முனையம் / ஐக்கிய கொள்கலன் முனையம்**

நேவீஸ் (Navis) முனைய முகாமைத்துவத் தொகுதியின் செயற்பாட்டின் பின்னர் புதிய / மாற்றமுறும் வர்த்தகத் தேவைப்பாடுகள் காரணமாக எதிர்நோக்க வேண்டியேற்பட்ட சில பிரச்சினைகள் இப்புதிய முறை தொடர்பாக்கப்படுதலின் ஊடாக வெற்றிகரத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கைளிலான பாவனையாளர்களுக்கு **இணையத்தள அணுகு மொடியூல்** விரிவுபடுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணி நிறைவு பெறுதலின் பின்னர் முகவர்கள் துறைமுகத்துக்கு வருகை தரும் தேவைப்பாடு மட்டுப்படுத்தப்படுவதோடு தகவல் பரிமாற்றம் மிக வேகமாக மேற்கொள்ளப்படுவதனால் ஆவணங்கள் மிகவும் குறையும். EXPRESS தரவுத் தளத்துக்குரிய தகவல்கள் சேமிக்கும் வசதியில் கூடிய பகுதி வேகமாக அதிகரிக்கும் தரவுத் தளத்துக்கு உட்சேர்க்கப்பட வேண்டியுள்ளமை. இத்தொகுதிக்கான தடையாகவுள்ளது. இந்நிலை தவிர்க்கப்படும் பொருட்டு தேவையற்ற தரவுகள் அகற்றப்படுவதற்கான தூய்மைப்படுத்தும் மொடியூலொன்று கொள்வனவு செய்யப்பட்டு பரீட்சார்த்த தொகுதியுடன் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது.

**கப்பற்சரக்கு முகாமைத்துவத் தொகுதி**

2011 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாவனையாளர்களுக்கு திறனான சேவைகள் வழங்கப்படுவதற்காக நேவீஸ் தொகுதியின் கப்பற்சரக்கு மொடியூலொன்று கொள்வனவு செய்யப்பட்டது. பரீட்சிக்கப்படும் பிரிவோடு பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் இம்மொடியூல் செயற்படுத்தப்படுதலோடு சேவை வழங்கும் பகுதியின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கப்பற்சரக்குகள் அகற்றிச் செல்லப்படும் தொழிலுக்கு இதனால் மிகுந்த நலன்கள் கிடைக்கப்பெறும். அதாவது வாடிக்கையாளர்களினது அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் சேவைகள் கோரல்களுக்கான விண்ணப்படிவங்கள் வழங்கல் ஆரம்பித்தல், இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நகல் பட்டியல் சமர்ப்பிக்கப்படுதல், இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் நிதியூடான கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் வசதிகள், இலங்கை வங்கியின் கணக்கு உரிமையாளர்களின் பணம் இணையத்தளம் ஊடாக பரிமாற்றம் அல்லது எந்தவொரு வங்கியினதும் நிதி பெறும் அட்டைகள்/ கடன் அட்டைகள் பயன்படுத்தலின் மூலம் இணையத்தள கொடுப்பனவுகளுக்கான வழிகளை ஆரம்பித்தல் போன்றவைகளாகும். இது நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் வாசல்கள் மற்றும் குதங்கள் இலத்திரனியல் ஊடாக தொடர்புபடுத்தப்படுவதோடு கப்பற் சரக்குகள் அகற்றும் பணிகள் இலகுபடுத்தப்படும். மேலும் பல்வேறு சேவை நிலையங்களில் தங்கியிருக்க வேண்டிய காலம் இதனால் குறையும்.

இம்மொடியூல் இரண்டு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. முதலாவது கட்டத்தில் ஏற்றுமதி மற்றும் இரண்டாம் கட்டத்தில் இறக்குமதி நடைமுறைகளும் செயற்படுத்தப்படவுள்ளன.

**ஒரகல் நிதித் தொகுதி**

தற்போதுள்ள தொகுதி பாரிய மேம்படுத்தலுக்குட்படுத்தப்படுவதற்காக பேரேடு, கிடைக்க வேண்டிய கணக்குகள் மற்றும் நிதி முகாமைத்துவ மொடியூலுடன் நிதித் தொகுதி புதிய ஒரகல் பீஸ் சர்வருக்கு (ORACLE – BIZ ) மாற்றப்பட்டுள்ளது. தொகுதி செயற்படுத்தப்பட்டதன் பின்னர் தற்போது கைகளினால் மேற்கொள்ளப்பட்ட அநேகமான பணிகள் இதன் ஊடாக நடைபெறும். அதாவது காசோலைகள் எழுதுதல், நிதிப் பகுதியின் செயற்பாடுகள் இலகுபடுத்தலின் மூலம் பணிகள் செயற்றிறனுடனும் பிழையின்றியும் செய்யக்கூடியதாக இருக்கும். முன்னர் இருந்த சர்வர் பரீட்சார்த்த நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது. தரவுகள் ஒன்று சேர்த்து செலுத்தப்பட வேண்டிய

கணக்குகள் போன்று நிரந்தரச் சொத்துக்கள் மொடியூல்களின் பரீட்சிப்பு (DMS) ஆளணியினரின் ஒத்துழைப்போடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**ஊழியர் சுகாதார முகாமைத்துவத் தொகுதி (EHMS) – வைத்தியத் தொகுதி**

கணனித் தொகுதியொன்றின் கீழ் வைத்தியப் பகுதியின் நடவடிக்கைகள் விருத்தி செய்தல் சென்ற ஆணடில் பூர்த்தி செய்யப்பட்டது. கெகா பையிட் 146 கொண்ட 04 வன் தட்டுக்களோடு X-3850 $M_2$ IBM இயந்திரம் பெறப்பட்டு Linux Red Hat இயக்க தொகுதியொன்றுக்கு பொருத்தப்பட்டது. இத்தொகுதி ஒரகல் 10g தரவுத் தளம் மூலம் செயற்படும். பல்வேறு இடங்களுக்கான வலையமைப்பு ஏற்படுத்துதல் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு மின்சாரக் கம்பி தொடர்புபடுத்துதல். மற்றும் தடம் சார்பான (Client) இயந்திரம் மேம்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. VB. NET பயன்பாட்டில் மென் பொருள் விருத்தி செய்யப்பட்டு அப்பொருள் இறுதி பரீட்சிப்புகளுக்கு தற்போது உட்படுத்தப்பட்டு வருகின்றது.

**பட்டியலிடப்படும் பொருள்களின் கட்டுப்பாடு மற்றும் பெறுகைகளுக்கான முகாமைத்துவத் தொகுதி**

வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைப் பகுதியின் தேவைகளுக்கான மாற்றீடு வழங்கப்பட வேண்டிய தேவைப்பாடு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. பகுதியின் அனைத்துப் பணிகளும் நிலவும் தொகுதியினால் பூர்த்தி செய்யப்பட முடியாமை இதற்கான காரணமாக அறியப்பட்டுள்ளது. மின் வர்த்தக முறையில் பட்டியலிடப்படும் பொருட்கள் மற்றும் பெறுகைகளுக்கான மொடியூலொன்று எமது அனைத்து தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யக் கூடியதான தீர்வாகக் கருதப்பட்டது. அதன்படி இரண்டு மொடியூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு நாட்டின் எமது தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான வகையில் மென் பொருள் தயாரிக்கப்படுவதனை நோக்காகக் கொண்ட முறைமைகள் தொடர்பான ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. இம் முறைமை செயற்படுத்தப்படுதலின் பின்னர் சகல பட்டியலிடப்படும் பொருட்களின் முகாமைத்துவம், கொள்வனவு, (உள்நாட்டு/ வெளிநாட்டு) செய்தல்கள் பண்டங்கள் கோரல் பணிகள் சுயமாக நடைபெறும்.

**உயிரியல் கணிப்பு நேர வருகை, வெளியேறல் மற்றும் பௌதீக உட்புகுதல் கட்டுப்பாட்டுத் தொகுதி (TAPAC)**

இத்திட்டம் இரண்டு கட்டங்களாக அமுல்படுத்தப்படவுள்ளன. சகல ஊழியர்களினதும் வருகை/ வெளியேறல் விபர அறிக்கைகள் பெறுதல் முதலாவது கட்டத்தின் பிரதான பணிகளாகும். இம் மொடியூல் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு கொழும்பு, காலி ,ஹம்பாந்தொட்டை மற்றும் ஒலுவில் போன்ற இடங்களில் சிறப்பாக இயங்கி வருகின்றன. ஊழியர்களினது வருகை /வெளியேறுதல் நிர்வகிக்கப்படுவதற்கும் அறிக்கைகள் பெறப்படுவதற்கும் சகல நிர்வாக முகாமையாளர்களுக்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இம்மொடியூல் புதிய சம்பளப் படிவத் தொகுதி மற்றும் மனிதவள தொகுதிகளுக்கிடையில் 2012 ஆம் ஆண்டினுள் தொடர்புபடுத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொடர்பாக்கம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் விடுமுறை மற்றும் மேலதிக நேர விபரங்களின் பராமரிப்பு சுயமாக நடைபெறும்.

இரண்டாம் கட்டத்தில் ஊழியர்களின் போக்குவரத்துகள் வாசல்களின் ஊடாக கண்காணிக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. பரீட்சாத்தமாக இரண்டு வாசல்களில் இவ் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவை தற்போது பரீட்சிப்புகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

**புதிய சம்பளப் படிவத் தொகுதி**

தேவைப்பாடுகள் ஒன்றுசேர்த்தல், தொகுதி தொடர்பான ஆய்வு, மதிப்பீடு மற்றும் விருத்தி செய்யும் கட்டங்கள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு 2011 ஆம் ஆண்டு இறுதியில் தொகுதியின் செயற்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டது. இத் தொகுதியானது பிரதானமாக நிதிப் பகுதியின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதுடன் இறுதிக் கட்டங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல நிர்வாகப் பிரிவுகளோடும் தொடர்புபடுத்தப்படும். புதிய சம்பளப் படிவத் தொகுதி மனிதவளத் தொகுதியோடு இணைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் தொகுதி முற்றாக செயற்படுத்தப்பட்டதன் பின்னர் விடுமுறை/ மேலதிக நேர பராமரிப்பு மற்றும் கணனி ஊடாக கடன் விண்ணப்பிக்கும் செயற்பாடு சுயமாக மேற்கொள்ளப்படக் கூடியதாகவிருக்கும்.

**இறக்குமதி சிட்டைகள் சம்பந்தப்பட்ட அவசர சந்தர்ப்பத்தின் தொகுதி**

நிறைவான கொள்கலன் ஏற்றுதல்கள் / குறைவான கொள்கலன் ஏற்றுதல்கள் (FCL / LCL / CSC) போன்ற பிரதான கப்பற்சரக்குகள் அகற்றும் தொகுதிகளில் தடங்கலேற்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுவதற்காக தொழிற்படு தொகுதியொன்று விருத்தி செய்யப்பட்டுள்ளது. இது பரீட்சிப்புகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் செயற்படுத்தப்பட தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. துறைமுகத்தினுள் விருத்தி செய்யப்பட்டுள்ள இந்தத் தொகுதியானது ஒரகல் தரவுத் தளத்தோடும் தரவுப் பரிமாற்றத்தின் போதும் முழுத் துறைமுக வலையமைப்பினுள் பயன்படுத்தப்படும்.

**வன் பொருள் முகாமைத்துவத் தொகுதி**

கணனிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் போன்ற வன் பொருட்கள் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் தகவல் முறைமைப் பகுதியினால் கண்காணிக்கப்படும்வாறு வன் பொருட்களின் நகர்வுகள் முறைப்படுத்தப்படுவதற்காக இத்தொகுதி விருத்தி செய்யப்பட்டுள்ளது. பொருட்கள் பட்டியலிடப்படுதலும் இடங்களில் வைக்கப்படுதலும் இலேசான விசாரணை வசதிகள் மூலம் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. வன் பொருட்களின் மேற்பார்வை செயற்பாடு இதனால் மிகவும் எளிமையான கருமமாகியுள்ளது.

**சிட்டைகள் உரிய நிலையாக்கும் தொகுதி**

புதிய பாவனையாளர்களின் தேவைப்பாடுகளுக்கேற்ப இத்தொகுதி விரிவு செய்யப்பட்டுள்ளதோடு ஒரகல் தரவுத் தள நடவடிக்கைகளுக்குத் தகுந்தவாறு VB. NET பயன்பாட்டின் ஊடாக விருத்தி செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொகுதி பராமரித்தல்**

**நிறைவான கொள்கலன் ஏற்றுதல்கள் / குறைவான கொள்கலன் ஏற்றுதல்கள் இறக்குதல்கள் மற்றும் ஒப்படைப்புத் தொகுதி**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொகுதியானது பிரதான சட்டம் மீதான தொழிற்பாட்டுடன் செயற்படுத்தப்படுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான சேவைகள் வழங்கப்படுவதற்கான ஆரம்ப பாதுகாப்பு முறையில் தொகுதி மிகவும் சிறப்பாக இயங்கும். சேவைகள் உறுதி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முதலீட்டுச் சபை, கட்டுநாயக்க, புறக்கோட்டை ஆவணமாக்கல் நிலையம் இன்னும் பிரதான சட்டம் மீதான தொழிற்பாட்டிலேயே இயங்குகின்றன.

**கொள்கலன் கையாளல் நிலையம் - பேலியகொடை**

தொகுதியின் உதவி, பயிற்சி, உரிய கரும அறிக்கைகள் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சர்வர் பராமரிப்பு மற்றும் தரவுத் துணைச் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**பாதுகாப்புக் கட்டுப்பாடு மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் தொகுதி**

பாவனையாளர்களுக்கான தொகுதியின் உதவி, பயிற்சி, உரிய அறிக்கைள் வழங்கப்பட்டுள்ளன சர்வர் பராமரிப்பு மற்றும் தரவுத் துணைச் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மேலதிகமாக இயக்கத் தொகுதியின் உயர் கட்டத்தோடு சர்வர் தொழிற்படு P தொகுதியின் புதிய தொடராக முறைப்படுத்தப்பட்டுள்ளது.மேலும் தரவுத் தளம் ஒரகல் 8i இருந்து 10g வரை வெற்றிகரமான விருத்தியுடன் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இத்தொகுதிகள் செயற்படும் நிலையை அடைந்ததன் பின்னர் மென் மற்றும் வன் பொருட்களின் பராமரித்தல் மிகவும் முக்கியமான அங்கமாகியுள்ளது. தொகுதியின் ஆயுட்காலத்தினுள் நீண்டகால இயக்க நடவடிக்கைகளின் போது பராமரித்தல் தகவல் தொகுதிக்கு நிராகரிக்கப்பட முடியாக பணியாக இருக்கும். தகவல் தொகுதிக்கு வழங்கப்பட்டுள்ள பராமரிப்புப் பணிகளுக்கு விசேட

கவனம் செலுத்தப்பட வேண்டியதற்கான காரணம், அது தொகுதி நடைமுறைப்படுத்தப்படுவதற்காகவும் இப்பணியானது எதிர்காலத்தில் மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்வதற்காகவும் தேவையாக இருப்பதேயாகும். மென் மற்றும் வன் பொருட்கள் உரியவாறு பராமரித்து செல்லப்படுவதற்காக தகவல் முறைமைப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப செயற்பாட்டுத் தொகுதிகள் தடைப்படாது கையாளப்படுதலின் ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்குத் துணை புரிந்துள்ளது.

## மனித வள அபிவிருத்தி

தகைமைகள் மற்றும் தேர்ச்சிகளைக் கொண்ட முனைப்பான ஊழியர்ப் படையொன்று ஏற்படுத்தப்படுவதற்கும் பலனானதும் வினைத்திறன் மிகுந்ததுமான நிறுவனத்தின் நோக்கு, பணி மற்றும் அபிலாஷைகள் நிறைவேற்றிக் கொள்ளலில் அவர்களினது சேவையினைத் தக்கவைத்துக் கொள்ளப்படுவது தொடர்பில் மனித வள அபிவிருத்திப் பகுதி பொறுப்பாகவுள்ளது. சகல ஊழியர்களினதும் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுதலிலிருந்து ஓய்வு பெறப்படுதல் வரையிலான எல்லா பணிகளும் மனிதவளப் பகுதியினால் நிறைவேற்றப்படுவதுடன் சம்பளங்கள் மற்றும் வேதனங்களின் முகாமைத்துவம், அனுகூலங்கள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கல், செயலாற்றுகை மதிப்பிடப்படுதல், முறைப்பாடுகளைக் கையாளல், மனித மூலதன முகாமைத்துவம் மற்றும் மனித வள திட்டமிடுதல் போன்றவை இதனுள்ளடங்கும்.

கொழும்பு, காலி , திருகோணமலை மற்றும் ஒலுவில் ஆகிய துறைமுகங்களில் 12,987 பேர் கொண்ட ஊழியர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிகள் முறையாக நிறைவேற்றப்படுவதற்கு அங்கீகார மனிதவள திட்டம் துணை புரிந்துள்ளது. அங்கீகார புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் புள்ளிகள் வழங்கும் புதிய முறைக்கமைய மனித வள திட்டம் பேணப்பட்டு பதவிகளில் பெரும்பாலானவை நிறுவனத்தின் ஊழியர்களினுள் தகுதியானதும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. எனினும் தகுந்த விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதலின் பின்னர் வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டின் ஆரம்ப பகுதியில் நிறைவேற்று , நிறைவேற்று அல்லாத ,தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத பிரிவுகளுக்குரிய மொத்த ஊழியர்ப் படை 12,824 ஆக இருந்தது. கொழும்புத் துறைமுகத்தில் மொத்த ஊழியர்த் தொகை 11,726 ஆக இருந்ததோடு காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் முறையே 500, 598 ஊழியர்கள் இருந்தனர். மரபுரீதியான முறைமைகளுக்குப் பதிலாக கொள்கலன் கையாளல் முறையும் அதனோடு தொடர்புபடும் சேவைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்காக புதிய இயந்திர சாதனங்கள் அணமையில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அறிமுகப்படுத்தக் கூடியதாகவும் இருந்தன. இதன் பயனாக இயக்கம் மற்றும் ஏனைய சேவைகளில் மித மிஞ்சிய ஊழியர்கள் உருவாகும் நிலை ஏற்பட்டது. எனவே குறைந்த வினைத்திறன் கொண்ட ஊழியர்கள் சேவையிலிருந்து விலகிச் செல்வதனை ஊக்குவிக்கும் பொருட்டு 2011.04.04 ஆம் திகதியிலிருந்து சுய விருப்பில் ஓய்வுபெறும் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டு. அதன்படி சுய விருப்பத்தின் பேரில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் 1439 ஊழியர்கள் ஓய்வு பெற்றனர்.

2011 ஆம் ஆண்டில் அங்கீகார ஆளணித் தொகையின் வரையறையினுள் நிரந்தர அடிப்படையில் 12 ஊழியர்கள் வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். ஆண்டினுள் 331 பேர் ஓய்வு பெறுதலிலும், 1439 பேர் சுய விருப்பில் ஓய்வுபெறுதலிலும், 29 பேர் சேவையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதனாலும், 56 பேர் மரணமடைதல் மற்றும் வேறு காரணங்களினாலும் 1855 பேர் குறைந்துள்ளனர்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் 2011.12.31ஆந் திகதி வரையில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் சகல துறைமுகங்களினதும் மொத்த ஊழியர்த் தொகை 10982 ஆக இருந்தது. இதில் கொழும்புத் துறைமுகத்தில் 10083 பேரும் காலி மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களில் முறையே 433, 466 ஊழியர்கள் சேவையீலீடுபட்டிருந்தனர்.

வகையீடுகளுக்கமைய 667 நிறைவேற்று அலுவலர்களும், 5989 நிறைவேற்று தரமல்லாத ஊழியர்களும் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் சாராத தரங்களில் முறையே 2192, 2134 ஊழியர்களும் இருந்தனர்.

2011 ஆம் ஆண்டினுள் 79 சடுதி விபத்துக்கள் ஏற்பட்டதோடு அவை தொடர்பில் ரூபா 550,000/= செலுத்தப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டினுள் ஓய்வுபெற்ற மற்றும் சேவையிலிருந்து விலகிச் சென்ற ஊழியர்களுக்காக ரூபா 9,782,000/= நிதி அன்பளிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆண்டினுள் இயற்கைக் காரணங்களின் மீது மரணமடைந்த ஊழியர்களினது தங்கிவாழ்வோருக்காக ரூபா 608,000/= கருணைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சம்பளத் திட்டம் அடிப்படையாகக் கொண்டு சகல நிறைவேற்றல்லாத தரங்களினது சம்பளங்கள் பொதுவான மாதிரியொன்றின் மீது திருத்தம் செய்யப்பட்டதோடு தகைமைகளைக் கொண்ட ஊழியர்ப் படை ஏற்படுத்தப்படும் வகையில் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை கருத்திலெடுக்கப்பட்டு புள்ளி வழங்கும் புதிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. புதிய ஆட்சேர்ப்பு விதிமுறையில் ஊழியர்களினது வேலை, வருகை தரல் மற்றும் நடத்தை அடிப்படையில் 2011.11.01 ஆந் திகதியிலிருந்து உயர் சம்பள நிலையில் வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் உரிய நோக்கங்கள் நிறைவேற்றிக் கொள்ளப்படும் பொருட்டு ஒவ்வொரு ஊழியருக்கும் பயன்மிகுந்தவாறு பொறுப்பளிக்கப்பட்ட பணிகள் ஆற்றுதல் தொடர்பான மதிப்பீடு ஒவ்வொரு ஆறு மாதத்திற்கொருமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. செயலாற்றுகை மதிப்பிடலின் பெறுபேறுகள் அடிப்படையில் தற்போதைய தேவைப்பாடுகளுக்கேற்ப ஊழியர்களினது தேர்ச்சி , அறிவு மற்றும் எண்ணப்பாடு விருத்தி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மனித வள தகவல் முறைமை (HRIS) சகல பகுதிகளுக்கும் அறிமுகம் செய்யப்பட்டு மனித வள பணிகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கும் பாவனையாளர்களுக்கான மிகவும் வசதியான தொகுதியொன்று பேணப்படுவதற்காகவும் ஆவண முகாமைத்துவ தொகுதி மற்றும் சம்பளப் படிவத் தொகுதி மனித வள தகவல் முறைமைத் தொகுதியோடு இணைப்பாக்கம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## பாதுகாப்புப் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் சகல வர்த்தகத் துறைமுகங்களினது பாதுகாப்பு பற்றியதான பொறுப்பு இப்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளதோடு அதை நிறைவேற்றும் பொருட்டு 24 மணி நேரம் பூராக தொடர்ச்சியான திறமையான சேவை நடாத்திச் செல்லப்படுவதற்கும். அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள்ள கொழும்புத் துறைமுகத்திற்குரிய சொத்துக்கள் மற்றும் உயிர்கள் காக்கப்படும் வகையில் நவீன அறிவு, புதிய தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் நுட்பங்கள் பயன்பாட்டில் இப்பகுதியானது மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்கான சிறந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

நாள் பூராகவும் அன்றாட பாதுகாப்புக் கடமைகள் சிறந்த முறையில் பேணப்பட்டு துறைமுகத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக எமது பகுதியினால் ஈட்டப்பட்டுள்ள வருமானம் பின்வருமாறு.

**துறைமுக பாவனையாளர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம்**

| விபரம் | ரூபா |
|---|---|
| ஆட்கள் மற்றும் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் | 78,348,362 |

| | |
|---|---|
| துறைமுக அனுமதிப்பத்திரங்கள் தொலைந்ததன் காரணமாக மீள் வழங்கலின் தண்டப்பணமாக அறவிடப்பட்ட வருமானம் | 31,455 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ நிறுவனம் மற்றும் வ/ப கொழும்பு கப்பல் தடாகக் கம்பெனிக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுதலின் ஊடாக கிடைக்கப்பெற்ற வருமானம் | 4,469,591 |
| வருடாந்த அனுமதிப்பத்திரங்களோடு ஆயுத உறைகள் மற்றும் தோள்பட்டிகள் வழங்கப்பட்டதன் வருமானம் | 142,100 |
| வருடாந்த தனிநபர் தூண்டில் மீன்பிடி அனுமதிப்பத்திரங்களில் பெற்ற வருமானம் | 102,928 |
| **மொத்தம்** | **83,034,436** |

**இதற்கு மேலதிகமாக**

| விடயம் | ரூபா |
|---|---|
| 2011 ஆண்டில் போக்குவரத்து சட்டங்கள் மீறப்பட்டமைக்காக அதிகாரசபையினால் தொடரப்பட்ட வழக்குகளினால் ஈட்டப்பட்ட தண்டப் பணம் | 137,500 |
| சடுதி விபத்துக்களினால் துறைமுக அதிகாரசபைக்கேற்பட்ட நட்டங்களுக்காக அறவிடப்பட்ட பணம் | 2,064,419 |
| **மொத்தம்** | **2,201,919** |

ஆண்டினுள் அனுமதிப்பத்திர அலுவலகத்தினால் ஈட்டப்பட்ட வருமானத்திற்கு மேலதிகமாக சேவை வழங்கலாக இவ்வலுவலகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர வகை மற்றும் அளவுகளும் பின்வருமாறு.

**துறைமுக ஊழியர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் அலுவலகம்**

2011 ஆண்டினுள் துறைமுக ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை

| விடயம் | தொகை. |
|---|---|
| புதிய ஆட்சேர்ப்புகள் | 30 |
| தரவுகள் மாற்றம் பெற்றதிலான மீள் வழங்கல் | 1,028 |
| 2011 ஆண்டினுள் அதிகாரசபையின் வாகனக் குழாமிற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 517 |
| துறைமுக ஊழியர்களின் தனிப்பட்ட வாகனங்களுக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 3,710 |
| 2011 ஆண்டு காலப்பகுதியினுள் அச்சடிக்கப்பட்ட நிரந்தர துறைமுக பாவனையாளர்களுக்கான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 1,948 |

பாதுகாப்புக் காவலர் பதவியிலிருந்து அத்தியட்சகர் நிலையிலான பயிற்சிகளும் கருத்தரங்குகளும் விசேட புலனாய்வுப் பிரிவிற்கு வழங்கப்படுவதன் மூலம் இப்பகுதியினால் உயர் அர்ப்பணிப்பு மிகுந்த சேவைகள் வழங்கப்பட்டன. அதன்படி பாதுகாப்பு அலுவலர்களுக்கான பின்வரும் பாடநெறிகளும் வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்றன.

**பாதுகாப்புப் பகுதியினால் நடாத்தப்படும் சகல தரங்களுக்குமான பயிற்சிப் பாடநெறிகள்**

2011 ஆண்டினுள் இப்பகுதியின் சகல தரத்திலுமான பாதுகாப்பு சீருடை ஊழியர்களுக்கான பின்வரும் செயன்முறை மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

* இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் தொடர்புபட்ட நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் பகுதியின் உறுப்பினர்களுக்கிடையில் பணிகளில் கவனம் செலுத்தப்படுதலிலான பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

  மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பிலான இரண்டு பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. மூன்றாவது பயிற்சி நிகழ்ச்சி 2011.01.12 இருந்து ஆரம்பிக்கப்பட்டு 19 பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டு 2011.07.20 ஆந் திகதி முடிவடைந்தன. பாதுகாப்பு பகுதிக்குரிய அனைத்து தரத்திலான அலுவலர்கள் இந்த பத்தொன்பது பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொண்டனர் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த சிரேஷ்ட முகாமைத்துவ நிலையிலான அலுவலர்கள் இப்பயிற்சிப் பட்டறைகளின் போதனாசிரியர்களாக கடமையாற்றினர்.

* **துப்பாக்கிகளினாலான செயன்முறை மற்றும் சுடுதல் பயிற்சிகள்**

  பாதுகாப்புப் பகுதியின் 45 வயதிற்குக் குறைந்த பாதுகாப்பு தரங்களுக்கான பல்குழல் துப்பாக்கிகளினால் சுடுதல் பயிற்சியும் கடமைத் தேவைப்பாடுகளின் நிமித்தம் தெரிவு செய்யப்பட்ட பாதுகாப்பு தரங்களுக்கான 9 mm கைத்துப்பாக்கிகளினாலான சுடுதல் பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டதோடு கடமை அவசியப்பாடுகளின் மீது சம்பந்தப்பட்ட நிறைவேற்று அலுவலர்களுக்கும் 9 mm கைத்துப்பாக்கி மற்றும் பல்குழல் துப்பாக்கியால் சுடுதல் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இதன்படி வருடாந்த சுடுதல் பயிற்சிகளின் 9 mm கைத்துப்பாக்கியால் சுடுதல் பயிற்சிகளுக்காக பாதுகாப்பு தரத்தின் 88 அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டதோடு இதன் போது 9mm துப்பாக்கியின் 981 உண்மையான ரவைகள் பயன்படுத்தப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்ட சகல தரங்களுக்கும் HK 512 மற்றும் $M_3$ SUPER 90 ஆகிய துப்பாக்கிகளினால் 571 பாதுகாப்பு தரத்தினர்களினது பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு இதற்காக SG வகையிலான 5705 உண்மையான ரவைகள் பயன்படுத்தப்பட்டன. (ஒவ்வொரு ஆண்டிலும் பாதுகாப்பு பகுதியில் தெரிவு செய்யப்படும் பாதுகாப்பு தரங்களுக்கான சுடுதல் பயிற்சி மேற்கொள்ளப்படும்.)

சகல துறைமுகங்களும் உள்ளடங்கும் வகையில் சகல பாதுகாப்பு தரங்கள் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு பயிற்சியளித்தல்கள் உச்ச மட்டத்தில் பெற்றுக் கொடுக்கப்படுவதற்கு இப்பகுதிக்கு முடிந்துள்ளதுடன் வருடாந்தம் சம்பந்தப்பட்ட தரங்களுக்கான பொருட்கள் மற்றும் கருவிகள் உரிய முறையில் அவர்களுக்கு வழங்கப்பட நடவடிக்கைகள் மேற்கொண்டு அவர்களின் சேவை உயர் நிலையில் பேணப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி

அதிகாரசபையின் ஊழியர்களுக்கு நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியினால் வழங்கப்படும் நிதி மற்றும் நிதி சாராத பல நலன்புரி வசதிகள் உள்ளன. ஊழியர்களின் நலன்களுக்காக இவ்வசதிகள் தொடர்ச்சியாக திருத்தம் செய்யப்பட்டு 2011 ஆம் ஆண்டில் உயர் நிலையிலான நலன்புரி வசதிகள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட வசதிகள் பின்வருமாறு

**ஆளணியினருக்கான இலவச உணவு வினியோகம்**

துறைமுக அதிகாரசபையில் முறைமாற்று அடிப்படையில் சேவையிலீடுபடும் ஊழியர்களுக்கு பகல்/ இரவு நேரங்களில் உணவு, பானங்கள் போன்று தேநீர் மற்றும் சிற்றுண்டி வகைகளும், அலுவலக முறையின் ஊழியர்களுக்கு பகல் உணவும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டில் இதற்காக ரூபா 405,824,992/= செலவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று 2011 ஆம் ஆண்டில் அதிகாரசபையில் பகல் உணவுக்குப் பதிலாக பணம் பெறும் ஊழியர்களுக்கான உணவு வேளையொன்றுக்கு வழங்கப்பட்ட ரூபா 40/= 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்படியாக ரூபா 80/= ஆக அதிகரிக்கப்பட்டது .

**ஊழியர்களுக்கான சடுதி விபத்துக்கள் மற்றும் காப்புறுதித் திட்டம்**

வருட ஆரம்பத்தில் செயற்படுத்தப்பட்ட வைத்திய உதவித் திட்டம் 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இடைநிறுத்தப்பட்டது. இதன்படி முன்னர் இருந்த இம்முறையை விட கூடுதலான நலன்கள் கொண்ட தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தோடு இணைந்து 2011 ஆம் செப்டெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து புதிய காப்புறுதித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது இதன் கீழ் முன்னர் கிடைத்த அனுகூலங்களை விடவும் கூடிய வசதிகள் கிடைக்கப் பெறும். சடுதி விபத்தொன்றின் போது பத்து இலட்சம் ரூபா 1,000,000/= வரையிலான காப்புறுதி கிடைக்கப்பெறுவதோடு இயற்கையான மரணம் தொடர்பில் ரூபா 100,,000 வுக்கான காப்புறுதி உரித்தாகும். இதற்குப் புறம்பாக வெளிவாரியான வைத்திய சிகிச்சைகளுக்காக வருடாந்தம் ரூபா 7500/= நிதி ஈடுசெய்து கொள்ளலாம். மேலும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைகள் பெறுவதற்கான செலவுகளுக்காக ரூபா 100,000/= வரையிலான காப்புறுதி கிடைக்கப்பெறும். ஊழியர்களின் சுய விருப்பத்தின் மீது தமது குடும்ப உறுப்பினர்களை இக்காப்புறுதித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளக் கூடியதாக இருத்தல் இதன் விசேடமாகும். அதற்காக தனது மனைவி அல்லது கணவன் தொடர்பில் வருடாந்தம் ரூபா 1500/= வும் பிள்ளையொருவருக்கு வருடாந்தம் ரூபா 720/= வும் செலுத்தப்படுதல் வேண்டும். இக்காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதலோடு அதுவரை அமுலில் இருந்த வைத்திய உதவித் திட்டத்தின் மூக்குக் கண்ணாடிகளுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளல், மரணம் தொடர்பான கருணைக் கொடுப்பனவுத் திட்டம் இக்காப்புறுதித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து டிசெம்பர் மாதம் 31 வரையில் அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும் தங்கிவாழ்வோருக்கான காப்புறுதி அனுகூலங்களாக ரூபா 18,998,770/= செலுத்தப்பட்டுள்ளது.

**வழிகாட்டிகளுக்கான காப்புறுதித் திட்டம்**

இக்காப்புறுதித் திட்டத்துக்கு மேலதிகமாக அதிகாரசபையின் கப்பலோட்டப் பகுதியில் பணி புரியும் சகல வழிகாட்டிகளுக்கும் இக்காப்புறுதியினைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் கீழ் வழிகாட்டிகள் ரூபா 3,000,000/= கான காப்புறுதிக்கு உரித்தாகுவதுடன் காப்புறுதி தவணைப் பணத்தின் 50% அதிகாரசபையினால் ஏற்கப்படுவதோடு மீதி வழிகாட்டிகளினால் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.

**வீடமைப்புக் கடன் திட்டம்**

துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு வீடொன்றை வாங்குவதற்கு, கட்டுவதற்கு, புதிதாக ஒரு பகுதியைச் சேர்ப்பதற்கு அல்லது வீடொன்றைக் கட்டுவதற்காக காணியொன்றை வாங்குவதற்கு ஆகக் கூடிய தொகையான ரூபா 500,000/= வரையிலான வீடமைப்புக் கடன் திட்டமொன்று அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் அனுசரணையோடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதற்காக சலுகை அடிப்படையிலான வட்டி விகிதம் அறவிடப்படுவதுடன் இது தொடர்பில் வருடாந்தம் ரூபா 50,000,000/= ஒதுக்கப்படும். இவ்வீடமைப்புக் கடன் திட்டம் தொடர்பில் 2011 ஆம் ஆண்டினுள் அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கு ரூபா 20,127,000/= தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

**புலமைப் பரிசில் திட்டம்**

அதிகாரசபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பல்கலைக்கழக கற்கை மற்றும் கபொ.த (உ/த) கல்வி கற்பதற்காக இரு வகையிலான புலமைப் பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்படி க.பொ.த (உ/த) கற்பதற்காக 24 மாதங்களுக்கு மாதமொன்றுக்கு தலா ரூபா 750/= புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. மீளாய்விற்குட்படும் 2011 ஆம் ஆண்டில் இது தொடர்பில் 474 மாணவ/ மாணவிகளுக்கு ரூபா 2,227,500/= தொகை வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக கல்வி தொடர்பில் தெரிவு செய்யப்படும் அதிகாரசபையின் ஊழியர்களினது பிள்ளைகளுக்கு வருடமொன்றுக்கு ரூபா 25,000/= கற்கை காலத்திற்கமைய ஆகக் கூடியது 05 வருடங்கள் வரையில் புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. 2011 ஆம் ஆண்டில் 236 மாணவ மாணவிகளுக்கான புலமைப்பரிசில் தொடர்பில் ரூபா 5,927,500/= தொகை வழங்கப்பட்டுள்ளது.

**நலன்புரி பஸ் வண்டிகள்**

அதிகாரசபையின் ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் வழிபாட்டுப் பயணங்கள், சுற்றுலா செல்வதற்காக சலுகையான அடிப்படையில் பஸ் வண்டிகள் வழங்கப்படுவதோடு ஊழியர்களின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக குறிப்பிட்ட எல்லை வரை இலவசமாக பஸ் வண்டியொன்று வழங்கப்படும். அவ்வாறு பஸ் வண்டியொன்று வழங்கப்பட முடியாத சந்தர்ப்பத்தில் அம்மரணச் சடங்கின் பயணத்துக்கு செலவான தொகை ரூபா 6500/= ஆகக் கூடிய தொகைக்குட்பட்டதாக ஈடுசெய்யப்படும்.மேலும் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு தமது சேவை நிலையங்களுக்கு இலகுவாக செல்லக் கூடியவாறு அதிகாரசபையின் பஸ் வண்டிகள் துறைமுக வளவினுள் இலவசமாக செயற்படும் போக்குவரத்து சேவை தொடர்ச்சியாக மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் பஸ் வண்டிகள் நலன்புரி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டதனால் ரூபா 4,601,279/= வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

**விசேட விடுமுறை உரிமைகளுக்கான கொடுப்பனவு**

நோய் நிலைமை அல்லது சடுதி விபத்தொன்றின் போது தமக்குரிய சகல விடுமுறைகளும் முடிவுற்ற நிலையில் வைத்தியப் பரிந்துரையின் மீது சேவைக்குத் தகுதி பெறும் வரை ஆகக் கூடியதாக ஆறு (06) மாதங்களுக்கு அனுகூல முறையின் மீது அங்கீகார சம்பளத்துடனான விடுமுறைகள் வழங்கப்படும். 2011 ஆம் ஆண்டில் இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற 141 விண்ணப்பங்கள் கவனத்திலெடுக்கப்பட்டு அதன்படி 1910 நாள் அங்கீகார சம்பளத்துடனான விடுமுறைகளும் 465 சம்பளமற்ற விடுமுறைகளும் கொடுக்கப்பட அனுமதி வழங்கப்பட்டன.

**நலன்புரி உண்டிச்சாலைகள்**

அதிகாரசபையின் வளவினுள் அதன் ஊழியர்களுக்கும் பல்வேறு விடயங்களுக்காக துறைமுக வளவிற்குள் பிரவேசிக்கும் வாடிக்கையாளர்களுக்கும் தேவைப்படும் வசதிகள் வழங்கப்படுவதற்காக 16 உண்டிச்சாலைகள் சலுகை விலை அடிப்படையில் நடாத்திச் செல்லப்படுகின்றன. வருடாந்தம் விலைமனு கோரல்களின் மூலம் குத்தகையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு இவ்வுண்டிச்சாலைகள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டினுள் இதன் மூலம் கிடைக்கப்பெற்ற முழு வருமானம் ரூபா 1,152,761/= ஆகும்.

**உல்லாச விடுதி வசதிகள்**

கதிர்காமத்தில் அமைக்கப்பட்டுள்ள இல : 02 ஓய்வு விடுதியின் அறைகள் மற்றும் மண்டப வசதிகள் இத்திட்டத்தின் கீழ் ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுடன் அறையொன்றுக்காக ஊழியரொருவரிடம் நாளொன்றுக்கு ரூபா 150/= சலுகைக் கட்டணமாக அறவிடப்படுகின்றது. ஊழியரொருவருக்கு ஒரு தடவையில் சலுகை அடிப்படையின் கீழ் இரண்டு அறைகளை ஒதுக்கிக் கொள்ள முடியும். இதற்கு மேற்படின் அவ்வறைகளுக்காக மேலதிக கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும். இங்கு 19 அறைகளும் இரண்டு மண்டபங்களிள் வசதிகளும் உள்ளன. இந்த உல்லாச விடுதியினால் 2011 ஆம் ஆண்டினுள் ரூபா 92,282,060/= வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி கதிர்காமத்தின் இல : 02 ஓய்வு விடுதியானது 2012 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியிலிருந்து செயலகத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

**ஊழியர்களுக்கான ஞாபகார்த்த சின்னம் வழங்குதல்**

அதிகாரசபையின் சகல ஊழியர்களுக்கும் தமது 30 வருட சேவைக்காலம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் பெறுமதியான சின்னம் வழங்கப்படுவதுடன் 40 வருட சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்யும் ஊழியர்களுக்கு துறைமுக பௌத்த கோபுர வடிவ சின்னமும் ஞாபக சின்னமும் வழங்கப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டில் 30 வருடங்கள் நிறைவு செய்த 207 பேருக்கும் 40 வருடங்கள் பூர்த்தி செய்த 26 பேருக்கும் இவ்வாறு ஞாபக சின்னங்கள் வழங்கப்பட்டன.

**கடலக நூதனசாலை**

துறைமுகம் மற்றும் கப்பலோட்டத் துறையின் வரலாற்றுக் காலங்களை சித்தரிக்கும் மாதிரிகள், விளம்பர பலகைகள் போன்று பழைய துறைமுக வளவினுள் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கிடையில் மிகவும் பிரபல்யமாகியுள்ள இது துறைமுகங்கள் மற்றும் கப்பலோட்ட நடவடிக்கைகள் பற்றியதில் அக்கறையுள்ளோருக்கும் பிரயோசனமுள்ள நிலையமாகும். 2011 ஆம் ஆண்டில் தேசிய நூதனசாலைத் திணைக்களத்தின் உதவியோடு விசேட விளம்பர பதாகைகள் பொருத்தப்பட்டன. இலவசமாக பார்வையிடுவதற்காக மு.ப.10.00 இருந்து பி.ப.07.00 மணி வரை திறந்து வைக்கப்படும். இந்நிலையத்தின் புத்தகங்கள், பிரசுரங்கள், வரைந்த அட்டைகள் விற்பனையிலிருந்து மீளாய்வாண்டினுள் ரூபா 358,370/= வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

**நலன்புரி விளையாட்டு வசதிகள்**

அதிகாரசபையினால் நலன்புரி நிலையங்களுக்கு தலா ஒரு விளையாட்டரங்கம் வீதம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக துறைமுக அதிகாரசபையின் விளையாட்டுக் கழகத்திற்கு வருடமொன்றுக்கு ரூபா 712,000/= ஆகக் கூடியதான தொகைக்குட்பட்டதாக இவ்விளையாட்டு சங்கத்தின் விளையாட்டு அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்கப்படுகின்றன.

**நூலக வசதிகள்**

அதிகாரசபையினது ஊழியர்களின் வாசிக்கும் ஆர்வம் அதிகரிக்கப்படுவதற்காக ஊழியர்களினால் நடாத்திச் செல்லப்படும் சங்கங்கள் அமைத்துள்ள நூலகங்களுக்கு வருடாந்தம் ரூபா 45000/= ஆகக் கூடியதான தொகை வழங்கப்படும். இவ்வாறான 16 நூலகங்கள் துறைமுக வளவினுள் உள்ளன. 2011 ஆம் ஆண்டினுள் 16 நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்கப்படுவதற்காக ரூபா 300,000/= வழங்கப்பட்டுள்ளது.

**ஏனைய நலன்புரி வசதிகள்**

சேவா வணிதா அலகினால் பராமரித்துச் செல்லப்படும் பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் பிள்ளைகளுக்கு இலவசமாக பகல் உணவு வழங்கப்படுவதுடன் வேண்டப்படும் சந்தர்ப்பங்களின் போது அவர்களுக்கான வசதிகளும் வழங்கப்பட்டன.

- **விளையாட்டரங்கு வசதிகள்**
  நலன்புரி நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டரங்கங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உடற்பயிற்சி உபகரணங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டன.
- **ஊழியர் நலன்புரி மேம்பாட்டு வேலைத் திட்டம்**
  அதிகாரசபையின் ஊழியர் நலன்புரி மேம்பாடு தொடர்பிலான ஊழியர்களின் பிரதிபலிப்புகள் கவனத்திற் கொள்ளப்பட்டு வருட இறுதித் தவணையில் நலன்புரி தொடர்புபட்ட பொருட்கள் வழங்கப்படுவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- **உபகரணங்கள் வழங்கல்**
  ஊழியர்களினது நலன்புரி நிலைமைகள் விருத்தி செய்யப்படுவதற்காக பயனுள்ளவாறு நலன்புரி நிலையங்களில் ஓய்வைக் கழிப்பதற்கு ஊழியர்களின் வேண்டுகோளின் மீது தொலைக்காட்சிப் பெட்டிகளும் ஏனைய உபகரணங்களும் வழங்கப்படுவதற்காக இவ்வாண்டினுள் தொடர்ச்சியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## சட்டம்

சட்ட அலுவலர்கள் கொழும்பு , காலி , திருகோணமலை ஆகிய துறைமுகங்களின் சட்ட ஆலோசகர்களாக இருப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை, பகுதித் தலைவர்கள் மற்றும் ஏனைய பிரிவுகளுக்கும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

**ஆலோசனைகள்**

2010 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவத்திற்கு 144 க்கு மேற்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நகல் அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் இ.து.அ சபையினைத் தரப்பாகக் கொண்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பிணைகள், உறுதிகள், குத்தகைகள், போன்றவற்றுடன் தொடர்புபடுதல் சட்டப் பகுதிக்குரிய பணிகளாகும்.

**உறுதிகள் உடன்பாடுகள் மற்றும் ஒப்பந்தங்கள்**

05 வாடகைக்கு வழங்கும் ஒப்பந்தங்கள், 01, குத்தகைக்குப் பெறுதல் 02, ஒப்பந்த / உடன்பாடுகளில் ஒன்று சேர்த்தல்கள் போன்றவை 2011 ஆம் ஆண்டினுள் நீதிப் பகுதியினால் செயற்படுத்தப்பட்டன. இச் சட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக பின்வரும் பிணை நிற்றல், ஒப்பந்த உடன்பாடு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களுக்கான சம்பளமற்ற விடுமுறைகள் தொடர்பிலான பிணை ஒப்பந்த உடன்பாடுகள் 04 ஆகும்.

* இலங்கையினுள்ளும் வெளிநாடுகளிலும் பயிற்சி மற்றும் கல்வி தொடர்பிலான 04 பிணை/ ஒப்பந்த உடன்பாடுகள்.
* முகாமைத்துவ பயிலுநர்களுக்கான 02 பிணை / ஒப்பந்த உடன்பாடுகள்.
* மனிதவள டிப்ளோமா / ஆங்கில டிப்ளோமா பயிலும் ஊழியர்களுக்கான 36 பிணை / ஒப்பந்த உடன்பாடுகள் கைச்சாத்திடப்படுதல்.
* சுய விருப்பில் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கான 1454 ஒப்பந்த உடன்பாடுகள் கைச்சாத்திடப்படுதல்.

இலங்கை துறைமுக அதிகாரசபையினை தரப்பாகக் கொண்ட அனைத்து நீதிமன்ற விடயங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும் வெளி சட்டத்தரணிகளின் உதவியோடு சட்டப் பகுதியினால் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

2010 டிசெம்பர் இறுதி வரையில் 250 வழக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. (மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், நீதவான் நீதிமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு, தீர்ப்பு மையங்கள், தொழில் நீதிமன்றம், தொழில் திணைக்களம், ஆலாட்சி அதிகாரி)

2011 ஆம் ஆண்டினுள் 59 புதிய வழக்குகள் / முறைப்பாடுகள் / விண்ணப்பங்கள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. (குறிப்பிடப்பட்ட பந்தியிலுள்ள அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் நிறுவனங்கள்) இதில் வெளி நபர்கள் தொடர்புபட்ட 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தொடரப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டினுள் மொத்த 309 வழக்குகளில் 52 வழக்குகளின் நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தன. இதில் 21 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்க்கப்பட்டதோடு 12 வழக்குகள், சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் வாபஸ் பெறப்பட்டன. 12 வழக்குகள் தீர்க்கப்பட்டதோடு 07 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டன.

2011 டிசெம்பர் 31 வரையில் 257 வழக்குகள் / முறைப்பாடுகள்/ விண்ணப்பங்களின் நடவடிக்கைகள் மேற்குறிப்பிடப்பட்.டுள்ள நிறுவனங்களில் தீர்க்கப்படாதிருந்தன.

### மீயுயர் நீதிமன்ற வழக்குகள்

2010.12.31 வரையில் 05 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2011 ஆண்டினுள் புதிதாக 06 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதில் 05 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராகவும் 01 வழக்கு, இலங்கை துறைமுக அதிகாரசபையினாலும் தொடரப்பட்டிருந்தன. 11 வழக்குகளில் 04 வழக்குகள் முடிவடைந்துள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சார்பாக வாபஸ் பெறப்பட்டதனாலும் நிராகரிக்கப்பட்டதனாலும் 03 வழக்குகள் முடிவடைந்துள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தொடரப்பட்ட 01 வழக்கு மேற்கொண்டு செல்லப்படுவதற்கான வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. 2011.12.31 வரையில் 07 வழக்குகளின் நடவடிக்கைகள் முடிவுறாத நிலையில் இருந்தன.

### மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்

2010.12.31 வரை 20 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2011 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 04 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டினுள் 07 வழக்குகள் முடிவு பெற்றுள்ளதோடு அதில் 01 வழக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டாளரினால் 06 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன. 2011.12.31 வரையில் 17 வழக்குகள் தீர்க்கப்படாதிருந்தன.

### உயர் நீதிமன்ற வழக்குகள்

2010.12..31 வரையில் உயர் நீதிமன்றில் 11 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்தன. 2011 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் புதிதாக 02 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. 13 வழக்குகளில் 03 வழக்குகளின் பணிகள் 2011 ஆம் ஆண்டினுள் முடிவு பெற்றுள்ளன. இதில் 01 வழக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாகவும் 02 வழக்குகள் அதற்கு எதிராகவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன. 2011.12.31 வரையில் 11 வழக்குகளின் பணிகள் முடிவுறாத நிலையிலிருந்தன.

### மாவட்ட நீதிமன்ற வழக்குகள்

2010 டிசெம்பர் 31 வரை 13 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2011 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 02 வழக்குகள் தொடரப்பட்டன. 15 வழக்குகளில் 03 வழக்குகளின் பணிகள் முடிவடைந்து 01 வழக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாகவும் 02 வழக்குகள் தீர்க்கப்பட்டும் உள்ளன. 2011.12.31 வரையில் 12 வழக்குகள் முடிவுறாத நிலையில் இருந்தன.

### நீதவான் நீதிமன்ற வழக்குகள்

2010.12.31 ஆந் திகதி வரையில் நீதவான் நீதிமன்றில் 02 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2011 ஆம் ஆண்டினுள் அரசாங்க விடுதிகள் (உரிமை கைப்பற்றல்) சட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய விடுதிகளில் சட்ட விரோதமான வசிப்பவர்களை அகற்றுதல் மற்றும் அரசாங்க காணிகள் (உரிமை கைப்பற்றல்) சம்பந்தப்பட்ட விண்ணப்பங்கள் அடங்கலான 12 புதிய வழக்குகள் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. 2011 ஆம் ஆண்டினுள் 06 வழக்குகள் முடிவு பெற்றுள்ளன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளின் பணிகளுக்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களை தரப்பினர்களாகக் கொண்ட சந்தர்ப்பங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள நீதவான் நீதிமன்றங்களினால் கிடைக்கப்பெறும் நீதிமன்ற அழைப்பாணைகள் தொடர்பிலும் சட்டப் பகுதியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது நீதவான் நீதிமன்றங்களில் 08 வழக்குகளின் பணிகள் முடிவுறாத நிலையிலுள்ளன.

### தொழில் நியாய சபை வழக்குகள்

2010.12.31 வரையில் தொழில் நியாய சபை நீதிமன்றில் தீர்க்கப்படாதிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 16 ஆக இருந்தது. 2011 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 08 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. 24 வழக்குகளில் 06 வழக்குகளின் பணிகள் முடிவடைந்திருந்தன. இதில் 01 வழக்கில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டதோடு 36 வழக்குகள் தீர்க்கப்பட்டு 03 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன. 2011.12.31 வரையில் தொழில் நியாய சபைகளில் 18 வழக்குகளின் பணிகள் முற்றுப் பெறாதிருந்தன.

**மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்,தொழிலாளர் பிணக்குகள் (தீர்த்தல் தொடர்பிலான வழக்குகள்) பற்றியதில் தொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள்.**

2010 டிசெம்பர் 31 வரையில் தொழிலாளர் பிணக்குகள் (தீர்த்தல் தொடர்பான வழக்குகள்) பற்றியதான தொழில் திணைக்களத்தினால் தீர்ப்பளிக்கப்படாதிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 30 ஆக இருந்தது. மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட 133 விண்ணப்பங்களினதும் ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 16 முறைப்பாடுகளினதும் பணிகள் முடிவுறாதிருந்தன.

2011 ஆம் ஆண்டினுள் தொழிலாளர் பிணக்குகள் (தீர்த்தல் தொடர்பான விடயங்கள்) தொடர்பில் தொழில் திணைக்களத்திடம் 21 முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக 03 மனித உரிமைகள் தொடர்புபட்ட விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக ஆலாட்சி அதிகாரியிடம் 01 முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொழில் திணைக்களத்திடம் தீர்க்கப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 19 விடயங்களினதும் மனித உரிமைகள் பற்றியதான 04 விண்ணப்பங்களினதும் பணிகள் 2011 ஆம் ஆண்டினுள் முடிவுற்றன.

இதன்படி தொழில் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 32 முறைப்பாடுகளினதும் மனித உரிமைகள் தொடர்புபட்ட 132 முறைப்பாடுகளினதும் ஆலாட்சி அதிகாரியிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த 17 முறைப்பாடுகளினதும் பணிகள் 2011 டிசெம்பர் 31 வரை முடிவுறாதிருந்தன.

**தீர்வுகள்**

2010.12.31 வரையில் வணிகப் பிணக்கு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 விடயங்களினதும் கைத்தொழில் பிணக்கு தொடர்பிலான 01 முறைப்பாட்டினதும் தீர்வு காணல் முடிவுறாதிருந்தது. 2011 ஆம் ஆண்டினுள் 01 வணிகப் (வெளிநாட்டு) பிணக்கு தீர்த்தல் விடயம் தீர்க்கப்பட்டு முடிவுற்றது. இதன்படி 2011.12.31 வரையில் 01 கைத்தொழில் மற்றும் 02 வணிகத் தீர்வு காணல் தொடர்பிலான பணிகள் முடிவு பெறாத நிலையிலுள்ளன.

## மருத்துவம்

சிறந்த உடல், உள சுகாதார நிலைமைகள் பேணல்,சேவையிலீடுபட்டிருக்கையில் பாதுகாப்பான வழிகளை பின்பற்றுதல் , புகை பிடித்தல், மதுபானம் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளோர் அதிலிருந்து தடுக்கப்படுவதற்கான வேலைத்திட்டங்கள் நடாத்துதல் ஊடாக சேவை நிலையத்தில் உயர் நிலையிலான சுகாதார சூழல் பேணப்பட்டது.

- விபத்துக்கள் , அவசர சந்தர்ப்பங்கள் மற்றும் மருத்துவ நிலைமைகளுக்கேற்பவாறு முறையாக சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.
- 24 மணித்தியாலங்கள் பூராகவும் சேவைகள் வழங்கப்பட்டு பகுதியின் அனுபவம் வாய்ந்த அர்ப்பணிப்பு மிகுந்த வைத்தியக் குழுவினால் ஒரே தடவையில் தலா ஒருவர் என்ற அடிப்படையில் நோயாளர்கள் கலந்துரையாடப்படுவதன் மூலம் வாழ்க்கை முறையிலான நோய்கள் தொடர்பில் முறையாக மேற்பாரவை செய்யப்பட்டனர்.
- X' – கதிர், ECG. ஆய்வுகூட மற்றும் பல் வைத்திய வசதிகள் மேம்படுத்தப்பட்டன.
- 24 மணித்தியாலங்கள் பூராகவும் செயறபடும் காவு வண்டிச் சேவை
- பிரதான வைத்தியசாலைகளில் பொதுவான வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளல் தொடர்பான நோயாளர்களின் வேண்டுகோளுக்காக விசேட கழிவு விலையில் வைத்திய சேவைகள் பெறக் கூடியதாக இருந்தன.
- துறைமுக வளவினுள் டெங்கு நோய் தடுப்புத் திட்டம் தொடர்பில் வைத்திய ஆய்வு நிலையத்தின் (MRI) உதவியோடு வைத்தியப் பகுதியினால் தொடர்ச்சியான பரீட்சிப்புகள் மேற்கொள்ளப்பட்டதனால் துறைமுக வளவினுள் டெங்கு நோய் பெருகும் இடங்கள் குறைக்கப்படக் கூடியதாக இருந்தன.

* மதுபானம் அருந்துதல் மற்றும் புகை பிடித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறையான ஆலோசனை வேலைத் திட்டங்களும் பிறேத்லைசர் பரிசோதனைகளும் ஊழியர்களின் நல்வாழ்விற்கு பங்களிப்பினையளித்துள்ளதோடு சேவையில் ஈடுபட்டிருக்கையில் ஏற்படும் சடுதி விபத்துக்கள் குறைத்துக் கொள்ளப்படுவதற்கும் இவை துணை புரிந்தன.
* தகவல் முறைமைப் பகுதியின் உதவியோடு இப்பகுதியின் பணிகள் கணனிமயப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## மஹபொல பயிற்சி நிலையம்

### பொது

துறைமுக ஊழியர்கள், துறைமுக பாவனையாளர்கள் விசேடமாக கடலகத் துறையுடன் தொடர்புபட்டுள்ள ஏனையோருக்கும் பயிற்சிகளுக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல். இலங்கை துறைமுக அதிகாரசபையின் முக்கிய மைய நிலையமான மஹபொல பயிற்சி நிறுவனத்தின் பிரதான பணியாகும். 2011 ஆம் ஆண்டின் அங்கீகார பயிற்சித் திட்டத்தின் கீழ் துறைமுக ஊழியர்கள் மற்றும் கடலகத் துறையினருக்கான விரிவுரைகள், மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள், செய்முறை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதன் மூலம் அறிவு தேர்ச்சி மற்றும் கோட்பாடு மேம்பாடுகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2011 ஆண்டினுள் துறைமுக ஊழியர்களின் உற்பத்தித் திறன் மேம்படுத்தப்படுவதற்காக குழு ஒத்துழைப்பு, தொழில்நுட்ப தேர்ச்சி தரமுயர்த்துதல், பாவனையாளர் சேவைகள் மற்றும் தர மேம்பாடுகள் தொடர்பிலான பல பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. ஏற்றுக் கொள்ளப்படுகின்ற சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளல் வரை துறைமுக ஊழியர்கள் தமது தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்வதற்காகவும், துறைமுக இயக்கங்களுக்குரிய தெரிவு செய்யப்பட்ட சேவைகளில் விசேட அறிவு பெறுவதற்காகவும் மஹபொல பயிற்சி நிறுவனம் அமைப்பு ரீதியான வழிகளை ஏற்படுத்துகின்றது.

2011 ஆம் ஆண்டினுள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் 432,912 மனித மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படுதலின் ஊடாக சுமார் 3,621 பேர் (தொழிலில் ஈடுபட்டிருக்காத) பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இது சென்ற ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 30% வளர்ச்சியாகும். இதற்குப் புறம்பாக மஹபொல பயிற்சி நிலையத்தினால் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வோர், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஏனைய சமனான தொழில் கல்வி நிறுவனங்களின் 244 பேருக்கு தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2011 ஆண்டின் ஒட்டுமொத்த பயிற்சியளிப்பின் செயலாற்றுகை**

| துறைகள் | பயிற்றுவிக்கப்பட்ட தொகை | மொத்த மனித மணித்தியாலங்கள் |
|---|---|---|
| உபகரணங்கள் கையாளுதல் | 260 | 18,225 |
| சரக்குகள் கையாளுதல் | 61 | 22,880 |
| முகாமைத்துவம் | 1,319 | 212,452 |
| தகவல் முறைமை | 325 | 31,041 |
| தொழில்நுட்பம் | 331 | 106,020 |
| தீ காப்பு மற்றும் தொழில்சார் சுகாதாரம் | 760 | 9,057 |
| கடலகம் மற்றும் மாலுமி | 565 | 33,237 |
| தே.கை.ப. அதிகாரசபையின் பயிலுனர்கள், தொ.ப.அ மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் | 203 | 140,300 |
| பல்கலைக்கழக பட்டப் படிப்பு மேற்கொள்பவர்கள் | 41 | 21,280 |
| **மொத்தம் (சேவையிலீடுபட்டிருக்கையில்)** | **3,865** | **594,492** |
| **மொத்தம் (சேவையிலீடுபட்டிருக்காத)** | **3,621** | **432,912** |

**புதிய பயிற்சி வேலைத் திட்டங்கள்**

எமது மஹபொல பயிற்சி நிறுவனத்தின் ஒன்றிணைந்த நோக்கு தொடர்பில் ஆராய்கையில் நிகழ்காலம் மற்றும் நிறுவனத்தின் முழு நோக்கில் பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது. இவ்விடைவழி பூர்த்தி செய்யப்படுவதற்காக மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் பாரிய அளவிலான புதிய பயிற்சிச் செயற்பாடுகள் விருத்தி செய்யப்பட்டு நடாத்தப்பட்டன..

**துறைமுகம் தொடர்புபட்ட திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

துறைமுகமானது பல்வேறு விடயங்கள் கையாளப்படும் பகுதிகளைக் கொண்ட ஒன்றோடொன்றுடன் தொடர்புபடும் அமைப்பாகும். பொதுவாக ஊழியர்கள் இவ்விடயம் தொடர்பில் சரிவர புரிந்து கொள்ளாதிருக்கின்றனர். இதற்கான நீண்டகால தீர்வினைத் தேடும் பொருட்டு மஹபொல பயிற்சி நிறுவனத்தின் கவனம் ஈர்க்கப்பட்டிருத்தல் காலத்தின் தேவைப்பாடாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் ஏனைய பகுதிகளின் பணிகள் தொடர்பில் அறிந்து இருப்பதும் ஏனைய பகுதிகளின் ஊழியர்கள் தமது வாடிக்கையாளர்களென விளங்கியிருப்பதும் இதன் அடிப்படை விடயமாகும். இந்த அடிப்படையின் மீது பின்வரும் துறைமுகம் சார் விடயங்களுடனான திறன் விருத்திப் பாடநெறிகள் நடாத்தப்பட்டன.

- துறைமுக முகாமைத்துவம்
- துறைமுக இயக்கம்
- துறைமுக சேவை வழங்கல்
- துறைமுக பொறியியல்
- துறைமுக பாதுகாப்பு
- துறைமுக சந்தைப்படுத்தல்
- துறைமுக பொருளாதாரம்
- துறைமுக நடவடிக்கைகளுடன் தொடர்புபடும் மின் தரவு நிரல்படுத்தல்.
- கடல்சார் நிர்வாகம்
- மின் வர்த்தகம்
- துறைமுக போக்குவரத்து

2011 ஆண்டினுள் அடிப்படைக் கட்ட பாடநெறி தொடர்பில் 28 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் விசேடம் யாதெனில், பல்வித தேர்ச்சி கொண்ட சகல நிபுணர்களும் இலங்கை துறைமுக அதிகாரசபையைச் சேர்ந்தவர்களாக இருப்பதும் இவ்வலுவலர்களுக்கான பயிற்சிகளினால் துறைமுக முதலீடுகளின் பலன் மீளப்பெறக் கூடியதாக இருப்பதுமேயாகும்.

**மூலோபாய துறைமுக அபிவிருத்தி**

துறைமுக தொழிற் துறையானது தற்போதைய உலகளாவிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது. வர்த்தக வசதிகளை வழங்குவதோடு கடல் மற்றும் தரைமார்க்க போக்குவரத்து செயற்பாடுகளினை ஒன்றிணைப்பதற்கும் இது செயற்படுகின்றது. இது சர்வதேச விநியோக வலையமைப்பின் ஓர் பிரிவாக இருக்கும் அதே சமயம் தற்போது மிகவும் போட்டித் தன்மையுடன் படிப்படியாக பாரிய மாற்றங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது. துறைமுக தொழில் துறையில் இவ்வாறான மாற்றங்கள் தொடர்பில் இதற்கு முன் எதிர்கொள்ளாத பல சவால்களுக்கு பல நிறுவனங்களின் முகாமைத்துவம் முகம் கொடுத்துள்ளதுடன் இதற்காக புதிய தீர்வுகளுடனான மூலோபாய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. இதனடிப்படையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிறைவேற்று அலுவலர்களுக்கான மூலோபாய துறைமுக முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் விருத்தி செய்யப்பட்டு நடாத்தப்பட்டது.

**பொறியியல் மாலுமிப் பயிற்சி (கடலகப் பொறியியல் டிப்ளோமா) நிகழ்ச்சித் திட்டம்.**

கல்வி கற்று தொழிலற்றிருக்கும் இளைஞர்கள் கப்பலோட்டத் துறையில் பயிற்றுவிப்பதன் மூலம் சர்வதேச கப்பல் கம்பெனிகளினால் கையாளப்படும் கப்பல்களில் அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதன் ஊடாக சர்வதேச கடல்சார் துறையின் மனிதவளம் வழங்கும் ஆற்றலை இலங்கை கொண்டுள்ளது.

தொழில் வல்லுனர்களின் தட்டுப்பாடு கவனத்திற்கொள்ளப்பட்டு கப்பலோட்ட ஊழியர்களுக்கான பயிற்சிகளை வழங்கி உள்நாட்டு கடல்சார் பயிற்சி வாய்ப்புக்கள் அதிகரிப்பதற்கு இது மிகவும் சிறந்ததோர் சந்தர்ப்பமாகும்.

கப்பலோட்டத் துறையின் எதிர்வுகூறல்களின் படி தற்போது அத்துறையில் விசேடமாக பதவி நிலை அலுவலர்களின் பாரிய பற்றாக்குறை காணப்படுகின்றது. 2015 ஆம் வருடத்தில் இப்பற்றாக்குறை 28,000 க்கு மேலாக இருக்குமென அண்மைக்கால ஆய்வில் தெரிய வந்துள்ளது.

துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் வணிகக் கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சர்வதேச கடல்சார் அமைப்பிற்கேற்ப (STCW, IMO ) பயிற்சி சான்றுறுதிப்படுத்தல், கப்பல் தள தரப்படுத்தல் பாடநெறிகள் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன் 2009 சனவரியிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிறுவனத்தில் மாணவ மாலுமிகளைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதல் குழுவினர் பயிற்சியினைப் பூர்த்தி செய்து கப்பல்களில் பயிற்சி பெற்று வருவதோடு 20 பேர் கொண்ட இரண்டாவது குழுவினர் கற்கை நெறியினை மேற்கொண்டு வருகின்றனர்.

**கண்ட்றி பாரமுயர்த்தி மாதிரிகளின் பயிற்சி**

விருத்தி செய்யப்பட்ட கொள்கலன் பாரமுயர்த்தி மாதிரிகள் நிறுவப்பட்டுள்ள தெற்காசிய வலயத்தின் முன்னோடித் துறைமுகம் மற்றும் கடல்சார் நிறுவனம் மஹபொல பயிற்சி நிறுவனமாகும். 2011 ஆம் ஆண்டினுள் எம்மால் 139 துறைமுக ஊழியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட முடிந்ததோடு எதிர்காலத்தில் வெளி தரப்பினர்களுக்கும் கட்டணம் அறவிடப்படுதலின் ஊடாக இப்பயிற்சிகள் வழங்கப்பட திட்டமிடப்பட்டு வருகின்றது.

**கடல்சார் ஆங்கில மொழிப் பாடநெறி**

சர்வதேச கடல்சார் நிறுவனத்தின் (STCW / IMO) தேவைப்பாடுகளுக்கேற்ப மாலுமிகளுக்கான வணிகக் கப்பல் பணிப்பாளர் நாயகத்தின் சான்றிதழ் (CDC) பெற்றுக்கொள்வது தொடர்பில் கடல்சார் ஆங்கிலம் பற்றியதான பாடநெறியொன்று நடாத்தப்படுதல் முக்கியமாகவுள்ளது. நாட்டின் இவ்வாறான பாடநெறியொன்றினை ஆரம்பித்த முன்னோடி நிறுவனம் மஹபொல பயிற்சி நிறுவனமாகும். 2011 ஆம் ஆண்டினுள் உதவி வழங்கும் மட்டத்திலான ஐந்து (05) வேலைத்திட்டங்களில் மொத்தமாக 127 பேர் பங்குபற்றினர். இயக்க மட்டத்தினருக்கு இப்பாடவிதானம் விருத்தி செய்யப்பட்டு வணிகக் கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு நடாத்தப்பட்ட பாடநெறியில் 20 பேர் பங்குபற்றினர்.

**மனிதவளம், உயர் ஆங்கிலம் , துறைமுக பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அங்கீகார புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய குறிப்பிட்ட துறையில் பட்டம் / டிப்ளோமா பாடநெறிகள் பின்பற்றப்படாதிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு எதிர்காலத்தில் அவர்களினது பதவியுயர்வுகளில் பாரிய கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியேற்படும். இதன்படி மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டத்திற்கமைய தகைமைகளைக் கொண்ட வளவாளர்களின் உதவியோடு மஹபொல பயிற்சி நிறுவனத்தில் மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் உயர் ஆங்கில பாடநெறிகள் நடாத்தப்பட தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் (NIBM) , மனிதவள அபிவிருத்தி நிறுவனம் (IPM) ,கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்கள் போன்று வேறு அங்கீகார நிறுவனங்களினால் வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழ்களுக்கு சமனான நிலையில் இவை இருக்கும்.

ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களினது வளவாளர்களோடு எம்மால் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு மனிதவள முகாமைத்துவம் பற்றியதிலான டிப்ளோமா மற்றும் உயர் ஆங்கில பாடநெறிகளுக்கான விபரமான பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு வருமானம் கிடைக்கக் கூடியவாறு கட்டணம் அறவிடப்படும்

அடிப்படையின் மீது 70 பேரைக் கொண்ட மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இரு குழுக்களைச் சேர்ந்த 35 பேருக்கான உயர் ஆங்கில டிப்ளோமா பாடநெறி 2011 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

துறைமுக பாதுகாப்பு டிப்ளோமா தொடர்பில் கொத்தலாவள பாதுகாப்பு கல்லூரி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உதவியோடு விபரமான பாடத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் 2012 முற்பகுதியில் எடுக்கப்படவுள்ளன.

**பராமரிப்புத் திறன் மேம்படுத்தப்படுதல்**

2011 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களினது திறன்கள் மேம்படுத்தப்படுவதற்கு பின்வரும் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டு நடாத்தப்பட்டன.

- மோட்டார் கட்டுப்பாட்டு சுற்றுக்கள்
- பொறியியல் வரைவு பாடநெறி
- மேற்பார்வையாளர்களுக்கான விடய ஆர்வ பாடநெறி
- வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி பராமரிப்பு, பழுதுபார்த்தல் பாடநெறி
- மெகாரொனிக் பயிற்சிப் பாடநெறி

முதற்கட்டமாக மெகாரொனிக் ஆய்வுகூடம் நிறுவப்பட்டு கண்காணிப்புத் தரத்திலான 45 தொழில்நுட்ப அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையினதும் மஹபொல பயிற்சி நிறுவனத்தினது வளங்களினதும் பயிற்றுவிப்பாளர்களின் ஆற்றல் மற்றும் திறன்களினதும் உச்ச பயன்பாடு பெறப்படும் நோக்கில் 2010 ஆம் வருடத்தினுள் வெளி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கான பல்வேறு கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகள் நடாத்தப்பட்டன. கடலகம் மற்றும் கப்பலோட்டம், தொழில்நுட்பம், உபகரணங்கள் கையாளல், துறைமுக சேவை வழங்கல், துறைமுக நிதி மற்றும் தகவல் முறைமைகள் ஆகிய துறைகள் இதனுள்ளடங்கப்பட்டிருந்தன.

**துறைமுக இயக்கம் மற்றும் சேவைகள் வழங்கல்**

- பிறைம்மூவர் வண்டி இயக்குபவர் பயிற்சி
- போக்லிப்ட் இயக்குபவர் பயிற்சி
- நடமாடும் பாரமுயர்த்திகள் பயிற்சி
- டொப் லிப்ட் இயக்குபவர் பயிற்சி
- வாப்பு இலிகிதர் பயிற்சித் திட்டம்
- இயக்க உதவியாளர்களுக்கான பயிற்சித் திட்டம்

மஹபொல பயிற்சி நிலையத்திலிருக்கும் போக் லோடர்ஸ், பாரமுயர்த்திகள், பிறைம்மூவர்கள், தீயணைப்பு மற்றும் கப்பல் மாதிரிகள் போன்ற உபகரணங்களினது பாவனை மற்றும் வசதிகளின் பயிற்சிகள் தொடர்பில் வெளித் தரப்பினர்களின் அதிகரிக்கும் கேள்விகளுக்கு மஹபொல பயிற்சி நிலையத்தின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**கடலகம் மற்றும் காப்பு**

- கொக்ஸன் பயிற்சி
- கப்பல் தள தரப்படுத்தல் பாடநெறி
- கப்பல் என்ஜின் அறை தரப்படுத்தல் பாடநெறி
- தனி நபர் உயிர்காப்பு நுட்பங்கள்
- தனி நபர் பாதுகாப்பு மற்றும் சமூக பொறுப்புக்கள்
- விஞ்சுக்காரர் பயிற்சிப் பாடநெறி

* இலங்கை கடற்படையினருக்கான றிகிங் வேக் (கப்பல்களை கட்டிவைக்கும்) பயிற்சி
* அடிப்படை முதலுதவி
* தீயணைப்பு தொடர்பான உயர் பாடநெறி

**பியபுத்து அடிப்படையின் கீழ் துறைமுக ஊழியர்களினது பிள்ளைகளுக்கு பயிற்சியளித்தல்**

தற்போது ஓய்வு பெற்றுள்ளதும் முன்னோக்கியுள்ள 03 வருடங்களுக்குள் ஓய்வுபெறுவதற்கு எதிர்பார்க்கும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களினது பிள்ளைகளுக்கான தொழில் வாய்ப்புகளை நோக்காகக் கொண்டு 2011 ஆம் ஆண்டினுள் மஹபொல நிலைய பயிற்சித் திட்டத்தின் கீழ் இரண்டாம் குழுவினர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இது இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான தொழில் சங்கங்களின் நீண்டகால கோரிக்கைகளில் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பிரிவுகளின் மீதான பயிற்சிகளுக்காக 98 விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

| வகை | எண்ணிக்கை |
|---|---|
| கணக்கு இலிகிதர் | 39 |
| தட்டெழுத்தாளர் இலிகிதர் | 21 |
| இயந்திர இயக்குபவர்கள் | 08 |
| கடல்சார் தச்சர்கள் | 03 |
| ஒட்டுனர்கள் | 10 |
| மேசன் | 05 |
| பொருத்துனர் | 12 |

**மஹபொல பயிற்சி நிலையம் மற்றும் வெளி நிறுவனங்களின் கருத்தரங்குகள், பயிற்சித் திட்டங்களில் கலந்து கொள்ளல்**

2011 ஆண்டினுள் முகாமைத்துவம், நிதி, பொறியியல், பாதுகாப்பு , சட்டம், சுகாதாரம் மற்றும் காப்பு, துறைமுக முகாமைத்துவம், தகவல் முறைமை, மனிதவள முகாமைத்துவம் போன்ற துறைகளில் துறைமுக ஊழியர்களினது அறிவு, ஆற்றல்கள் முறைப்படுத்தும் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் வெளி நிறுவனங்களில் பயிற்றுவித்தல்கள் நடாத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2011 ஆம் ஆண்டினுள் பின்வரும் நிறுவனங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி நடவடிக்கைகளுக்கு 75 ஊழியர்கள் பங்குபற்றினர்.

* இலங்கை சட்டக் கல்லூரி
* இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்
* தீர்வு காணல் சபை
* முதலீட்டுச் சபை
* மத்திய வங்கி
* வணிக சபை
* இலங்கை பொறியியலாளர் நிறுவனம்
* இலங்கை தர நிறுவனம்
* பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம்
* மனிதவள அபிவிருத்தி நிறுவனம்
* மொரட்டுவ பல்கலைக்கழகம்
* இந்திய கப்பல் பதிவு அலுவலகம்
* இலங்கை கணனி சங்கம்
* இலங்கை மூன்றாம் நிலை தொழில் கல்வி நிலையம்
* ஊழியர் கல்வி பற்றியதான தேசிய நிலையம்
* இலங்கை நூலக சங்கம்
* இலங்கை AAT நிறுவனம்
* CIMA இலங்கைக் கிளை

- ✱ இலங்கை மன்றக் கல்லூரி
- ✱ இலங்கை ஊழியர் சம்மேளனம்
- ✱ ஒழுக்காற்று முகாமைத்துவம் பற்றியதான கற்கை நிலையம்
- ✱ வணிகக் கப்பல் பணிப்பாளர் நாயகம்
- ✱ தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
- ✱ நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் போன்றவை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களில் துறைமுக ஊழியர்களின் பயிற்றுவித்தல்களுக்காக ரூபா 894,330/= வும் உள்ளக பயிற்றுவித்தல் தொடர்பில் ரூபா 3,001,150/= வும் செலவு செய்யப்பட்டுள்ளன.

**ISO 9001: 2008 சான்றிதழ்**

மாலுமிகளுக்கான IMO / STCW பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்படுவதற்காக இன்டியன் றெஜிஸ்டர் ஒப் கொலிட்டி சிஸ்டம் நிறுவனத்தின் ISO 9001 : 2000 சான்றுறுதிப்படுத்தலை மஹபொல பயிற்சி நிறுவனம் 2004 யூலை மாதத்தில் பெற்றுக் கொண்டுள்ளது. இன்டியன் றெஜிஸ்டர் ஒப் கொலிட்டு சிஸ்டம் நிறுவனத்தினால் அவதானிப்புக்கள் ஆய்வுக்குட்படுத்தும் தொடர்ச்சியான பரிசோதனைகள் 2005 இருந்து 2009 வரை மேற்கொள்ளப்பட்டு ISO சான்றுறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. இச்சான்றிதழ் 2004 ஆண்டில் வழங்கப்பட்டதுடன் 2010 ஆண்டு வரை மாத்திரம் அது செல்லுபடியாகும். 2010 நவம்பர் மாதமளவில் ISO 9001 : 2008 தர முகாமை தொகுதி நோக்கி முன்னெடுத்துச் செல்லுதல் கட்டாயமானதாகும். இந்த அடிப்படையின் மீது ISO 9001 : 2008 தர முகாமை தொகுதியோடு தொடர்படுவதற்கு தர வழிகாட்டல்,செயல்முறை, பணி ஆலோசனைகள் , தர மாதிரிகள் போன்ற ஆவணங்கள் தயாரிக்கப்பட வேண்டியேற்பட்டன. இதில் முக்கியம் யாதெனில் வெளித்தரப்பு ஆலோசகர்களினது எதுவித உதவியுமின்றி மஹபொல பயிற்சி நிலைய அலுவலர்களினால் இந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதேயாகும். 2010 யூலை மாதத்தில் எம்மால் இதை வெற்றிகரமாக நிறைவேற்றக் கூடியதாக இருந்ததோடு மாலுமிகளுக்கான IMO / STCW பயிற்சி பாடநெறிகள் நடாத்துதல் தொடர்பில் ISO 9001 : 2008 தர சான்றிதழ் வழங்கப்பட்ட இலங்கையில் முன்னணி கல்வி நிலையம் மஹபொல பயிற்சி நிலையமாகும்

**பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல்**

மஹபொல நிறுவனத்தின் பயிற்சிகள் மேம்படுத்தப்படும் வகையில் அதன் 15 பயிற்றுவிப்பாளர்களில் 15 பேருக்கு 2011 ஆம் ஆண்டினுள் பயிற்சியளிக்கக்கூடியதாகவிருந்தது.

**பிராந்திய பயிற்சி நிலையங்களின் செயலாற்றுகை**

பிராந்திய பயிற்சி நிலையங்களினால் பின்வரும் பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**ஒலுவில் பயிற்சி நிலையம்**

| பாடநெறி | காலம் | பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் |
|---|---|---|---|
| போக்லிப்ட் இயக்கும் பயிற்சி | 2 வாரங்கள் | 01 | 05 |

தொழில் பயிற்சி அதிகாரசபை, தொழில்நுட்பக் கல்லூரிகள், தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை போன்ற அரச நிறுவனங்களினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் நடாத்தப்படும் பாடநெறிகளைப் பின்பற்றுபவர்களுக்கு இலவசமாக கொடுப்பனவு வழங்கப்படுவதனால் கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகள் தொடர்பில் பொதுமக்களின் ஆர்வம் குறைவாகவுள்ளது.

**ஈட்டப்பட்ட வருமானம்**

2011 ஆம் ஆண்டில் மஹபொல பயிற்சி நிறுவனம் வெளிநபர்களுக்கான கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகளின் மூலம் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு மொத்த வருமானமாக ரூபா

14,445,263/= பெற்றுக் கொடுத்துள்ளது. ஊழியர்களின் இயக்க மேம்பாடு தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளின் ஊழியர்களின் அறிவு, ஆற்றல், திறன் விருத்தி செய்யும் வகையில். நடாத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள், பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகளினால் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளினால் பெறப்பட்ட வருமானம் ரூபா 9,509,294/= ஆகும்.

அதன்படி 2011 ஆண்டினுள் மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் ஈட்டப்பெற்ற மொத்த வருமானம் ரூபா 23,954,557/=. ஆகும்.

இதற்கு மேலதிகமாக ஏனைய பயிற்சி நிலையங்கள் மூலம் துறைமுக அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற வருமானம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| கடல்சார் பயிற்சி நிலையம் | (ஒலுவில்) | ரூபா | 169,506/= |
| பயிற்சி நிலையம் | (பதுளை) | ரூபா | 98,750/= |

2011 ஆம் ஆண்டினுள் மஹபொல மற்றும் பிராந்திய பயிற்சி நிலையங்களினாலும் நடாத்தப்பட்ட பாடநெறிகள் தொடர்பிலான மொத்தச் செலவு ரூபா 4,820,106/= ஆகும்.

**உள்ளக கணக்காய்வு**

உள்ளக கணக்காய்வுப் பகுதியின் செயற்பாடுகள் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் வழிகாட்டலுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கணக்காய்வினால் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானம் மற்றும் செலவின விடயங்களுக்கமைய உள்ளக பரிசோதனைகள், வழமையான கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**உள்ளக பரிசோதனைகள்**

**வருகை**

தொழிலாளர் மற்றும் தொழிலாளர் தரத்திலல்லாத ஊழியர்கள் சேவை நிலையத்தில் இருப்பது தொடர்பில் திடீர் பரிசோதனைகள் அவசர சுற்றிவளைப்புக் குழுவினால் இரவு / பகல் இரண்டிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. கடமை நேரத்தில் அனுமதியின்றி சேவை நிலையத்தை விட்டுச் சென்ற ஊழியர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஊழியர்கள் கடமை நேரத்தில் தமது சேவை நிலையங்களில் இருப்பதை அதிகரிப்பதற்கான காரணியாக இது அமைந்தது.

**நிதி**

காசு மற்றும் கட்டு நிதி தொடர்பில் அடிக்கடி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் அறிவிக்கப்பட்டன.

**வருமான கணக்காய்வு**

கணக்காய்வு வேலைத்திட்டத்திற்கமைய ஆண்டிற்கான வருமான ஒன்றுசேர்த்தல்கள் தொடர்பில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. விசேட ஒப்படை அலுவல்களின் மூலம் துறைமுக கட்டணங்கள் குறைவாக அறவிடப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.
கடன்பட்டோர் கணக்குகள், பிணக்கிற்குரிய சிட்டைகள் மற்றும் காலாவதியான காசோலைகள் பரிசோதிக்கப்பட்டு அவைகளின் வித்தியாசங்கள் அறிவிக்கப்பட்டன. கட்டுநாயக்க, பியகம தரையிறக்கல் மற்றும் கையளித்தல் பிரிவுகளிலும் பரிசோதனைகள் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டன.

**செலவினக் கணக்காய்வு**

மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்களும் களஞ்சிய வவுச்சர்கள் தொடர்பில் ஆய்வு பரீட்சிப்புக்கள் செய்யப்பட்டன. வாகன ஓட்டக் குறிப்புப் படிவங்களும் வாகன அங்கீகார அனுமதிப்பத்திரங்களும் பரீட்சிக்கப்பட்டு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தொடர்பான தயாரித்தல்கள் தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு கண்டறியப்பட்ட வித்தியாசங்கள் அறிக்கை செய்யப்பட்டன.

**களஞ்சியங்கள் பற்றியதான பௌதீக ரீதியான உறுதிப்பாடுகள் பரீட்சித்தல்**

கொழும்புத் துறைமுகத்தின் களஞ்சியங்கள் பற்றியதிலான பௌதீகரீதியான உறுதிப்பாடுகளின் பரீட்சித்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு ஏனைய துறைமுகங்களினது வருடாந்த இருப்பு பரீட்சித்தல்களின் போதும் ஒத்தாசை வழங்கப்பட்டது.

பிரதான களஞ்சியங்களின் தொடர்ச்சியான உறுதிப்பாடுகள் பரீட்சிக்கப்படும் காலங்களினுள் களஞ்சியங்களில் இருக்கும் அடிக்கடி தேவைப்படும் பொருட்கள் அடையாளங் காணப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக வழங்கல் பகுதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

**கணனிகள் ,பதிப்பு இயந்திரங்கள் , வாகனங்கள் மற்றும் இடம் நகரும் உபகரணங்கள்**

தலைவரின் அறிவுறுத்தல்களின் மீது, இயங்கும் மற்றும் பழுதுபார்க்கப்படக் கூடிய உபகரணங்கள் சரியாக அடையாளங் காணப்படுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல கணனிகள், பதிப்பு இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் இடம் நகரும் உபகரணங்கள் தொடர்பிலான பௌதீக ரீதியான உறுதிப்பாடுகள் உள்ளக கணக்காய்வு, தகவல் முறைமை மற்றும் இயந்திரப் பொறிப் பகுதிகளின் ஆளணியினர்களினது ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்டன.

**பரிசோதனைகள்**

தலைவர் / முகாமைப் பணிப்பாளரின் வேண்டுகோளிற்கிணங்க மீளாய்வாண்டினுள் விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இறுதிக் கணக்குகள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் இறுதிக் கணக்குகளுக்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்படுகின்றதென்பதனை உறுதிப்படுத்துதல் இப்பகுதியின் இன்னுமோர் பொறுப்பாகும்.

**முன் கணக்காய்வு**

வைப்புகளை மீளசெலுத்துதல் மற்றும் துறைமுக கட்டணங்களை கைவிடுதல் தொடர்பில் மீளாய்வாண்டினுள் முன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**காலி மற்றும் திருகோணமலைத் துறைமுகம்**

இத்துறைமுகங்களின் வருமான மற்றும் செலவின கணக்குகளின் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

## திருகோணமலைத் துறைமுகம்

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் திருகோணமலைத் துறைமுக நடவடிக்கைகள் பற்றியதான நிர்வாக அறிக்கை.

**கப்பலோட்டம்**

2011 ஆம் ஆண்டு திருகோணமலைத் துறைமுகத்துக்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை.

| விபரம் | 2010 | 2011 |
|---|---|---|
| பொதுவான மற்றும் தொகை பிரிக்கும் கப்பற் சரக்கு | 136 | 150 |

| | | |
|---|---|---|
| பயணிகள் கப்பல் | 11 | 13 |
| **மொத்தம்** | 147 | 163 |

**கப்பல் சரக்கு கையாளல்**

**பொதுவான மற்றும் உலர் தொகை பிரிக்கும் கப்பற் சரக்குகள்**

| விபரம் | ஏற்றுதல் (மெ.தொ) | இறக்குதல் (மெ.தொ) |
|---|---|---|
| பொதுவான மற்றும் உலர் தொகை பிரிக்கும் கப்பற் சரக்குகள் | 36,078 | 241,787 |
| திரவ மொத்தம் | 1,620 | 113,034 |

## கப்பலோட்டம்

திருகோணமலைத் துறைமுகத்தில் 3 இழுவைக் கலங்களும் 04 சறுக்கு வழி கலங்களும் ஒரு டனக் கலங்களும் உள்ளதோடு அவற்றில் பெரும்பாலானவை செயற்படுத்தப்பட முடியாத நிலையிலுள்ளன. அவற்றில் "சிங்கபாஹூ" கலம் பழுதுபார்க்கப்படுவதற்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு அதற்குப் பதிலாக "நீலமஹ" கலம் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தல்**

2011 ஆம் ஆண்டில் தடித்த முன் முகப்பு (Bollard) தண்டு பரீட்சிக்கப்படுவதற்காக கொழும்பு டொக்யாட் நிறுவனத்தினால் கிலன்பர்க்ஸ் இல் 250 தொன் எடை கொண்ட முன் முகப்பு தடுப்புத் தண்டு தயாரிக்கப்பட்டது.

**சேறுவில 11 பயணிகள் சேவை**

இது இலங்கை சுதந்திர துறைமுக தனியார் கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கியது பிரதான பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் காரணமாக அனைத்து ஆளணி ஊழியர்களினதும் சேவைகள் 2011 யூன் 30 ஆந் முடிவுறுத்தப்பட்டன. இதன் பிரதான என்ஜினினது பழுதுபார்த்தல்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**பாதுகாப்புப் பிரிவு**

**சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக பாதுகாப்பு (ISPS)**

இது தொடர்பான விதிகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக இலங்கை கடற்படையினால் பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றின் பெரும்பாலானவை பூர்த்திசெய்யப்பட்டு மீதிப் பகுதிகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளினால் செயற்படுத்தப்பட்டும் வருகின்றன.

**தீயணைப்பு பற்றியதான நிகழ்ச்சித் திட்டம்**

2011.12.05 இருந்து 2011.12.09 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியினுள் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டவாறு கொழும்புத் துறைமுகத்திலிருந்து வருகை தந்த அலுவலர்களினால் ஒவ்வொரு பிரிவுகளில் தீயணைப்பு பற்றியதிலான செயன்முறை வகுப்புகள் நடாத்தப்பட்டன.

**பொறியியல் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**
**சிவில்**

* பர்மா முகாமின் பாதுகாப்பு கூடத்தின் புனர் நிர்மாணம், பர்மா முகாமின் "D" மண்டபத்தின் சுவர் நிர்மாணித்தல், இல : 06 ஆம் குதத்தின் பழுதுபார்த்தல்கள், உவர் மலைப் பகுதியின் (Orrs Hill) இல : 01 ஆம் சுற்றுலா விடுதியின் நீர்த்தாங்கிக்கு மேலதிக நீர்க் குழாய்கள் தொடர்புபடுத்தல் போன்ற வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.
* உவர் மலையின் சுற்றுலா விடுதிகள் , CB -11 சுற்றுலா விடுதி மற்றும் 3 ஆம் அலகில் அமைந்துள்ள பௌத்த புனித தலம் புனரமைக்கப்பட்டு மை பூசுதல், வழங்கல் அலுவலகத்தின் கொன்கிறீட் கூரைப் பகுதியினது சீமெந்து வேலைகள், நங்கூரக் கலத்தின் ஊழியர் அறை பிரிவுகளாக பிரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
* இல : 8,16 ஆம் றைபல் கிறீன் (RIFLE GREEN) விடுதிகளினது புழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகள், புதிய நிர்வாகக் கட்டிடம், சறுக்கு வழி கலங்களினதும், வாகனங்களினதும் அனைத்து மர வேலைத் தேவைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**இயந்திரப் பொறியியல்**

* ரோஸா பேருந்தின் தகர செப்பனிடல் வேலைகள், வர்ணம் பூசுதல், தண்டுப்பகுதி, ஆசனங்கள் போன்று பல்வேறு பழுதுபார்த்தல்கள், மிட்சுபிசு வேனின் என்ஜின் முற்றாக பழுதுபார்த்தல், தகர செப்பனிடல் வேலைகள், வர்ணம் தீட்டுதல் ,லேலன்ட் பேருந்தின் துருப்பபடிவு நீக்கப்பட்டு புதிதாக அலுமினியத் தகடு பொருத்துதல், மை பூசுதல், இசுசு பிக்அப் வண்டியின் கியர் பெட்டி புதுப்பித்தல், அதன் பின் பகுதியின் தகர செப்பனிடல் வேலைகள், மை பூசுதல், வண்டியின் மின்சாரம் சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
* சுக்கான் அறை (wheel room ) மற்றும் கலத்தின் தண்டுப் பகுதி மீளமைக்கும் நடவடிக்கைகள் , 111 ஆழி வழிகாட்டிக் கலத்தின் தடுப்பு கொழுக்கிகள் (FENDER HOOK) உற்பத்தி செய்தல், தண்ணீர் வத்தைகளினது தட்டுகளில் அழிவடைந்த பகுதிகள் மீளமைத்தல், நங்கூரக் கலங்களினது குழாய் வழி மீளமைத்தல், 06 அடையாள மிதவைகள் திருத்தப்பட்டு மீள் பொருத்துதல்.
* மாயா நங்கூரக் கலத்தின் வலிக்கும் தண்டு (SHAFT) பழுதுபார்க்கப்படுவதற்காக கொழும்புத் துறைமுகக் குழுவினரோடு ஒத்துழைத்தல், சேறுவில 11 வழிகாட்டிக் கலத்தின் பிரதான என்ஜின் பழுதுபார்த்தல், வாளி மற்றும் அதன் பகுதிகளின் பழுதுபார்த்தல் ஊடாக நிலக்கரி மற்றும் ஜிப்சம் தரையிறக்கப்படுவதற்காக இயக்கப் பகுதிக்கு உதவுதல்.

## காலித் துறைமுகம்

| பொருட்கள் | கப்பல்களின் எண்ணிக்கை | இறக்குதல்கள் மெட்ரிக் தொன் | ஏற்றுதல்கள் மெட்ரிக் தொன் |
|---|---|---|---|
| கிலிங்கர் | 45 | 392,179 | - |
| மொத்த சீமெந்து | 09 | 62,801 | - |
| ஜிப்சம் | 01 | 8,500 | - |
| மாற்றியேற்றல் சரக்கு | - | 29 | 253 |
| மொத்தம் | 55 | 463,509 | 253 |

| | |
|---|---|
| கையாளப்பட்ட மொத்த கொள்ளளவு | 463,762 மெ/தொ |
| முழுமையான சரக்கு கப்பல் | 55 |
| ஏனைய கப்பல்கள் (பயணிகள், கடற்படை, எண்ணெய் வழங்கல் பழுதுபார்த்தல் மற்றும் ஏனையவை) | 104 |
| 2011 ல் நங்கூரமிடப்பட்ட மொத்த கப்பல்கள் | 159 |
| நங்கூரமிடல் | 53 |
| துறைமுக எல்லைக்கு அப்பால் | 5,788 |
| வினோத படகுகள் | 119 |

# நிதி மீளாய்வு

**சகல துறைமுகங்களினதும் வருமானம் (ரூபா.மில்)**

**வருமானம் (துறைமுக செயற்பாடு வெவ்வேறாக )**

| விபரம் | 2010 | 2011 | விபரம் | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| துறைமுக செயற்பாடுகளிலிருந்து வருமானம் | 25,046 | 27,542 | பெற்றோலிய உற்பத்திகள் | 617 | 587 |
| ஏனைய வருமானம் | 3,233 | 3,708 | மரபு முறையான மாற்றியேற்றல் கப்பல் சரக்கு | 29 | 41 |
| | | | கலத்துறை மற்றும் நங்கூரமிடல் | 657 | 689 |
| | | | கப்பலோட்டம்,துறைமுகம், வழிகாட்டி மற்றும் இழுவைக் கலம் | 3,141 | 3,407 |
| | | | களஞ்சியப்படுத்துதல் | 1,837 | 2,160 |
| | | | மரபு முறையான உள்நாட்டு சரக்கு | 2,505 | 3,085 |
| | | | கொள்கலனிலிடப்பட்ட மாற்றியேற்றல் சரக்கு | 5,708 | 5,655 |
| | | | கொள்கலனிலிடப்பட்ட உள்நாட்டு சரக்கு | 9,908 | 11,149 |
| | | | ஏனைய சேவைகள் (இயக்கம்) | 643 | 770 |
| **மொத்த வருமானம்** | 28,279 | 31,250 | **மொத்த வருமானம் (துறைமுக செயற்பாடுகள் மட்டும்)** | 25,046 | 27,542 |

**இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள் (சகல துறைமுகங்களினதும்) (ரூபா மில்)**

| விபரம் | 2010 | 2011 | அதி/ குறை | % |
|---|---|---|---|---|
| அளவு தள்ளுபடிக்கு செலுத்துதல் | 918 | 1,123 | (205) | (22) |
| சொத்துக்களை பராமரித்தல் | 1,137 | 1,373 | (236) | (21) |
| எரிபொருள்,மின்சாரம் ,தண்ணீர் | 1,828 | 2,201 | (373) | (20) |
| வெளிநாட்டு கடன் மீதான வட்டி | 1,225 | 1,372 | (147) | (12) |
| மேலதிக நேரம் | 3,323 | 3,177 | 146 | 4 |
| பெறுமானத் தேய்வு | 4,682 | 4,118 | 564 | 12 |
| சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் படிகள் | 10,011 | 9,307 | 704 | 7 |
| ஏனையவை | 1,997 | 1,659 | 338 | 17 |
| **மொத்தச் செலவினம்** | **25,120** | **24,330** | **790** | **3** |
| வெளிநாட்டு நாணய மற்றும் இலாப/ (நட்டம்) | (4,410) | (3,543) | 867 | 20 |
| சுய விருப்பின் மீது ஓய்வுபெறும் திட்டதின் மீதான செலவுகள் | - | 2,595 | (2,595) | (100) |
| **வெ.நா. நட்டம் உட்பட மொத்தச் செலவினம்** | **29,530** | **30,468** | **(938)** | **(3)** |

## துறைமுகங்களுக்கமைய செயற்பாடு

### கொழும்புத் துறைமுகம்

2011 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகம் ரூபா 8,757 மில்லியன் இயக்க இலாபத்தை ஈட்டியுள்ளது. 2011 ஆம் ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 30,525 மில்லியனுடன் 2010 ஆம் ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 27,724 மில்லியன் ஒப்பிடுகையில் அது ரூபா 2,801 மில்லியன் அதிகரிப்பாகும். வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 28,977 மில்லியனாக (சு.வி.ஓ.திட்டம் உள்ளடங்கலாக) இருக்கையில் 2010 ஆம் ஆண்டின் செலவினம் ரூபா 28,244 மில்லியனாக இருந்ததோடு இதுவானது 3% அதிகரிப்பாகும்.




### காலி துறைமுகம்

2011 ஆம் ஆண்டில் காலி துறைமுகத்தில் ரூபா 147 மில்லியன் வரிக்கு முன்னரான நட்டம் ஏற்பட்டது. 2011 ஆம் ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 441 மில்லியனுடன் 2010 ஆம் ஆண்டின் ரூபா 277 மில்லியன் ஒப்பிடப்படுகையில் அது ரூபா 164 மில்லியன் அதிகரிப்பாகும். வரி அறவிடப்படுவதற்கு முன் மொத்த செலவினம் (சு.வி.ஓய்வு பெறும் திட்டம் உள்ளடங்கலாக) ரூபா 673 மில்லியனாக இருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் செலவினம் ரூபா 623 மில்லியன் ஆக இருந்தது. இது 8% அதிகரிப்பாகும்.



**திருகோணமலை துறைமுகம்**

2011 ஆம் ஆண்டில் திருகோணமலை துறைமுகத்தில் வரிக்கு முன்னரான நட்டமாக ரூபா 318 மில்லியன் பதிவாகியிருந்தது. 2011 ஆம் ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 285 மில்லியனுடன் 2010 ஆம் ஆண்டின் ரூபா 279 மில்லியன் ஒப்பிடப்படுகையில் அது ரூபா 6 மில்லியன் அதிகரிப்பாகும். வரிக்கு முன்னரான மொத்த செலவினமான (சு.வி.ஓ. திட்டம் உள்ளடங்கலாக) ரூபா 817 மில்லியனுடன் 2010 ஆம் ஆண்டின் செலவினமாகவிருந்த ரூபா 662 மில்லியன் ஒப்பிடப்படுகையில் 23% அதிகரிப்பாகும்.



மீளாய்விற்குட்படும் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

* மொனராகல – புத்தளயில் நடைபெற்ற "தேசத்துக்கு மகுடம்" கண்காட்சியோடு கதிர்காமத்தில் அமைந்துள்ள மாவட்ட வைத்தியசாலை புனரமைக்கப்பட்டது.

* க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளில் மிகவும் சிறந்த முறையில் சித்தி பெற்ற துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

* துறைமுக ஊழியர்களின் சிறார்களின் நலன்புரி தொடர்பிலான பூரண வசதி கொண்ட சிறுவர் பராமரிப்பு நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

* நிலவும் துறைமுக வசதிகள் மற்றும் செயற்பாடுகள் போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் சிறந்த முறையில் அறிந்துகொள்ளும் பொருட்டு "தேசத்துக்கு மகுடம்" தேசிய கண்காட்சி" உட்பட பல கண்காட்சிகளில் இலங்கை துறைமுக அதிகாரசபை பங்கேற்றது.

* சகல வசதிகளையும் கொண்ட துறைமுக தீயணைப்புப் படை அதன் பணிகளில் கொழும்பு நகர சபைக்கும் கொழும்பு மற்றும் அண்டிய பகுதிகளிலும் ஏனைய அவசர சந்தர்ப்பங்களிலும் தனது ஒத்துழைப்பை நல்கியது.

மனித மூலதனம் என்பது தொழில் தருனரினால் தொழிலாளருக்கு வழங்கப்படும் பொருளாதார பெறுமதியாகும். ஊழியர்களின் நிபுணத்துவம், அறிவு மற்றும் அனுபவம் ஆகியவை ஒட்டுமொத்தமாகக் கொண்டு இப்பெறுமதியானது மதிப்பிடப்படுகின்றது. ஊழியரின் மனித மூலதனம் விருத்தி செய்யப்படுதலில் அவர்களினது முறையான கல்வி மற்றும் நிலையத்திற்குரிய பயிற்சி நடவடிக்கைகள் போன்ற காரணிகள் உதவியாக இருக்கும்.

மனித மூலதனம் எந்தவொரு அமைப்பினதும் முக்கிய விடயமாகக் கருதப்பட முடியும். தமக்கு ஒப்படைக்கப்படும் பணிகளுக்குரிய நிபுணத்துவம், அறிவு மற்றும் தொழிலிலீடுபடும் ஆற்றல்களைக் கொண்ட ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுவதனால் நிறுவனமொன்றுக்கு தனது நிறுவனம் உச்ச வினைத்திறனுடன் செயற்படுவதற்கான பலம் கிடைக்கப்பெறும். இலாபமீட்டல் அதிகரிக்கப்படுவதற்கும் ஆண்டு காலங்கள் வெற்றிகரமாக நடாத்திச்செல்லப்படுவதற்கும் நிறுவனத்திற்கு மிகவும் கூடிய அனுகூலம் கிடைக்கப்பெறும்.

மனித மூலதனத்தின் முக்கியத்துவம் அடையாளங் காணப்பட்டு நிறுவனங்கள் மனித மூலதனத்திற்காக முதலீடு செய்கின்றன. மேலதிக ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுதலின் தேவைப்பாடின்றி நிறுவனங்களுக்கு மிகவும் விரிவான தேர்ச்சிகளுக்கான ஆரம்பம் பெறப்பட முடியும். இதனால் இரு தரப்பினர்களுக்கும் நன்மை பயக்கும் காரணியாக நிறுவனமொன்றினது மனித மூலதனம் கருத்தலெடுக்கப்படக் கூடியதாக இருக்கும்.

மனித வளப் பகுதி ,வைத்தியப் பகுதி , நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் மற்றும் மஹபொல பயிற்சி நிறுவனம் போன்ற, இலங்கை துறைமுக அதிகாரசபையின் மனித மூலதனத்தின் அபிவிருத்தியுடன் தொடர்புபடும் பகுதிகளாகும்.

பயன்மிகுந்த ஊழியர்ப் படையொன்று தனது நிரந்தர ஆளணியினுள் உள்வாங்கப்படுவதன் ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் நோக்கு, பணி மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதில் மனிதவளப் பகுதி முக்கிய பணியாற்றுகின்றது. இதன் அடிப்படையில் மிகவும் கவரப்படும் தகுதிவாய்ந்த ஊழியர் படைக்கும் அவர்கள் தக்க வைத்துக்கொள்ளப்படுவதற்கும் உரிய தொழில்சார் மற்றும் கல்வித் தகைமைகள் உள்ளடக்கப்பட்டு சகல ஊழியர் பிரிவினர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

நிறைவேற்று , நிறைவேற்றல்லாத ,தொழில்நுட்பம் மற்றும் தொழினுட்பமல்லாத தரங்களுக்குரிய இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த ஊழியர்ப் படை 2011 ஆண்டு இறுதி வரை 10982 ஆகவிருந்தது. இதனுள் 43 பட்டப்பின் படிப்பு பட்டதாரிகளும் 39 பின்படிப்பு டிப்ளோமா பட்டதாரிகளும் 457 பட்டதாரிகளும் 299 டிப்ளோமாதாரிகளும் அடங்குவர்.

நிறுவனத்தினது கூடிய பயன்மிகு செயற்பாடுகளுக்கான ஊழியர்களின் கருமமாற்றல் சிறந்த முறையில் ஈடுபடுத்திக் கொள்ளும் பொருட்டு ஊழியர்களின் செயலாற்றுகை மதிப்பிடப்படுவது தொடர்பில் மனிதவளப் பகுதியினால் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல ஊழியர்களுக்கும் ஆறு மாதத்தினுள் பூர்த்தி செய்யப்படுவதற்காக குறிப்பிட்ட பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் முன் கூறப்பட்ட காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் மதிப்பிடலுக்குட்படுத்தப்படுவர். இம்மதிப்பீட்டுப் பெறுபேறுகள் அடிப்படையாகக்கொண்டு ஊழியர்களின் ஆற்றல்கள் மற்றும் குறைபாடுகள் மனிதவளப் பகுதிக்கு இனங்காணப்படக் கூடியதாக இருந்தன. இதவானது நிகழ்கால தேவைப்பாடுகளுக்கேற்றவாறு சம்பந்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு உதவும்.

உரிய பாடவிதானத்தினுள் விசேட தகைமைகள் பெற்று செயலாற்றலிலீடுபடும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிறைவேற்று அலுவலர்களுக்கு அவர்களின் சேவைகளுக்கான பெறுமதி சேர்த்தலாக மாதாந்தம் தொழில்சார் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டு வருகின்றன. இதனால் ஏனைய ஊழியர்களுக்கும் தத்தமது துறைகளில் பணிகள் மிகவும் சிறந்த தொழில்சார் முறையில் நிறைவேற்றப்படுகையின் தகைமைகள் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான உத்வேகம் உண்டாகும். தமது தொழிலுடன் தொடர்புபடின் நிறைவேற்று அலுவலர்களினால் செலுத்தப்பட்ட அங்கத்துவ பங்களிப்பு பணமும் அவர்களுக்கு மீளச்செலுத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தனது நோக்கங்களை அடையும் வகையில் எந்தவொரு நிறுவனத்திற்கும் மனிதவளத் திட்டம் மிகவும் முக்கிய ஆவணமாகும். 2011 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சுய விருப்பில் ஓய்வுபெறும் திட்டம் அடிப்படையாகக் கொண்டு எதிர்கால தேவைப்பாடுகள் கருத்திலெடுக்கப்பட்டு மனித மூலதனம் உச்ச பயன்பெறும் வகையில் மனிதவளத் திட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

மனித வளம் சார்ந்த செயற்பாடுகள் சிறந்த முறையில் பேணப்படுவதற்காக மனிதவள தகவல் தொகுதி (HRIS) 2009 ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. பயன்படுத்துவோரின் வசதி தொடர்பில் சம்பந்தப்பட்ட பயன்படுத்துவோரின் ஊழியர் தரப்பினர்களுக்கிடையில் மனிதவள தகவல் தொகுதி தொடர்பிலான அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. தற்போது சம்பளப் படிவம் மற்றும் வருகை தரல் நேரக் குறிப்புத் தொகுதிகள் மனிதவள தகவல் தொகுதியுடன் தொடர்புபடுத்தும் அடிப்படைத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஆவண நடவடிக்கைகள் குறைக்கப்படுவதற்காகவும் அன்றாடம் இடம்பெறும் மனிதவள அலுவல்கள் இலகுபடுத்தப்படுவதற்காகவும் மேற்கொண்டு ஆவண முகாமைத்துவத் தொகுதியொன்று விரைவில் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பல்வேறு துறைகளில் புதிய விரிவுரை நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு 2011 ஆண்டினுள் முன்னைய ஆண்டுகளைப் போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான அங்கமான மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் தன் வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்திச் செல்லப்பட்டன. நிறைவேற்று அலுவலர்களின் ஆட்சேர்ப்பின் புதிய நடைமுறைக்கேற்பவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் பதவியுயர்வுகளுக்கான தொழில்சார் அறிவு வலுப்படுத்தும் நோக்கில் மஹபொல பயிற்சி நிறுவளத்தினால் ஸ்ரீ ஜயவர்த்தனபுர மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகங்களின் அனுசரணையோடு முறையே மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் ஆங்கில மொழி பற்றியதான டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரி மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அனுசரணையோடு துறைமுக பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றியதான டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிறைவேற்றல்லாத தரங்களுக்கான புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் அடிப்படையில் உயர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான ஆகக் குறைந்த கல்வி மட்டம் இல்லாத ஊழியர்களுக்கு துறைமுகம் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி பற்றியதான பயிற்சிப் பாடநெறிகள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்பட்டன.

இதற்குப் புறம்பாக தமது அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்கு எதிர்பார்த்திருப்பவர்களுக்கான வசதிகள் வழங்கப்படும் வகையில் சலுகைக் கட்டணங்களின் மீது பல்வேறு துறைசார்ந்த கட்டணங்கள் அறவிடப்படும் . பாடநெறிகள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்பட்டன. உலகமயமான நிலைமைகளுக்கேற்ப தமது அறிவு மற்றும் திறன்களை முறைப்படுத்துவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிறைவேற்று அலுவலர்கள் வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் நிகழ்ச்சி வேலை திட்டங்களில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

2011 ஆண்டினுள் மஹபொல பயிற்சி நிறுவனம் மற்றும் பிராந்திய நிலையங்களில் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்கான மொத்த செலவினம் ரூபா 4,820,106 ஆகும்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் நலன்புரி வசதிகள் முன்னர் போன்று தொடர்ச்சியாக நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுப் பகுதியினால் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. இலவசமாக உணவு வழங்கல், வீடமைப்புக் கடன் திட்டம், போக்குவரத்து வசதிகள், காப்புறுதித் திட்டம், விளையாட்டு வசதிகள் , நலன்புரி உண்டிச்சாலைகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் போன்றவை நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுப் பகுதியினால் மேற்கொள்ளப்படும் சில நடவடிக்கைகளாகும்.

ஊழியர்களுக்கு தமது அறிவு, திறன்கள் மற்றும் உளப்பாங்கு விருத்தி செய்து கொள்ளும் ஆற்றல்கள் வழங்கப்பட்டு பகுதியினால் நடாத்திச் செல்லப்படும் நூல் நிலையங்களுக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கீடுகளும் வழங்கப்பட்டன. துறைமுக ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் நலன்புரி வசதிகள் ஏற்படுத்துவதற்கு

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல ஊழியர்களுக்குமான வைத்தியக் காப்புறுதித் திட்டம் 2011.09.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்படியாக அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களினது சுகாதார நிலைமை சிறந்த முறையில் பேணுவதற்காக வைத்தியப் பகுதியினால் பிரதான பணியாற்றப்படுகின்றது. இந்த நோக்கத்தினையடையும் பொருட்டு நோயாளியான மற்றும் காயப்பட்ட ஊழியர்கள் நன்கு கவனிக்கப்படுவதுடன் ஊழியர்களினது வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கான உடல் மாத்திரமன்றி உள சுகாதாரம், மானிட சமூக நலன் பேணப்படுவதற்கான தவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் வைத்தியர்களினது கவனம் செலுத்தப்பட்டது.

ஊழியர்களுக்கு தமது கடமை நிலையங்களில் பொருத்தமான முறையில் கடமைகள் நிறைவேற்றப்படுவதற்கான சுகமான சுகாதார சூழல் ஏற்படுத்தப்பட்டது. இந்த சகல வசதிகளும் நன்நோக்கு சிந்தனை கொண்ட முனைப்பான பயன்மிகுந்த ஊழியர் படையொன்றினை உருவாக்கவதற்கு ஏதுவாக அமையும்.

வர்த்தகத்துடன் தொடர்புடைய சகல தரப்பினர்களினதும் நலனுக்காக வளங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனத்தை உரிய வழிகாட்டல்களோடு நிர்வகித்து நடாத்திச் செல்லப்படுவதற்காக அந்நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படும் ஒட்டுமொத்த செயற்பாடு இதுவாகும். நல்லாட்சி பேணப்படுதல் தொடர்பிலான முக்கிய பொறுப்பு அதிகாரசபையின் தலைவர் மற்றும் அதன் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடையும் பொருட்டு அதன் செயற்பாடுகள், நிர்வாக மற்றும் உரிய முறையில் செயற்படுகின்றமை. தொடர்பில் அவர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் இதற்கு தொழில்சார் அலுவலர்கள் அவர்களுக்குரிய செயற்பாட்டுத் துறைகளில் பங்களிப்பு வழங்குவதன் மூலம் வசதிகள் ஏற்படுத்துதல் வேண்டும். இப்பணியினுள் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பரீட்சிப்பதற்கும் அங்கீகார நடைமுறைகளிலிருந்து வழுகிச் செல்லும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அது தொடர்பில் அறிக்கை செய்யப்படுதலின் ஊடாக முக்கிய பணியாற்றப்படுவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏதாவது வழுகல் நிலையிருப்பின் விசேடமாக கையாளல் மற்றும் நிதிசார் நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்பார்க்கப்படும் செயற்பாடு எட்டப்படுவதற்காக அவை எவ்வாறு திருத்தப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டு அதன் ஊடாக நல்லாட்சிக்கான பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

நிதிசார் மற்றும் கையாளல் செயற்பாடுகளினால் வெளிவரும் உயர் நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மையானது பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்படும் நம்பகத்தன்மை அடிப்படையில் ஒட்டுமொத்த கடமைச் செயற்பாடு, முகாமைத்துவம் பணிப்பாளர் சபையுடன் தொடர்பு கொள்ளும் தகவல்களின் உயர் நிலை, வெளிப்படையான நிறுவனமொன்றினை நடாத்திச் செல்வதற்கு அவர்களின் அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும். அது தொடர்பில் உயர் நிலையிலான ஒன்றிணைந்த நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கு அதிகாரசபை உறுதிபூண்டுள்ளது.

அதிகாரசபையின் நிர்வாகம் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிக்கின்றது. சிறந்த நடைமுறைகள் செயற்படுத்தப்படுகின்றமை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள், விதிகள், அமைப்பு முறைகள் மற்றும் செயற்பாடுகள் மேம்படுத்தப்படுதலில் குறிப்பிடத்தக்க கவனம் அதிகாரசபையினால் தொடர்ச்சியாக செலுத்தப்படுகின்றது. அதிகாரசபையினால் அதன் நிர்வாகப் பணிகள் தொடர்பான அமைப்பு முறைகள் தொடர்ச்சியான திருத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன.

நிதி ஆண்டினுள் அதிகாரசபையினால் அனுசரித்து செல்லப்பட்டுள்ள சிறந்த ஒன்றிணைந்த நிர்வாக அடிப்படைகள் பின்வரும் தலையங்கங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- பணிப்பாளர் சபை மற்றும் சபையின் உப குழுக்கள்
- உள்ளக கட்டுப்பாடு
- உள்ளக கணக்காய்வு
- ஒழுக்காற்று விதிமுறைகள்
- பொது திறைசேரி, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடனான தொடர்பு
- சாசனம் மற்றும் நீதித் தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுதல்
- நல்லாட்சிக்கான அரச தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டல்கள்

நிதி அமைச்சின் அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் நல்லாட்சிக்கான அரச தொழில் முயற்சி வழிகாட்டலில் இனம் காணப்பட்ட சில சரத்துகளிலிருந்து ஒதுங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சர் ஆகியோரினால் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பிலான அமைச்சரவையின் தீர்மானத்திற்குப் பின்னர் உரிய கைத்தொழில் உயர் போட்டித்தன்மை மற்றும் சாத்தியவளத்துடனான அரச துறை நிறுவனமொன்றாக மாறுவதற்கு தேவைப்படும் போதியளவு நெகிழ்வுத்தன்மையும் , சுதந்திரமும் உறுதிப்படுத்தும் பொருட்டு நிர்வாகம் தொடர்பான யாப்பொன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நகல்படுத்தப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையும் சபையின் உப குழுக்களும்**

பணிப்பாளர் சபை தலைவர், உப தலைவர் மற்றும் 07 பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உயர் தொழில் மற்றும் தனிப்பட்ட வகையில் நீதி நெறியுடையவர்களாகவும் அதிகாரசபை ஈடுபட்டிருக்கும் கைத்தொழிலின் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் கீழ் கண்டவாறு அமையும்.

* துறைமுக அபிவிருத்தி அல்லது துறைமுக இயக்கம் அல்லது சட்டம் அல்லது நிதி விடயங்கள் அல்லது கப்பல்துறை அல்லது வர்த்தகம் அல்லது பொறியியல் நடவடிக்கைகள் அல்லது, நிர்வாகம், தொழிலாளர் தொடர்பு சம்பந்தமான அனுபவம் மற்றும் ஆற்றலுடையோர் என அமைச்சரினால் கருதப்படுவோரில் தலைவர் உட்பட பணிப்பாளர்கள் 04 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுவர்
* சரத்தின் 13:1 பிரிவின் கீழ் முகாமைப் பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்.
* நிதி விடயங்கள் தொடர்பிலான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர்.
* சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மீன்பிடி தொடர்பான விடயங்களில் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்.

தலைவர் தவிர்ந்த உப சரத்து (1) (அ) அல்லது (1) (இ) யின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களிரொருவர் துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும்.

தலைவருக்கும் , உப தலைவருக்கும் , முகாமைப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தெளிவாக வெவ்வேறாக விளக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று தரத்திலல்லாத சகல பணிப்பாளர்களும் ஆழ்ந்த அறிவு மற்றும் முறையான அனுபவங்களின் மீது அதிகாரசபைக்கு சேவைகளை வழங்குவர். இவ்வறிக்கையின் காலப்பகுதியில் பதவி வகித்த அதிகாரசபையின் பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் விபரங்கள் 13 -18 பக்கங்களில் காட்டப்பட்டுள்ளன.

**பணிப்பாளர் சபையின் பிரதான கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு**

* மூலோபாயமான நோக்கம், கொள்கைகள், குறிக்கொள்கள் போன்றவற்றினை ஸ்தாபிப்பதன் மூலம் கட்டளைகளை வகுத்தல்.
* நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றும் செயற்பாட்டினை மேற்பார்வை செய்தல்.
* போதுமானளவு உள்ளக கட்டுப்பாடு மற்றும் உயர் தரத்திலான நெறியினைப் பேண உத்தரவாதமளித்தல்.
* நோக்கத்தினை அமைத்துக் கொள்வதற்கான வழிகாட்டல், விதிமுறைகளை தயாரித்தல் மற்றும் அதன் செயற்பாட்டிற்கு உத்தரவாதமளித்தல்.
* சகல பிரதான வர்த்தக நடவடிக்கைகளின் இடர்பாடு நிலைமைகளை அறிந்துகொள்ளுதல் மற்றும் தகுந்த போதுமான கட்டுப்பாடு பேணல் இடர்பாடு நிலைமைகள் தொடர்பில் காலத்திற்கேற்றவாறு அதன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முறையாக மேற்பார்வை செய்து அது சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதென்பதற்கான உத்தரவாதமளித்தல்.

பணிப்பாளர் சபை தொடர்ச்சியாக கூட்டம் நடாத்துவதோடு குறிப்பிட்ட வருடத்தில் பணிப்பாளர் சபையானது 14 முறை கூடியது. பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்குத் தேவையான விபரங்கள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவருடன் கலந்தாலோசித்து நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுவதோடு ஒவ்வொரு பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கு முன்னர் எல்லா பணிப்பாளர்களுக்கும் விபரமான அறிக்கை அனுப்பி வைக்கப்படும். பணிப்பாளர் சபையில் கலந்து ஆலோசிப்பதற்குள்ள ஏனைய விடயங்களில் இயக்கம், நிதிச் செயற்பாடு, சுட்டெண்கள் மீளாய்வு

செய்தலுடன் பிரதான மூலதன செலவினத் திட்டம் மற்றும் பிரேரணைகள் அதன் வரையறையினுள்ளான அங்கீகார அனுமதியினையும் கொண்டுள்ளது.

முன்வைக்கப்பட்ட எல்லா பரிந்துரைகள் சம்பந்தமாக, பணிப்பாளர் சபையின் இறுதி அனுமதி கிடைக்கப்பெறுதலுக்குட்பட்டதாக சில பொறுப்புக்கள் தொடர்பில் செயற்படுவதற்காக, கணக்காய்வுக் குழுவிடமும் முகாமைத்துவ குழுவினையொத்த உப குழுக்களிடமும் கையளிக்கப்பட்டன.

**முகாமைத்துவக் குழு**

தலைவர், உப தலைவர் முகாமைப் பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அடங்கலாக பணிப்பாளர் சபையின் 04 அங்கத்தவர்கள் உட்பட முழு நேர 07 பணிப்பாளர்கள், ஹாபர் மாஸ்டர் ஆகியோர் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்படுகின்றனர்.

அன்றாட நிர்வாகம், நிறுவனரீதியான மற்றும் கையாளல் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுகையில் செயன்முறை ரீதியான வர்த்தக நிறுவனமொன்றாக மனிதவளம் உள்ளிட்ட வளங்களின் உச்ச பயன்பாடு பெறப்படுவதற்கும் துறைமுக நுகர்வோர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் வழங்கப்படும் சேவைகளின் தன்மை உயர்த்தப்படுவதற்கும் முகாமைத்துவ குழுவினால் அதன் கூட்டங்களின் போது துல்லியமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இச்செயற்பாடுகள் தாமதங்களின்றி வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டு முகாமைத்துவக் குழுவினால் மாதம் இருமுறை கூடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவக் குழுவினால் இவ்வருடத்தினுள் பத்து (10) கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**கணக்காய்வுக் குழு**

பணிப்பாளர் சபையின் அங்கத்தவரான பொது திறைசேரியின் பிரதிநிதி மற்றும் பணிப்பாளர் சபையின் இரண்டு அங்கத்தவர்களையும் இக்குழு கொண்டுள்ளது. 2011.01.25 ஆந் திகதி இக்குழு மீள் நியமிக்கப்பட்டது.

கணக்காய்வுக் குழுவினால் கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு விதிமுறைகளின் வெற்றிகரமான செயற்பாடு ஆராயப்பட்டு உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்க கணக்காய்வுக் கடிதங்கள் பரிட்சித்துப் பார்க்கப்பட்டு அவைகளின் பரிந்துரைகள் பகுதித் தலைவர்களினால் அனுசரிக்கப்படும்வாறு பணிப்பாளர் சபை ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் அதிகாரசபைக்கு நிதியினாலும் இயக்க செயற்பாடுகளிலும் நிலவும் இடர்பாடுகள் சிறந்த முறையிலான வரைவிலக்கண செயற்பாடுகளினூடாக முகாமைத்துவம் செய்தல், ஊழியர்கள் மற்றும் துறைமுக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களினது நலன்களின் வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் வளங்களினது உற்பத்தித் திறன் உயர்த்தப்படுவதற்குமான நிதி மற்றும் கையாளல் தொடர்பில் நிலவும் விதிகள், முறைமைகள் வலுப்படுத்தப்படுவதற்காக நாள் தோறும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்தல் இக்குழுவின் பொறுப்பாகும்.

**உள்ளக கட்டுப்பாடு**

எந்தவொரு அமைப்பிலும் செயற்றிறன் மிக்க முகாமைத்துவத்திற்காக திறனாக இயங்கக் கூடிய உள்ளக கட்டுப்பாடு முறையொன்று இருப்பது அவசியமாகும். அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகளின் இயக்க நிலைமைகளை மீளாய்வது தொடர்பான சகல பொறுப்பும் பணிப்பாளர் சபையைச் சாரும். பின்பற்றப்பட வேண்டிய கொள்கை முறைகள் பற்றியதில் முழு விபரத்துடன் கூடிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக அதிகாரசபை வரைவிலக்கணம் வழங்கியுள்ளது. அவை தொடர்பாக அடிக்கடி மீளாய்வு செய்யப்படுவதுடன் காலத்திற்கு ஒத்த நிலைக்கு கொண்டு வரப்படும் வர்த்தக ரீதியான நோக்கங்களை அடைவதற்கு இடையூறாக இருக்கும். இடர்கள் தொடர்பான முகாமைத்துவத்திற்காக இந்த ஒழுங்குவிதி அமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அதிகாரசபையின் சொத்துக்களை அனுமதியின்றி பாவித்தல், கைமாறுதலைத் தவிர்த்தல், முறையான அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் நிகழும் தகவல்களின் பிழையின்மை தொடர்பாக

தேவையான அளவு சான்றுகளையும் இக்குழு வழங்கும். அதிகாரசபையின் அமைப்புக் கொள்கை மற்றும் வழிகாட்டல்களின் மூலம் அதன் தகைமை, நேர்மைத் தன்மை, சீரிய நிலைமை மற்றும் நல்லெண்ண நிர்வாக சூழலை நடாத்திச் செல்வதற்காக அதிகாரசபையின் அர்ப்பணிப்புடனான செயற்பாடு உள்ளக கட்டுப்பாட்டிற்கு உறுதுணையாகும்.

**உள்ளக கணக்காய்வாய்வாளர்கள்**

பூரண தகுதி வாய்ந்த பட்டயம் பெற்ற கணக்காளரொருவரினால் கணக்காய்வுப் பகுதியின் தலைமை வகிக்கப்படுகின்றது. தற்போது இப்பகுதி 80 ஊழியர்களைக் கொண்டுள்ளதுடன் தங்களது கடமை பொறுப்பு மற்றும் நிறுவனத்தின் நோக்கம் தொடர்பில் அவர்களுக்கு சிறந்த பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுத் தரத்தின் திட்ட அபிவிருத்தி ஆய்வலுவலர்கள் 33 பேர் இப்பகுதியின் சேவைக்கு இணைக்கப்பட்டுள்ளனர். இப்பகுதி, பூரண சுதந்திரமாக இயங்குகின்றது. தலைவருக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் நேரடியாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

தலைவரினதும் கணக்காய்வுக் குழுவின் அறிவுரைகளுக்கும் இணங்க இப்பகுதிக்குரிய விடய பணிகள் தயாரிக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட திருத்தங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. பிரதானமாக முழு உள்ளக கட்டுப்பாடு முறைகளுமுள்ள கணக்காய்வுப் பகுதியினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. அதேபோல் கணக்காய்வுக் குழு தேவையான ஒத்துழைப்பை வழங்குகின்றது. உள்ளக கணக்காய்வு, உள்ளக கட்டுப்பாடு முறைகளின் வினைத்திறன் மற்றும் துரிதத்தன்மை தொடர்பான குறிக்கோள்களுடன் கூடிய தத்துவங்கள் வெளிக்கொணரப்பட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக துரித திட்டங்கள் மதிப்பிடப்படும்.

**ஒழுக்கச் சட்ட விதிகள்**

ஏற்றுக்கொள்ளக் கூடிய உயர் மட்ட ஒழுக்க நடைமுறை பேணப்படுதலுக்கு வழிகாட்டுவதற்காக ஒழுக்க விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. சகல பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் ஊழியர்களினால் தமது அன்றாட கடமைகள் நிறைவேற்றுகையிலும் , தமது செயற்பாடுகளிலும் அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கும் தோற்றப்பாட்டிற்கும் பாதிப்பேற்படுத்தும் சந்தர்ப்பங்களில் உயர் கௌரவத்துடன் உண்மையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் அதிகாரசபையின் எதிர்பார்ப்பாகும்.

**ஒழுக்கச் சட்ட விதிகளின் அடிப்படைகள்**

- சகல நடவடிக்கைகளின் போது நேர்மை நியாயம் மற்றும் பக்க சார்பின்மை பேணுதல்
- சட்டம் பற்றி அறிந்திருத்தல் மற்றும் அதற்கு கீழ்ப் படிதல்
- நிறைவேற்றப்படும் சகல நடவடிக்கைகள் தொடர்பிலும் அந்தரங்கத்தன்மை.
- அதிகாரசபைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அல்லது தீய விளைவுகள் ஏற்படக்கூடியவாறு செயற்படுவதைத் தவிர்த்தல்.

**அனுகூலமான திட்ட வரம்பு மற்றும் சாசன சட்ட தேவைகளுக்கு உட்படல்**

எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கு ஏற்ப செயற்படுவதானது இ.து.அதிகாரசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். இந்நோக்கத்தினை முதன்மையாகக் கொண்டு அதிகாரசபையானது எல்லா சாசன மற்றும் நிதித் தேவைகளுக்கும் ஏற்ப செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நிதி மற்றும் உள்ளக கணக்காய்வு பகுதிகள் ஊக்கத்துடன் செயற்படுகின்றது. அதற்கு மேலதிகமாக நிதிப் பகுதி அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கருமங்கள் சட்ட நியதிகளுக்கு ஏற்ப இடம்பெற உறுதிப்படுத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது.

துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிதியமைச்சின் பொது திறைசேரியுடனான தொடர்பு

உரிய வழியில் மற்றும் மூலோபாயமான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டும் துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், அமைச்சின் செயலாளர், மூலோபாய தொழில் முயற்சி முகாமைத்துவ (SEMA) நிறுவனத்துடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றனர். அதற்கு மேலதிகமாக நிதி அமைச்சின் பொது திறைசேரியின் தேவைக்கேற்ப மூன்றாண்டு காலத்திற்கான வர்த்தகத் திட்டம், நிதி மற்றும் ஏனைய இயக்க செயற்பாட்டு அறிக்கை உள்ளடங்கலான முழுமையான அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் அதிகாரசபையினால் முன்வைக்கப்படும்.

**குறிப்பிடப்பட்ட பங்குதாரர் தொடர்பான வெளிப்பாடு**

இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்யும் யாதொரு நபர் சம்பந்தமாகவும் தனிப்பட்ட அக்கறை அல்லது உறவு தங்களிடத்தில் இல்லயென பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தி அறிவிக்கின்றது.

**பொறுப்பு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி அறிக்கைகள் அதிகாரசபையின் குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உண்மை மற்றும் நியாயத் தன்மையினைப், பிரதிபலிப்பதெனவும் அவ்வறிக்கையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதென்பதும் பணிப்பாளர் சபையின் கருத்தாகும்.

**எதிர்காலம்**

உண்மைப் பெறுமதியுடன் ஒட்டுமொத்த திரட்டிய நிர்வாகம் நிலைத்து நிற்பதற்கு கண்மூடித்தனமான திருப்தியடையக்கூடிய பயிற்சி முறை மற்றும் கொள்கைகள் போன்றவற்றில் அன்றி உண்மையான முறையில் மக்கள் நம்பிக்கையினை வெல்லக் கூடிய உயர்ந்த செயல்பாட்டுடன் நியாய முறையில் பேணிச் செல்வதன் மூலம் நிலை நாட்டமுடியும். என்பதை இலங்கை துறைமுக அதிகாரசபை நம்புகின்றது.

# துறைமுக புள்ளி விபரங்கள்

## கொழும்பு துறைமுகம்

### துறைமுக பரிமாணம்

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 184.6 ஹெக்டயார் |
| தென் மேற்கு அலைதாங்கியின் நீளம் | 1,570 மீட்டர் |
| வடமேல் அலைதாங்கியின் நீளம் | 810 மீட்டர் |
| வடகிழக்கு அலைதாங்கியின் நீளம் | 330 மீட்டர் |
| மேற்கு நுழைவாயில் | 230மீ X 16 மீ |
| வட நுழைவாயில் | 190மீ X 13 மீ |

**சேவைக் காலம்**
வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால சேவை அடிப்படையில் கொழும்புத் துறைமுக வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| 2011 இல் கையாளப்பட்ட கப்பல் சரக்குகளின் அளவு | |
|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 87.3% |
| பிரித்த மொத்தம் | 1.2% |
| உலர் மொத்தம் | 4.2% |
| திரவ மொத்தம் | 7.3% |

**வழி விலகும் காலம்**
பிரதான கிழக்கிலிருந்து மேற்கிற்கு விழும் பிரதான கடல் மார்க்கத்தில் இருந்து எமது பயணக் காலம் 1.5 மணித்தியாலங்களாகும்.

## காலி துறைமுகம்

### துறைமுக பரிமாணம்

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 15.3593 ஹெக்டயார் |
| உட்பிரவேச கால்வாய் | 140 மீட்டர் |
| நிலப் பகுதி | 16.2264 ஹெக்டயார் |
| அங்கீகார உட்பிரவேச கால்வாயின் நீளம் | 130 மீட்டர் |
| அங்கீகார ஆழம் | 7.3 மீட்டர் |

**வேலை நேரங்கள்**
மே தினம் நீங்கலாக வருடத்தின் சகல நாட்களிலும் காலி துறைமுக வேலைகள் 24 மணித்தியாலய வேலை அடிப்படையில் இடம் பெறும். கப்பல் பயணங்கள் பகல் காலங்களில் மட்டுமே இடம்பெறும்.

**வழி விலகும் காலம்**

கிழக்கிலிருந்து மேற்கிற்கு விழும் பிரதான கடல் மார்க்கத்திலிருந்து எமது பயணக் காலம் எதுவுமில்லை.

### நங்கூர வசதிகள்

**மொத்த கரையோர நங்கூரத்தளங்கள் - 05**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| குளோசன்பேர்க் ஜெட்டி | 420 | 8.9 |
| புதிய பாலம் | 162 | 8.9 |
| புதிய பாலம் (குறுக்காக) | 84 | 8.9 |

### களஞ்சிய வசதிகள்

| பெயர் | சராசரி உயரம் (அடி.) | பரப்பளவு (ச.அ) | கொள்ளளவு (கியு. அடி) | அடுக்கும் உயரம் (அடி) |
|---|---|---|---|---|
| இல. 01 | 23 | 13,333 | 306,667 | 10 உயரம் |
| இல. 02 | 23 | 40,000 | 920,000 | 10 உயரம் |

### திருகோணமலை துறைமுகம்

**துறைமுக பரிமாணம்**

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 1,630 ஹெக்டயர் |
| உட் பிரவேச கால்வாய் | 500 மீட்டர் |

**வேலை நேரங்கள்**

திருகோணமலை துறைமுகத்தில் மே தினத்தில் மாத்திரம் கையாளல் மேற்கொள்ளல் தவிர்ந்த வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால வேலை அடிப்படையில் கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கப்பல் பயணங்கள் பகல் காலங்களில் மட்டுமே இடம் பெறும்.

**நங்கூரத்தள வசதிகள்**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| பிரிமா துறைமேடை (உள்ளக) | 122 | 5.9 |
| பிரிமா துறைமேடை (வெளியக) | 240 | 14.2 |
| பிரிமா துறைமேடை (பல்வித) | 179 | 10.3 |
| அஷ்ரப் இறங்குதுறை | 250 | 12.5 |
| பக்க துறைமேடைகள் | 90 X 2 | 8.5 |
| டோக்கியோ சீமெந்து துறைமேடை | 155 | 9.3 |
| எரிபொருள் துறைமேடை (பெற்றோலியம்) | 200 | 9.75 |
| மட்கோ துறைமேடை | 45 | 3.5 |
| ரீரீஏ துறைமேடை | 190 | 2.0-4.0 |
| சிலோன் துறைமேடை | 50 | 2.5 |

| | | |
|---|---|---|
| நகர துறைமேடை | 50 | 2.5 |
| மூதூர் துறைமேடை | 60 | 3.0 |
| வீஸ்ஓ துறைமேடை | 25 | 1.5 |
| பழைய நகர துறைமேடை | 50 | 2.0 |

**குதங்கள் பற்றிய விபரங்கள் - ரீரீஏ**

| குதம் | பரிமாணம் (அடி | சராசரி உயரம் (அடி) | பரப்பளவு (ச.அடி) | அடுக்கும் உயரம் (அடி) | கொள்ளளவு (அடி) |
|---|---|---|---|---|---|
| இல. 03 | 90 X 70 | 15 | 6,300 | 12 | 75,600 |
| இல. 04 | 190 X 95 | 19 | 18,050 | 14 | 252,700 |
| இல . 05 A | 150 X 110 | 25 | 16,500 | 15 | 247,500 |
| இல. 05 B | 150 X 80 | 15 | 12,000 | 12 | 144,000 |
| இல. 06 | 300 X 110 | 20 | 33,000 | 15 | 495,000 |

**மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் – கட்டம் 1**

**துறைமுக பரிமாணம் (துறைமுக பிரதேசம்)**

| | |
|---|---|
| நீர்த் தடாகப் பகுதி | 55.5 ஹெக்டயர் |
| மேற்கு அலைதாங்கியின் நீளம் | 988 மீட்டர் |
| கிழக்கு அலைதாங்கியின் நீளம் | 310 மீட்டர் |
| பிரவேசக் கால்வாய் | 210 மீட்டர் * 16 மீட்டர் |
| திருப்பும் வட்டம் | 600 மீட்டர் |

| | |
|---|---|
| நீர்த் தடாக ஆழம் | 17 மீட்டர் |
| கப்பல் வடிவம் | 100,000 DWT |

**துறைமேடையின் நீளம்**

| | |
|---|---|
| பொதுவான கப்பற் சரக்கு துறைமேடை | 600 மீட்டர் |
| சேவைத் துறைமேடை | 105 மீட்டர் |
| எண்ணெய் துறைமேடை | 610 மீட்டர் |

1505 போர்த்துக்கேயரினால் கடற்படைத் தளமாக / துறைமுகமாக உபயோகிக்க ஆரம்பிக்கப்பட்டதுடன் மேற்கு உலகிற்கு கொழும்பு பற்றித் தெரிந்து கொள்ளக் கிடைத்தமை.

1875 7 ஆம் எட்வெட் மன்னரினால் டிசெம்பர் 09 ஆந் திகதி தென் மேற்கு அலைதாங்கிக்கான அடிக்கல் நாட்டப்படல்.

1882 கொழும்புத் துறைமுகத்தின் நிர்வாகப் பணிக்காக "ஹாபர் போர்ட்" என்னும் பெயரில் சபையொன்று நிறுவப்படல்.

1885 1285 மீட்டர் நீளமான தென் மேற்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்

1898 335 மீட்டர் நீளமான வடகிழக்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1899 உலர் துறைமேடையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படல்.

1906 814 மீட்டர் நீளமான "ஐலன்ட்" அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1906 உலர் துறைமேடையின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்படல்

1909 உலர் துறைமேடைக்கான 250 மீட்டர் நீளமான வழிகாட்டிப் பாலத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல். (ஆழமான நீரில் அமைந்த முதல் கரையோர நங்கூரத்தளம் இதுவாகும்.)

1912 தற்போது ஜய கொள்கலன் முனையம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நிலக்கரி இறக்கும் 18 துறைமேடைகளின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல் .

1912 தென் மேற்கு அலைதாங்கியின் பகுதி 550 மீற்றர் வரை நீடிக்கப்படல்.

1913 துறைமுக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக துறைமுக ஆணைக்குழு அமைக்கப்படல்.

1922 பெற்றோலிய எண்ணெய் வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படல்.

1950 9 முதல் 11 மீட்டர் ஆழத்துடன் கூடிய 15 கரையோர நங்கூரத்தளங்கள், 7.5 மீட்டர் ஆழமான நீரில் 02 நங்கூரத்தளங்கள், 55,800 சதுர மீற்றர் கொண்ட அண்மித்த களஞ்சியங்கள் மூலம் மேலும் குத வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1954 தென் மேற்கு அலைதாங்கியின் கரையோர நங்கூரத்தளத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 02 ஆம் எலிசபெத் இராணியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதனால் அது "எலிசபெத் இராணி இறங்குதுறை" எனப் பெயரிடப்பட்டது. அதில் நங்கூரமிடப்பட்ட முதல் கலம் இங்கிலாந்து அரசுக்குரிய "கோதிக்" எனும் கப்பலாகும்.

1956 17 கரையோர நங்கூரத்தளங்கள் அண்மித்த களஞ்சியங்கள் மற்றும் குதங்கள் நிர்மாணிக்கப்படல்.

1958 கொழும்புத் துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்பட்டு துறைமுக (கப்பற் சரக்கு) கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்படல்.

1964 காலி துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல் .

1967 துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் நிறுவப்படல்.

| | |
|---|---|
| 1967 | திருகோணமலைத் துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல். |
| 1979 | துறைமுக ஆணைக்குழு, துறைமுக (கப்பற் சரக்கு) கூட்டுத்தாபனம் மற்றும் துறைமுக ஒத்துப்பார்த்தலும் பாதுகாப்புக்குமான சேவைகள் கூட்டுத்தாபனம் போன்றவற்றினை ஒன்றிணைத்து இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்படல். |
| 1980 | ஜப்பான் நாட்டின் உதவியுடன் கொழும்புத் துறைமுகத்திற்கான பாரிய திட்டமொன்று தயாரிக்கப்படல். |
| 1980 | எலிசபெத் இராணி இறங்குதுறையின் புதிய முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1982 | முதலாவது "கன்ட்றி" பாரம் தூக்கியான "ரன்கோ 80" சேவையில் ஈடுபடுத்தப்படல். |
| 1982 | ஜப்பானின் வ/ப பென்றா ஓசன் வக்கச்சிக்கு" ஒன்றிணைந்த வியாபாரத்துடன் புதிய கொள்கலன் முனையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடல். |
| 1983 | சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1984 | சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் 02 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1984 | ஹிற்ராச்சி வகையின் 04 றான்ஸ்பர் பாரம் தூக்கிகள் எலிசபெத் இராணி இறங்குதுறை நங்கூரத்தளத்தின் சேவையில் ஈடுபடுத்தப்படல். |
| 1985 | ஜய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட வேலைகள் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல். |
| 1987 | இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையம் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல். |
| 1987 | ஜய கொள்கலன் முனையத்தின் II ஆம் கட்ட வேலைகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1988 | கப்பல்களைக் கட்டி வைப்பதற்கு நீரில் அமைந்துள்ள ஒருமுனை மிதவை நங்கூரத்தளம் அமைத்து சேவையில் ஈடுபடுத்தப்படல். |
| 1994 | புதிய துறைமுக உட்புகு பாதையின் வேலைகள் பூர்த்தி செய்யப்படல். |
| 1995 | ஜய கொள்கலன் முனையத்தின் III ஆம் கட்ட பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1996 | ஜய கொள்கலன் முனையத்தின் IV ஆம் கட்ட பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1998 | ஐக்கிய கொள்கலன் முனையத்தின் வேலைகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல். |
| 1998 | இணைந்த துறைமுகங்கள் (அபிலயேற்றட் போட்ஸ்) சம்மேளனம் நிறுவப்படல் |
| 1999 | கிழக்கு கடற்கரையின் ஒலுவில் வெளிச்ச வீட்டை சேவையில் ஈடுபடுத்துதல் அத்தோடு ஒலுவில் கடல்சார் பயிற்சி நிலையமும் திறந்து வைத்தல். |
| 1999 | இராணி இறங்குதுறையில் சவுத் ஏஷியா கேட்வே டேமினல்ஸின் (கியு.சீ.ரீ) அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்படல். |

1999 திருகோணமலைத் துறைமுகத்தில் கரையோர நங்கூரத்தளங்கள் நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 கொழும்பு தென் துறைமுகத்தின் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல்.

2000 காலி துறைமுகத்தில் புதிய நங்கூரத்தளம் நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 பேலியகொடை கொள்கலன் கப்பற் சரக்கு முனையம் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 காலி துறைமுகம் பிராந்திய துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படும் குறிப்பிட்ட திட்டத்தின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல்.

2000 வடபாலத்தின் II ஆம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 ஒரே இடத்திலான ஆவணமாக்கல் நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

2001 காலி துறைமுகத்தின் புதிய துறைமேடை வைபவரீதியாக திறந்து வைக்கப்படல்.

2003 ஒலுவில் துறைமுக உட்புகு பாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

2003 குறை கொள்கலன் (எல்.சி.எல்) மற்றும் பிரித்த மொத்த கப்பற் சரக்குகளுக்கான சேவைகள் வழங்கும் நிலையம் ஆரம்பித்து வைக்கப்படல்

2003 இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக நூதனசாலை திறந்து வைக்கப்படல்.

2003 சிவில் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் ஐக்கிய கொள்கலன் முனையம் வைபவரீதியாக திறந்து வைத்தல்.

2004 ஐக்கிய கொள்கலன் முனையத்தின் கொள்கலன் கையாளும் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல்.

2004 இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெள்ளிவிழா கொண்டாட்டங்கள்.

2004 பாரிய அளவிலான சேவைப் பிரிவான ஜய கொள்கலன் முனையம் தேசிய உற்பத்தித் திறனுக்கான விருதை பெற்றுக்கொள்ளல்.

2004 கொழும்புத் துறைமுகத்தினால் 02 மில்லியன் கொள்கலன்கள் கையாளப்படுதல் .

2005 ஒலுவில் துறைமுகம் மற்றும் வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

2005 தேசிய உற்பத்தித் திறன் தொடர்பான செயலகத்தினால் மத்திய தர சேவை பிரிவிற்கான திறன் சான்றிதழ், இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையத்துக்கு வழங்கப்படல்.

2006 கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் பாதுகாப்பு மற்றும் மெகாபோர்ட் உபகரணங்கள் அறிமுகம் செய்து வைக்கப்படல்.

2006 கொழும்பு தென் துறைமுக நிர்மாணம் தொடர்பிலான உத்தேச கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செய்திட்டத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2006 ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் (முதலாம் கட்டம் ) விபரமான வடிவமைப்பு வேலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2007 ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைத்தல் மற்றும் நிதி ஒப்பந்தம் கைச்சாத்திடல்

| | |
|---|---|
| 2008 | ஒலுவில் துறைமுக திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல். |
| 2008 | கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல். |
| 2008 | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான உடன்பாடு கைச்சாத்திடல்.. |
| 2009 | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள், எண்ணெய்த் தாங்கித் தொகுதி மற்றும் நிர்வாக கட்டிட நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டுதல். |
| 2009 | ஜய கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதி "NAVIS" வரை தரமுயர்த்துதல். |
| 2010 | 2010.08.15 ஆந் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக நீர்த்தடாகத்துக்கு கடல்நீர் நிரப்பும் வைபவம். |
| 2010 | 2010.11.18 ஆந் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் வைபவரீதியாக அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்படல். |
| 2010 | ஜய கொள்கலன் முனையத்தில் 02 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல். |
| 2010 | கொழும்புத் துறைமுகத்தில் 04 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல். |
| 2011 | **06 புதிய கன்ட்றி பாரமுயர்த்திகளினதும் 30 றான்ஸ்பர் பாரமுயர்த்திகளினதும் வருகை.** |
| 2011 | **இலங்கை து.றைமுக அதிகாரசபையின் கொழும்பு எண்ணெய் முனையத்தின் கொள்ளளவு விரிவாக்கப்படுதல்.** |
| 2011 | **50 முனைய டிரக்டர்களின் வருகை** |
| 2011 | **கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் கீழ் தென் கொள்கலன் முனைய ஒப்பந்தம் கைச்சாத்திடல் .** |
| 2011 | **மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் புதிய வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம்** |
| 2011 | **தென் கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம்.** |

# நிதி அறிக்கைகள்

2011.12.31 ஆம் திகதி வரையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பின்வருமாறு.

**கலாநிதி பிரியத் பீ விக்ரம**
**தலைவர்**

**திரு. இந்திக கருணாஜீவ**
**உப தலைவர்**

**கெப்டன் நிஹால் கெப்பெட்டிபொல**
**முகாமைப் பணிப்பாளர்**

**டாக்டர் சஞ்ஞய சேதர செனரத்**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

**திரு. அநுர ஜயவிக்ரம**
**பணிப்பாளர்**

**திரு.எஸ்.ஆர். ஆட்டிகல**
**பணிப்பாளர்**

**திருமதி. டப்ளியு சுதர்மா கருணாரத்ன**
**பணிப்பாளர்**

**கலாநிதி (திருமதி) தமித டி சொய்ஸா**
**பணிப்பாளர்**

**திரு. ஏஷன டி சில்வா**
**பணிப்பாளர்**

மீளாய்வாண்டில் பணிப்பாளர் சபையினால் 14 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையின் உப குழுவாக செயற்படுகின்ற முகாமைக் குழு 10 முறை கூடியதுடன் ஏனைய உப குழுவான கணக்காய்வுக் குழு 04 முறை கூடியுள்ளது. கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்ட பணிப்பாளர்கள் பின்வருமாறு.

**திரு.எஸ்.ஆர். ஆட்டிகல**
**திருமதி. டப்ளியு எஸ் கருணாரத்ன**

இலங்கை துறைமுக அதிகாரசபை 2011 ஆண்டினுள் 4,262,887 இருபது சம அலகுகள் கொண்ட கொள்கலன் கையாளப்படுதலின் ஊடாக புதிய சாதனையொன்றை நிலை நாட்டியது. 4.26 மில்லியன் இருபது சம அலகுகள் கொண்ட கொள்கலன் கையாளலின் மூலம் 2010 ஆண்டின் சம்பந்தப்பட்ட காலத்துடன் ஒப்பிடப்படுகையில் கொழும்புத் துறைமுகம் 3.0% வளர்ச்சியினைக் காட்டியுள்ளது.

4.26 மில்லியன் இருபது சம அலகுகள் கொண்ட கொள்கலன்களின் மொத்த கொள்ளளவில் 2.29 மில்லியன் இருபது சம அலகுகளையுடைய கொள்கலன் கையாளலில் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டு ஜய கொள்கலன் முனையம் சாதனையை எட்டியது. SAGT நிறுவனத்தின் – 0.3% எதிர்மறை எண் வளர்ச்சியுடன் ஒப்பிடப்படுகையில் 6.1% வினால் ஜய கொள்கலன் முனையத்தின் கையாளல் கொள்ளளவு அதிகரித்துள்ளது.

- 2010 ஆம் ஆண்டில் 4.13 மில்லியன் இருபது சம அலகுகளான கொழும்பு துறைமுகத்தின் கையாளல் அளவு 2011 ஆம் ஆண்டில் 4.26 மில்லியன் இருபது சம அலகுகள் வரை அதிகரித்தது. (வளர்ச்சி 125,446 இருபது சம அலகுகள் அல்லது 3.0%)
- 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2011 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தில் உள்நாட்டு கொள்கலன்களின் வளர்ச்சி 12.3% (114,642 இருபது சம அலகுகள்) ஆகும்
- 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் கொழும்புத் துறைமுகத்தில் மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் அளவின் வளர்ச்சி 0.9 % (28,239 இருபது சம அலகுகள்) ஆகும்.

* 2010 ஆம் ஆண்டின் 58.7 தொன் மில்லியனுடன் ஒப்பிடப்படுகையில் கொழும்புத் துறைமுகத்தினால் கையாளப் பெற்ற மொத்த தொன் அளவு 62.0 தொன் மில்லியன் வரை (5.5%) அதிகரித்துள்ளது.

* 2010 ஆம் ஆண்டின் 48,234 அலகுகளுடன் ஒப்பிடப்படுகையில் உள்நாட்டு மோட்டார் வண்டிகள் 90,824 அலகுகள் கையாளப்பட்டு 98.4% கான பாரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2011 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை 3910 இருந்து 4124 வரை 5.5% கான அதிகரிப்பு காணப்படுகின்றது. கொள்கலன்களைக் கொண்ட கப்பல்களின் வருகையிலும் 2010 ஆம் ஆண்டில் 3,076 இருந்து 3187 வரை 3.6% கான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வினைத்திறன் மற்றும் பரிமாணம் அதிகரிக்கப்படுவதற்காக கப்பல்களிலிருந்து கரைக்கு கொள்கலன் இறக்கும் 6 புதிய கன்ட்றி பாரமுயர்த்திகளும் 30 றான்ஸ்பர் பாரமுயர்த்திகளும் 50 முனைய டிரக்டர்களும் பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டன.

ஜய கொள்கலன் முனையம் நோக்கி மேலதிகமாக கொள்கலன்கள் கவரப்படுவதற்கான பல்வேறு வர்த்தக மூலோபாயங்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதோடு முன்னணி நிலையிலான கப்பல் கம்பெனிகளோடு சில முனைய சேவை ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபையுடனான முனைய சேவை ஒப்பந்தங்களுக்குட்பட்டுள்ள கப்பல் கம்பெனிகளினால் விசேடமாக ஜய கொள்கலன் முனையத்தின் கொள்ளளவு அதிகரிக்கப்படுவதற்கான உன்னத ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டினுள் புதிதாக 05 பிரதான கப்பல் சேவைகளும் 01 ஊட்டக் கப்பல் சேவையும் ஜய கொள்கலன் முனையம் நோக்கி கவரப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவத்தின் முனைப்பான வர்த்தக மூலோபாயங்கள், இயக்கம், மனித வளம் மற்றும் முனைய முகாமைத்துவத் தொகுதியின் உயர் மேம்படுத்துதல் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிகளுக்கான சிறந்த ஒத்துழைப்பினை நல்கியது. ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களின் கையாளல் தொகுதிக்குப் பதிலாக NAVIS SPARCS/ EXPRESS மீள் நிறுவப்பட்டு அது சகல முனைய கையாளல் ஒன்றிணைக்கப்படுவதற்கும் திட்டமிடல் மற்றும் நுழைவாசல்கள், பாலங்களுக்கிடையில் கொள்கலன் துரிதமாக போக்குவரத்து செய்யப்படுவதற்கும் இதனால் கொள்கலன்கள் மற்றும் கப்பல்கள் தாமதமாக திருப்பியனுப்பப்படும் காலங்கள் குறைக்கப்படுவதற்கும் உதவியுள்ளது.

தற்போதைய பொருளாதார வளர்ச்சி வேகம் குன்றுதல், கப்பல்களுக்கான சேவைகள் வழங்கப்படுவது நிறுத்தப்படுதல் குறைந்த கேள்வி காரணமாக கொள்கலன் வர்த்தகத்திற்கு பாரிய தாக்கம் ஏற்படுகின்றது. குறை கப்பற் சரக்குகளின் ,போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் கப்பல்களின் எண்ணெய் விலைகள் அதிகரித்ததனால் கொள்கலன் கப்பல்களின் போக்குவரத்து சேவைகளின் இலாபம் குறைந்து காணப்படுகின்றது. அநேக கப்பல் கம்பெனிகள் பெறும் நஷ்டங்களைத் தொடர்ந்தும் தடுப்பதற்காக 2013 ஆம் ஆண்டு வரை பங்காளிகளோடு கப்பல் சேவைகளை நடாத்துதல் உள்ளடங்கலான பல மூலோபாயங்கள் பின்பற்றி வருகின்றன.

2011 ஆம் ஆண்டின் இறுதியில் எதிர்நோக்கிய பொருளாதார வீழ்ச்சி காரணமாக உலகில் முன்னணி நிலையிலான அநேக துறைமுகங்களினால் 2011 ஆம் ஆண்டில் ஒத்த இலக்கத்திலான வளர்ச்சியே அடையப் பெற்றுள்ளது.

2011 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானம் ரூபா 31,250.5 மில்லியனாக இருந்தது இது 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 10.5% வளர்ச்சியாகும். 2010 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் இயக்க இலாபம் ரூபா 4,386.9 மில்லியனிலிருந்து 2011 ஆம் ஆண்டில் ரூபா 8,291.8 மில்லியன் வரை வளர்ச்சிடைந்துள்ளது. இது 89% அதிகரிப்பாகும்.

# நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்குப் புத்தகங்கள் முறையாக பேணப்படுதலையும், அச்செயற்பாட்டின் நிலைமை மற்றும் வருடத்தின் இலாப நட்டங்களின் தன்மை பற்றியதிலான உண்மையானதும் தெளிவான எண்ணப்பாடும் ஏற்படும் வண்ணம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றதென்பதனை 1971 இன் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் (12) மற்றும் (13.6) ஆம் பிரிவின் மீது உறுதிப்படுத்துதல் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும்.

அதன்படி கணக்குப் புத்தகங்கள் முறையாகப் பேணி நடாத்திச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிதி நிலைமைகள் தொடர்பில் அறிக்கை செய்யப்படும் முறை பற்றியதில் பணிப்பாளர் சபையின் கூட்டங்களின் போதும் கணக்காய்வுக் குழு ஊடாகவும் தொடர்ச்சியான பரீட்சித்தலுக்குட்படுத்தப்படும்.

இப்புத்தகத்தில் குறிப்பிடப்படும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் சம்பந்தப்பட்ட கணக்குக் கொள்கைகள் அனுசரிக்கப்படுவதற்கும் நீதியானதும், தூரநோக்குடனான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் உதவி பெறப்படுவதற்கும் பணிப்பாளர்களினால் கவனத்திற்கொள்ளப்படும்.

அதிகாரசபையின் சொத்துக்களைப் பாதுகாத்தல், நிதி மோசடி மற்றும் வேறு ஒழுங்கீனங்களைக் கண்டு பிடிப்பதற்கும் தடுப்பதற்கும் அவர்களுக்கு சார்பாகவுள்ள நீதியான காரணங்களின் மீது பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகள் முறையாகப் பேணப்பட்டு அதன் சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதற்கும் சம்பந்தப்பட்ட அறிக்கைகளின் உண்மை மற்றும் நம்பிக்கைத் தன்மை செயலுருவில் உயர் நிலைக்குக் கொண்டு வரும் பொருட்டு உள்ளக பரீட்சிப்புக்கள், உள்ளக கணக்காய்வுகள், நிதி சார்பிலானதும் வேறு நிர்வாக நடவடிக்கைகளைப் பேணுவதற்கும் முனைப்பான பரந்த உள்ளக நிர்வாக முறையொன்று ஏற்படுத்தப்படுவதற்கு பணிப்பாளர் சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படி**

**கபில லியனகமகே**
**பணிப்பாளர் சபைச் செயலாளர்**

தனது மேற்பார்வையினாலான பொறுப்பு நிறைவேற்றப்படுகையில் பணிப்பாளர் சபைக்கு உதவுதல் கணக்காய்வுக் குழுவின் பொறுப்பாகும். இதை நிறைவேற்றும் வகையிலான குழுவின் பிரதான பொறுப்பு பின்வருமாறு.

- பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு உறுதி செய்தல்
- நிதிசார் கூற்றுக்கள், நிதி அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு செயற்பாடுகளின் உண்மைத் தன்மை மீளாய்வு செய்தலும் மேற்பார்வையும்.
- யாப்பு ரீதியானதும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு இசைவானதெனவும் உறுதிப்படுத்தல்
- இயக்க செயற்பாட்டுத் திறன் மற்றும் ஆகுசெலவு கட்டுப்பாடு உறுதிப்படுத்தப்படும் வகையிலான தொகுதிகளின் மீளாய்வு

பொது திறைசேரியின் பிரதிநிதி/ இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளரினால் கணக்காய்வுக் குழுவின் தலைமைத்துவம் வகிக்கப்படுவதோடு அதிகாரசபையினால் அதன் மேம்பாட்டிற்காக மீளாய்வாண்டினுள் பல முக்கியமான செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

முக்கியமான ஆரம்ப உள்ளகக் கட்டுப்பாடு நடைமுறை 2011 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் கணக்காய்வு வேலைத்திட்டக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படுதலின் மூலம் அச் செயற்பாட்டின் வினைத்திறன் தினந்தோறும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2010 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட துறைமுக அதிகாரசபையின் கணக்குகள் பற்றியதான நகல் அறிக்கை அதற்காக கிடைக்கப்பெற்ற பிரதிபலிப்புகளோடு முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்யப்பட்டன. உள்ளகக் கட்டுப்பாட்டுத் தொகுதிகள் கணக்காய்வுகளோடு தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்களின் மீது பின் ஆய்வு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. குழுக் கூட்டங்களின் போது எழுப்பப்பட்ட சில விசேட விடயங்கள் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகளோடு பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்யப்பட்டன.

தேவையான பரீட்சிப்புக்கள் மற்றும் சம நிலைமை நிலவுகின்றதென கணக்காய்வுக் குழுவின் கருத்தாக இருப்பதோடு அதிகாரசபையின் சொத்துக்கள் பாதுகாப்பதற்கு அதன் ஊடாக நியாயமான உறுதிப்பாடு அளிக்கப்படுகின்றதெனவும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பிழையின்றிய தகவல்களெனவும் வெளிப்படுத்தப்படுவதன் மூலம் நிதிசார் நிலைமைகள் பேணப்பட்டன. ஆண்டினுள் நிர்வாக மேம்பாடு தொடர்பில் குழுவினால் முக்கிய பங்களிப்பு வழங்கப்பட்டதோடு அதிகாரசபையின் பணிகள் இதனால் வெளிப்படையான முறையில் நடாத்திச் செல்லப்பட ஒத்தாசைகள் அளிக்கப்பட்டன



**எஸ் ஆர் ஆட்டிகல**
**தலைவர் – கணக்காய்வுக் குழு**

சட்டபூர்வ தேவைகளுக்கு இணங்குதலின் முக்கியத்துவம் தொடர்பான விடயங்கள் பின்வருமாறு

**ஊழியர் சேமலாப நிதி அதிகாரசபையினதும் ஊழியர்களினதும் பங்களிப்பு**

சகல ஊழியர்களுக்குமுரிய இலங்கை துறைமுக அதிகாரசபையினது பங்களிப்பு 15% மற்றும் ஊழியர்களின் பங்களிப்பு 10% உரிய மாத இறுதிக்குள் தொழில் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஊழியர்களுக்கான அதிகாரசபையினதும் ஊழியர்களினதும் பங்களிப்பு குறிப்பிட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ளது.

**ஊழியர் நம்பிக்கை நிதி**

அதிகாரசபையின் மாதாந்த பங்களிப்பான 3% குறிப்பிடப்பட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ளது.

**உழைக்கும் போதே செலுத்தும் வரி**

உழைக்கும் போதே செலுத்தும் வரி குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**வருமான வரி**

ஈட்டப்பெற்ற வருமானத்திற்கான வரி செலுத்துதல் வரி செலுத்த வேண்டிய வருமானம் பெறப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் குறிப்பிடப்பட்ட திகதியில் மூன்று மாதத்திற்கொருமுறை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**வருடாந்த தரவு அறிக்கைகள்**

2011 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான அதிகாரசபையின் வருமான வரி தொடர்புபட்ட வருடாந்த அறிக்கைகள் தேசிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் வருடாந்தம் சேவையிலிடப்படுகின்றது. இது சகல ஆண்டுகளிலும் குறிப்பிட்ட திகதியான நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**வருடாந்த அறிக்கையிடல்**

சகல வருடங்களிலும் வரவு செலவு மற்றும் கணக்குகள், வருடாந்த அறிக்கைகள் ஆகியவை இலங்கை பாராளுமன்றம், பொது திறைசேரி மற்றும் அமைச்சிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

| விடயம் | கொழும்பு துறைமுகம் ரூபா | மூன்று துறைமுகங்களும் திருகோணமலை துறைமுகம் ரூபா | காலி துறைமுகம் ரூபா | 2011 இ.து.அ.ச ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|---|---|
| புள்ளி விபரங்கள் | | | | | |
| **வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை** | | | | | |
| சரக்கு கப்பல்கள் | 3,935 | 114 | 52 | 4,101 | 3,879 |
| ஏனைய கப்பல்கள் | 189 | 12 | 21 | 222 | 188 |
| பாய்மரக் கப்பல்கள் | - | - | - | - | - |
| ஏனைய கப்பல்கள் | 648 | 35 | 147 | 830 | 590 |
| | **4,772** | **161** | **220** | **5,153** | **4,657** |
| **கையாளப்பட்ட** | | | | | |
| **கொள்கலன் ரீ.ஈ.யூக்கள் (இ.து.அ)** | | | | | |
| மாற்றியேற்றல் | 1,583,195 | | | 1,583,195 | 1,533,845 |
| உள்நாட்டு | 647,482 | | | 647,482 | 563,349 |
| மீளடுக்குதல் | 68,769 | | | 68,769 | 69,979 |
| **மொத்த ரீ.ஈ.யூக்கள்** | **2,299,446** | | | **2,299,446** | **2,167,173** |
| **கொள்கலன் ரீ.ஈ.யூக்கள் (எஸ்.ஏ.ஜீ.ரீ)** | | | | | |
| மாற்றியேற்றல் | 1,540,633 | | | 1,540,633 | 1,561,744 |
| உள்நாட்டு | 399,404 | | | 399,404 | 368,895 |
| மீளடுக்குதல் | 23,404 | | | 23,404 | 39,629 |
| **மொத்த ரீ.ஈ.யூக்கள்** | **1,963,441** | | | **1,963,441** | **1,970,268** |
| **கொள்கலன் ரீ.ஈ.யூக்கள் (கொழும்பு துறைமுகம்)** | | | | | |
| மாற்றியேற்றல் | 3,123,828 | | | 3,123,828 | 3,095,589 |
| உள்நாட்டு | 1,046,886 | | | 1,046,886 | 932,244 |
| மீளடுக்குதல் | 92,173 | | | 92,173 | 109,608 |
| **மொத்த ரீ.ஈ.யூக்கள்** | **4,262,887** | | | **4,262,887** | **4,137,441** |
| மரபு முறையான மெ/தொ | 3,341,819 | 2,459,797 | 463,772 | 6,265,388 | 5,463,238 |
| திரவ மெ/தொ | 4,564,550 | 113,854 | - | 4,678,404 | 4,349,830 |
| | **7,906,369** | **2,573,651** | **463,772** | **10,943,792** | **9,813,068** |
| **சம அலகு (மெ/தொ) இ.து.அ** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 28,112,186 | - | - | 28,112,186 | 26,433,676 |
| மரபு முறையான சரக்கு | 3,341,819 | 2,459,797 | 463,772 | 6,265,388 | 5,463,238 |
| திரவம் | 4,564,550 | 113,854 | - | 4,678,404 | 4,349,830 |
| **மொத்த சம அலகு (மெ/தொ)** | **36,018,555** | **2,573,651** | **463,772** | **39,055,978** | **36,246,744** |
| **சம அலகு (மெ/தொ) (எஸ்.ஏ.ஜீ.ரீ)** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 25,996,790 | - | - | 25,996,790 | 24,992,648 |
| மரபு முறையான சரக்கு | - | | | - | - |
| திரவம் | - | | | - | - |
| **மொத்த சம அலகு (மெ/தொ)** | **25,996,790** | **-** | **-** | **25,996,790** | **24,992,648** |
| **சம அலகு (மெ/தொ) கொழும்பு துறைமுகம்** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 54,108,976 | - | - | 54,108,976 | 51,426,324 |
| மரபு முறையான சரக்கு | 3,341,819 | 2,459,797 | 463,772 | 6,265,388 | 5,463,238 |
| திரவம் | 4,564,550 | 113,854 | | 4,678,404 | 4,349,830 |
| **மொத்த சம அலகு (மெ/தொ)** | **62,015,345** | **2,573,651** | **463,772** | **65,052,768** | **61,239,392** |
| **கையாளப்பட்ட மொத்த (மெ/தொ) (இ.து.அ)** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 71,488,979 | - | - | 71,488,979 | 70,054,498 |
| மரபு முறையான சரக்கு | 12,799,645 | 1,848,270 | 303,227 | 14,951,142 | 13,112,399 |
| ஏனையவை | 2,434,403 | 160,153 | 80,812 | 2,675,368 | 2,281,121 |
| **மொத்தத் தொன்னளவு** | **86,723,027** | **2,008,423** | **384,039** | **89,115,489** | **85,448,018** |
| **கையாளப்பட்ட மொத்தத் தொன்னளவு (எஸ்.ஏ.ஜீ.ரீ)** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 40,805,183 | - | - | 40,805,183 | 35,487,925 |
| மரபு முறையான சரக்கு | | | | - | - |
| ஏனையவை | | | | | |
| **மொத்தத் தொன்னளவு** | **40,805,183** | **-** | **-** | **40,805,183** | **35,487,925** |
| **மொத்தத் தொன்னளவு (கொழும்பு துறைமுகம்)** | | | | | |
| கொள்கலனிடப்பட்ட சரக்கு | 112,294,162 | - | | 112,294,162 | 105,542,423 |
| மரபு முறையான சரக்கு | 12,799,645 | 1,848,270 | 303,227 | 14,951,142 | 13,112,399 |
| ஏனையவை | 2,434,403 | 160,153 | 80,812 | 2,675,368 | 2,281,121 |
| **மொத்தத் தொன்னளவு** | **127,528,210** | **2,008,423** | **384,039** | **129,920,672** | **120,935,943** |
| **ஆளணி** | | | | | |
| **ஊழியர்களின் தொகை** | **10,083** | **466** | **433** | **10,982** | **12,824** |

| விடயம் | | மூன்று துறைமுகங்களும் 2011 கொழும்பு துறைமுகம் ரூபா | திருகோணமலை துறைமுகம் ரூபா | காலி துறைமுகம் ரூபா | இ.து.அ 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி (ரூபா மில்லியன்) | | | | |
| துறைமுக செயற்பாடுகளிலிருந்து இயக்க வருமானம் | | 26,877 | 266 | 399 | 27,542 | 25,046 |
| ஏனைய வருமானம் | | 3,648 | 19 | 42 | 3,708 | 3,233 |
| **மொத்த வருமானம்** | | **30,525** | **285** | **441** | **31,250** | **28,279** |
| இயக்க மற்றும் ஏனைய செலவினம் | | (23,140) | (603) | (588) | (24,330) | (25,118) |
| தேறிய இலாபம் /(நட்டம்) வரி மற்றும் அ.சே இலாபம் நட்டத்தின் முன் | | | | | | |
| **தேறிய இலாபம் / (நட்டம்) சு.வி.ஓ.திட்ட முன்** | | 7,385 | (318) | (147) | 6,920 | 3,162 |
| **தேறிய இலாபம் / (நட்டம்) வரிக்கு முன்னர்** | | 1,548 | (532) | (233) | 782 | (1,248) |
| **தேறிய இலாபம் / (நட்டம்) வரிக்கு பின்னர்** | | 1,348 | (532) | (233) | 583 | (1,065) |
| முன்னைய காலப்பகுதியின் சீராக்கல்கள் | | (1,163) | (1.09) | (9) | (1,173) | 982 |
| மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு உழைப்புக்கள் | | 22,195 | 217 | 337 | 22,749 | 20,858 |
| | அலகு | விகிதாசாரம் | | | | |
| **ஒரு தொன்னுக்கு சரக்கு** | | | | | | |
| இயக்க மற்றும் ஏனைய வருமானம் | Rs. | 847 | 111 | 950 | 800 | 780 |
| இயக்க மற்றும் ஏனைய செலவினம் | Rs. | (642) | (234) | (1,268) | (623) | (693) |
| ஒரு தொன்னுக்கு தேறிய இலாபம் | Rs. | 205 | (124) | (317) | 177 | 87 |
| பேரோலுக்கமைய செலவினம் | Rs. | 11,999 | 500 | 408 | 12,907 | 14,088 |
| **பேரோலுக்கமைய** | | | | | | |
| மொத்த செலவினம் | % | (52) | (83) | (69) | (53) | (56) |
| மொத்த வருமானம் | % | 39 | 175 | 93 | 41 | 50 |


வருமானம் (துறைமுக செயற்பாடுகளுக்கமைய)
வருமானம் ரூபா மில்லியன்
20,000
15,000
10,000
5,000
2011
2010
வருடம்
கப்பலோட்டடம்
கப்பல் சுமை
வாப்பு கையாளல்
துறைமுக வசதிகள்
ஏனையவை


இயக்க மற்றும் ஏனைய செலவினம்
ரூபா மில்லியன்
35,000
30,000
25,000
20,000
15,000
10,000
5,000
0
-5,000
2011 இல் செலவினம் ரூபா மில்லியன்
2010 இல் செலவினம் ரூபா மில்லியன்
அதிகரிப்பு/ (குறைவு)
செலவினம்

**பகுதிவாரியாக கையாளப்பட்டவை (மெ/தொ) சரக்குகளுக்கமைய கொழும்பு துறைமுகம் இ.து.அ + எஸ்.ஏ.ஜீ.ரீ)**




**இயக்க வருமானம் பற்றிய பகுப்பாய்வு (மூன்று துறைமுகங்களினதும்**




**2011 ஆம் ஆண்டு வருமானம் சேவைகளுக்கமைய (மூன்று துறைமுகங்களும்)**



| | பக்க இல | குறிப்பு | இ.து.அ 2011 ரூபா | இ.து.அ 2010 ரூபா | ஒன்றிணைக்கப்பட்டது 2011 ரூபா | ஒன்றிணைக்கப்பட்டது 2010 ரூபா |
|---|---|---|---|---|---|---|
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | | |
| சொத்துக்கள் இயந்திர சாலைகள் உபகரணங்கள் | 131 | 3.1.1 | 106,919,647,386 | 110,192,856,624 | 106,932,109,911 | 110,207,307,140 |
| நடைமுறையிலுள்ள மூலதன வேலைகள் | 132 | 3.1.2 | 95,887,852,555 | 69,900,930,976 | 95,887,852,555 | 69,900,930,976 |
| **முதலீடுகள்** | 132 | 3.1.3 | | | - | |
| கம்பனி பங்குகளிலான முதலீடுகள் | 132 | 3.1.3.1 | 21,386,650 | 21,385,150 | 21,386,650 | 21,385,150 |
| துணை முதலீடுகள் | 132 | 3.1.3.2 | 1,000,000 | 1,000,000 | - | - |
| இணை நிறுவனங்களிலான முதலீடுகள் | 132 | 3.1.3.3 | 40,030 | 40,030 | 41,671,220 | 33,901,831 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ முதலீடுகள் | 132 | 3.1.3.4 | 577,372,113 | 577,372,113 | 577,372,113 | 577,372,113 |
| ஏனைய நிதி சொத்துக்கள் மீதான முதலீடுகள் | 133 | 3.1.4 | 5,555,215,255 | 5,140,432,577 | 5,555,215,255 | 5,140,432,577 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | **208,962,513,989** | **185,834,017,470** | **209,015,607,704** | **185,881,329,787** |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | | |
| பட்டியலிடப்பட்ட பொருட்கள் | 133 | 3.2.1 | 1,694,585,948 | 2,543,913,808 | 1,694,585,948 | 2,543,913,808 |
| போக்கிடையிலுள்ள சரக்குகள் | 133 | 3.2.2 | 330,744,796 | 148,575,016 | 330,744,796 | 148,575,016 |
| வியாபார கடனாளிகளும் சேர்ந்த வருமானமும் | 134 | 3.2.3 | 1,828,681,531 | 1,797,815,747 | 1,761,749,871 | 1,765,284,140 |
| வியாபாரமற்ற கடனாளிகளும்,முற்பணக் கொடுப்பனவுகளும் | 134 | 3.2.4 | 726,303,538 | 4,327,694,893 | 726,303,538 | 4,327,694,893 |
| முன்னேற்பாடுகள் | 134 | 3.2.5 | 108,403,249 | 64,479,492 | 108,403,249 | 64,479,492 |
| ஊழியர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | 135 | 3.2.6 | 3,990,643,148 | 4,902,598,162 | 4,021,538,773 | 4,944,099,135 |
| கடன் கணக்குகள் | 135 | 3.2.7 | 573,081 | 1,412,449 | 573,081 | 1,412,449 |
| குறுகிய கால முதலீடுகள் | 135 | 3.2.8 | 3,800,646,450 | 3,114,458,315 | 3,800,646,450 | 3,114,458,315 |
| வைப்புக்களும் ஏனைய கிடைக்க வேண்டியவைகளும் | 136 | 3.2.9 | 393,625,584 | 385,907,578 | 393,811,987 | 386,521,178 |
| காசும் காசு சம மதிப்புகளும் | 136 | 3.2.10 | 689,123,726 | 497,324,681 | 855,129,877 | 581,351,691 |
| | | | **13,563,331,051** | **17,784,180,143** | **13,693,487,570** | **17,877,790,119** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | **222,525,845,041** | **203,618,197,613** | **222,709,095,275** | **203,759,119,906** |
| **ஒப்புரவு மற்றும் பொறுப்புக்கள்** | | | | | | |
| **உபயோகித்த மூலதனம்** | | | | | | |
| ஒப்புரவு மூலதனம் | 136 | 4.1.1 | 470,551,932 | 470,551,932 | 470,551,932 | 470,551,932 |
| ஏனைய மூலதனம் | 136 | 4.1.2 | 7,120,827,853 | 7,120,827,853 | 7,120,827,853 | 7,120,827,853 |
| | | | **7,591,379,785** | **7,591,379,785** | **7,591,379,785** | **7,591,379,785** |
| **ஒதுக்கீடுகளும் ஏற்பாடுகளும்** | | | | | | |
| ஒதுக்கீடு | 136 | 4.2.1 | 2,583,814,576 | 1,468,079,717 | 2,583,814,576 | 1,468,079,717 |
| வெகுமானம் மற்றும் தண்டப்பணம் | 136 | 4.2.2 | 75,430,976 | 70,047,575 | 75,430,976 | 70,047,575 |
| கடன் மீட்பு ஒதுக்கீடு | 137 | 4.2.3 | 3,828,973,373 | 3,828,973,373 | 3,828,973,373 | 3,828,973,373 |
| ஒதுக்கீடுகளை மீள் மதிப்பிடுதல் | 137 | 4.2.4 | 76,429,013,944 | 76,480,827,873 | 76,429,013,944 | 76,480,827,873 |
| தவணையிட்ட வரி | 137 | 4.2.5 | 12,114,566,119 | 12,114,566,119 | 12,114,566,119 | 12,114,566,119 |
| தடுத்து வைக்கப்பட்ட இலாபம் | 137 | 4.2.6 | (15,706,122,495) | (15,167,380,909) | (15,510,244,469) | (15,034,926,191) |
| | | | **79,325,676,493** | **78,795,113,748** | **79,521,554,519** | **78,927,568,466** |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | | |
| துறைமுக அபிவிருத்தித் கடன்கள் (ஜப்பானிய கடன்) | 137 | 4.3.1 | 40,802,618,894 | 42,143,127,127 | 40,802,618,894 | 42,143,127,127 |
| கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டம் (ஏபிடி) கடன் | 137 | 4.3.2 | 26,858,872,434 | 17,128,178,587 | 26,858,872,434 | 17,128,178,587 |
| ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டம் | 137 | 4.3.3 | 33,624,094,097 | 30,552,495,737 | 33,624,094,097 | 30,552,495,737 |
| **தடுத்து வைத்துக்கொண்ட இலாபம் / நட்டம்** | **(15,706)** | **(15,167)** | **(15,412)** | **(17,678)** | **(7,270)** | **251** | **3,426** | **(6,646)** | **(1,601)** | **(1,766)** |
| **கடன் மீட்புக்காக திருப்பப்பட்ட தொகை ஒதுக்கீடு** | - | - | - | - | - | | **(3,426)** | - | (1,815) | - |
| **இலாப மீதி /நட்டம் அந்நிய செலாவணி** | **(15,706)** | **(15,167)** | **(15,412)** | **(17,678)** | **(7,270)** | **251** | - | **(6,646)** | **(3,416)** | **(1,766)** |

| விபரம் | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 | 2005 | 2004 | 2003 மீளமைக்கப்பட்ட | 2003 | 2002 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஐந்தொகை** | | | | | | | | | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 202,807 | 180,094 | 142,962 | 124,752 | 122,651 | 126,064 | 42,920 | 44,420 | 43,354 | 43,354 | 44,497 |
| முதலீடுகள் | 6,155 | 5,740 | 5,256 | 5,135 | 4,480 | 3,849 | 3,190 | 3,750 | 2,415 | 2,415 | 2,260 |
| உப மொத்தம் | 208,963 | 185,834 | 148,218 | 129,887 | 127,131 | 129,914 | 46,110 | 48,170 | 45,769 | 45,769 | 46,757 |
| தவணையிட்ட வருமானம் / அந்நிய செலாவணி தளும்பல் | - | - | - | - | - | | - | - | - | 3,416 | 9,590 |
| மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள் | 208,963 | 185,834 | 148,218 | 129,887 | 127,131 | 129,914 | 46,110 | 48,170 | 45,769 | 49,185 | 56,347 |
| நடைமுறை சொத்துக்கள் | 13,564 | 17,371 | 23,514 | 18,371 | 18,586 | 18,192 | 17,690 | 14,347 | 13,659 | 13,659 | 22,470 |
| நடைமுறை பொறுப்புக்கள் | (14,721) | (12,914) | (14,574) | (12,345) | (11,273) | (10,723) | (11,365) | (10,776) | (8,730) | (8,730) | (9,729) |
| தொழிற்படு மூலதனம் | (1,157) | 4,457 | 8,940 | 6,025 | 7,313 | 7,469 | 6,324 | 3,571 | 4,929 | 4,929 | 12,741 |
| | 207,806 | 190,291 | 157,158 | 135,913 | 134,444 | 137,383 | 52,434 | 51,741 | 50,698 | 54,114 | 69,088 |
| மூலதன உழைப்புக்கள் | 7,591 | 7,591 | 7,591 | 7,591 | 7,591 | 7,591 | 7,591 | 7,591 | 7,591 | 7,591 | 7,591 |
| இருப்புக்கள் / ஒதுக்கீடுகள் | 95,032 | 93,962 | 91,026 | 78,865 | 77,765 | 90,996 | 4,573 | 1,223 | 517 | 517 | 20,080 |
| தடுத்து வைத்துள்ள இலாபம் | (15,706) | (15,167) | (15,412) | (17,678) | (7,270) | 251 | - | (6,646) | (3,416) | - | (1,766) |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 120,888 | 103,903 | 84,261 | 67,134 | 56,357 | 38,545 | 40,270 | 49,574 | 46,006 | 46,006 | 43,183 |
| | 207,805 | 190,290 | 157,158 | 135,913 | 134,443 | 137,383 | 52,434 | 51,741 | 50,698 | 54,114 | 69,088 |
| **இயக்கம் மற்றும் நிதி தொடர்பான முக்கிய விடயங்கள்** | | | | | | | | | | | |
| வருகை தந்துள்ள கப்பல்களின் எண்ணிக்கை | 5,153 | 4,657 | 5,162 | 5,430 | 5,366 | 5,117 | 5,092 | 4,932 | 4,976 | 4,976 | 4,789 |
| கையாளப்பட்டவை | | | | | | | | | | | |
| மாற்றியேற்றல் | 3,216,001 | 3,205,197 | 2,712,305 | 2,874,067 | 2,578,166 | 2,330,189 | 1,716,045 | 1,531,103 | 1,370,119 | | 1,197,277 |
| உள்நாட்டு | 1,046,886 | 932,244 | 751,992 | 813,271 | 803,076 | 748,896 | 739,252 | 689,422 | 589,217 | | 567,417 |
| மொத்த இருபது சம அலகுகள் | 4,262,887 | 4,137,441 | 3,464,297 | 3,687,338 | 3,381,242 | 3,079,085 | 2,455,297 | 2,220,525 | 1,959,336 | - | 1,764,694 |
| கொள்கலன் இ.ச.அ ( எஸ்ஏஜீரீ தவிர்ந்த) | 2,299,446 | 2,167,173 | 1,714,488 | 1,960,898 | 1,834,734 | 1,743,669 | 1,523,794 | 1,320,845 | 1,334,900 | 1,334,900 | 1,206,694 |
| மரபு முறையான தொன்னளவு (மெ.தொ) | 6,265,388 | 5,463,238 | 4,984,390 | 5,863,920 | 5,977,546 | 6,286,583 | 5,893,669 | 5,150,067 | 5,295,937 | 5,295,937 | 4,959,561 |
| திரவ தொன்னளவு (மெ.தொ) | 4,678,404 | 4,349,830 | 4,192,148 | 4,228,839 | 4,432,070 | 4,427,376 | 4,062,599 | 4,270,425 | 3,639,726 | 3,639,726 | 3,943,602 |
| மொத்தம் | 10,943,792 | 9,813,068 | 9,176,538 | 10,092,759 | 10,409,616 | 10,713,959 | 9,956,268 | 9,420,492 | 8,935,663 | 8,935,663 | 8,903,163 |
| **ஆளணி** | | | | | | | | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 10,982 | 12,824 | 13,367 | 13,658 | 12,824 | 13,691 | 13,527 | 13,233 | 13,443 | 13,443 | 17,909 |
| ஈட்டப்பெற்ற அந்நிய செலாவணி (ரூபா. மில்) | 22,749 | 20,858 | 16,897 | 17,921 | 18,216 | 16,198 | 14,986 | 12,806 | 11,791 | 11,791 | 11,218 |
| **ஒரு தொன்னுக்கு கப்பற் சரக்கு** | | | | | | | | | | | |
| இயக்க மற்றும் ஏனைய வருமானம் | 800 | 780 | 786 | 749 | 814 | 746 | 743 | 526 | 536 | 536 | 552 |
| இயக்க மற்றும் ஏனைய வருமானம் | (623) | (693) | (760) | (698) | (740) | (591) | (520) | 537 | 525 | 413 | 454 |
| தேறிய இலாபம் ஒரு தொன்னுக்கு | 177 | 87 | 26 | 52 | 74 | 155 | 223 | (11) | 11 | 123 | 99 |
| பேரோல் மீதான செலவினம் | 12,907 | 14,088 | 12,592 | 13,388 | 14,013 | 8,936 | 6,503 | 5,426 | 4,825 | 4,825 | 5,695 |
| பேரோல் மொத்த செலவினம் | 53% | 56% | 56% | 57% | 59% | 49% | 45% | 30% | 38% | 38% | 44% |
| பேரோல் மொத்த செலவினம் | 41% | 50% | 54% | 53% | 54% | 39% | 32% | 30% | 29% | 29% | 36% |

| | | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 | 2005 | 2004 | 2003* Re-மீளமைக் கப்பட்ட | 2002 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமானம் ஈட்டிய விகிதங்கள்** | | | | | | | | | | | |
| வருமானத்திற்குரிய இயக்க இலாபம் | % | 26.53 | 15.51 | 8.32 | 11.70 | 13.50 | 25.66 | 35.84 | 37.79 | 37.95 | 25.09 |
| தேறிய இலாபம் வரிக்கு முன் மற்றும் வெளிநாட்டு நாணய மாற்று (இ/ந) முன் | % | 22.14 | 11.18 | 3.35 | 6.88 | 9.07 | 20.81 | 30.07 | 30.19 | 15.73 | 24.86 |
| வரிக்கு பின் வருமானத்திற்கான தேறிய இலாபம் | % | 1.86 | (3.76) | 9.06 | (42.04) | (10.67) | 1.09 | 49.01 | (17.18) | (13.41) | (29.09) |
| வருடாந்த வருமான வளர்ச்சி | % | 10.51 | 21.21 | (7.20) | (2.97) | 12.65 | 11.94 | 15.05 | 9.20 | 4.40 | (4.40) |
| முதலீடுகளின் மீதான இலாபம் | % | 3.99 | 2.31 | 1.24 | 2.16 | 2.60 | 4.29 | 14.05 | 13.05 | 12.24 | 5.69 |
| கடன் ஒப்புரவு விகிதங்கள் | | 1.34 | 1.16 | 0.91 | 0.60 | 0.41 | 0.39 | 3.31 | 22.87 | 9.8 | 1.67 |
| **திரவ விகிதங்கள்** | | | | | | | | | | | |
| நடைமுறை விகிதங்கள் | தடவை | 0.9 | 1.3 | 1.6 | 1.5 | 1.3 | 1.7 | 1.5 | 1.4 | 1.6 | 2.3 |
| விரைவான விகிதங்கள் | தடவை | 0.8 | 1.1 | 1.4 | 1.3 | 1.5 | 1.6 | 1.4 | 1.3 | 1.4 | 2.2 |
| வட்டியை ஈடுசெய்தல் | தடவை | 6.0 | 3.6 | 1.7 | 2.4 | 3.0 | 5.3 | 6.2 | 5.0 | 3.3 | 4.4 |
| **உற்பத்தித் திறன் விகிதங்கள்** | | | | | | | | | | | |
| ரீ.இ.யூக்கான மொத்த வருமானம் | ரூபா | 13,590 | 13,049 | 13,608 | 12,822 | 16,756 | 17,226 | 13,486 | 13,522 | 12,253 | 12,983 |
| ரீ.இ.யூக்கான இயக்க செலவினம் | ரூபா | 6,909 | 7,633 | 8,787 | 8,124 | 10,065 | 8,871 | 5,762 | 4,877 | 5,288 | 6,012 |
| ரீ.இ.யூக்கான மொத்த செலவினம் | ரூபா | 12,122 | 13,625 | 12,807 | 17,953 | 17,861 | 13,727 | 9,507 | 13,923 | 12,005 | 15,257 |
| மொத்த வருமானம் ஒரு தொன்னுக்கு | ரூபா | 800 | 780 | 786 | 749 | 814 | 746 | 743 | 727 | 687 | 700 |
| இயக்க செலவினம் ஒரு தொன்னுக்கு | ரூபா | 407 | 456 | 508 | 475 | 489 | 384 | 317 | 262 | 297 | 324 |
| மொத்த செலவினம் ஒரு தொன்னுக்கு | ரூபா | 714 | 815 | 740 | 1,049 | 868 | 633 | 624 | 748 | 673 | 822 |
| தேறிய இலாபம் வரி மற்றும் அ.நா) இ/நட்டத்திற்கு முன் | ரூபா | 177 | 87 | 26 | 52 | 74 | 155 | 223 | 219 | 108 | 174 |
| சரக்கு கையாளல் ஒரு ஊழியருக்கு | தொன் | 3,556 | 2,826 | 2,221 | 2,456 | 2,329 | 2,256 | 2,045 | 1,858 | 1,771 | 1,250 |
| ஒரு மில். நிரந்தர மூலதனத்திற்கு சரக்கு கையாளல் | தொன் | 5,145 | 4,775 | 3,910 | 4,419 | 4,192 | 4,060 | 3,644 | 3,238 | 3,136 | 2,949 |
| ஒரு மில் மூலதன உழைப்பு மீதான கப்பல் சரக்கு கையாளல் | தொன் | 188 | 190 | 189 | 247 | 237 | 224 | 528 | 475 | 470 | 324 |
| ஊழியரொருவருக்கான தொன்னளவு | தொன் | 3,556 | 2,826 | 2,221 | 2,456 | 2,329 | 2,256 | 2,045 | 1,858 | 1,771 | 1,250 |
| ஊழியரொருவருக்கான ரீ.இ.யூக்கள் | ரீ.இ.யூ | 209 | 169 | 128 | 144 | 113 | 128 | 113 | 100 | 99 | 67 |

மேற்குறிப்பிட்ட விடயங்களில் எஸ்.ஏ.ஜீ.ரீ தொன்னளவு உள்ளடக்கப்படவில்லை
மொத்த வருமானத்திற்கு இயக்க மற்றும் ஏனைய வருமானங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

**கணக்கியற் கொள்கை:** நிதி கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கென தொழில் முயலுநர்களினால் பின்பற்றப்படும் முறைகள் குறிப்பிடப்பட்ட அடிப்படைக் கொள்கைகள், அடிப்படைகள், ஒப்பந்தங்கள், ஒழுங்கு விதிகள் போன்றவைகளாகும்.

**சேர்ந்த அடிப்படை:**சேர்ந்தவைகளை விட உழைத்தவைகளை வருமானமாக அடையாளம் காணும் கணக்கு வைக்கும் முறை. செலுத்தப்பட்டவைகளை விட சேர்ந்தவைகள் செலவுகளாக ஏற்றுக்கொள்ளப்படும்.

**சொத்துக்கள்:** வியாபாரத்தின் பொருளாதார வளங்கள்

**அறவிடமுடியா கடன்:** அறவிடப்படமுடியாது என கருதப்படும் கணக்கின் கடன் தொகை, கிடைக்க வேண்டிய தொகை அல்லது அதன் ஒரு பகுதி

**இடப்பட்ட மூலதனம்:** வட்டியிலிருந்து விடுபட்ட பொறுப்புக்கள் மற்றும் ஏனைய ஒதுக்கீடுகள் தவிர்ந்த மொத்த சொத்துக்கள்

**காசு அடிப்படை:** வருமானம் மற்றும் செலவினம் கிடைக்கப்பெற்ற பின்னரும் வழங்கிய பின்னரும் கணக்குவைக்கும் முறை

**காசும்,காசு சம மதிப்புகளும்:** மிக விரைவில் காசாக்கக் கூடிய மற்றும் பெறுமதி மாறுதல்களை கவனத்திற்கொள்ளாத இடர் நிலைக்கு உட்படும் குறுகிய கால எளிதில் காசாக்கக்கூடிய தன்மை மிகவும் கூடிய முதலீடு

**ஒன்றிணைக்கப்பட்ட நிதி கூற்றுக்கள்:** தாய் கம்பெனி மற்றும் அதன் துணை கம்பெனிகளின் ஒன்றின் அல்லது பலவற்றின் ஒன்றிணைந்த நிதி கூற்றுக்களை ஒரு பொருளாதார அலகு என கருதுதல்.

**நடைமுறை சொத்துக்கள்:** ஒரு சுற்றாக அல்லது ஒவ்வொரு ஆண்டினதும் வெவ்வேறு சுற்றுக்களாக பூர்த்தியாக்கிய பின், ஆண்டிற்குள் காசாக்க முடியும் என அல்லது பாவனைக்கு உகந்தது என பொதுவாக கருதும் சொத்துக்கள்

**நடைமுறை பொறுப்புக்கள்:** விற்றுத் தீர்ப்பதற்கான நடைமுறை சொத்துக்கள் என கருதி வகையீடு செய்யப்பட்டிருக்கும் சொத்துக்களைப் பாவித்தல் அல்லது தேவையென வேறு சொத்துக்களை உருவாக்குதல் அல்லது கருதும் பொறுப்புக்கள்.

**நடைமுறை விகிதாசாரம்:** நடைமுறை சொத்துக்களை நடைமுறை பொறுப்புக்களால் பிரித்தல் எளிதில் காசாக்கக் கூடிய முறையாகும்.

**தவணையிட்ட வரி:** மீளாய்விற்குரிய கால எல்லை தவிர்ந்த ஏனைய கால எல்லைகளுள் வரி பண்டங்களினதும், கணக்கியல் அடிப்படைக் கொள்கைகளினதும் இடைப்பட்ட கால எல்லை மற்றும் அளவையின் மாறுதல்கள் காரணமாக செலுத்த வேண்டி ஏற்படும் வரி பணத்திற்கென இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒதுக்கப்பட்ட தொகை.

**அதிவிசேட பொருட்கள்:** அசாதாரண தன்மை மற்றும் சில வேளைகளில் மாற்றம் ஏற்படுத்தலுக்கு அமையும் விசேட நிகழ்வுகள் மற்றும் கொடுக்கல் வாங்கலின் அதிவிசேட பொருட்கள் உரிய வருமான வரி தொகையை கழித்து நிறுவனத்தின் வருமானம் இயக்கம் கூற்றில் வெவ்வேறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஒப்புரவு முறை:** தாய் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ள முதலீட்டு கம்பெனியின் தேறிய சொத்துக்களின் பகுதிய மாற்றங்களுக்கு அமைவான விதத்தில் சகல ஐந்தொகை திகதிக்கும் முதலீடு புதுப்பிக்கப்படும் கணக்கியல் முறையாகும்.

**முகப் பெறுமதி:** பிணைகள் / நாணய தாளொன்று முதிர்வடையும் போது கிடைக்க வேண்டிய தொகை

**அந்நிய செலாவணி இலாபம் / (நட்டம்)**: சந்தர்ப்பத்திற் கேற்ப மாறுபடும் விகிதம் மற்றும் நிரந்தர விகிதத்தின் செலாவணி இலாபம் / (நட்டம்) என கருதப்படும்.

சொத்துக்கள் அல்லது பொறுப்பு அந்நிய செலாவணி விகிதத்திற்கு வகுக்கப்படுகையில் அவை ஐந்தொகைத் திகதியில் இலங்கை நாணய விகிதத்திற்கு மாற்றப்பட்டு அடையாளம் காணும் இலாபம்/ (நட்டம்) ஆக மாற்றப்படும்.

**வருமான கூற்று:** குறிப்பிடப்பட்ட ஒரு கால எல்லைக்குரிய வருமானம் மற்றும் செலவினத்தின் பிரதிபலனின் சாராம்சம்

**குத்தகைகள்** : குத்தகையாளர்களினால் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியொன்று தொடர்பில் பயன்படுத்தப்பட்ட உரிமை வழங்கப்படும்போது குத்தகைக்கான மீள ஒப்படைக்கப்படுதலின் கொடுப்பனவு அல்லது தொடர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் உடன்படிக்கையொன்றாகும்.

**நீண்டகால பொறுப்புக்கள்:** வட்டிக்குரிய சகல கடன்களும்.

**முன் கொடுப்பனவு:** முன்னர் கொடுக்கப்பட்ட காசுகளை கணக்கு வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கணக்கு / கணக்குகள் (உதா:- தற்போதைய ஆண்டின் ஒரு பகுதியாகும். அடுத்த ஆண்டிற்குரிய மிகுதிக்கும் உரிய காப்புறுதி)

**ஏற்பாடுகள்:** எதிர்பார்க்கப்படும் எதிர்கால கொடுப்பனவுகள் கணக்கு வைப்பதற்கான கணக்குகள் (உதா: சேவைக்காக கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் இன்னும் கிடைக்கப்பெறாத சிட்டைகள்)

**சம்பந்தப்பட்ட நபர்கள்:** வியாபாரத்தின் நிதி மற்றும் இயக்க கொள்கைகளை நிர்வகிக்கும் அல்லது அவைகளுக்கு குறிப்பிடத்தக்க அளவு தாக்கம் ஏற்படுத்தக் கூடிய நபர்கள்.

**மீள் கொள்வனவு ஒப்பந்தம் (Repos):** விற்பனையாளரினால் குறிப்பிடப்பட்ட ஒரு கால வரையினுள் குறிப்பிடப்பட்ட விலைக்கு மீண்டும் கொள்வனவு செய்யும் கட்டளைக்கு இணங்க நிறுவனமொன்றின் மூலம் பங்குகளை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம்.

**ஒதுக்கீடுகள் :** செலவுகளுக்கு எடுக்க முடியாது என்பதை காட்டும் ஒப்புரவு அல்லது நிதியின் மிகுதியை புறம்பாக காட்டும் கணக்கு

**வரிக்கான வருமானம்:** அனுமதிக்கப்பட்ட விடுவித்தல்கள் மற்றும் கழித்தல்களின் பின்னர் வரிக்கான ஆண்டுக்குள் வரி செலுத்துபவரின் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்ட மொத்த வருமானம் பொதுவாக வரிக்கான வருமானத்திற்கு சமமாகும்.

**சேர்க்கப்பட்ட மிகுதி:** இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயற்பாடுகளின் மூலமாக கிடைக்கப்பெறும் காசு தொகையின் அளவாகும்

**தொழில்படு மூலதனம் (தேறிய நடைமுறை சொத்துக்கள்):** நடைமுறை பொறுப்புக்களை விட அதிகமாக நடைமுறை சொத்துக்கள் என கருதப்படும் அன்றாட இயக்கங்களுக்குத் தேவையான மூலதனம்.

**நடைமுறையிலுள்ள வேலைகள்:** பூர்த்தியாக்குவதற்கு அல்லது பூர்த்தியாக்கப்பட்ட பட்டியல்களுக்கு மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் பகுதியொன்றை பூர்த்தியாக்கிய பண்டங்கள் உள்ளடக்கப்பட்ட பட்டியல் கணக்கு

**TC/B/SLPA/FA/2011** 2013 **சனவரி**, 08

**தலைவர்**
**இலங்கை துறைமுக அதிகாரசபை**

**இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2011திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ (பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை துறைமுக அதிகார சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 51 ஆம் இலக்க துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாய சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு உயரிகாலத்தில் வழங்கப்படும்.

1.2 **நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாகும்.

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளப்பட்ட போதும், நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளப்பட்ட போதும், நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கும்

நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன். என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2. ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது. என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் நிதியல்லாத கொடுக்கல் வாங்கலொன்றாக இலாபம்/ நட்டத்திற்கு இணக்கம் செய்யப்பட வேண்டும். அத்துடன் உள்ளபடியான பணிக்கொடை கொடுப்பனவுகள் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் உருவான காசுப் பாய்ச்சலில் இருந்து கழித்துக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 10 பிரகாரம் ரூபா 1,173,151,560 ஆன முன்னைய ஆண்டின் கொடுக்கல் வாங்கல் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எதிராக பதிவழிப்பதற்கு அல்லது/ மற்றும் அப்போதிலிருந்து பயன்படுத்தியதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கி காண்பிப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் கணக்கு காலப்பகுதிக்கு தயாரக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்காக அங்கீகாரம் வழங்கப்படும் திகதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் நடைமுறையல்லாத பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதும் அப்பொறுப்புக்கள் ஒதுக்கீடுகள் மற்றும் ஏற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2. கணக்கீட்டு குறைபாடுகள்

**பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.**

(அ) அதிகாரசபையின் துணைக்கம்பனிக்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 2,054,052 ஆன வீத வரிக் கட்டணங்கள் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

ஆ) ரூபா 597,854,000 காப்புறுதிப் பெறுமதியான செயற்பாட்டுக் கட்டிடங்கள் மற்றும் ரூபா 1,646,00 தொகையான மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் என்பன தனியார் சேவைக் கம்பெனியொன்றினால் 2008 யூலை மாதத்திலிருந்து அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2008 முதல் 2010 வரையான ஆண்டுகளில் கணக்கீடு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அச்சொத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டாளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டு பெறுமதியல்லாத காப்புறுதிப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இ) அதிகாரசபைக்குச் சொந்தமில்லாத மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 700 மில்லியன் பெறுமதியான 2 காணித்துண்டுகள் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேணடிய கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டியுள்ளதாகவும் செலுத்த வேண்டியதாகவும் இருந்த கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் முறையே ரூபா 2,554,985,069 மற்றும் ரூபா 6,392,540,290 ஆக இருந்தன. அது தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கப்பல் முகவர் நிறுவனங்களிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,356,456,543 கூட்டுத்தொகையான பெறவேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 653,061,825 கூட்டுத் தொகையான செலுத்த வேண்டிய மீதிகளை செம்மையாக்கல் செய்ததன் பின்னர் தேறிய மீதியாக ரூபா 703,394,718 காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இம்மீதியில் ஓராண்டிற்கு மேற்பட்ட பழமையான மீதி ரூபா 315,949,594 ஆக இருந்ததுடன், 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 9,354,510 ஆக இருந்தது.

ஆ) 2011 திசேம்பர் 31 உள்ளவாறு வர்த்தக ரீதியற்ற கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்படும் அதிகாரசபையால் ஆதனங்கள் மற்றும் நலன்புரி சிற்றுண்டிச்சாலைகளை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்ட வளவுகளின் மின்சாரப் பாவனைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 74,642,387 தொகையும் வளவுகளை வாடகைக்கும் குத்தகைக்கும் வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 40,657,163 ஆன மீதிகளில் முறையே ரூபா 1,790,016 மற்றும் ருபா 36,069,403 தொகைகள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதிகளாக இருந்தன.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் அமைச்சினால் மீள் நிரப்பப்பட வேண்டியிருந்த செலவினங்களில் ரூபா 1,477,418 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.4. கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| காணி | 693,925,00 | குத்தகை பெறுவனவுகள் மற்றும் பயன்பாட்டிற்கு எடுத்தல் விபரங்கள் |
| நடைமுறை சொத்துக்கள் | 1,928,430,391 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| நடைமுறை பொறுப்புக்கள் | 643,220,982 | மேற்படி |
| கப்பல் இறங்குதுறை சரக்கு கையாளல் செயற்பாட்டு அடிப்படையில் தண்டப்பணமும் மிகைக் கட்டணமும் அறவீடு செய்தல். | 17,123,199 | விரிவான பட்டோலை |

**2.2.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை**

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1992 இன் 2 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1979 இன் 51 ஆம் இலக்க துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை அகாரச் சட்டத்தின் 6 (ஏ) ஆம் உப பிரிவு | ஒவ்வொரு துறைமுகமும் சுயதேவைப் பூர்த்தியுடைய முயற்சியொன்றாக நடாத்திச் செல்லப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டினுள் திருகோணமலை மற்றும் காலித் துறைமுகங்கள் முறையே ரூபா 317,963,323 மற்றும் ரூபா 147,239,519 ஆன வரிக்க முன்னரான நட்டத்தை அடைந்திருந்தன. |
| (ஆ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 111 (அ) பிரிவு | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 514,567,075 மற்றும் ரூபா 323,556,476 ஆன உழைக்கும் போது செலுத்தும் வரி ஊழியர்களிடமிருந்து அறவிடப்படுவதற்குப் பதிலாக நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. |

2.2.6 **சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்.**

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காலிமுகத்திடலின் பசுமை அபிவிருத்தி செயற்திட்டத்தை பராமரிப்பதற்காக தொழிற்சங்கமொன்றுடன் தொடர்புடைய தனியார் கம்பெனயொன்றுக்கு பராமரித்துச் செல்ல இடமளிக்கப்பட்டிருந்தது.
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) குறித்த கம்பனியினால் அதிகாரசபையின் உத்தியோகபூர்வ சின்னத்தைப் பயன்படுத்தி அனுமதிச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டு காலிமுகத்திடலின் கடைகளிலிருந்து வாடகை,வாகன நிறுத்தற் கட்டணம் மற்றும் வெவ்வேறு விழாக்களுக்காக மைதானத்தை வழங்கி சட்டரீதியான அதிகாரமில்லாமலும் முறையற்ற விதத்திலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 70 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இவ்வருமானத்தை அவர்களால் காலிமுகத்திடலில் எந்தவொரு பராமரிப்பு நடவடிக்கைக்காகவும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) அதிகாரசபைக்குச் சொந்தமான சேருவில 2 என்ற படகு அதிகாரசபையின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி திருகோணமலை துறைமுகத்திலிருந்து பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் மூலம் உழைக்கப்பட்டிருந்த வருமானம் கிட்டத்தட்ட ரூபா ஒரு மில்லியனிற்கு மேற்பட்டிருந்த போதிலும் அவ்வருமானத்தை மேற்குறித்த கம்பனி பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(iii) அதிகாரசபையின் உரிய அனுமதியில்லாமலும் தெரியப்படுத்தாமலும் மேற்படி கம்பனி கொழும்புத் துறைமுகம் மற்றும் அதிகாரசபையால் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் காலிமுகத்திடல் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் குளிர்பானம் விற்பனையின் ஏகபோக உரிமையை தனியார் கம்பெனியொன்றுக்கு உடன்படிக்கை மூலம் ஒப்படைக்கப்பட்டு அதிலிருந்து ரூபா 5.5 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

3. **நிதி மீளாய்வு**

3.1. **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,291.833 மில்லியன் இலாபமொன்றானதுடன் அது ரூபா 31,250,474 மில்லியன் ஆன ஆண்டிற்குரிய மொத்த புரள்வின் 26.53% ஆக இருந்தது. அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 4,386,849 மில்லியனான செயற்பாட்டு இலாபம் அவ்வாண்டிற்குரிய ரூபா 28,279.239 ஆன மொத்த புரள்வில் 15.51% ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்குரிய செயற்பாட்டு விளைவு ரூபா 3,904,984 மில்லியனால் அல்லது 89.02% ஆல் அதிகரித்திருந்தது.

எவ்வாறாயினும் இவ் அறிக்கையின் 2:2:1 (ஆ) பந்தியில் காண்பிக்கப்பட்ட சீராக்கங்கள் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளுடன் இணக்கம்செய்யப்பட்டிருந்தால் ரூபா 8,291.833 மில்லியனான இலாபம் ரூபா 7,118,681 மில்லியன் வரை குறைவடையக் கூடியதாக இருந்தது.

3.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்கான ஒப்பிடப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | ஆண்டு | | |
|---|---|---|---|
| | 2011 | 2010 | 2009 |
| மொத்த வருமானம் (ரூபா மில்லியன் | 31,250 | 28,279 | 23,331 |
| மொத்த செலவினம் (ரூபா மில்லியன்) | 26,926 | 25,118 | 22,549 |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) (ரூபா மில்லியன்) | 782 | (1,248) | (1,373) |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) (ரூபா மில்லியன்) | 583 | (1,065) | 2,114 |
| பொருள் கையால் (மெற்றிக் தொன்) | 39,055,978 | 36,246,744 | 29,685,685 |
| ஒரு மெற்றிக் தொன்னுக்கான தெறிய இலாபம் / (நட்டம்) (ரூபா) | 177 | 87 | 26 |
| ஊழியர் எண்ணிக்கை | 10,982 | 12,824 | 13,667 |

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 2 ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்ட விகிதப் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | ஆண்டு | | |
|---|---|---|---|
| | 2011 | 2010 | 2009 |
| புரள்விற்கு செயற்பாட்டு இலாபம் | 26.53% | 15.51% | 8.32% |
| புரள்விற்கு பதவியனிக்கான கிரயம் | 41.30% | 49.81% | 53.97% |
| நடைமுறை விகிதம் | 0.92:1 | 1.33:1 | 1.61:1 |
| விரைவு விகிதம் | 0.78:1 | 1.13:1 | 1.41:1 |
| கடன் உரிமை மூலதன விகிதம் | 1.41:1 | 1.21:1 | 0.89:1 |

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(i) நடைமுறை விகிதம் 2:1 இற்கு கிட்டிய மட்டத்தில் காணப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அப்பெறுமதி ரூபா 0.92:1 என்ற குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்புக்ளை தீர்ப்பதற்குக் கூட போதியளவில் நடை முறைச் சொத்துக்கள் அதிகாரசபையிடன் காணப்படவில்லை.

(ii) விரைவு விகிதம் 1:1 இற்கு கிட்டிய மட்டத்தில் காணப்பட வேண்டிய போதிலும் , மீளாய்வாண்டில் அப் பெறுமதி ரூபா 0.78:1 என்ற குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் மூலம் நடைமுறைப் பொறுப்புக்ளை தீர்ப்பதற்கு போதியளவில் திரவச் சொத்துக்கள் இல்லையென்பது அவதானிக்கப்பட்டது.

(iii) கடன் தொகையை மிகைத்த உரிமை மூலதனம் அதிகாரசபையிடம் இருக்க வேண்டிய போதும், மீளாய்வாண்டில் கடன் மூலதன விகிதம் 1.14:1 ஆக இருந்தமை உரிமை மூலதனத்தை (உரித்து) மிகைத்து பொறுப்புக்கள் காணப்பட்டன. இது நிறுவனத்திற்கு சிறந்த இயல்பொன்றல்ல.

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய புள்ளி விபரங்கள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றை பகுப்பாய்வு செய்த போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) கொழும்புத் துறைமுகம்

**(i) கப்பல்களின் வருகை**

| கப்பல்களின் வகை | ஆண்டு 2011 | 2010 | 2009 | விலகல் சாதகம் (பாதகம்) 2010/11 % | 2009/10 % |
|---|---|---|---|---|---|
| கொள்கலன்கள் | 3,187 | 3076 | 3304 | 3.6 | (6.9) |
| மரபுரீதியானவை | 68 | 56 | 140 | 21.4 | (60) |
| ஏனையவை | 869 | 778 | 670 | 11.7 | 16.1 |
| | **4124** | **3910** | **4114** | **5.5** | **(4.9)** |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் மொத்தத்தில் அதிகரிப்பு/ (குறைவு) | 214 | (204) | (310) | | |

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2010 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்திற்கு கப்பல்களின் வருகை 204 அளவிலான குறைவொன்றை அதாவது 5% வீழ்ச்சியாக இருந்ததுடன், 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் கப்பல்களின் வருகை 214 ஆன அதிகரிப்பு அதாவது 5.5% முன்னேற்றமாகக் காணப்பட்டது.

**(ii) கையாளப்பட்ட கொள்கலன்கள் (இருபது சம அலகுகள் TEU'S)**

| | ஆண்டு 2011 | 2010 | 2009 | விலகல் சாதகம்.'.(பாதகம்) 2010/11 % | 2009/10 % |
|---|---|---|---|---|---|
| கொழும்புத் துறைமுகம் | | | | | |
| உள்நாடு | 1,046,886 | 932,244 | 751,992 | 12,29 | 23.97 |
| மீள் கப்பலேற்றுகை மற்றும் மீள் பொதியிடல் | 3,216,001 | 3,205,197 | 2,712,305 | 0.34 | 18.17 |
| **மொத்தம்** | **4,262,887** | **4,137,441** | **3,464,297** | **3.03** | **19.43** |

| | | | |
|---|---|---|---|
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் திரட்டிய அதிகரிப்பு/ (குறைவு) | 125,446 | 673,892 | (223,041) |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் மீள் கப்பலேற்றுகையில் அதிகரிப்பு/(குறைவு) | 10,804 | 492 | (161,762) |

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 2010 ஆம் ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட இருபது சம அலகு கொள்கலன்கள் 673,144 ஆல் அதாவது 19,43% ஆல் முன்னேற்றமடைந்திருந்த போதும் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2011 ஆம் ஆண்டில் 125,446 ஆல் அதாவது 3.03% முன்னேற்றம் மட்டும் காண்பிக்கப்பட்டிருந்தது.

மீள் கப்பலேற்றல் மற்றும் பொதியிடல் அடிப்படையில் கட்டணம் அறவிடுவதனால் அதிகாரசபைக்கு கூடுதலான வருமானம் கிடைக்கப்பெற்றிருந்தது. ஆதலால் மீள்கப்பலேற்றல் கொழும்புத் துறைமுகத்திற்கு அதிக அளவில் பெற்றுக்கொள்வது தொடர்பில் கவனம்செலுத்த வேண்டிய போதும் மீளாய்வாண்டின் பொது மீள்கப்பலேற்றல் 0.33% ஆன மிகவும் குறைந்த அளவில் மட்டும் அதிகரித்திருந்தது.

2001 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான பத்து ஆண்டு காலப்பகுதியில் கொழும்புத் துறைமுகத்தில் அதிகாரசபையின் கொள்கலன் செயற்படுத்தும் இயலளவு முழுக்கொள்கலன்களை கையாளல் சதவீதமாக்க் கருதும் போது 81% இலிருந்து 54% வரை துரித வீழ்ச்சியொன்று இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) திருகோணமலைத் துறைமுகம்**

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 2010 ஆம் ஆண்டில் திருகோணமலைத் துறைமுகத்திற்கு கப்பல்களின் வருகை 201 ஆல் அதாவது 64.84% சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் கப்பல்களின் வருகை 17 ஆல் அதாவது 15.59% ஆல் முன்னேற்றமடைந்திருந்தது.

**(இ) காலித் துறைமுகம்**

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 2010 ஆம் ஆண்டில் காலித் துறைமுகத்திற்கு கப்பல்களின் வருகை 16 ஆல் அதாவது 50% சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் அது 25 ஆல் அதாவது 52% ஆல் முன்னேற்றமடைந்திருந்தது.

**(ஈ) சகல துறைமுகங்களும் (கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி)**

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 2010 ஆம் ஆண்டில் சகல துறைமுகங்களாலும் கையாளப்பட்ட பொருட்களின் முன்னேற்றம் இருபது சம அலகுகள் 12,461,925 ஆல் அதாவது 25.54% ஆக இருந்துடன், 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆம் ஆண்டில் அது 3,813,376 ஆக அதாவது 6.22% ஆல் முன்னேற்றமடைந்திருந்தது.

**(உ) மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் துறைமுகத்தை திறந்து வைத்தல் விழாவிற்காக 3 கப்பல்களும், கப்பல் தலைவர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக 3 கப்பல்களும் மணல் அகழ்வு கப்பலொன்றும் புத்தகக் கண்காட்சித் கப்பலொன்றும் 3 சரக்குக் கப்பல்களும் 2 யோட் கப்பல்களுமாக மொத்தம் 13 கப்பல்கள் வருகை தந்திருந்தன. 2010 நவம்பர் மாதம் இத்துறைமுகம் திறந்து வைக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் மிகவும் குறைந்த அளவான கப்பல்களே இத்துறைமுகத்திற்கு வருகை தந்திருந்தமையால் துறைமுகத்திற்கு கப்பல்களை கொண்டு வருவதற்காக பயனுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரசபை கவனத்தை செலுத்தும் அவசியத்தை சுட்டிக் காட்டுவதுடன், துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக கிரானட் பாரந்தூக்கிகள் துரதமாக பொருத்தப்பட வேண்டுமென்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**4.2 முகாமைத்துவ செயற் திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 02 பாரந்தூக்கிகளைக் கொள்வனவு செய்வதன் அவசியத்தன்மை தொடர்பாக முறையான சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளாமல் 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 444 மில்லியன் செலவில் 02 லெவல் லபின் போடல் பாரந்தூக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இந்த 2 பாரந்தூக்கிகளும் 50 மணித்தியாலயத்திற்கும் குறைந்த கால அளவில் மட்டுமே பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

ஆ) அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்பட்ட இருப்புக் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இருப்புகள் ரூபா 959,252,462 அதாவது மொத்த இருப்புப் பெறுமதியில் 57.45% ஆக இருந்தது. ஆதலால் அதிகாரசபைக்குச் சொந்தமான களஞ்சியங்களில் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதிகளை பயனுள்ள வகையில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்ததுடன், இருப்பு தொடர்பான கட்டுப்பாடும் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

இ) காணியின் உரிமை அதிகாரசபைக்கு மாற்றம் செய்யப்படாது மாத்தறை பிரதேசத்தின் காணியொன்றில் பயிற்சி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 8,339 மில்லியன் செலவு செய்து, 2006 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இச்செலவினம் மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் செலவினமாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

ஈ) மோட்டார் கராஜில் வருடக் கணக்காக 13 மோட்டார் சைக்கிள்கள் பழுதடைந்து காணப்படுவதுடன், அச்சைக்கிள்களை ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மோட்டர் கராஜிற்கு 2005 நவம்பர் 11 முதல் நியமிக்கப்பட்ட செயற்திட்ட அபிவிருத்தி புலனாய்வு உதவியாளருக்கு கடமைகள் பொறுப்பளிக்கப்படாமல் 2011 ஒக்தோபர் வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,045,416 கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 474.5 மில்லியன் பெறுமதியான காணிகளில் சில காணி மீளாய்வாண்டு வரையில் பேர்சஸ் ஒன்றிற்காக மாதாந்தம் ரூபா 300 முதல் 2,000 வரையான குறைந்த தொகைக்கு நீண்டகால குத்தகை உடன்படிக்கையின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனால் வருடாந்தம் அதிகளவு வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்காமல் போயிருந்தன.

(எ) ரூபா 546 மில்லியன் மீள் மதிப்பீட்டு பெறுமதியான கொழும்புத் துறைமுகத்திற்கு வெளியே அமைந்துள்ள அதிகாரசபைக்குச் சொந்தமான காணி பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் இக்காணியை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்காமையால் வருடக்கணக்காக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த அதிகளவிலான குத்தகை வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்காமல் போயிருந்தன.

(ஏ) ரூபா 6 மில்லியனிற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்ட அதிகாரசபைக்குச் சொந்தமான வளவுகளும் காணிகளும் தனியார் கம்பனியொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த குத்தகை உடன்படிக்கையானது, 2000 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்த போதும் ஆதனத்தின் உரித்தை தீர்த்து வைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அதிகாரசபைக்கு 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த வாடகை வருமானம் கிடைக்காமல் போயிருந்தது.

(ஐ) தியகாவா என்ற கப்பல் கடலில் மூழ்கியதால் கொழும்புத் துறைமுகத்தினது சீன பாலத்தின் 720 சதுர மீற்றர் அளவிற்கு அண்மித்த அளவு பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது.

### 4.3. செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) திருகோணமலை துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் தொடர்ந்தும் நட்டமடைந்து காணப்பட்டது.

| ஆண்டு | நட்டம் (ரூபா மில்லியன்) |
|---|---|
| 2007 | 405 |
| 2008 | 379 |
| 2009 | 319 |
| 2010 | 383 |
| 2011 | 318 |

(ஆ) காலித் துறைமுகத்திற்கு வருகை தரும் கப்பல்களின் எண்ணிக்கை குறைவடைவதன் அடிப்படையில் செயற்பாட்டு நடைமுறைகள் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதனால் பின்வரும் ஆண்டுகளில் தொடர்ச்சியாக நட்டமடைந்து காணப்பட்டது.

| ஆண்டு | நட்டம் (ரூபா மில்லியன்) |
|---|---|
| 2007 | 275 |
| 2008 | 279 |
| 2009 | 399 |
| 2010 | 345 |
| 2011 | 147 |

4.4 **பயன்படுத்தப்படாத குறைவாகப் பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்**

காலிமுகத்திடல் பசுமை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 17,199,371 மில்லியன் செலவு செய்யப்பட்டு உணவு வழங்கல் நிலையமொன்றும் பொதுச் சுகாதாரக் கட்டிட முறைமையொன்றும் நிர்மாணிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் அவற்றை இதுவரையில் வாடகைக்கு அல்லது பொதுமக்களுக்காக திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 **சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) ஒலுவில் கப்பல் பயிலுனர் நிறுவகம்**

(1) ஆண்டொன்றிற்கு ரூபா 54 மில்லியனிற்கு மேற்பட்ட செலவினத்தை மேற்கொண்டு ஒலுவில் கப்பல் பயிலுனர் நிறுவகத்தினை பராமரித்துச் செல்லும் போது ஆண்டொன்றிற்கு இந்நிறுவனத்திடமிருந்து பாடநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. 2011 ஆகஸ்ட் வரை பயிற்சி முடித்துக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 05 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஒரு மாணவருக்காக செலவிடப்பட்ட கிரயம் மிகவும் கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தது. 2010 ஆம் ஆண்டின் போது ஒரு மாணவருக்காக செய்யப்பட்ட செலவினம் ரூபா 4 மில்லியனிற்கு கூடுதலாக இருந்ததுடன், 2011 ஆம் ஆண்டில் அது ரூபா 8.4 மில்லியனாக இருந்தது.

(11) மேலும் இப்பாடநெறிகள் 15 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட குறுங்கால பாடநெறியாக கருதப்பட்டு ஆண்டில் அதிகமான காலம் பாடநெறிகள் நடாத்தப்படாமல் இந்நிறுவனம் பராமரித்துச் செல்லப்பட்டிருந்தது.

(111) பாடநெறிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெறுமதியான இயந்திரம் எதுவும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 2004 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்று காணப்பட்டது.

(ஆ) அதிகாரசபையின் 3 வளவுகள் சந்தைப் பெறுமதியை விட குறைந்த பெயரளவிலான வாடகை அறவிடப்பட்டு வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2 வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(இ) அதிகாரசபையால் இரண்டு தனியார் கம்பனிகளில் 2000 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 500,000 மற்றும் 2,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதிவரை எவ்வித நலன்களும் கிடைத்திருக்கவில்லை.

4.6 **அடையாளங் காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வரிசை அமைச்சின் அமைச்சரின் பதவியணியின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்த வாகனமொன்று 4 ½ ஆண்டுகளுக்கு முன்னர் விபத்திற்குட்பட்டதால் ஏற்றட்ட நட்டத்தினை காப்புறுதி மூலம் மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் அதிகாரசபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 2 மில்லியனுக்கு கூடுதலாக இருந்தது.

(ஆ) கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகி இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் மதியுரைச் சேவை கம்பனி ஊடாக மிகவும் சிறிய சேவையொன்றையேனும் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக ரூபா 31,151,474 தொகை தரகுச் செலவினமாக வழங்கப்பட்டிருந்தது.

இ) தென் ஆசியாவின் கேந்திர துறைமுகமாக செயற்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அதிகாரசபையிடம் முறையாக பராமரிக்கப்படுகின்ற நிரந்தர டக் படகுகள் போதியளவில் இருக்க வேண்டும். எனினும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அதிகாரசபையால் நாளொன்றிற்கு 4,000 டொலர் வீதம் 02 டக் படகுகள் வாடகைக்கு எடுக்கப்பட்டமைக்காக மீளாய்வாண்டின் போது வாடகைக் கட்டணமாக ரூபா 271,850,955 தொகையும் முன்னைய ஆண்டிற்காக ரூபா 54,785,298 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) கொழும்பு துறைமுகத்தின் பிரதான நுழைவு வழியை ஆழமாக்கும் செயற்திட்டத்தின் வேலைகள் கப்பல் நெருக்கடிகளினால் தாமதமான காரணங்களால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 8,897,600 தாமதக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) மு.பி.கே.7180 ஆம் இலக்க நில வரைபடத்தின் 05 ஆம் இலக்க காணித் துண்டை கையேற்கும் போது குறிப்பிட்ட திகதியில் இழப்பீட்டுத் தொகை செலுத்தப்படாமையால் இழப்பீட்டு தொகைக்கு மேலதிகமாக ரூபா 50,662,672 வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 6 பழைய மிதவைப் படகுகளை விற்பனை செய்வதற்கு 2006 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்பீட்டு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், சில ஆண்டுகளுக்கு பின்னர் ரூபா 95,150,000 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்ட 3 மிதவைப் படகுகள் ரூபா 11,645,866 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. இதன் மூலம் அதிகாரசபை இழந்த வருமானம் ரூபா 83,504,134 ஆக இருந்தது. ஏனைய 3 மிதவைப் படகுகளை விற்பனை செய்வதற்கு பொருத்தமானது. என பரிந்துரைக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் இதுவரை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தியகாவா என்ற கப்பலை விற்பனை செய்வதற்காக பிரதிப் பிரதான முகாமையாளரால் (வழங்கல்) தலைவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் ஆகக் கூடிய விலை ரூபா 17,884,800 ஆக இருந்த போதும் அதனைக் கருத்திற் கொள்ளாமல் இரும்புத் துண்டுகளாக விற்பனை செய்தமையால் கிடைத்த பணம் ரூபா 9,578,710 ஆக இருந்தமையால் அதிகாரசபைக்கு அதனால் ஏற்பட்ட நட்டம் ரூபா 8,306,090 ஆக இருந்தது.

### 4.7 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சர்வதேச ஒத்துழைப்பிற்கான யப்பான் வங்கி (JBIC) உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 6,000 மில்லியன் நிர்மாண ஒப்பந்தம் மூலம் காலித் துறைமுகத்தின் நீர்த் தடுப்பினை நிர்மாணிப்பதற்காக ரூபா 455.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2008 திசெம்பர் 31 இல் ஒப்பந்தம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் கொழும்புத் துறைமுக செயற்திறன் மற்றும் துறைமுக விரிவாக்கலுக்கான மதியுரைச் சேவை ஒப்பந்தத்திற்காக ரூபா 1,175.20 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் இலங்கை துறைமுக அதிகாரசபையினாலும் செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 391 மில்லியன் அளவில் கொழும்புத் துறைமுகத்தின் செயற்திறனை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த பொதும் அப்பிரேரணை செயற்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தமையால் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 391 மில்லியன் தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

**4.8 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சபையின் வளங்கள்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீ௭டி 12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக வழங்கல் சேவைகள், பாதுகாப்பு செலவினம் நிர்வாகம் மற்றும் சம்பளமாக மொத்தம் ரூபா 1,615,658 மீளாய்வாண்டின் இறுதி வரையில் வரிசை அமைச்சிற்காக செலவிடப்பட்டிருந்தது.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

அதிகாரசபையால் 2011 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் என்பன தயாரிக்கப்பட்டிருந்த போதும் உள்ளவாறாக இடம்பெற்ற வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் பாதீட்டினை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்படுவதற்கு முகாமை தவறியிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது துறைமுக அதிகாரசபையின் தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) கொள்வனவு நடைமுறை
(ஈ) வாகனப் பயன்பாடு
(உ) முதலீடுகள்
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு
(எ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்



**எச்.ஏ.எஸ் சமரவீர**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

TC/B/SLPA/FA/2011 FD/FA/C/82-XV/2011/14(2)(C) 2013 மார்ச், 15

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

**இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

2.2 **நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

(அ) 2012 ஆண்டிலிருந்து சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த வருட கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்விற்குட்படும் ஆண்டின் வருமானத்திற்கெதிராக நீக்கப்படுவதற்கு எம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) 2012 ஆண்டிலிருந்து சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) 2012 ஆண்டிலிருந்து சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2.2 **கணக்கீட்டு குறைபாடுகள்**

(அ) ஜே.சீ.ரீ கம்பெனி சார்பில் செலுத்தப்பட்ட வரிப்பணக் கட்டணம் 2012 ஆண்டில் அறவிடப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை துறைமுக அதிகாரசபையினால் 2012 ஆண்டிலிருந்து புதிய கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப (SLFRS) நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு அதன் போது சொத்துக்களின் அளவு மற்றும் உபகரணங்கள் அடையாளங் காணுதலில் ஆகுசெலவு மாதிரி அடிப்படை (Cost Model) தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி சென்ற வருடங்களுக்குரிய சீர்செய்தல்கள் அதாவது சொத்துக்களின் அளவு மற்றும் உபகரணங்களினது மீள் கணிப்பீட்டுப் பெறுமதிகள் அதன் கருதும் ஆகு செலவாகக் கொண்டு (Deemed Cost) சம்பந்தப்பட்ட சீர்செய்தல்கள் இப்புதிய அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதுவரையில் சொத்துக்களின் அளவு மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி (Fair Value) புத்தகங்களில் தென்படுவதனால் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்காக மீள் கணக்கிடப்படுதல் தேவைப்படாது.

(இ) இவ்விரு காணித்துண்டுகளில் 300 ரூபா மில்லியன் கொண்ட காணி (Ingreen Ltd) துறைமுக அதிகாரசபைக்குரியதல்ல. எனவே 2012 ஆண்டினுள் சொத்துப் பட்டியலிலிருந்து அகற்றப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மீதியான 400 ரூபா மில்லியன் கொண்ட காணி 1985.07.05 ஆந் திகதிய 356/19 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 1971 இன் 35 ஆம் இலக்க வர்த்தகங்கள் (கைப்பற்றப்படும்) சட்டத்தின் மீது அரசாங்கத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளது. அக்காணி தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக வர்த்தமானி அறிவித்தலின் பின்னர் முறையாக பாரளுமன்ற அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாவென உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். எனவே

பாராளுமன்றில் சம்பந்தப்பட்ட உறுதிப்படுத்தலுக்காக அது தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2.2.3 **பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

(அ) 2011.12.31 ஆந் திகதிக்கு வருடத்திற்கு மேல் பழைமையான கடன்பட்டோர் நிலுவைகளில் தனியார் கப்பல் முகவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள முழு நிதியும் 2012 ஆண்டினுள் அறவிடப்பட்டுள்ளது ஆனால் அரச நிறுவனங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடன்பட்டோர் நிலுவையாக ரூபா 228,780,867/= இதுவரை மீதியாகவுள்ளது. மேலும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவைகளில் தனியார் கப்பல் முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 13,706/= 2012 ஆண்டில் அறவிடப்பட்டுள்ளதோடு மீதி நிதி, அரச நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளது.

(ஆ) 2011.12.31 ஆந் திகதிக்கு மின்சார பாவனை தொடர்பில் அறவிடப்பட வேண்டிள்ள ரூபா 74,642,387/= நிலுவையில் இதுவரை ரூபா 43,385,730/= அறவிடப்பட்டுள்ளது. மீதி ரூபா 30,060,933/= நிலுவையில் ரூபா 28,900,099/= இலங்கை சுங்கத்திலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள நிதித் தொகையாகும். இந்நிலுவையினை செலுத்துமாறு அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

5 வருடங்களுக்கு மேல் பழைமையான ரூபா 1,790,016/= நிலுவையில் ரூபா 54,645/= இதுவரை அறவிடப்பட்டுள்ளது. மீதி நிலுவையில் ரூபா 1,195,991 2004.11.01 ஆந் திகதிக்கு முன்னர் 19 உண்டிச்சாலைகளை நடாத்திச் சென்ற 10 குத்தகையாளர்களுடன் தொடர்புபட்ட தொகையாகும். இந்நிதி அறவிடப்படுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் தற்போது உண்டிச்சாலைகள் குத்தகைக்குக் கொடுக்கப்படுகையிலும் எதிர்காலத்தில் அவர்களுக்கு குத்தகைக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட முடியாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2011.12.31 ஆந் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை ரூபா 40,657,163/= நிலுவையில் ரூபா 4,587,760 5 வருடங்களுக்கு குறைவானதுடன் அதில் ரூபா 1,350,203 தவிர மீதி இதுவரை அறவிடப்பட்டுள்ளது. 05 வருடங்களுக்கு மேற்பட்ட குத்தகை வாடகை வருமானத்தில் ரூபா 3,101,681/= அறவிடப்பட்டுள்ளது.மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள வாடகை வருமானத்தில் ரூபா 15,411,732/= க்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு இதில் ரூபா 2,656,871/= இரண்டு அரசாங்க நிறுவனங்களுக்குரியதாகும். இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியாதென சட்ட மா அதிபர் அறிவித்துள்ளார். சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியாத மீதியான நிலுவைகள் அறவிடப்படுவதற்கு இந்நிறுவனங்களோடு கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

(இ) 2013 வருடத்தில் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.2.4 **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

**காணிகள் ரூபா 693,925,000/=**

இக்காணிகள் தொடர்பிலான தங்களின் இல: SC/A/SLPA/2012/08/01 மற்றும் 2012.01.12 ஆந் திகதிய கணக்காய்வு விசாரணைக்கும் எம்மால் பதில் வழங்கப்பட்டுள்ளது. அதிலும்

குறிப்பிடப்பட்டுள்ளவாறு டீம் வர்க் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணி, இப்போது நகர அபிவிருத்தி அதிகாரசபை "தாமரைக் கோபுரம்" நிர்மாணிக்கப்படுவதற்கு ஈடுபடுத்தியுள்ளதுடன் அதற்காக எதிர்காலத்தில் நஷ்டஈடு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல வளவுகளும் துறைமுக அதிகாரசபையின் பொறுப்பிலுள்ளதோடு எதிர்கால துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் நோக்கில் இக்காணிகளில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதற்கோ வேறு உபயோகங்களுக்கோ வழங்கப்படாது பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள்**

நிலுவைகள் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கடிதம் அனுப்புதல் உரிய முறையில் நடைபெறுவதுடன், நிலுவைகள் உறுதிப்படுத்தப்பட்டு திருப்பி அனுப்புதல் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் நடைபெறுவதனால் செயன்முறையாக அதை எம்மால் கட்டுப்படுத்த முடியாது.

**கப்பலோட்ட தரையிறக்கல் மற்றும் வாப்பு கையாளல் மீதான தண்டப்பணம் அறவிடுதல் ரூபா 17,123,199/=**

இது வருமானமென்பதால் அட்டவணை சமர்ப்பிக்கப்படுவதில்லை.

கட்டுப்பாட்டுக் கணக்குகள் தொடர்பில் மாத்திரம் எம்மால் அட்டவணைகள், கால பகுப்பாய்வு மற்றும் நிலுவைகளின் உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படுவதுடன் ஏனைய கணக்குகள் தொடர்பில் தங்களால் வேண்டப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் தகவல்கள் வழங்கப்படும்.

2.2.5 **சட்டங்கள், திட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை**

(அ) **காலி**

இயக்க வருமானம் குறைதல் காரணமாக இவ்வாறான நஷ்ட நிலைமை ஏற்பட்டுள்ளது. இதுவானது முன்னைய ஆண்டுகளுடன் பார்க்கையில் வீழ்ச்சியாகும். ஆயினும் 2010 ஆண்டை விட வருமானம் 164 மில்லியனினால் அதிகரித்துள்ளதோடு செலவினம் 34 மில்லியனினால் குறைவடைந்துள்ளமை காணப்படுகின்றது. மேலும் வருமானம் அதிகரித்துக் கொள்ளப்படுதலின் நோக்கமாக துறைமுகம்சார் சுற்றுலா கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இவ்வருடத்தினுள்' உல்லாச படகுத்தளம் மற்றும் சிறிய அளவிலான படகுகள் பழுதுபார்க்கப்படுவதற்கான முனையமொன்றும் நிறுவப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**திருகோணமலை துறைமுகம்**

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் மீது மேடைத்தளங்களின் கையாளல் நடவடிக்கைகள் Harbour Tonnage, Landing and Delivery Extra Operation போன்றவை பிரிமா மற்றும் டோக்கியோ கம்பெனிகளினால் மேற்கொள்ளப்பட அனுமதி வழங்கப்பட்டதன் ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு வருமானம் கிடைத்தல் வரையறுக்கப்பட்டுள்ளது. அதற்கு தீர்வாக துறைமுகம்சார் தொழிற்சாலைகள், விவசாய மற்றும் பெறுமதி சேர்க்கும் (Value added Industry) தொழிற்சாலைகளைக் கொண்ட கைத்தொழில் நகரத்துக்கு துறைமுகங்களுக்குச்

சொந்தமான வளவுகள், குத்தகைக்கும் வாடகைக்கும் வழங்கப்படுதலின் மூலம் வருமானம் பெறுவதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து பிரேரணைகளும் கோரப்பட்டு (Request For Proposal) அவை மதிப்பிடப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோன்று செலவினம் கட்டுப்படுத்தல் மூலம் அந்த நஷ்டம் குறைக்கப்படுவதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களினது உழைக்கும் போது வரி செலுத்துதல் துறைமுக அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்படுகின்றது. 1997 சனவரி மாதம் 09 ஆந் திகதிய அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தோடு வெளியிடப்பட்டுள்ள இல : PA/HD/28 கொண்ட கடிதத்தின் மூலம் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2.2.6 **சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

i. இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஒழுக்காற்று விதிகளுக்கமைவாக ஆரம்ப விசாரணையொன்று நடாத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட நிதி துறைமுக அதிகாரசபைக்கு மீளப் பெறுவதற்காக சட்ட மா அதிபரின் ஆலோசனை பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சிரேஷ்ட முகாமையாளரொருவரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆரம்ப விசாரணை அறிக்கையின் பரிந்துரைகள் கவனத்திலெடுக்கப்படுவதற்கும் இச்சம்பவத்துடன் தொடர்புபடும் நடவடிக்கைகள் மேற்கொண்டு எடுக்கப்படுவதற்கு முறையான ஆலோசனை வழங்குமாறு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ii. 2010 ஆண்டில் சேறுவாவில 2 கலத்தின் மாதாந்த வருமானம் செலவுடன் கருதப்படுகையில் போக்குவரத்தில் ஈடுபட்ட காலத்தில் சனவரியிலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியினுள் ரூபா 650,000/= சராசரியான மாத வருமானம் கிடைத்துள்ளதுடன் அதிலிருந்து டிசெம்பர் வரையிலான காலப்பகுதியினுன் கலம் பழுதுபார்த்தலுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததனால் வருமானம் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. இந்நிலைமை சென்ற வருடங்களிலும் இவ்வாறு இருந்ததனால் இதனை கருத்திலெடுத்து சேறுவாவில 02, மஹவலி தேவி ஆகிய கலங்கள் அவற்றின் பணியாளர்களோடு இலங்கை சுதந்திர ஊழியர் (தனியார்) சங்கத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கு 2010.08.04 மற்றும் 2010.11.03 ஆந் திகதிகளில் கூடிய முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி சேறுவாவில 2 கலம், 2011.01.06 ஆந் திகதியிலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட கம்பெனியினால் உரிய பயணங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2011.04.05 ஆந் திகதியிலிருந்து இயந்திரக் கோளாறு காரணமாக நிறுத்தப்பட்டது.

சேறுவாவில - 02 கலம் தொடர்பில் மாதமொன்றுக்கு ரூபா 600,000/= துறைமுக அதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டுமெனவும் முகாமைத்துவக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்குப் புறம்பாக பணியாளர்களின் சம்பளங்கள், எரிபொருள் மற்றும் சிறு பழுதுபார்ப்புகளும் அச்சங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதுவரை இக்கலத்தின் பழுதுபார்க்கும் பணிகள் கடலகப் பொறியியல் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும் மூதூர் தரைமார்க்க வழியானது இப்போது அமைக்கப்பட்டுள்ளதால் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் இச்சேவை மேற்கொண்டு நடாத்தப்படுவதன் மூலம் துறைமுக அதிகாரசபைக்கு நிதிசார் வருமானம் பெற்றுக்

கொள்ள முடியாது அத்துடன் இச்சேவை மேற்கொண்டு நடாத்திச் செல்லப்படுதல் சாத்தியமற்றதனால் (not viable) மூதூர் துறைமேடையின் பழுதுபார்ப்பு கடற்படை கோரிய போதும் நடைபெறவில்லை.

iii. 2.2.6 இன் (1) பதிலுடன் தொடர்புபடுகின்றது.

**03. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் 2.2.1 (ஆ) பந்தியில் காட்டப்படும் “சீர்செய்யப்படின்” எனும் கூற்று தவிர்ந்த முதலாவது பந்தியில் குறிப்பிடப்படும் எண்ணிக்கையும் தரவுகளுடன் உடன்படுகின்றது.

மீளாய்வாண்டிற்கான இலாபம் கணக்கிடப்படுகையில் சென்ற ஆண்டுகளுக்குரிய கொடுக்கல் வாங்கல்களின் சீர்செய்தல்கள் ஒரு போதும் மேற்கொள்ளப்படுவதில்லை. அவ்வாறு சீர்செய்யப்பட்டிருப்பின் மீளாய்வாண்டின் இயக்க இலாபம் சரியானதாக இருக்க மாட்டாது. அதாவது இயக்க இலாபம் அல்லது நஷ்டம் அந்த வருடத்தின் இயக்க இலாபம் மற்றும் செலவினத்தோடு சீர் செய்தலில் ஏற்படும் பெறுபேறுகளின் மீது உடன்படுவதேயாகும். எனவே எம்மால் சரியாக இயக்க இலாபம் கண்டுகொள்ளப்பட்டதன் பின்னர் சென்ற வருடங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களின் சீர் செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**3.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு**

(அ) குறிப்பிடப்பட்டுள்ள புள்ளவிபர தகவல்கள் சரியானவையாகும்.

(ஆ) குறிப்பிடப்பட்டுள்ள விகித பகுப்பாய்வு சரியானவையாகும்.

(i) / (ii) / (iii)

ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பண சீர்செய்தல்கள் சென்ற வருடங்களைப் பார்க்கிலும் 2011 ஆண்டில் நடைமுறை சொத்துக்கள் குறைவதற்கான பிரதான காரணமாக இருந்தது. ஒப்பந்த வேலைகள் நிறைவு செய்யும் விகிதம் அடிப்படையாகக் கொண்டு முற்பணம் சீர்செய்யப்படுகின்றது. இந்த ஆண்டில் அவர்களினது திட்டங்கள் முறையாகவும் செயற்திறனுடனும் நிறைவு செய்தல் இதிலிருந்து விளங்குகின்றது. இதுவானது நடைமுறை சொத்துக்கள் குறைவடைவதற்கு காரணமாக இருந்தாலும் மறு பக்கத்தில் நடைமுறையற்ற சொத்துக்கள் அதிகரிக்கப்பட ஏதுவாகியிருப்பதனால் இது சிறந்த திருப்பமாகும்.

அதேபோன்று பொறுப்புக்கள் தொடர்பில் நோக்குகையில் பல்வேறு திட்டங்கள் தொடர்பில் கடன் பெறுகை அதிகரித்தல் காணப்பட்டாலும் இது துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கட்டாயமாக நடைபெற வேண்டியவைகளாகும். இதன் பெறுபேறுகள் கிடைக்கப்பெறுவதற்கு நீண்ட காலங்கள் சென்றாலும் சர்வதேச போட்டிக்கு மத்தியில் துறைமுக நடவடிக்கைகள் தொடர்ச்சியாகவும் செயற்றிறனுடனும் மேற்கொள்ளப்படுவதற்கு நவீன சர்வதேச துறைமுகங்களின் பாகங்கள் எம்மால் ஸ்தாபிக்கப்பட வேண்டியுள்ளன. எனவே பாரியளவிலான கப்பல்களைக் கையாளக்கூடியவாறு உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவப்படுவதற்கு அதாவது துறைமுக விரிவாக்கல், ஆழமாக்குதல், நவீன பாரமுயர்த்திகள் மற்றும்

வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கும், கொழும்புத் துறைமுகத்தில் கப்பலோட்ட நெரிசலைக் குறைத்து அவை திறனாக மேற்கொள்ளும் நடவடிக்கையாக நவீன பாகங்களுடனான புதிய துறைமுகமொன்று ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படுவதற்கு இக்கடன் பெறப்பட்டுள்ளது. எனவே தற்காலிகமாக நடைமுறை சொத்து விகிதம் சடுதியாக குறைந்தும் கடன் திணிவு விகிதத்தில் அதிகரிப்பும் காணப்பட்ட போதிலும் இ.து. அதிகாரசபை நீண்ட கால உபாயரீதியாக செயற்பட்டுள்ளதால் முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் அந்த விகிதங்களும் சிறந்த நிலையில் பேணப்படுவதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

#### (அ) கொழும்புத் துறைமுகம்

**(i) கப்பல்களின் வகை**

குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிபரத் தகவல்கள் சரியானவையாகும்.

2009 ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2010 ஆண்டில் வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கையில் குறைவு பதிவு செய்யப்பட்டிருப்பினும் அதற்குக் காரணமான பாரியளவிலான கப்பல்களின் வருகையும் ஒரு கப்பலில் போக்குவரத்து செய்யப்படும் பொருட்களின் அளவில் (தொன்/ கொள்கலன் அளவு) சராசரி கூடியதேயாகும். 2009 ஆண்டில் துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பலொன்றின் தேறிய தொன் அளவு 29,217 ஆகவும் 2010 30,412 ஆகவும் இருந்தன 2010 ஆண்டில் வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கு உலக பொருளாதார வீழ்ச்சியும் காரணமாக இருந்தது.

2010 ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2011 ஆண்டில் வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை 214 வரை அதாவது 5.5% அதிகரித்துள்ளது. 2010 ஆண்டில் உலக பொருளாதார வீழ்ச்சி முடிவடைந்ததும் 2011 ஆண்டில் சர்வதேச கப்பலோட்டத் துறையில் சிறு அதிகரிப்பு காணப்படுகின்றது.

**(ii) கொள்கலன் கையாளல் (இருபது சம அலகுகள்)**

குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிபரத் தகவல்கள் சரியானவையாகும்.

(i), (ii) 2010 ஆண்டின் உலக பொருளாதார வீழ்ச்சியின் முடிவோடு சர்வதேச கப்பலோட்டத் துறையில் வளர்ச்சி காணப்பட்டதால் கொழும்புத் துறைமுகத்தில் கையாளல் 673,144 இ.ச அலகுகளின் அதாவது 19.43% கான அதிகரிப்பு காணப்படுகின்றது. ஆனால் 2011 ஆண்டில் அமெரிக்காவிலும் யுரோ நாணய வலயத்திலும் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினை, சுனாமி நிலையினால் ஜப்பான் பொருளாதார வலு உற்பத்தியின் வீழ்ச்சியும், மத்திய கிழக்கு யுத்த நிலைமை போன்றவற்றினால் சர்வதேச கப்பலோட்டத் துறையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கையில் கொழும்புத் துறைமுக கொள்கலன் கையாளல் 125,446 இ.ச. அலகுகளினால் அதாவது 3.03% இன் கொழும்புத் துறைமுக வளர்ச்சி முன்னேற்றம் பாராட்டப்படுதல் வேண்டும்.

(iii) அரச நிறுவனமொன்றாக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட முடியாத வணிகத் தீர்மானங்கள் தனியார் துறையின் கொள்கலன் முனையமான எஸ்.ஏ.ஜீ.ரீ கம்பெனிக்கு செயற்படுத்தப்பட ஆற்றல் உண்டு. அவ்வாறான செயற்பாடுகளின் மூலம் எஸ்.ஏ.ஜீ.ரீ கம்பெனியினால் வாடிக்கையாளர்கள் கவரப்பட்டு கையாளல்களை அதிகரித்துக்கொள்ள முடியும். அப்போதைய உலக கொள்கலன் கையாளல் கொள்ளளவில் 18% உரித்தாக்கிக் கொண்டிருந்த Mearsk கப்பல் கம்பெனி 2006 ஆண்டில் P&O கப்பல் கம்பெனியினால் விலைக்கு வாங்கப்பட்டது. எஸ்.ஏ.ஜீ.ரீ கம்பெனியின் 26% உரித்து P&O கப்பல் கம்பெனிக்கு சொந்தமாகவுள்ளதால் துறைமுகம் மற்றும் கப்பல் கம்பெனியுடன் ஒன்றிணைந்ததான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படக் கூடிய ஆற்றலை எஸ்.ஏ.ஜீ.ரீ தன்னகத்தே கொண்டுள்ளது. இக்காரணங்களினால் எஸ்.ஏ.ஜீ.ரீ கம்பெனியின் கையாளல் அளவு அதிகரித்தமை தெளிவாகின்றது.

இதற்கமைய முதல் காலப்பகுதியில் துறைமுக அதிகாரசபையின் சந்தைப் பங்கு குறைந்து எஸ்.ஏ.ஜீ.ரீ கம்பெனியின் சந்தைப் பங்கு அதிகரித்தது. ஆனால் இதுவானது தொடர்ச்சியாக நிலவும் நிலைமை அல்ல என்பதற்கு இதற்கு முன்னரும் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. தெளிவாக்கப்பட்ட அவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டு இதுவரையில் துறைமுக அதிகாரசபையின் சந்தைப் பங்கு அதிகரித்து வருகின்றமை முறையே 2010 ஆண்டில் 52.4%, 2011 ஆண்டில் 53.94%, 2012 ஆண்டில் 55.3% சந்தைப் பங்குகள் அதிகரித்ததன் மூலம் புலனாகின்றது.

(ஆ) **திருகோணமலை துறைமுகம்**

குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையாகும்.

திருகோணமலை துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை மற்றும் கையாளல் 2009 ஆண்டிலும் பார்க்க 2010 ஆண்டில் குறைந்துள்ளது. வடக்கில் நடைபெற்ற மனிதாபிமான நடவடிக்கையின் காலப்பகுதியில் இடம் பெயர்ந்தோரினதும், கரையோர பொருட்கள் போக்குவரத்துக்களும் குறைந்தமையே இதற்கான காரணமாகும்.

2010 ஆண்டில் 147 கப்பல்கள் கையாளப்பட முடிந்ததோடு 2011 ஆண்டில் 163 கப்பல்கள் வரை அதிகரித்துக் கொள்ளக்கூடியதாகவிருந்தது. டோக்கியோ கம்பெனிக்கு சீமெந்து கப்பல்களும் பிறிமா கம்பெனிக்கு வருகை தந்த கோதுமை ஏற்றுமதி இறக்குமதி கப்பல்களின் அதிகரிப்பு காணப்படுதல் இதற்கொரு காரணமாக இருந்த்தோடு செளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதி கப்பல்களின் வருகையும் இதற்கு துணையாக இருந்தது. இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு கடல் பயணக் கப்பல்களின் அவசர பராமரிப்புப் பணிகள், தண்ணீர், எரிபொருள் மற்றும் உணவு பானங்கள் பெறுவதற்காக திருகோணமலை துறைமுகத்திற்கு வருகை தந்தமை இன்னுமொரு காரணமாகும். 2010 ஆண்டிற்கு சார்பாக 2011 ஆண்டில் ஜிப்ஸம் (Gypsum) இறக்குவதற்காக அஸ்ரப் துறைமேடைக்கு வருகை தந்த கப்பல்களின் அதிகரிப்பும் மேலுமொரு காரணியாக காட்டப்படலாம்.

(இ) **காலி துறைமுகம்**

காலி துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை மற்றும் கையாளல் அளவு 2009 ஆண்டை விட 2010 ஆண்டில் குறைந்துள்ளது. காலி துறைமுகத்திற்கு பிரதானமாக சீமெந்து உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களே கொண்டு வரப்படுகின்றன. 2010 ஆண்டினுள் சீமெந்து மூலப்பொருட்களின் இறக்குமதி குறைந்துள்ளது. இவ்விடயங்கள் கையாளல்

அளவு மற்றும் கப்பல்களின் எண்ணிக்கை குறைவதற்கான காரணமாக அமைந்தன.

2010 ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2011 ஆண்டில் நாட்டில் சீமெந்துக்கான கிராக்கி அதிகரித்த்தனால் அம்மூலப்பொருட்களின் இறக்குமதியும் அதிகரித்தது. இதுவானது கையாளல் அளவு மற்றும் கப்பல்களின் வருகை அதிகரிப்பதற்கான விசேட காரணமாகியது

(ஈ) **சகல துறைமுகங்களும் (கொழும்பு, திருகோணமலை, காலி)**

குறிப்பிடப்பட்டுள்ள கூற்று பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

2009 ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2010 ஆண்டில் சகல துறைமுகங்களிலும் பொருட்களின் கையாளல் வளர்ச்சி 12,461,925 மெ. தொன் அதாவது 25.54% ஆக இருந்ததோடு 2010 ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2011 ஆண்டில் பொருட்களின் கையாளல் வளச்சி 3,813,376 மெ.தொ. அதாவது 6.22% ஆக இருந்தது.

(உ) **மாகம்றுஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்**

2010 ஆண்டின் நவம்பர் மாதத்தில் அலைதாங்கி நிர்மாணம், நங்கூரத்தளங்கள் நிர்மாணித்தல், துறைமுகத் தடாகம் தோண்டுதல் மற்றும் கப்பலோட்ட, பிரவேச வழி தோண்டுதல் போன்ற பிரதான நிர்மாணிப்புகள் முடிவடைந்திருந்தன. ஆனால் கப்பல்கள் வருவதற்குத் தேவையான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் நிறைவு பெறாதிருந்தன. அதாவது துறைமுக உள்ளக பாதைகள் அமைத்தல், துறைமுகத்தில் மற்றும் வேறு துணை சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் ஊழியர்களுக்குத் தேவையான கட்டிடங்கள் அமைத்தல் போன்ற பணிகள் முடிவுறாத நிலையிலிருந்தன. கன்ட்றி பாரமுயர்த்திகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள முதலாம் கட்டத்தின் மேலதிக கடன் தொகை இப்போது அங்கரிக்கப்பட்டு வருகின்றது. தற்போது குறிப்பிடத்தக்க அளவில் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் முடிவடைந்து கன்ட்றி பாரமுயர்த்திகள் தேவைப்படாத வாகனங்களினது கையாளல் மற்றும் மீள் ஏற்றுமதி நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. முதலாம் கட்டத்தின் மேலதிக கடன் தொகை கிடைக்கப்பெற்றதன் பின்னர் துரிதமாக கன்ட்றி பாரமுயர்த்திகள் வாங்கப்பட்டு சகல கையாளல் நடவடிக்கைகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும்.

இதற்கு மேலதிகமாக துறைமுகம்சார் கைத்தொழில்களுக்கான முதலீட்டாளர்களிடமிருந்து பிரேரணை கோரலின் 01 ஆம் கட்டம் முடிவடைந்து அதன்படி தெரிவு செய்யப்பட்டுள்ள 07 கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்று சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்களுடன் உடன்பாடுகளுக்குட்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் 01 ஆம் கட்டம் முடிவடைந்ததன் பின்னரும் முதலீட்டாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அதிகமான வேண்டுகோள் கவனத்திலெடுக்கப்பட்டு துறைமுகம்சார் கைத்தொழில்கள் தொடர்பில் முதலீட்டாளர்களிடமிருந்து 02 ஆம் கட்ட பிரேரணை கோரல் (RFP2) நடைபெற்று வருகின்றது.

4.2 **முகாமைத்துவ செயற்திறனின்மை**

(அ) இப்பாரமுயர்த்திகள் புதிதாக பொருத்தப்பட்ட போதிலும் ஓடுபாதையில் இருந்த இரும்பு பீலிகள் அதற்கான தகுந்த நிலையில் இருக்கவில்லை. அதன்படி புதிதாக

மீள் நிறுவப்பட்டுள்ளதுடன் அதற்காக சுமார் ஒரு வருட காலம் சென்றது. இதற்கு மேலதிகமாக புதிய பாரமுயர்த்திகள் பாவனைக்கெடுப்பதற்காக பழைய பாரமுயர்த்திகளுக்காக மணித்தியாலமொன்றிற்கு அறவிடப்படும் 6 அமெரிக்க டொலர் கட்டணம் போதாமையினால் அதை அதிகரிப்பதற்கான அங்கீகாரம் பெறப்படுவதற்கு தாமதமானதால் இப்பாரமுயர்த்திகள் சேவை நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு தாமதமானதும் மேலுமொரு காரணமாகும். ஆயினும் இதுவரை இந்த இரண்டு பாரமுயர்த்திகளும் மணித்தியாலமொன்றுக்கு 40 டொலர் கட்டணம் அறவிடப்பட்டு (திறைசேரி அங்கீகாரத்தின் மீது) கையாளல் நடவடிக்கைகளுக்காக வெற்றிகரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

(ஆ) களஞ்சிய மொத்தக் கணக்கு 13 களஞ்சியக் கூறுகளினதும் எரிபொருள் களஞ்சியத்திலிருந்த நிலுவைகளின் ஒன்று சேர்த்தல்களினால் சேர்ந்தவையாகும். இதில் 06 களஞ்சியக் கூறுகளும் உதிரிப்பாகங்களைக் கொண்ட களஞ்சியங்களாகும். இந்த உதிரிப்பாகங்கள் கொண்ட களஞ்சியங்கள், ஒட்டுமொத்த பெறுமதியில் 90% பங்களிப்பை வகிக்கின்றது. இந்த உதிரிப்பாகங்கள் 10 - 15 வருடங்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலங்கள் சம்பந்தப்பட்ட இயந்திர உபகரணங்களின் பயன்பாட்டிற்காக சேமித்து வைக்கப்படுகின்றன. அதேபோன்று உயர் நிதிப் பெறுமதிகளைக் கொண்ட இயந்திர சாதனங்கள் கொள்வனவு செய்யப்படுகையில் அநேகமாக உதிரிப்பாகங்கள் அதனோடு வழங்கப்படுகின்றன.

பொதுவாக பாரிய விலைகளைக்கொண்ட இயந்திரங்கள் வாங்கப்படுகையில் இயந்திரத்தின் பெறுமதியில் 1% அளவு உதிரிப்பாகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அந்த உதிரிப்பாகங்களின் பெறுமதியும் மொத்தக் கணக்கினுள் அடங்கும்.

சில உதிரிப்பாகங்கள் 10 - 15 வருடங்கள் சென்றதன் பின்னரே அந்த இயந்திரங்களுக்கு பொருத்தப்பட வேண்டியேற்படும். அதேபோன்று அநேகமான உதிரிப்பாகங்கள் திறந்த சந்தையில் உடனடியாக வாங்க முடியாது. சில உதிரிப்பாகங்கள் வெளிநாடுகளில் கட்டளையிடப்பட்டு பெறப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட இயந்திர உபகரணங்களின் பராமரிப்பு அல்லது அவசர பழுதுபார்ப்பின் போது உடனடியாக சந்தையில் இந்த உதிரிப்பாகங்கள் வாங்க முடியாதுள்ளதனால் இவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கப்படல் வேண்டும்.

அத்தோடு ஒவ்வொரு வருடத்திலும் சம்பந்தப்பட்ட மொத்தத் தொகை தொடர்பில் சிறந்த அறிவு கொண்ட பொறியியலாளர்கள்/ வேலைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பகுதியின் அலுவலர்களை உள்ளடங்கிய குழுவினால் மொத்தத் தொகை ஆய்வு செய்யப்பட்டு மேற்கொண்டு தேவைப்படாத மொத்தத் தொகை உரிய முறையின் மீது அகற்றப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(இ) இதுவானது பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது கிடைக்கப்பெற வேண்டிய செலவினமாக நீக்கப்பட்டுள்ளது.

(ஈ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல மோட்டார் சைக்கிள்கள் மேற்கொண்டு பழுதுபார்க்கப்பட முடியாத நிலையிலிருந்தன. அநேகமான மோட்டார் சைக்கிள்கள் 15 வருடங்களுக்கு மேல் பழைமையானவைகளாகும். இந்த மோட்டார் சைக்கிள்கள் அநேகமானவை தற்போது விலைகோரலின் மூலம் விற்கப்பட்டு மோட்டார் கராஜிலிருந்து அகற்றிச் செல்லப்பட்டுள்ளன.

(உ) இவர் மோட்டார் கராஜிக்கு இணைக்கப்பட்ட நாளிலிருந்து உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யும் ஆவணங்கள் தயாரித்தல்,மோட்டார் வாகனங்களின் பழுதுபார்த்தல்களுக்கான ஆகுசெலவு கணிப்பிடல் போன்ற பணிகள் நிறைவேற்றியுள்ளதுடன் 2012.06.01 ஆந் திகதியிலிருந்து சேவை வழங்கல் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஊ) அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகள் குத்தகைக்கு வழங்கப்படுகையில் அவற்றின் வாடகைக் கட்டணங்கள் அரசாங்க பிரதான விலை மதிப்பீட்டாளரின் மதிப்பிடல்களுக்கேற்ப தீர்மானிக்கப்படுகின்றன.

(எ) துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான இவ்வாறான காணிகள் வரையறுக்கப்பட்ட அளவில் இருப்பதோடு எதிர்கால துறைமுக விரிவாக்கல்களுக்கு அல்லது நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதற்காக இக்காணிகளில் வேறு கட்டிடங்கள் நிர்மாணித்தல் அல்லது பாவனைக்கு வழங்கப்படாது பாதுகாப்பாகப் பேணப்பட்டு வருகின்றன. தற்போது அரசாங்கத்தினால் உத்தேசிக்கப்பட்டுள்ள பாரியளவிலான நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஒன்றிணைந்து செயலாற்றப்படுகின்றது.

(ஏ) இந்த வளவு துறைமுக ஆணைக்குழுவினால் பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனி லிமிட்டெட் நிறுவனத்திற்கு 1975 ஆம் ஆண்டிலிருந்து 25 வருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அவர்கள் இந்த வளவினை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதோடு அதில் ஏற்பட்ட நிலைமையில் குத்தகை வாடகை செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இந்த வளவு மீள பொறுபேற்கப்படுவதற்கு பல தடவைகளிலும் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் முற்றாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பெனி உரிய அலுவலகம் அகற்றிக் கொள்ளப்படுவதற்கு சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவர்களுக்கு துறைமுக அதிகாரசபையின் வேறு இடமொன்று வாடகைக்கு வழங்கி இந்த வளவு மீள அதிகாரசபைக்கு பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ) இந்த கடலில் மூழ்கிய பகுதி தற்போது கப்பல்கள் நங்கூரமிடப்படுவதற்கு பயன்படுத்தப்படாத ஆழமற்ற பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு அப்பகுதி சிறிய கப்பல்கள் மாத்திரம் கையாளப்படும் பிரதேசமாகும்.

இப்பிரதேசம் எமது எதிர்கால திட்டங்களுக்கா நிரப்பப்பட்டு முனையம் பெரிதாக்கப்படுவதை நோக்காகக் கொண்டுள்ளதனாலும் இதை மீட்டெடுத்து அகற்றுவதற்கு பாரிய செலவினை ஈடுபடுத்தப்பட வேண்டியதனாலும் இதுவானது பொருளாதார ரீதியாக பயனற்ற செயலாகும்.

### 4.3. செயற்பாட்டு செயற்திறனின்மை

#### (அ) திருகோணமலை துறைமுகம்

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மீது துறைமேடைகளின் இயக்க நடவடிக்கைகள், கப்பற்சுமை, துறைமுக தொன் அளவு, துறைமேடைப்பணி, தரையிறக்கல் மற்றும் வினியோகித்தல் மேலதிக செயற்பாடு பிறிமா மற்றும் டோக்கியோ கம்பெனியினால் மேற்கொள்ளப்பட அனுமதி வழங்கப்பட்டதன் ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான வருமானம் கிடைக்கப்பெறுதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான தீர்வாக துறைமுகம்சார் தொழிற்சாலைகள்,

விவசாய மற்றும் பெறுமதி சேர் தொழிற்சாலைகளைக் கொண்ட கைத்தொழில் நகரத்துக்கு துறைமுகத்திற்குச் சொந்தமான வளவுகள் குத்தகை மற்றும் வாடகைக்கு வழங்கப்படுவதன் மூலம் வருமானம் பெறப்படுவதற்காக முதலீட்டாளர்களிடமிருந்து பிரேரணைகள் கோரல் (Request for Proposal) நடைபெற்று மதிப்பிடல் நடைபெற்று வருகின்றது. அதேபோன்று செலவினம் கட்டுப்படுத்தப்படுதலின் ஊடாகவும் இந்த நஷ்டம் குறைக்கப்படக்கூடிய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) **காலி துறைமுகம்**

சீமெந்து சார்ந்த மூலப் பொருட்களின் இறக்குமதி குறைந்ததினால் இயக்க வருமானம் முடிவடைந்து 2007 ஆண்டிலிருந்து தொடர்ச்சியான நஷ்டமேற்பட்டுள்ளது. ஆயினும் 2010 ஆண்டில் வருமானம் அதிகரித்து ஊழியர்களின் தொகை குறைந்ததினால் முன்னைய ஆண்டுகளைப் பார்க்கிலும் நஷ்டம் குறைவாகக் காணப்படுகின்றது. மேற்கொண்டு வருமானம் அதிகரித்துக் கொள்ளப்படும் நோக்கில் துறைமுகம்சார்ந்த உல்லாச கைத்தொழில் ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வருடத்தினுள் உல்லாசப் படகுத்தளமொன்றும் சிறியளவிலான படகுகள் பழுதுபார்க்கும் முனையமொன்றும் ஸ்தாபிக்கப்படுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

4.4 **பயன்படுத்தப்படாத குறைவாகப் பயன்பாட்டிற்குற்பட்ட சொத்துக்கள்**

மிகவும் துரிதமாக உணவு பானங்கள் வழங்கும் நிலையங்களும் சுகாதார வசதிகளும் ஸ்தாபிக்கப்படுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

4.5 **சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) (I) கடல்சார் பயிற்சி நிலையம் கடல் சார்ந்த துறையில் பாடநெறிகள் நடாத்தப்படுவதற்காக சிறந்த முறையில் இயந்திர சாதனங்கள் மற்றும் வேலைப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. கடல்சார் துறையின' பயிற்சிப் பாடநெறிகள் நடாத்துதல் இதன் முக்கிய நோக்கமாகும். ஆனால் இதுவரை கடல்சார் துறைக்குரிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவில்லை. தற்போது ஓட்டுபவர்/ மின்சாரவியலாளர்/ இயந்திரவியலாளர் போன்ற தொழில்சார் பாடநெறிகள் மாத்திரமே நடாத்தப்பட்டு வருகின்றன. இதுவானது கடல்சார் துறையின் பயிற்சிப் பாடநெறிகளுக்குரிய உப பிரிவு மாத்திரமேயாகும். இது NVQ சான்றிதழ் நிலையின் அங்கீகாரம் பெறாததனால் இதில் கலந்து கொள்ளும் மாணவர்களினது தொகை மிகவும் குறைவாகும்.

அதேபோன்று இந்நிறுவனத்தின் நடாத்தப்படும் பாடநெறிகள் கட்டணம் செலுத்தப்படுதலின் மூலம் வேண்டியுள்ளது. ஆரம்ப காலப்பகுதியினுள் இப்பாடநெறிகள் நடாத்திச் செல்லப்படுவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களினது ஒத்துழைப்பின் மூலம் மாணவர்களுக்கான நிதிச்செலவுகள் பொறுப்பேற்கப்பட்டன. போக்குவரத்து சிக்கல்கள் / தொழில்சார் பாடநெறிகள்/ போக்லிப்ட் பாடநெறிகளுக்கு மூன்று வருடங்கள் கடந்த சாரதி அனுமதிப் பத்திரம் தேவைப்படுகின்றமை போன்ற காரணங்களினால் இப்பாடநெறிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களினது தொகை குறைவாகவுள்ளது.

அதேபோன்று இந்நிறுவனத்தின் ஆகுசெலவு மாணவர்களினது பயிற்சி நடவடிக்கைகளுக்காக அன்றி நிறுவனத்தின் வேறு பராமரிப்புகளுக்காக கூடுதலாக செலவு செய்யப்படுகின்றது.

(II) இந்நிறுவனத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்கு NVQ மட்டத்திலான சான்றிதழ்கள் வழங்கப்பட முடியாதுள்ளதனாலும் அதேபோன்று நிறுவனத்தின் குறிக்கோள்களைக் கொண்ட பாடநெறிகள் இதுவரை ஆரம்பிக்கப்படாதுள்ளதனாலும் தற்போது நடாத்தப்படும் பாடநெறிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதற்குத் தீர்வாக எதிர்காலத்தில் தற்போது நடாத்தப்படும் பாடநெறிகளுக்கு மேலதிகமாக மீனவப் பயிற்சிப் பாடநெறி (Fishing Boatman), படகோட்டிப் பயிற்சிப் பாடநெறி (Coxwine), புதிய தொழில்நுட்பப் பாடநெறி (CDC Course), கடல்சார் பொறியியல் டிப்ளோமா (Diploma in marine engineering Programme) போன்ற பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

(III) பாடநெறிகள் நடாத்தப்படுவதற்காகவுள்ள இயந்திர சாதனங்கள் 2004 ஆண்டிலிருந்து செயற்பாடற்றதாக இருந்ததோடு தேவைப்படும் சந்தர்ப்பங்களின் போது பயன்படுத்தப்பட்டன. இவ் இயந்திர சாதனங்கள் கடல்சார் துறையின் பாடநெறிகள் மற்றும் தொழில்சார் பயிற்சிப் பாடநெறிகளுக்காக பெறப்பட்டவையாகும்.

(ஆ) துறைமுக அதிகாரசபையின் தேவைப்பாட்டின் மீது அதிகாரசபைக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் தொடர்பில் இலங்கை வங்கிக்கு நிதி சேகரிப்பு நிலையங்கள் நடாத்திச் செல்லப்படுவதற்கு முகாமைத்துவத்தின் அனுமதியின் மீது 03 வளவுகள் வாடகையின்றி வழங்கப்பட்டுள்ளன. இவ்வளவுகள் அனுமதிப்பத்திர அலுவலகம், கனல் முனையம் மற்றும் பேலியகொட களஞ்சியத் தொகுதியில் அமைந்துள்ளன. இவ்வாறான நிலையங்களில் பொதுவான வங்கி நடவடிக்கைகள் இடம்பெறாது துறைமுக பாவனையாளர்கள் அதிகாரசபைக்குச் செலுத்தும் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்கான நிதி பொறுப்பேற்றலுக்காக மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது.

ஹட்டன் நஷனல் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள 3 வளவுகளில் அவ்வங்கியின் அலுவலகம் நடாத்திச்செல்லப்படும் வளவுக்கு அரசாங்க விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் படியான வாடகைக் கட்டணம் அறவிடப்படுகின்றது. ஏ.ரீ.எம் இயந்திரங்கள் துறைமுக ஊழியர்களின் நலன்புரி தொடர்பில் நடாத்திச்செல்லப்படுவதோடு இவை துறைமுக பாவனையாளர்களினாலும் அதிகாரசபையின் ஊழியர்களினாலும் மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன. இவை கருத்திலெடுக்கப்பட்டு ஹட்டன் நஷனல் வங்கியின் ஏரீஎம் இயந்திரங்கள் நடாத்திச் செல்லப்படுவதற்காக 2 வளவுகள் மாத்திரம் பெயரளவிலான வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

(இ) (I) **EDI நேட்வேர்க் தனியார் கம்பெனி ( ரூபா 500,000/=)**

புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு பணிப்பாளர் சபையிலிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் பொது திறைசேரியின் அனுமதி பெறப்படுவதற்கான கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதிலும் அதற்குப் கிடைத்த பதிலாக அமைச்சின் செயலாளர், பிரதான கணக்கு அலுவலராக கடமை புரிவதனால் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்

அமைச்சின் செயலாளரினது அனுமதி போதுமானதென பொது திறைசேரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கான அனுமதி தொடர்பில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு தற்போது கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(II) வ/ப லங்கா கோல் தனியார் கம்பெனி ரூபா 2,000,000/= 2011 ஆண்டானது மேற்குறிப்பிடப்பட்டுள்ள கம்பெனிக்கு பொருளாதார கையாளலின் முதலாவது ஆண்டாக இருந்தது. ஆயினும் ஏனைய பங்கிலாபங்கள் பிரகடனப்படுத்தப்படுவதற்கு பெறப்பட்ட இலாபம் போதுமானதாக இருக்கவில்லை. ஆனால் எதிர்காலத்தில் இலாபமீட்டப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

**4.6 இனங் காணப்பட்ட நஷ்டங்கள்**

(அ) இது தொடர்பில் தம்புத்தேகம நீதிமன்றில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருவதோடு அதன் இறுதித் தீர்ப்பின் பின்னர் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பெனியினால் வழங்கப்பட்ட சில சேவைகளான (கப்பல் கையாளல் நடவடிக்கைகளில் ஜய கொள்கலன் முனையத்தினால் வழங்கப்பட வேண்டிய துணைச் சேவைகளான) கொள்கலன்களின் கொக்கிகளை பூட்டுதல்/கொக்கிகளிலிருந்து விடுவித்தல் மற்றும் குளிரூட்டப்படும் கொள்கலன்களின் வெப்பம் கண்காணிக்கும் சேவைகளுக்கு துறைமுக ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் பாரிய செலவினம் ஏற்க வேண்டியேற்படும். இந்நிலைமையினுள் தற்போது தொழில் சந்தையில் செலுத்தப்படும் மிகவும் குறைந்த நாளாந்த சம்பளம் அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்த விலையின் கீழ் இச்சேவைகள் இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பெனியூடாகப் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) இலங்கை துறைமுக அதிகாரசபையிடம் போதுமான இழுவைக் கலங்கள் இல்லை. சில இழுவைக் கலங்கள் பழையதானதும் பழுதுபார்க்கபடக் கூடிய நிலையிலுமுள்ளன. புதிதாக இழுவைக் கலங்கள் வாங்குவதற்கும் பாரிய செலவினம் பொறுப்பேற்கப்பட வேண்டியுள்ளது. பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையிலிருக்கும் இழுவைக் கலங்கள் பழுதுபார்க்கப்படுவதற்கு நீண்ட காலம் போன்று பாரிய செலவினமும் பொறுப்பேற்க வேண்டியுள்ளது. போதுமானளவு இழுவைக் கலங்கள் இல்லாத காரணத்தினால் கப்பல் இயக்கங்களில் ஏற்படும் தாமதங்கள் மீதான செயற்றிறனின்மையானது கப்பல் சொந்தக்காரர்களின் கொழும்புத் துறைமுகம் தொடர்பான நிலைப்பாட்டிற்கு பாதிப்பான தாக்கம் ஏற்படுத்தும். சர்வதேச துறைமுகங்களுக்கிடையிலான போட்டி நிலைமையினுள் கொழும்புத் துறைமுகம் பாதுகாக்கப்படும் நோக்கில் இயக்க நடவடிக்கைகள் தொடர்ச்சியாகவும் திறனாகவும் பேணப்படும் வகையில் துறைமுக முகாமைத்துவத்தினால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது அதற்கான உகந்த தீர்வாக இந்த 02 இழுவைக் கலங்க்கள் வாடகைக்கு பெறப்பட்டன. இந்த 02 இழுவைக் கலங்களுக்கான பழுதுபார்ப்பும் பராமரிப்பும் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படாததினால் நிதிசார் நஷ்டம் இதன் மூலம் ஏற்படவில்லை.

(ஈ) துறைமுகத்தின் பிரதான பிரவேச வழி ஆழமாக்கும் திட்டம் 2001 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு பிரதான பிரவேச வழியில் கப்பல் போக்குவரத்தின் நெரிசல் காரணமாக துறைமுக ஆழமாக்கல் நடவடிக்கைகள் இடைவழியில் தடைப்பட்டதன் மீது உரிய காலப்பகுதியினுள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரினால் பூர்த்தி செய்யப்பட முடியவில்லை. இதற்காக 2 வருடங்கள் சென்றுள்ளதுடன் மேலதிகமாக சென்ற காலப்பகுதியினுள் பயன்படுத்தப்பட்ட இயந்திர உபகரணங்கள் மற்றும் மனித ஊழியம் தொடர்பில் அவர்கள் ரூபா 88,633,481/= கான மேலதிக நிதித் தொகை கோரியதனால் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் செயலாளர் (துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு) இதைத் தீர்த்து வைப்பதற்காக இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் Institute of Engineers (Sri lanka) மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளிற்கமைய (நிதி செலுத்தி விடுவிக்குமாறு) நியமிக்கப்பட்ட நடுநிலையாளர் அறிவுறுத்தல் வழங்கிள்ளார்.

திட்டம் பொறியியலாளரினால் அவரின் 2005.02.28 ஆந் திகதிய அறிக்கையில் ரூபா 8,897,600/= கான மேலதிக நிதிக்கு திட்ட ஆலோசகர் உறுதியளித்துள்ளதாக கூறப்பட்டதன் பின்னர் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது கட்டுப்படுத்தப்பட முடியாத கப்பலோட்ட நெரிசல் காரணமாக இடையில் நிறுத்தப்பட்டிருந்த ஆழமாக்கும் பணிகளுக்கு நீண்டகாலமாக வழங்கப்படாதிருந்த அந்நிதித் தொகை அவர்களுக்கு செலுத்தப்பட்டது.

(உ) மூல படத்தின் 7180 ஆம் இல: 05 இன் காணித் துண்டு தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருவதனால் காணி கைப்பற்றப்படுகையின் போது நஷ்டஈடு செலுத்தப்படவில்லை. சம்பந்தப்பட்ட காணிக்கான நஷ்டஈடு மற்றும் வட்டி செலுத்தும் படியான சட்ட மா அதிபரின் அறிவித்தலின் மீது கொழும்பு பிரதேச செயலாளர், 2010.06.14 ஆந் திகதிய கடிதம் மூலம் சம்பந்தப்பட்ட நஷ்டஈட்டுத் தொகையினை கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வைப்பிலிடுமாறு துறைமுக அதிகாரசபைக்கு அறிவித்துள்ளார். அதன்படி பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் நஷ்டஈட்டுத் தொகை கொழும்பு மாவட்ட நீதிமன்றில் 2010.10.12 ஆந் திகதி வைப்பிலிடப்பட்டதோடு காணியினை அரசாங்கம் கைப்பற்றிய 1991.01.03 ஆந் திகதியிலிருந்து மாவட்ட நீதிமன்றில் நஷ்டஈட்டுத் தொகை வைப்பிலிடப்பட்ட 2010.10.12 ஆந் திகதி வரை, காணிகள் கைப்பற்றப்படும் சட்டத்தின் 35 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் 7% கான வட்டிப் பணம் மாவட்ட நீதிமன்றில் வைப்பிலிடப்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஊ) பழைய கலமொன்று மேற்கொண்டு பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்துதல் பொருளாதார ரீதியாக தகுதியற்றதெனின் அக்கலத்தின் நிகழ்காலப் பெறுமதி இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நியமிக்கப்படும் விசேட ஆய்வுக் குழுவினால் மதிப்பிடப்பட்டு அந்த விலைக்குக் குறையாத பெறுமதிக்கு அக்கலம் விற்பனை செய்தல் அல்லது முகாமைத்துவக் குழுத் தீர்மானத்திற்கமைய இலஙகை துறைமுக மற்றும் முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பெனியூடாக பகுதிகளாக்கப்பட்டு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தற்போதுள்ள நடைமுறையாகும்.

**விற்கப்பட்ட 3 மிதக்கும் கலங்கள்**

T/T waruna இழுவைக் கலம், விசேட ஆய்வுக் குழுவினால் 2005.04.05 ஆந் திகதி ரூபா 2,000,000.00 சந்தைப் பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டது. பின்னர் இக்கலம் 2005.07.23 ஆந் திகதி விலை கோரல் மூலம் விற்பனை செய்யப்படுவதற்காக

விலைமனு கோரப்பட்டு வ/ப M/S Master (Pvt) நிறுவனத்தினால் இக் கலம் தொடர்பில் ரூபா 6,025,000,00 கான விலை முன்வைக்கப்பட்டது. இவ்விலை சிபாரிசு செய்யப்பட்ட விற்பனைப் பெறுமதிக்கு மேலான பெறுமானம் கொண்டதனால் 2005.09.24 ஆந் திகதிய முகாமைத்துவக் குழுவின் இல: 30/05 கொண்ட தீர்மானத்தின் மீது குறித்த விலைக்கு 6,025,000,00+903,750.00/ (VAT ) = 6,928,750.00 வ/ப M/S Master (Pvt) நிறுவனத்திற்கு விற்கப்பட்டுள்ளது.

அதேபோன்று M/V Kakuluwa கலம் விசேட ஆய்வுக் குழுவினால் 2006.03.08 ஆந் திகதி ரூபா 18.2 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டது. பின்னர் 2006.05.03 ஆந் திகதி மத்திய விலைகோரல் சபையிடம் முன்வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டதன் பின்னர் விலை கோரல் மூலம் விற்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இக்கலம் தொடர்பில் விலைகோரல் இல: 296 கீழ் இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பெனியினால் முன்வைக்கப்பட்ட விலை ரூபா 5,760,000.00 ஆகும். இதுவானது சிபாரிசு செய்யப்பட்ட விற்பனை விலையை விட குறைந்த பெறுமானம் கொண்டதனால் அக்கம்பெனியினால் அவ்விலையின் மீது விற்பனை செய்யப்படுதல் முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்படவில்லை.

ஆனால் துறைமுகத்தினுள் கழிவு இரும்புகள், இலங்கை முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பெனியினால் அங்கீகார விலைகள் மீது விற்பனை செய்யப்பட வேண்டுமெனும் கொள்கைரீதியான தீர்மானம் முகாமைத்துவக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி இக்கலம் மீண்டும் அக்கம்பெனியூடாக கழிவு இரும்பாக விற்பனை செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

T/T Asoka கலமும் விசேட ஆய்வுக் குழுவினால் 2005.11.10 ஆந் திகதி ரூபா 2,000,000.00 விற்கு மதிப்பிடப்பட்டது. பின்னர் இக்கலம் 2007.03.24 ஆந் திகதி விலை கோரல் மூலம் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் விலைகோரலிலிருந்து இது அகற்றப்பட்டு கழிவாக விற்பனை செய்யப்படுவதற்கு இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**விற்பனை செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்ட 03 மிதக்கும் கலங்கள்**

James Donan கலம் - 2005 ஆம் ஆண்டை அடையும் போது இக்கலமானது 68 வருடங்கள் பழைமையானதாக இருந்ததோடு என்ஜின் இல்லாத இதை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாதுள்ளதனால் தச்சுத் தொழிலுக்குத் தகுந்த மரங்களை எடுத்து மீதியை அழித்து விடுவதற்கு இது தொடர்பிலான ஆய்வுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. அதன்படி செயலாற்றப்பட்டதன் பின்னர் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்களிலிருந்து இக்கலமானது பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

Dhaliya marrin - 2005 ஆண்டில் ஆய்வுக் குழுவின் சிபாரிசு மீது விற்பதற்கு தீர்மானிக்கப்பட்ட இக்கலத்தினை வாங்குவதற்கு 2010 அக்டோபர் மாதம் வரை வாங்குபவர் எவரும் முன்வராததனால் கடலில் சிதைவடைந்து காணமற் போவதற்கு முன் என்ஜின் இல்லாத இக்கலம் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்களிலிருந்து அகற்றப்படுவதற்கு மீண்டும் ஆய்வுக் குழுவின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் வாங்குவதற்கு முன்வராத இதனை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆய்வுக் குழுவின் சிபாரிசாக இருந்தது. அதன்படி

எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட கலம் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்களிலிருந்து நீக்கப்படும்.

M/L Manel _ இக்கலமும் 2005 ஆண்டில் நியமிக்கப்பட்ட விசேட ஆய்வுக் குழுவினால் உபயோகப்படுத்தப்பட முடியாது விற்பதற்காக சிபாரிசு செய்யப்பட்டு அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கலமானது பட்டியலிடப்பட்டுள்ள பொருட்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) தியகாவா கலம் பகுதிகளாக்கப்பட்டு இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பெனியூடாக விற்பதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கெதிராக வ/ப ஆஸா லங்கா என்டபிறைஸ் (தனியார்) கம்பெனியினால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு இடைக்கால தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது. இவ்வழக்கு தீர்வடைந்ததன் பின்னர் மீண்டும் இக்கலம் பகுதிகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்கு இலங்கை முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பெனியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இக்கலம் பழுதடைந்த நிலையிலிருந்த காலப்பகுதியில் கடற்படை பொறுப்பேற்றிருந்தும் பழுதுபார்த்தல் பணிகள் நடைபெறாததினாலும் ஆஸா லங்கா கம்பெனியுடனான வழக்கு நடைபெற்ற காலப்பகுதியினுள் மேலும் பழுதடைந்ததன் காரணமாகவும் இது கடல் மார்க்கமாக அங்குமிங்கும் நகர்த்தப்பட முடியாத நிலையிலிருந்தது. இதற்கு மேலதிகமாக வேறு பிரதேசமொன்றில் இரும்புகளாக வெட்டுதல் சுற்றாடலுக்குப் பாதிப்பென்பதால் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்தும் சுற்றாடல் அதிகாரசபையிலிருந்தும் அனுமதி பெறுதல் கஷ்டமான காரியமாகும். எனவே இக்கலம் கடலில் சிதைவடைவதற்கு மேற்கூறப்பட்டுள்ள விடயங்களும் காரணமானதெனக் கூறலாம்.

4.7 **ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

(அ) பிராந்திய வணிகத் துறைமுகமொன்றாக அபிவிருத்தி செய்யப்படும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்த காலி அபிவிருத்தி திட்டமானது கப்பற் சரக்கு கையாளல், அதற்கான பல்நோக்கு முனையங்கள் மற்றும் அலைதாங்கி நிர்மாணித்தல், துறைமுக பிரவேச வழி, துறைமுகத் தடாகம் தோண்டுதல், போன்று வேறு வசதிகள் நிறுவப்படுவதற்கான பூரணத் திட்டம், 2007 ஆண்டில் Pacific Consultant International கம்பெனியினால் பூர்த்தி செய்யப்பட்டு அதற்கான விலைகோரலும் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் விலைகோரல் மேற்கொள்ளப்படுகையில் பொறியியல் மதிப்பிடலைத் தாண்டி உயர் பெறுமதி கொண்ட அதாவது அதைப் போன்று மூன்று மடங்கிலான பெறுமதி அதற்காக கிடைக்கப்பெற்றிருந்ததனால் இதுவானது நிதி சார்ந்த வகையில் உயிரோட்டமற்றதெனவும் (Not Viable) கொழும்புத் துறைமுக விரிவாக்கல் மற்றும் ஹம்பாந்தோட்டையில் புதிய துறைமுகம் நிர்மாணித்தல் போன்ற காரணங்களின் மீது காலி துறைமுகத்தில் வணிக சேவைகள் பெற்றுக்கொள்ளலில் கிடைக்கப்பெறும் குறைந்த கேள்வியினுள் வணிகக் கப்பற் சரக்குகள் கையாளும் மாற்று துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படும் தேவைப்பாடு மிகவும் குறைந்திருப்பதனாலும் அதேபோன்று இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள திட்டம் சூழல் உரிமைகளுக்குப் பாதிப்பேற்படுத்துமென்னும் அடிப்படையின் மீது சுற்றாடல் நலன் விரும்பிகள் மற்றும் சூழல் தொடர்பான அரச நிறுவனங்களினால் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் செயலுருவில் கொண்டுவரப்படுதல் தொடர்பில் எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டன. இச்சகல காரணிகளும் கவனத்திலெடுக்கப்பட்டு இலங்கை

அரசாங்கம் சுற்றுலாத் துறைமுகமாக காலி துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு கவனம் செலுத்தியுள்ளது.

இதன்படி இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிகழ்காலத்தில் புதிய தகுந்த மாற்றுத் திட்டங்கள் அடையாளங்காணப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு அதற்காக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆலோசனைச் சேவைகளிலும் சிறு மாற்றங்களேற்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் ஆலோசனைச் சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் முற்றாக விரயமானதெனக் கருதப்பட முடியாது.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் கிடைக்கப்பெற்ற இந்நிதியில் M/S Scot Wilson Kirkpatrick கம்பெனியினால் இ.துஅ. மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி சார்பில் இ.து அதிகாரசபையின் ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களுக்காக தயாரிக்கப்பட்ட வர்த்தகத் திட்டம் தொடர்பில் ரூபா 391 மில்லியன் செலவு செய்யப்பட்டது.

ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்கள் இ.து. அதிகாரசபையிலிருந்து விடுபட்ட சுயாதீன கூட்டுத்தாபனமாக மாற்றப்பட வேண்டும் என்பதே மேற்குறிப்பிடப்பட்ட கம்பெனியின் வர்த்தக் திட்டமாகும். இது நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து உதவி கிடைக்கபெற்ற போதிலும் இப்பிரேரணை செயற்படுத்தப்படுதலின் மூலம் அக்கூட்டுத்தாபனங்கள் இ.து.அதிகாரசபையின் விடய உள்ளடக்கத்திலிருந்தும் நிர்வாகத்திலிருந்தும் விடுபடுதல் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் அரச கொள்கைகளுக்கு நேரடியாக பாரிய தாக்கமேற்படுத்தும் பாதிப்பான நிலைமை ஏற்படவிருந்தது. எனவே அப்பிரேரணை நடைமுறைப்படுத்தாது பின்வரும் நோக்கங்களுக்காக அந்த மீதி நிதியுதவித் தொகை ஈடுபடுத்தப்படவுள்ளது.

i கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டம் தொடர்பிலும்

ii தற்போதுள்ள முனையங்களின் செயற்றிறன் விருத்தி செய்யப்படுவதற்கும் அதற்குத் தேவையான உபகரணங்களின் கொள்வனவு, கணனிமயப்படுத்துதல், இயக்க நடவடிக்கைகள் முறையாக்குதல் மற்றும் நிதிசார் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பிலும்

எனவே மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் கருத்திற் கொள்ளப்படுகையில் இவ்வாறு செலவு செய்யப்பட்ட நிதி விரயமானதெனக் கருதப்பட முடியாது.

### 4.8 ஏனைய அரசங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சபையின் வளங்கள்

அமைச்சு சார்பில் பொறுப்பேற்கப்படும் செலவினங்கள் இதுவரையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறு செலவினம் பொறுப்பேற்கப்படின் அச்சந்தர்ப்பத்திலேயே செலவினம் ஈடுசெய்யப்படுவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் அமைச்சுக்காக பொறுப்பேற்கப்பட்ட செலவினமான ரூபா 1,615,658 இல் ரூபா 1,477,418, 1997 ஆம் ஆண்டிலிருந்து வரும் நிலுவையாகும். இவை அமைச்சுக்காக வாங்கப்பட்ட அலுவலக உபகரணங்கள், அலுவலக நுகர்வுப் பொருட்களுக்குரிய ஆய்வில் இச்சொத்துக்கள் பௌதீகமற்றவையென

இனங்காணப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்குப் போதுமான ஆவணங்கள் அதாவது பொருட்கள் கிடைக்கபெறும் படிவம் (GRN), கொள்வனவுக் கட்டளைகள் (PO) இன்வோயிஸ் பத்திரங்கள் போன்றவை தேடிக்கொள்ள முடியாத காரணத்தினால் இவை ஈடுசெய்து கொள்ளப்பட முடியாத நிலைமை உருவாகியுள்ளது. எனவே புத்தகங்களிலிருந்து இவை பதிவழிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தொடர்பான பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்போடு மீதியான ரூபா 138,240/= தொடர்புபடுவதுடன் இதை ஈடுசெய்யுமாறு தொடர்ச்சியாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும் அப்போதைய அந்த அமைச்சினால் எதுவித பிரதிபலிப்பும் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு இல்லாதிருப்பதுடன் அதற்குப் பதிலாக துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சே உள்ளது. எனவே இது தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரிடம் இந்நிதியினை ஈடுசெய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டதோடு துறைமுகங்கள் மற்றும் விமான அமைச்சுக்காக வரவு செலவு தயாரிக்கப்பட முடியாதுள்ளதாகவும், துறைமுக அதிகாரசபையின் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பிலான பொறுப்பு வாய்ந்த அலுவலராக அவை புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு ஆட்சேபணேயேதும் இல்லையெனவும், செயலாளரினால் எழுத்து மூலம், அறிவிக்கப்பட்டுள்ளதனால் இந்நிதித் தொகை அதிகாரசபையின் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துக்காக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 பாதிக் கட்டுப்பாடு

வருடாந்த எதிர்பார்ப்பு வருமானம் கவனத்திற்கொள்ளப்படுகையில் முன்னைய ஆண்டின் உண்மை கையாளல் கொள்ளளவு கவனத்திற் கொண்டு இவ்வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் கையாளல் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டு வருமானம் வளர்ச்சியடைந்திருத்தல் சிறந்த திருப்பமாக இருப்பதோடு மதிப்பிடப்பட்டுள்ள செலவினம் கவனத்திலெடுக்கப்படுகையில் உண்மையான செலவினம் குறைவடைதலானது இலங்கை துறைமுக அதிகாரசபையின் முறையான செலவின முகாமைத்துவத்தின் சிறந்த பெறுபேறாகும்.

எனவே இலங்கை துறைமுக அதிகாரசபையில் நல்லாட்சியுடன் வரவு செலவு கட்டுப்பாடு நடைபெறுகின்றதென இதனால் தெளிவாகின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

தற்போது கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் துறைகள் தொடர்பில் சிறந்த உள்ளக கட்டுப்பாடு முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அதன்படி விலைகோரல் விதிமுறைகளுக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் கடனாளிகள் தொடர்பில் Oracle தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நிலுவைகள் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான கடிதம் அனுப்புதல்கள் முறையாக நடைபெறுவதுடன் நிலுவைகள் உறுதிப்படுத்தப்பட்டு மீள் அனுப்பி வைத்தல் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் நடைபெறுவதனால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. முதலீட்டு நடவடிக்கைகளில் உயர் அனுகூலம் கிடைக்கபெறும் துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையிலும் கணனிமயப்படுத்தல் மற்றும் 2012 ஆண்டிலிருந்து புதிய

கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப (SLFRSI's) நடைபெறுவதனாலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் தொடர்பில் சிறந்த கவனம் செலுத்தப்பட்டுள்ளதெனக் கூற முடியும். மேலும் எதிர்காலத்தில் கணனிமயப்படுத்தப்பட எதிர்பார்க்கும் மொத்தத் தொகை கட்டுப்பாடு, கொள்வனவு செய்தல், கப்பற் சரக்குகள் கையாளுதல் போன்ற கணனித் தொகுதிகள் நிறுவப்பட்டதன் பின்னர் மிகவும் சிறந்த முறையிலான உள்ளகக் கட்டுப்பாடு நடைபெறும்



**கலாநிதி பிரியத் பீ விக்ரம**
**தலைவர்**

**பெயர்**

இலங்கை துறைமுக அதிகாரசபை

**நிறுவனத்தின் நிலைமை**

1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டவிதிகளின் பிரகாரம் கொழும்பு துறைமுக ஆணைக்குழு தறைமுக கப்பல் சரக்கு கூட்டுத்தாபனம் தறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைகள் கூட்டுத்தாபனம் என்பவற்றினை ஒன்றிணைத்து 1079 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம 01 ஆந் திகதி துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

**அமைப்பு விதியிலுள்ள அம்சங்கள்**

தேசிய பொருளாதாரத்திற்கு பாரய பங்களிப்பினை வழங்கும் நிறுவனமாக இலங்கை துறைமுக அதிகாரசபை விளங்குகின்றது. வருமானத்தனை ஈட்டிக்கொள்ளல் மற்றும் சேவைகளை வழங்குதல் போன்ற செயல்பாடுகளில் முதன்மை நலையிலுள்ள நிறுவனம் என்ற வகையில் அதிகாரசபை ஆற்றும் பணியின் மூலமாக உயர்நிலை சேவையில் பூரணமாக தனது பங்களிப்பினை அது செலுத்துகின்றது. பல்வேறு வகைகளில் அதனுடன் பங்களிப்புசெய்யும் நிறுவனங்கள் மற்றும் துறைமுக பாவனையாளர்களுடன் காணப்படுகின்ற முனைப்பானதொடர்பு அதன் இயக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைகின்றது. இலஙகை தறைமுக அதிகாரசபைக்குரியதொழிற்பாட்டு அம்சங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

* நிலைத்திருக்கும் தன்மை
* காலத்திற்கேற்றதும் பிழைகளற்றதும்
* சாதனைக்குரிய உத்தரவாதம்
* குழு உணர்வு
* அர்ப்பணிப்பு
* உற்பத்தித்திறனை அடையாளங் காணுதல்
* பூரணமாக செயலாற்றுகை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அதிகாரசபையின் அனைத்து ஊழியர்கள்தொடர்பிலும் பராமரித்துச்செய்தல் பிரதான நிறைவேற்றுநராக முகமைத்துவப் பணிப்பாளரினதும் சிரேட்ட முகாமைத்துவ ஆளணியினரினதும் பொறுப்பாகும்.

**தலைமை அலுவலகம்**

**கொழும்பு துறைமுகம்**

இல : 19, சைத்திய வீதி
கொழும்பு – 01
தொ.பே.இல : (+94 11) 2421201, 2421231
தொ . நகல் : (+94 11) 2440651

**காலி துறைமுகம்**

கிலொசன்பார்க் இறங்குதுறை
மாகாலி
காலி
தொ.பே.இல (+94 91) 2232213, 2234936

**திருகோணலை துறைமுகம்**

புதிய நிர்வாக கட்டுடம்
சீனக் குடா
திருகோணலை
தொ.பே.இல : (+94 26) 2222460

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி (பிரதான வங்கி)
மக்கள் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல:306/72,பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

**இணையத்தளம்**

**www.slpa.lk**